
# உதயன்

சுடர் 30 | கதிர் 322 | வள்ளுவர் ஆண்டு 2046 | புரட்டாதி 27, புதன்கிழமை 14.10.2015



**MEGA SALE**
MEGA SALE FOR
WALL TILES
METRO
# 38, Stanley Rd, Jaffna.

## யாழ். ஆயராக ஜஸ்ரின் பாப்பரசரால் நியமனம்

யாழ்ப்பாணம், ஒக். 14

யாழ்.மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்கலாநிதி மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் அடிகளார் யாழ். மறை மாவட்டத்தின் 8ஆவது ஆயராகக் கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் பிரான்சிஸ் பாப்பரசரால் நேற்று முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பை இளைப்பாறிச் செல்லும் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை நேற்றுப் பிற்பகல் ஆயர் இல்லத்தில் வைத்து வெளியிட்டார்.

யாழ். மறைமாவட்ட ஆயராக 1992ஆம்

பக்.25

2001 தீவக கொடூர தேர்தல் கொலை

# 14 ஆண்டுகளின் பின் மீண்டும் விசாரணை

### கூட்டமைப்பு வேட்பாளர்களைத் தாக்கி ஆதரவாளர்களைக் கொன்ற வழக்கில் நேற்று சந்தேகநபர்களின் பிணை நீக்கம்

திருகோணமலை, ஒக்ரோபர் 14

2001ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைக்காகத் தீவகம் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களைக் கொடூரமாகத் தாக்கியதுடன்–ஆதரவாளர்கள் இருவரைக் கொலை செய்த வழக்கு 14 ஆண்டுகளின் பின்னர் நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. திருகோணமலை மேல் நீதிமன்றில் நீதிபதி சசி மகேந்திரன் முன்பாக வழக்கு விசாரிக்கப்பட்டது.

விசாரணைக்கு முற்படுமாறு அறிவித்தபோதும்– அதனை எதிர்கொள்வதற்கான போதிய ஏற்பாடுகளுடன் வராமல் இருந்த சந்தேகநபர்கள் இருவரது பிணை அனுமதியை நீக்கிய நீதிபதி

பக்.24

## தமிழ் அரசியல் கைதிகளின் உணவு தவிர்ப்பு தொடரும்

### ஆக்கபூர்வமான நடவடிக்கை ஏதுமில்லை

யாழ்ப்பாணம், ஒக். 14

தமிழ் அரசியல் கைதிகளின் உணவு தவிர்ப்புப் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் சிறைச்சாலைகளில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுள்ளது. சிறைச்சாலை வைத்தியர்கள் சிறைக் கைதிகளின் உடல் நிலையை நேற்றைய தினம் பரிசோதித்துள்ளனர். அத்துடன், சிறைச்சாலைகள் ஆணையாளரும் சிறைக் கைதிகளை நேற்றைய தினமும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

பொது மன்னிப்பில் தங்

பக்.24

### 5 கைதிகள் மயக்கம்

வைத்தியசாலையில் அனுமதி

யாழ்ப்பாணம், ஒக். 14

மகஸின், அநுராதபுரம் சிறைச்சாலைகளில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த 5 சிறைக் கைதிகள் மயக்கமடைந்த நிலையில்

பக்.25

## நிலத்திலும் கடலிலும் கண்ணிவெடி அகற்றும் கருவி கடற்படையினருக்கு

### நன்கொடையாக வழங்கியது அமெரிக்கா

கொழும்பு, ஒக்.14

இலங்கையில் நிலத்திலும் கடலிலும் உள்ள கண்ணிவெடிகளை அகற்றும் முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்க அர்ப்பணிப்புடன் உள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. இதற்கான நவீன உபகரணத் தொகுதி ஒன்றையும் அது இலங்கைக் கடற்படைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளது.

போரின் எச்சங்களாகக் காணப்படும் கண்ணிவெடிகளை அகற்று



வதன் மூலம் இலங்

பக்.25

### 24 இந்திய மீனவர்கள் மன்னாரில் கைது

மன்னார், ஒக் 14

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டதாகத் தெரிவித்து நேற்றுச் செவ்வாய்க்கிழமை அதிகாலை தலைமன்னார் கடற்பரப்பில் வைத்துக் கைது செய்யப்பட்ட 24 இந்திய

பக்.24

## வடக்கில் கண்ணிவெடிகள் அகற்ற ஜப்பான் நிதியுதவி

### 108 மில்லியன் ரூபா வழங்கியது

கொழும்பு, ஒக்.14

வடக்கில் கண்ணி வெடிகள் அகற்றும் மனிதாபிமானப் பணிகளுக்காக 108 மில்லியன் ரூபா நிதியுதவியை ஜப்

பக்.25



## ஐ.நா. தீர்மானத்தை நிறைவேற்றும் அரசியல் விருப்பு இலங்கையிடம்

### அதனாலேயே அதனை அரசு வழி மொழிந்தது என்கிறார் சுமந்திரன்

யாழ்ப்பாணம், ஒக். 14

ஐ.நா. தீர்மானத்தை நிறைவேற்றும் அரசியல் விருப்பு இலங்கை அரசுக்கு இருக்கின்றது. அதனாலேயே, ஐ.நா. தீர்மானத்தை இலங்கை அரசே வழி மொழிந்துள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும்–அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடகவிய

பக்.24



## விசாரணைப் பொறிமுறைக்கும் ஐ.நா. நிதிக்கும் தொடர்பில்லை

### வடக்கு முதல்வரின் குற்றச்சாட்டை மறுக்கின்றார் சுமந்திரன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஒக். 14

வடக்கு மாகாண சபைக்கு ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தால் வழங்கப்படவிருந்த நிதிக்கும், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் விசாரணைப் பொறிமுறைக்கும் இடையில் எந்தச் சம்பந்தமும் இல்லை. வடக்கு முதலமைச்சர் இரண்டையும் சம்பந்தமில்லாமல் தொடர்புபடுத்தியுள்ளதாக,

பக்.24

## காணிகள் சுவீகரிப்பு பூநகரியில் முறியடிப்பு

கிளிநொச்சி, ஒக்.14

கிளிநொச்சி, பூநகரிப் பகுதியில் உள்ள பொது மக்களுக்குச் சொந்தமான காணிகளை அளக்கும் முயற்சிகள் நேற்று மக்களின் எதிர்ப்பை அடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

பூநகரி, பரமன்கிராய் வெட்டுக்காடு

பக்.25

## வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்பு மிக அவசியம்

### அதன் மூலமே நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தலாம் என்கிறது பிரிட்டன்

லண்டன், ஒக்.14

இலங்கையின் உள்ளக விசாரணைப் பொறிமுறையின் நம்பகத் தன்மையை உறுதி செய்வதற்கு

பக்.04

## வித்தியா படுகொலை குறித்து ஒருவர் இரகசிய வாக்குமூலம்

யாழ்ப்பாணம், ஒக். 14

புங்குடுதீவு மாணவி கூட்டு வன்புணர்வின் பின்னர் கொல்லப்பட்டு நேற்றுடன் 5 மாதங்கள் நிறைவடைந்த நிலையில், அது குறித்து ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை ஊர்காவற்றுறை நீதிவான் முன்னிலையில் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இரகசிய வாக்குமூலமாக அது பதிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த வழக்கில் மரபணுப்

பக்.24






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்தடை பற்றிய அறிவித்தல்



யாழ்ப்பாணம், ஒக்.14

மேலதிக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக் காக பின்வரும் தினங்களில் மின்சாரம் தடைப்படவுள்ளது என்று மின்சார சபை அறிவித் துள்ளது.

இன்று புதன்கிழமை, நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை, 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 22ஆம் திகதி வியாழக்கிழமை, 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணிமுதல் பி.ப 5.30 மணிவரை அச்சுவேலி பிரதேசத்தில் கதிரிப் பாய், பத்தமேனி, பாரதி வீதி, தம் பாலை, இடைக்காடு, வளலாய் ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் எனத் தெரி விக்கப்பட்டுள்ளது. (ற-10)

## தங்க நகையை உரியவரிடம் ஒப்படைத்த வியாபாரி

சாவகச்சேரி, ஒக்.14

கடையில் வீழ்ந்து கிடந்த ஒன்ற ரைப் பவுண் தங்க நகையை உரிமையாளரிடம் ஒப்படைத் துள்ளார் நடைபாதை வியாபாரி யொருவர். வியாபாரியின் நேர் மையை பலரும் பாராட்டினார் கள்.

இந்தச் சம்பவம் கடந்த சனிக் கிழமை சாவகச்சேரி பொதுச் சந் தையில் நடந்துள்ளது.

புத்தளத்திலிருந்து வந்து நீண்ட காலமாக சாவகச்சேரி பொதுச் சந்தையில் நடைபாதை வியா பாரம் செய்யும் முஸ்லிம் வியா பாரியான அவர் உடு புடைவை வியாபாரம் மேற்கொண்டிருந்த போது அவற்றுள் இருந்து தங்கச் சங்கிலியை கண்டெடுத்துள் ளார். பின்னர் பெண்ணொருவர் சங்கிலியைத் தேடிக் கொண்டி ருந்ததை அவதானித்து சந்தை அலுவலர்கள் முன்னிலையில் சங்கிலியை ஒப்படைத்துள்ளார். அவரின் செயலை அனைவரும் பாராட்டி னர்.

அதேவேளை அதே வியாபாரி உடுபுடைவைகளுக்குள் இவ்வாறு தவறவிடப்பட்ட ஒரு தொகைப் பணம் தன்னிடம் இருந்தது என் றும் இதுவரை எவரும் அதை உரிமை கோராததால் சந்தை அலுவலர்களிடம் வழங்கியுள்ள தாகவும் ஆதாரங்களைக் காட்டி அதனைப் பெற்றுக்கொள்ளு மாறும் தெரிவித்தார். (ற-9)

# வடக்கு வைத்தியசாலைகளுக்கு கழிவுகள் எரிக்கும் இயந்திரங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 14

வடக்கில் உள்ள பெரிய வைத்திய சாலைகளுக்கு வைத்தியசாலைக் கழிவுகளை எரித்து அழிக்கும் இயந் திரங்கள் விரைவில் வழங்கப்படும் என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடந்த கலந்து ரையாடலின்போது இந்த விடயம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. இதன்போதே குறித்த இயந்திரங் களை வழங்கவேண்டியுள்ளமையை அமைச்சர் ஏற்றுக்கொண்டார். வடக் கில் மாத்திரம் அன்றி நாட ளாவிய ரீதி யில் உள்ள பெரிய வைத்தியசாலை களுக்கு அவ்வாறான இயந்திரங் களை வழங்க வேண்டியுள்ளது என்று அமைச்சர் குறிப்பிட்டார்.


வடக்கில் மாவட்ட வைத்தியசாலை கள், ஆதார வைத்தியசாலைக ளுக்கு அவற்றை வழங்க வேண்டி யுள்ளது. எனினும் கட்டம் கட்டமாகவே அந்த இயந்திரங்களைப் பெற முடியும் என் றும் அமைச்சர் கூறினார்.

வடக்கில் தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையிலேயே அந்தக் கருவி அண்மையில் வழங்கப்பட்டு இயங்கி வருகின்றது. அதே போன்ற இயந்திரங்களைச் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை, பருத்தித் துறை ஆதார வைத்தியசாலை என் பனவற்றுக்கும் வழங்க வேண்டும் என்று வைத்தியசாலைத் தரப்பினர் கோரியிருந்தனர்.

மைத்திரி அரசின் 100 நாள் வேலைத் திட்டக் காலத்தில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் உயர் அதிகாரி களுடன் சாவகச்சேரி வைத்தியசா லையைப் பார்வையிட்ட சுகாதார ராஜாங்க அமைச்சர் ஹசன் அலி வைத்தியசாலையின் தேவைகளைக் கேட்டவேளையி லேயே வைத்திய சாலை அபிவிருத்திச் சங்கத்தினர் வைத்தியசாலையின் சேதமடைந்த நிலையில் காணப்பட்ட எரியூட்டியைக் காண் பித்து புதிய எரியூட்டி இயந்திரம் வழங்குமாறு கேட்டுக் கொண்டனர். அவ்வேளையில் அவருடன் வருகை தந்த வடமாகாண சுகா தார அமைச் சின் செயலாளரிடம் இது தொடர்பான விவரங்களை அனுப்பி வைக்குமாறு அதன் போது அமைச்சர் கூறியிருந்தார். இராஜாங்க அமைச்சர் வந்து பார்வை யிட்டு ஆறு மாதங்களின் பின்னர் யாழ்.போதனா வைத்திய சாலைக்கு எரியூட்டி இயந்திரம் கடந்த வாரம் வழங்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசா லையில் எரியூட்டப்பட்டு அழிக்கப்பட வேண்டிய ஊசி கள் எரியூட்டப்படாமல் குப்பையுடன் போடப்படுவதினால் அதனை அகற்றும் வலி.வடக்கு பிர தேச சபையின் சுகாதாரத் தொழிலா ளர்கள் கடும் ஆபத்தை எதிர்நோக்கும் அபாய நிலைமை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசா லையில் இருந்து அகற்றப்படும் கழிவு கள் யாவும் பாதுகாப்பற்ற முறையில் காங்கேசன்துறைப் பகுதயில் உள்ள சீமெந்து தொழிற்சாலை கல்குவாரி யில் கொட்டப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. எனினும் அத்த கைய கழிவுகளை அகற்றி அழிக்கும் பொறுப்பு பிற மாவட்டத்திலுள்ள தனி யார் நிறுவனம் ஒன்றிடம் வழங்கப் பட்டுள்ளதாகத் தெரிவித்த வடமா காண சுகாதார அமைச்சின் செயலாளர், எனினும் அது பற்றி விசாரித்த பின் னரே உறுதிப்படுத்த முடியும் என்று தெரிவித்தார். (த-4-9-86)



வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட, பிரதேச மட்ட மகளிர் அபிவிருத்தி நிலையங் களின் ஆடை வடிவமைப்பு மற்றும் அழகுகலை, மனைப்பொரு ளியலும் கண்காட்சியும் நேற்று கிளிநொச்சியில் வெகுசிறப்பாக இடம்பெற்றது. கண்காட்சியை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் திறந்து வைத்தார். வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சின் செயலாளர் சத்திய சீலன், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பஞ்சலிங்கம், மகளிர் அமைப்புக்கள் எனப் பலரும் கலந்து கொண்டுள்ளனர். (ற-21,ரி3)

# ஜே.வி.பியினரை விடுவித்தது போன்று தமிழ் இளைஞர்களையும் விடுவிக்குக

## நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக். 14

மக்கள் விடுதலை முன்னணியி னரை கடந்த காலங்களில் எவ் வாறு பொது மன்னிப்பின் கீழ் விடுவித்தார்களோ அதே போன்று தமிழ் அரசியல் கைதி களையும் இந்த அரசு உடனடி யாக விடுவிக்க வேண்டும். - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் ஈ.சரவண பவன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடு முழுவதிலும் உள்ள சிறை களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் நேற்று முன்தினம் முதல் சாகும் வரையி லான உணவு தவிர்ப்புப் போராட் டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து நல்லூரில் நேற்று அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரி விக்கையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது:-

நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜ பக்ஷ, தமிழ் அரசியல் கைதிகள் இல்லை என்று தெரிவித்திருக் கின்றார். குற்றச்சாட்டுக்கு உள்ளா னவர்கள், தமிழ் கைதிகளே இருக்கின்றனர் என்று குறிப்பிடு கின்றார். இது பிழையானது. நீதி அமைச்சர் தவறாக இந்த விட யத்தை கையாள முற்படுகின்றார். தமிழ் அரசியல் கைதிகளுக்கு, பொதுமன்னிப்பு வழங்குவது தான் ஒரே வழி. அவர்களை விசாரணை என்று மீண்டும் காலம் கடத்துவதை ஏற்றுக் கொள்ள முடியாது. கருணை அடிப்படையில் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வேண் டும். கடந்த காலத்தில் எவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியி னரை பொதுமன்னிப்பில் விடு வித்தார்களோ அதே போன்று, தமிழ் அரசியல் கைதிகளையும் விடுவிக்க வேண்டும் - என்றார்.

வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவ ஞானம் அங்கு தெரிவித்ததா வது:-

தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கை நியாயமானது. அவர் களை பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்ய வேண்டும். இது தொடர்பில், ஜனாதிபதி, பிரத மர், நீதி அமைச்சர், சட்டமா அதி பர் ஆகியோருக்கு நேற்று (நேற்று முன்தினம்) கடிதம் அனுப்பப்பட் டுள்ளது. - என்றார்.

எதிர்கட்சித் தலைவர் சி.தவராசா அங்கு குறிப்பிட்டதாவது:-

அரசியல் காரணங்களுக்காக சாத்வீக வழியிலோ - ஆயுத வழி யிலோ போராடியவர்களை கைது செய்துள்ளனர். அவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் அரசியல் கைதி களே. அவர்களை விடுவிக்க வேண்டும் - என்றார். (ற-5,101)

# காருண்யத்தின் அடிப்படையில் அரசியல் கைதிகளை விடுவிக்குக

## வடக்கு அவைத் தலைவர் ஜனாதிபதிக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், ஒக். 14

உதவிகள் ஏதுமற்ற அரசியல் கைதிகள் மீது காருண்யம் காட்டி அவர்களை விடுதலை செய்து, உணவுத் தவிர்ப்புப் போராட் டத்தை முடிவுக்கு கொண்டு வருமாறு, ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் கோரியுள் ளார்.

வடக்கு மாகாண சபையில் கடந்த ஆண்டு இதே விடயம் தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையும் அவைத் தலைவர் தனது கடிதத்தில் சுட் டிக்காட்டியுள்ளார்.

அப்போதைய ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்சவுக்கு, நவம்பர் மாதம் 25 ஆம் திகதி வடக்கு மாகாண சபையின் தீர் மானம் அனுப்பி வைக்கப்பட்டி ருந்தது என்பதையும், ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கு தகவலுக் காக அவைத் தலைவர் குறிப் பிட்டுள்ளார்.

இந்த உதவி ஏதுமற்றவர்கள் மீது இரக்கமும் - அனுதாபமும் - காருண்யமும் காட்டி பொது மன்னிப்பின் மூலம் விடுதலை செய்து இந்த உணவுத் தவிர்ப் புப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று அவைத் தலைவர் கடிதத்தில் தெரிவித்துள்ளார். (ற-5-101)

# காய்ச்சலால் பீடிக்கப்பட்ட யுவதி சாவு

யாழ்ப்பாணம், ஒக். 14

காய்ச்சலால் பீடிக்கப்பட்ட பெண் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சில மணி நேரங்களில் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.

வீசி ஒழுங்கை சங்கானையைச் சேர்ந்த பாலசுந்தரம் தர்சினி (வயது-30) என்பவரே உயிரிழந்தார்.

ஒரு மாதத்துக்கு முன்னரும் அவர் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தார். அப்போது சங்கானை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் வீடு திரும்பியிருந்தார். கடந்த ஞாயிற்றுக்கிழமை மீண்டும் அவருக்குக் காய்ச் சல் ஏற்பட்டுள்ளது. அதனால் அவர் மீண்டும் சங்கானை வைத்தியசா லையில் சேர்க்கப்பட்டார். அங்கு சில மணி நேரம் வைத்திருந்து சிகிச்சை அளித்த பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசா லைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். எனினும் அங்கு சிகிச்சை பயனளிக் காது சில மணிநேரங்களில் அவர் உயிரிழந்தார்.

நீதிமன்றப் பணிப்புக்கமைய திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம் குமார் விசாரணை மேற்கொண்டு சடலத்தை உறவினர்களிடம் ஒப்ப டைத்தார். அவருக்கு இருதய வால்பில் நோயும் நுரையீரலில் குருதி அமுக்கமும் இருந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரி நேற்று அடையாள உணவு தவிர்ப்பு

## யாழ். இளையோர் அமைப்பின் ஏற்பாட்டில் நல்லூர் ஆலய முன்றிலில் நடத்தப்பட்டது



யாழ்ப்பாணம், ஒக்.14
தமிழ் அரசியல் கைதிகளின் விடுவிப்பை வலியுறுத்தி யாழ். இளையோர் அமைப்பால் நேற்று நல்லூர் ஆலய முன்றிலில் ஒரு நாள் அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.

இலங்கையில் உள்ள 14 சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள 217 தமிழ் அரசியல் கைதிகள் தம்மை உடன் விடுவிக்குமாறு கோரி உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். அவர்களுக்கு ஆதரவு வழங்கும் விதமாகவும்- அவர்களின் விடுதலையை வலியுறுத்தியுமே நேற்று அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

இலங்கையில் இடம்பெற்ற போரைக் காரணமாகக் கொண்டும் - பல்வேறு காரணங்களுக்காகவும் கடந்த காலங்களில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட குறித்த கைதிகள் நீண்ட காலமாக எந்த வித சட்ட வரையறைகளுக்குள்ளும் அடங்காத வகையில் இவ்வாறு 2 ஆண்டுகளாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடருமானால் நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்பும் தமிழ் மக்களின் வாழ்வில் எந்தவித மாற்றமும் இல்லை என்பதை உறுதிப்படுத்துவ தாக அமைந்து விடும். நாட்டில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தின் மூலம் தமிழ் மக்களின் மனங்களிலும் மகிழ்ச்சியை ஏற்படுத்த வேண்டுமானால் இலங்கையின் ஆட்சியில் சிங்கள இளைஞர்களுக்கு இரு தடவை வழங்கப்பட்ட பொது மன்னிப்பு தமிழ் இளைஞர்களின் வாழ்விலும் ஒருதடவை வழங்க முன்வர வேண்டும் என்று அடையாள உணவு தவிர்ப்பில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்.

அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வட மாகாண சபை தவிசாளர் சி.வீ.கே.சிவஞானம், வட மாகாண சபை உறுப்பினர்களான கஜதீபன்; சுகிர்தன், பரஞ்சோதி, சிவயோகன், அஸ்மின், வடமாகண சபையின் எதிர்க் கட்சித் தலைவர் தவராசா ஆகியோருடன்- உள்ளூராட்சி சபைகளின் முன்னாள் உறுப்பினர்கள்,அரசியல்கைதிகளின் உறவுகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டுள்ளனர். (ற-101)

## அரசியல் கைதிகள் விடுவிப்புக்காக விசேட வழிபாடுகள்

யாழ்ப்பாணம், ஒக்.14
சிறையில் வாடும் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக கிளிநொச்சியில் விசேட மத வழிபாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

வழிபாடுகள் நாளை வியாழக்கிழமை காலை 9:30 மணியளவில் கிளிநொச்சி கந்தசுவாமி கோயிலிலும் மு.ப 10:15 மணிக்கு புனித திரேசா ஆலயத்திலும் நடைபெறவுள்ளன.

இந்த விசேட மத வழிபாடுகள் வட மாகாண மீன்பிடி, போக்குவரத்து, கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரனால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதுகுறித்துக் கூறிய அவர்-
இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரில் பல அரசியல் காரணங்களால் கைதுசெய்யப்பட்டு ஏறத்தாழ 20 ஆண்டுகள் சிறையில் வாடிக்கொண்டிருக்கும் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக குறித்த விசேட மத வழிபாடுகளை கிளிநொச்சி மாவட்டத்தில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதுவரை வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தில் பதிவுகள் செய்த 125 அரசியல் கைதிகளின் குடும்பங்களையும் இந்த விசேட ஆராதனைகளில் கலந்து- தங்களது உறவுகளின் விடுதலைக்காக பிரார்த்தியுங்கள்- என்றார்.

அரசியல் கைதிகளின் விடுதலைக்கான ஓர் வேலைத் திட்டத்தை மத வழிபாட்டோடு ஆரம்பிக்க எண்ணியுள்ளேன். அதனால் எமது திணைக்களத்தில் பதிவு செய்த அனைத்து அரசியல் கைதிகளின் குடும்பங்களும் உறவுகளின் விடுதலைக்கு வகைசேர்க்கும் வண்ணம்தவறாதுகலந்துகொள்ளுங்கள்- என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ற)

# சந்தைகளில் கழிவு பெறுவதை வியாபாரிகள் நிறுத்த வேண்டும்

## வடக்கு விவசாய அமைச்சர் தலைமையிலான கூட்டத்தில் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.14
வடக்கு மாகாண சந்தைகளில் உற்பத்தியாளர்களால் கொண்டு வரப்படும் உற்பத்திப் பொருள்களுக்கு பத்து வீதம் கழிவு பெறுவதை வியாபாரிகள் தவிர்க்க வேண்டும். அதேவேளை உற்பத்தியாளர்கள் தரமான பொருள்களை சந்தைக்கு கொண்டு வர வேண்டும். - இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

**உற்பத்தியாளர்கள் தரமான பொருள்களைக் கொண்டு வந்தால் கழிவு பெற வேண்டிய அவசியமிருக்காது என்று வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.**

யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற கூட்டத்திலேயே இவ்வாறு வலியுறுத்தப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் அமைச்சுக்களின் செயலாளர்கள், விவசாயத் திணைக்கள உயர் அதிகாரிகள், உள்ளூராட்சி திணைக்கள உயர் அதிகாரிகள், பிரதேச சபைக்ளின் செயலாளர்கள் தொடர்புடைய அலுவலர்கள் உற்பத்தியாளர் சங்கங்களின் பிரதிநிதிகள், சந்தைக் குத்தகையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

உற்பத்தியாளர்களால் கொண்டு வரப்படும் உற்பத்திப் பொருள்கள் கலப்படம் செய்யப்படாது தரமான பொருள்களாக இருத்தல் வேண்டும். பத்து வீதக் கழிவுக்காக உற்பத்திப் பொருள்களில் கலப்படம் செய்வதால் கழிவு மேற்கொள்ள வேண்டிய நிலை வியாபாரிகளுக்கு ஏற்படுகிறது. குறிப்பாக கத்தரிக்காய் கொண்டு வருவோர் பழுதடைந்த கத்தரிக்காய்களையும் கலந்து கொண்டு வருகின்றனர். அவற்றை விற்பனை செய்யமுடியாத நிலை ஏற்படுகிறது. உற்பத்தியாளர்கள் தரமான பொருள்களைக் கொண்டு வந்தால் தமக்குப் பாதிப்பு இல்லை என்று வியாபாரிகள் அதன்போது தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, வடமாகாணத்தில் உள்ள பெருமளவு சந்தைகள் குத்தகைக்கு வழங்கப்படுவதால் உற்பத்தியாளர்களும் பாவனையாளர்களும் பாதிக்கப்படுகின்றனர் என்று அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோர் இதன்போது குறிப்பிட்டுள்ளனர்.

சந்தைகள் அந்தந்த உள்ளூராட்சி சபைகளால் நடத்தப்பட வேண்டுமென்று இதன் போது அவர்களால் கருத்து முன்வைக்கப்பட்டது.

உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்கள், சந்தைகளில் கடமை புரியும் வரி வசூலிப்பாளர்கள் பதவிகள் வடமாகாண சபையால் இல்லாதொழிக்கப்பட்டதால் சந்தைகளை குத்தகைக்கு விடப்படுகிறது எனப் பதிலளித்துள்ளனர்.

அதற்குப் பதிலளித்த உள்ளூராட்சி ஆணையாளர் சந்தைகளில் கடமையாற்றும் ஊழியர்கள் மோசடிகளில் ஈடுபடுவதால் வரிவசூலிப்பாளர் பதவிகள் இல்லாதொழிக்கப்பட்டது எனக் கூறினார். மக்களின் நலன் கருதி செயற்பட வேண்டுமாயின் சந்தைகளை அந்தந்த உள்ளூராட்சி சபைகள் நடத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயங்கள் முதலமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று வட மாகாண விவசாய அமைச்சர் தெரிவித்தார். (ற-9)

## சட்டவிரோத மணல்: ஒருவர் கைது


அம்பாறை, ஒக்.15
அம்பாறை, திருக்கோவில் பொலிஸ் பிரிவில் அனுமதிப் பத்திரமின்றி ஆற்றுமணல் அகழ்வில் ஈடுபட்ட ஒருவரை நேற்று செவ்வாய்க்கிழமை திருக்கோவில் பொலிஸார் கைது செய்துள்ளனர். சந்தேகநபர் இன்று புதன்கிழமை பொத்துவில் மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார். (ற)

## 10 ஆண்டுகளின் பின்னர் சம்பூரில் நூல் வெளியீடு

சம்பூர்,ஒக்.14
சம்பூரில் தற்போது மீள் குடியேற்றம் இடம்பெற்று வரும் நிலையில் கடந்த 10 வருடங்களின் பின்னர் நூல் ஒன்று வெளி யிடப்பட்டுள்ளது. வைத்திய கலாநிதி சம்பூர் அ. ஸதீஸ்குமார் எழுதிய 'சம்பூர் பத்திரகாளி அம்பாள் ஆலய வரலாறும்', மகிமையும் என்ற நூலின் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சம்பூர் பத்திரகாளி அம்பாள் ஆலய முன்றிலில் நடைபெற்றது. கவிஞர் க. யோகானந்தன் தலைமையில் இந்த நிகழ்வில் நூலின் முதல் பிரதியைச் சேனையூர் ஸ்ரீ நாகம்மாள் ஆலயத்தின் பிரதம குரு கலாபூஷணம் சிவஸ்ரீ அ. அரசரெத்தினமும் நிகழ்வின் பிரதம விருந்தினரான கலாநிதி ஆறு. திருமுருகனிடம் இருந்து பெற்றுக் கொண்டார். நூலின் அறிமுக உரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் விரிவுரையாளர் சரா. புவனேஸ்வரனும், நயவுரையை சேனையூர் மத்திய கல்லூரியின் அதிபர் இரா. இரத்தினசிங்கமும் வழங்கினர். (ஐ-40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஷ்ட பிரதேச மாணவருக்கு கிளிநொச்சியில் பஸ் சேவை



யாழ்ப்பாணம், ஒக்.14
கிளிநொச்சி மாவட்டத்தின் கஷ்டப் பிரதேச மாணவர்களின் நலன் கருதில் இலவச பஸ் சேவைகளை தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் ஆரம்பித்துள்ளது.
முதற்கட்டமாக நேற்று முன்தினம் பூநகரி, வேரவில் இந்து மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் சுமார் 125 மாணவர்களுக்கான பஸ் சேவைகள் ஆரம்பிக்கப் பட்டன.
கிளிநொச்சி, பூநகரி கிராஞ்சி கிராமத்தின் பல பகுதிகளில் இருந்தும் வேரவில் இந்து மகா வித்தியாலயத்துக்குச் செல்லும் மாணவர்கள் நடந்தே சென்று வருகின்றனர். மாணவர்களுக்கு போக்குவரத்து வசதி செய்து தர வேண்டும் என்று வேரவில் கிராம மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் கிளிநொச்சி தனியார் போக்குவரத்துச் சங்கத்துக்கு கோரிக்கை விடுத்திருந்தது.
அதையடுத்தே நேற்றுமுன்தினம் இலவச பஸ் சேவைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.
கிராஞ்சி பிருந்தாவனம் பகுதியிலிருந்து பாடசாலை ஆரம்பமாகும் நேரத்திலும் முடிவடையும் நேரத்திலும் பஸ் சேவைகள் நடைபெறும் என்று தனியார் பஸ் போக்குவரத்துச் சங்கத் தலைவர் ஜமுனாகரன் தெரிவித்தார்.
இதேபோன்று வன்னேரியில் இருந்து ஆனைவிழுந்தான், அக்கராயன் வரையான பாடசாலை சேவைகளும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.
நேற்றுமுன்தினம் ஆரம்பமான பஸ் சேவை யுனிசெவ், கொய்கா நிறுவன செயற்றிட்டத்தின் ஊடாக கிளிநொச்சி கல்வி வலயத்துடன் இணைந்து கல்விசார் ஊக்குவிப்புச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் கிராம அவிருத்தி நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ற-21,ரி3)

# போர் நடந்த வடக்கு- கிழக்கில் வனம் பாதுகாக்கப்பட்டுள்ளது

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 14
இலங்கையின் வன வளம் கடந்த சில வருடங்களில் வேகமாக அழிக்கப்பட்டது. ஆனால் போர் நடந்த வடக்கு - கிழக்கில் மாத்திரம் அவை ஓரளவு பாதுகாக் கப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால, மரத்தை வெட்டுவது ஒரு மனித உயிரைக் கொல்வதற்கு சமனானது என்றும் குறிப்பிட்டுள்ளார்.
கொத்மலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற 'வன ரோபா' தேசிய மர நடுகை நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.
எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் அடுத்த மூன்று வருடங்களில் நடைமுறைப்படுத்தப்பட உள்ள தேசிய மர நடுகைத் திட்டத்தின் ஊடாக தற்போது நாட்டில் 29 சதவீதமாக இருக்கும் வன அடர்த்தி 32 சதவீதமாக அதிகரிக்கப்படும். இதற்கு அரசியல் வாதிகள் உட்பட எல்லோரினதும் ஒத்துழைப்பு அவசியமானதாகும். - என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
மரம் ஒன்றை வெட்டுவது ஒரு மனித உயிரை கொல்வதற்கு சமனானதாகும். இருப்பினும் இந்த நாட்டில் உள்ள பல்வேறு வியாபாரிகள் பணம் குறித்து மட்டுமே சிந்தித்து நாடு மற்றும் நாட்டின் எதிர்காலம் குறித்து எவ்வித கரிசனையும் இன்றி சுற்றாடலை அழித்து தமது வியாபார நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்களுக்கு சவாலாக அமையும் அனைத்து செயற்பாடுகளுக்கும் கடுமையான சட்டங்கள் பிரயோகிக்கப் படும்.
இயற்கையை பாதுகாப்பது ஒவ்வொருவரினதும் கடமையும் பொறுப்புமாகும். கடந்த சில வருடக் காலப் பகுதியில் இலங்கையில் வன வளங்கள் மிக வேகமாக அழிவுக்கு உட்படுத்தப்பட்டிருந்தன. வன வளங்களின் குறிப்பிட்ட அளவாவது பாதுகாக்கப் பட்டிருப்பது போர் நடைபெற்ற வடக்கு கிழக்குப் பகுதிகளிலே.
அபிவிருத்தியும் தொழில்நுட்பமும் உலகிற்கு பல்வேறு விடயங்களை கொண்டு வந்துள்ளபோதும் மறுபக்கத்தில் இயற்கையை அழிவுக்குட்படுத்துவதற்கு அவை வழிவகுத்துள்ளன. இயற்கை வளங்களை பாதுகாப்பது மனிதர்கள் உட்பட ஏனைய ஜீவராசிகளின் இருப்புக்கு மிக அவசியமான விடயமாகும். - என்றார். (ற-5)

# இ.போ.ச. யாழ்.சாலை ஊழியர் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக் .14
இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலை முகாமையாளரின் அநீதியான செயற்பாடுகளுக்கு எதிராக இன்று போராட்டம் நடத்தவுள்ளதாக யாழ்.சாலையில் இயங்குகின்ற ஒன்றிணைந்த தொழிற் சங்கங்கள் தெரிவித்துள்ளன.
இந்தப் போராட்டமானது இன்று காலை 9 மணிக்கு யாழ். மத்திய பஸ் நிலையத்தின் முன்பாக இடம் பெறவுள்ளது.
இது குறித்து இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைமையகத்தால் மூன்று கட்டமான விசாரணைகள் இடம்பெற்றபோதிலும் - எந்தவிதத்திலும் ஒழுக்காற்று நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. நிர்வாகக் குழுவின் அனுமதியைப் பெறாமல் சுயமாக முடிவுகள் எடுத்தல், ஊழியர்களுக்கு ஊதியம் வழங்குவதில் ஒழுங்கீனம், மதுப்பாவனையுடன்வேலைக்கு ஊழியர்களை அனுமதித்தமை, ஊழியர்களின் அனுமதியின்றி ஊதியங்கள்கழிக்கப்படுதல்போன்ற பல அதிருப்தியான பணிகளைக் கண்டித்தே இந்தப் போராட்டம் நடத்தப்பட உள்ளதாக யாழ். சாலையில் இயங்குகின்ற ஒன்றிணைந்த தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.
ஆனால், இந்தப் போராட்டத்தில் ஈடுபடும் தொழிற்சங்கங்கள் யாழ். சாலை தொழிலாளர்களுக்கு மத்தியில் தெரிவுசெய்யப்படவில்லை எனவும், குறித்த போராட்டத்தை எமது வடக்கு மாகாண ஜனநாயகப் போக்குவரத்து ஊழியர் சங்கம் ஏற்பாடு செய்யவில்லை எனவும் குறித்த சங்கத்தால் ஊடகங்களுக்கு அறிக்கை ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது.
(த-21)



யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தனது சொந்த நிதியில் யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் தலா 10 ஆயிரம் பனம் விதைகள் நடும் வேலைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளார். முதற்கட்டமாக கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் நேற்றுமுன்தினம் பனம் விதைகள் நடப்பட்டன. (ற)

# கண்காட்சியும் விழிப்புணர்வு பட்டறையும்

யாழ்ப்பாணம், ஒக்.14
சிறிலங்கா கட்டடக் கலைஞர் நிறுவனமும் வடமாகாண கல்வி அமைச்சும் இணைந்து கண்காட்சி ஒன்றையும் விழிப்புணர்வுப்பட்டறை ஒன்றையும் ஏற்பாடு செய்துள்ளன.
நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கட்டடக்கலை சம்பந்தமான கண்காட்சியும் தொடர்ந்து சனிக்கிழமை கட்டடக்கலை தொடர்பான விழிப்புணர்வுப்பட்டறை ஒன்றும் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வுகளில் துறை சார்ந்த பொறியியலாளர்களும் பல்கலைக் கழக பொறியியல் பீட மாணவர்களும் பொறியியல் துறையில் ஆர்வமுள்ள உயர்தர மாணவர்களும் பொதுமக்களும் கலந்து கொள்ளலாம் என வடமாகாண கல்வி அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் ஆ.க.சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.
(ற-10)

*தொடர்ச்சி*

## வெளிநாட்டு

அதில் வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்பு அவசியமானது எனப் பிரிட்டன் வலியுறுத்தியுள்ளது.
இவ்வாறு பிரிட்டன் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அலுவலக அமைச்சர் ஹியூகோ ஸ்வையர், பிரிட்டன் இலங்கைத் தமிழர்களுக் கான அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித் துள்ளார்.
இது தொடர்பில் அவர் தனது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
ஐ.நா மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தில் முக்கியமாக, இலங்கையின் நீதிப் பொறிமுறையில் பொதுநல வாய மற்றும் ஏனைய வெளிநாட்டு நீதிபதிகள், பாதுகாப்பு வழக்கறி ஞர்களின் பங்களிப்பு அவசியமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.
உள்நாட்டுச் சட்டத்தில் மறுசீரமைப்புச் செய்வதன் ஊடாக, இலங்கை அதன் சொந்தப் பொறுப்புக் கூறலைத் திறமையாக மேற்கொள்ள முடியுமெனத் தீர்மானத்தில் குறிப் பிடப்பட்டுள்ளது. அத்துடன் மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களை மீறல் - துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் விசாரணைகள் நடத்தி தண்டனை வழங்குவதன் ஊடாக பொறுப்புக் கூறப்படவேண்டும். அதனை ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் மதிப்பீடு செய்யவேண்டும்.
இலங்கைககான எனது பயணத்தின் பின்பு, கடந்த ஜனவரியில் தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவில் உரை யாற்றும்போது [illegible] வலிமையான மாற்றம் [illegible] டுள்ளதான உணர்தலைச் சுட்டிக் காட்டியிருந்தேன்.
அத்துடன் ஐ.நா மனித உரிமைகள் தீர்மானத்துக்கு இலங்கை இணை அனுசரணை வழங்கியமை வர லாற்றுத் திருப்புமுனையாகும். முன்னைய அரசு தீர்மானங்களை எதிர்ப்பதில் உறுதியாக இருந்தது. எனினும் புதிய அரசு ஆக்கபூர் வமான ஈடுபாட்டைக் காட்டியது. நான் இந்த அணுகுமுறையை முழுமையாக வரவேற்கின்றேன்.
அத்துடன் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் இலங்கை குறித்த விசாரணை அறிக்கையின் முக்கிய பல பரிந்துரைகள், இந்தத் தீர்மானத்தில் உள்வாங்கப் பட்டுள்ளது. இந்த முடிவை எட்டுவதற்கு இந்த தீர்மானம் உட்பட முன்னைய இரு தீர்மானங்களில் பிரிட்டன் பங்கு வகித்தமை பெருமையாகவுள்ளது. பிரிட்டன் மற்றும் இலங்கையின் பெரும் பான்மையான அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புக்களிடமிருந்து தீர்மானத் துக்குச் சாதகமான பதில் கிடைத் தமை மகிழ்ச்சியளிக்கிறது.
பந்து தற்போது இலங்கையின் நீதிமன்றப் பொறிமுறையிலுள்ளது. எனினும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலக விசாரணை அறிக்கையின் பரிந்துரை களை இலங்கை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமெனப் பிரிட்டன் வலியுறுத்துகிறது.
அத்துடன் இலங்கைக்கு அதன் செயற்பாடுகளுக்கு நிபுணத்துவ மற்றும் தொழிநுட்ப உதவிகளை சர்வதேச சமூகம் வழங்க வேண்டும்.
பிரிட்டன் அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழு,தமிழ் மக்கள் மீது தொடர்ந்து கொண்டுள்ள அக்க றையை வரவேற்பதுடன் எதிர் காலத் திலும் இலங்கையின் வேலைத் திட்டங்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும்- என்றுள்ளது. (த-வ)

# சர்வதேச பெண் குழந்தைகள் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக்.14
சர்வதேச பெண் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு 'பெண்கள் எழுச்சி' எனும் பொருளில் நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. யாழ்ப்பாணம் அத்தியடி வீதியில் உள்ள அமெரிக்கன் கோர்னரில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.
வித்தியாசமான சூழலில் சாதகமான மாற்றங்களை ஏற்படுத்திய பெண்கள் வெவ்வேறு நாடுகளில் இருந்து வருகை தரவுள்ளதுடன் அவர்களின் வெற்றிகரமான வாழ்க்கை முறை பகிரப்படவுள்ளது.
பி.ப ஒரு மணி முதல் 3 மணி வரை நடைபெறும் இந்த நிகழ்வில் பெண்கள் எழுச்சி தொடர்பாக விருது வென்ற திரைப்படம் காண்பிக்கப்படவுள்ளது.
நிகழ்வில் கலந்துரையாடலுக்கு பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பிலிருந்து ச.ரஜனி தலைமை வகிக்கவுள்ளார். (ற-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டிய ஒன்று

## சிரேஷ்ட சட்டத்தரணி வெலியமுன சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக்.14

நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் நீதிக் கட்டமைப்பில் இருந்து நீக்கப்பட வேண்டும். - இவ்வாறு சிரேஷ்ட சட்டத்தரணி ஜே.சீ.வெலியமுன தெரிவித்துள்ளார்.



பயங்கரவாதத் தடைச் சட்டம் குறித்த எனது நிலைப்பாடும் அரசின் நிலைப்பாடும் ஒன்றல்ல. அது குறித்து அரசு எவ்வாறு தீர்மானிக்கும் என்பதைக் கூற முடியாது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஜெனிவா தீர்மானத்தின் பின் என்ற பொருளில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கு பயங்கரவாதத் தடைச் சட்டம் பெரும் தடையாக அமைந்துள்ளதுஎன்றும்அவர்குறிப்பிட்டார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் குறித்த எனது நிலைப்பாடும் அரசின் நிலைப்பாடும் ஒன்றல்ல. அது குறித்து அரசு எவ்வாறு தீர்மானிக்கும் என்பதைக் கூற முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய கலப்பு நீதிமன்றம் ஒன்றை அமைக்கும் யோசனையை வரவேற்கின்றேன் என்றும் அவர் கூறியுள்ளார்.

இலங்கை வரலாற்றில் வெளிநாட்டு நீதிவான்களின் பங்களிப்பு ஏற்கனவே பதிவாகியுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கலப்பு நீதிமன்றம் மற்றும் வெளிநாட்டு நீதிவான்கள் தொடர்பில் சிலர் மக்கள் மத்தியில் தேவையற்ற பீதியை ஏற்படுத்துகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)



# உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் உடன் நடத்தப்பட வேண்டும்

## வலியுறுத்துகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஒக்.14

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள அந்தக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க -

மக்களின் நிறுவனங்கள் தொடர்ந்தும் ஆணையாளர்களின் நிர்வாகத்தில் இயங்குவது தவறானது. உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை காலம் தாழ்த்தாது உடன் நடத்த வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

எந்தக் காரணத்துக்காகவும் தேர்தலைப் பிற்போடுவது ஏற்றுக்கொள்ள முடியாதது என்று தெரிவித்துள்ள அவர், எல்லை நிர்ணயம் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையை ஜே.வி.பி. நிராகரிக்கின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கை குழப்பங்கள் நிறைந்ததாகக் காணப்படுகின்றது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசியல் தேவைகளின் அடிப்படையில் எல்லை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்று அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். புதிய எல்லை நிர்ணயம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

துரிதகதியில் எல்லை நிர்ணயம் மேற்கொள்ள முடியாது போனால் பழைய தேர்தல் முறையில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

# கொழும்பு பாபர் வீதி முறுகலுக்கு சுமுகத் தீர்வு

*அமைச்சர் மனோ தெரிவிப்பு*



கொழும்பு, ஒக்.14

பெரும் சர்ச்சையாக உருவெடுத்திருந்த கொழும்பு பாபர் வீதி எனப்படும் மகா வித்தியாலய வீதியின் 36ஆம் இலக்கத் தோட்ட இந்துக் கோயில் தேர்த் திருவிழா மீண்டும் நடத்தப்படவுள்ளது.

கடந்த வாரம் நடைபெறவிருந்த தேர்த் திருவிழாவுக்கு சில இஸ்லாமியர்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்த நிலையிலும் - அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட முறுகல் நிலையாலும் திருவிழா கைவிடப்பட்டிருந்தது.

இந்தப் பிரச்சினை பெரும் சர்ச்சையாக உருவெடுத்திருந்த நிலையில் தேசிய கலந்துரையாடல் அமைச்சர் மனோ கணேசன் தலைமையில் இது தொடர்பான பேச்சு அவரது அமைச்சில் நடத்தப்பட்டிருந்தது.

அதில் ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், தேசிய நல்லாட்சி இயக்கத்தின் தலைவர் நாஜா முஹம்மத், வழக்கறிஞர் ருஷ்டி ஹபீ போன்றோரும் - பாபர் வீதி 36ஆம் இலக்கத் தோட்டத்தைச் சார்ந்த ஆலய மற்றும் பள்ளிவாசல் பொறுப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

இந்தச் பேச்சில் ஆலயத் திருவிழாவை தடையின்றி நடத்துவதற்கு அனைத்துத் தரப்பினராலும் இணங்கம் காணப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி இந்த மாதம் 22 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரையான ஒரு தினத்தில் ஆலயத் திருவிழா நடத்தப்படும் என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் மனோ கணேசன் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. (ற)



நீர்கொழும்பு பொது வைத்தியசாலையின் புதிய கட்டடத் தொகுதி நேற்றுமுன்தினம் முற்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் திறந்து வைக்கப்பட்டது. புதிய விடுதிக் கட்டடத் தொகுதிக்கு வந்த முதல் நோயாளியின் விவரம் ஜனாதிபதியால் பதிவு செய்யப்பட்டது. அத்துடன் வைத்தியசாலையின் சிறுவர் விடுதிக்கான உயிரியல் சார்ந்த நோய்க்கான சோதனை செய்யும் இயந்திரமொன்றும் வழங்கப்பட்டது. (ற)

# பிள்ளையானின் கைது அரசியல் பழிவாங்கல்

## தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி கூறுகின்றது

திருகோணமலை, ஒக்.14

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரான பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந் தன் கைது செய்யப்பட்டமை, அரசியல் பழிவாங்கல்களுக்காகவே இடம்பெற்றுள்ளது என்று தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூ.பிரசாந்தன் தெரிவித்துள்ளார்.

கடந்த பொதுத் தேர்தல் காலத்திலும் தமது கட்சிக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் பிள்ளையானிடம் விசாரணைகள் நடத்தப்பட்டன என்று சுட்டிக்காட்டியுள்ள அவர், அரசு ஒருபுறம் நல்லாட்சி எனக் கூறிக் கொண்டு மறுபுறத்தில் அரசில் பழிவாங்கலை முன்னெடுக்கின்றது என்றும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கொலை தொடர்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை மேற்கொண்டிருந்தனர். அதன்முடிவில் அவர் கைது செய்யப்பட்டார். அவரிடம் தொடர்ந்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று - பொலிஸார் கூறியுள்ளனர்.

ஜோசப் பரராஜசிங்கம் கொலை வழக்கின் பிரதான சந்தேகநபர்களாகக் கருதப்படும் இருவர் கடந்தவாரம் கைது செய்யப்பட்டிருந்தனர். (ற)

# நாட்டின் சுய கௌரவம் அரசால் பறிபோனது

## கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் டியூ. குணசேகர கவலை

கொழும்பு, ஒக்.14

தற்போதைய அரசு நாடு தனது சுய கௌரவத்தை இழக்கச் செய்துள்ளது என்று குற்றஞ்சாட்டியுள்ளார் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் டியூ. குணசேகர.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் யோசனையை அரசு ஏற்றுக்கொள்ளக்கூடாது என்றும் அவர் கூறியுள்ளார்.

கடந்த காலங்களில் மூன்று தடவைகள் இலங்கை அரசு ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை நிராகரித்திருந்தது.

அமெரிக்கா மிகவும் தந்திரமான முறையில் இந்த அரசை ஏமாற்றி தீர்மானத்துக்கு இணை அனுசரணையாளராக இலங்கையை இணங்கச் செய்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொரளை கலாநிதி என்.எம். பெரேரா கேந்திர நிலையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதனால் கடந்த காலங்களில் இலங்கைக்கு எதிரான தீர் மானத்துக்கு வாக்களித்த நாடுகள் தற்போது மௌனம் காக்கின்றன என்றும்அவர்சுட்டிக்காட்டியுள்ளார்.

சுய கௌரவத்துடன் நாட்டை ஆட்சி செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகள் கடனுதவி வழங்கும் என்று எதிர்பார்க்க முடியாது. ஜப்பானும் பெரும் கடன் சுமையில் காணப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடுபொருளாதாரநெருக்கடியை எதிர்நோக்கிய போது சீனாவே உதவிகளை வழங்கியது. சீனா உதவியிருக்காவிட்டால் நெருக்கடியில் சிக்க நேரிட்டிருக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏழைகளுக்கும் செல்வந்தர்களுக்கும் இடையிலான இடைவெளி அதிகரிப்பதே குற்றச் செயல்கள் இடம்பெறுவதற்குக் காரணமாகும். சாவுத் தண்டனையை நிறைவேற்றுவதன் மூலம் குற்றச் செயல்களைக் குறைக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார். (ற)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** இலட்சியத்தை மன உறுதியுடன் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும். நண்பருடன் விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். மாணவர்கள் ஆர்வத்துடன் படித்துச் சிறப்படைவர்.

**இடபம்:** முயற்சிக்கேற்ற முன்னேற்றம் வாழ்வில் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் உழைப்பால் உயர்வு காண்பீர்கள். உறவினர் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். புத்திரர் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள்.

**மிதுனம்:** எதிரியிடமும் பெருந்தன்மையுடன் நடந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் சீரான வளர்ச்சியும், ஆதாயமும் கிடைக்கும். வாகனப் பயணத்தில் மிதவேகம் பின்பற்றவும். மனைவியின் செயற்பாடு வளர்ச்சிக்குத் துணை நிற்கும்.

**கடகம்:** பேச்சில் வசீகரத்தன்மை நிறைந்திருக்கும். புதியவர்களின் அறிமுகத்தால் நன்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். இஷ்ட தெய்வ வழிபாட்டில் மனம் ஈடுபடும்

**சிங்கம்:** செயல் நிறைவேறக்கூடுதல் அக்கறை தேவை. தொழில், வியாபாரத்தில் குளறுபடி ஏற்பட்டு மறையும். பெண்கள், குடும்பச் செலவுக்காகக் கடன் வாங்க நேரிடும். உடல்நலனில் அக்கறை செலுத்துவது அவசியம்.

**கன்னி:** சாதுரியமான பேச்சால் எதையும் சாதிப்பீர்கள். நல்ல மனிதர்களின் நட்பும், உதவியும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், புதிய உத்தி மூலம் இலாபம் காண்பீர்கள். குடும்பத் தேவை அனைத்தையும் பூர்த்தி செய்வீர்கள்.

**துலாம்:** குடும்பப் பிரச்னையைப், பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் வருமானம் படிப்படியாக உயரும். உறவினர் வருகையால் வீட்டுச்செலவு அதிகரிக்கும். விஷப் பிராணிகளிடம் கவனமாக இருப்பது நல்லது.

**விருச்சிகம்:** மனதில் புதிய உற்சாகம் பிறக்கும். தொழில், வியாபாரத்தில் போட்டி மறையும். இலாபம் பெருகும். வெளியூரிலிருந்து எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும். மாணவர்கள் ஆர்வத்துடன் படித்து முன்னேறுவர்.

**தனுசு:** பொறுப்பு அதிகரித்தாலும், எளிதாக நிறை வேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் சாதனை படைப்பதால் புகழ்சேரும். பெண்கள் ஆடை, ஆபரணங்களை வாங்கிக் குவிப்பர். மாணவர்கள் போட்டியில் பங்கேற்று வெற்றி பெறுவர்.


**மகரம்:** நிதானத்துடன் பேசுவது நன்மையளிக்கும். தொழில், வியாபாரத்தில் தடை நீங்கி ஆதாயம் உயரும். உடல்நலனில் அக்கறை செலுத்தி வருவீர்கள். அரசியல்வாதிகள் நீண்ட தூரப் பயணம் மேற்கொள்வர்.

**கும்பம்:** அக்கறையுடன் செயலாற்றுவது அவசியம். மனைவியின் ஆலோசனையை ஏற்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை.

**மீனம்:** பிரச்னை நீங்கி மனநிம்மதி காண்பீர்கள். உற்சாகத்துடன் அன்றாடப் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் தாராளமான வருமானம் கிடைக்கும். உறவினர்களின் வருகையால் கலகலப்புக் கூடும்.

## பேஸ் புக்கிஸ் பிடித்தவை...


இதுதான் எரிபொருள் மீதப்படுத்தும் திட்டத்துடன் உருவாக்கப்பட்ட நவீன மோட்டார் வாகனம்


மனைவிக்கு பிடிக்கும் மகளுக்கு பிடிக்கும் மகனுக்கு பிடிக்கும் என்று வாழும் அப்பாக்களுக்கு மறந்தே போய்விடுகிறது தனக்கு என்ன பிடிக்கும் என்று.





இலக்கை வீழ்த்தியதன் பின்னர் இம்ரான் தாகீர் என்ன ஒரு ஓட்டம்




விசா இல்லாமல் கூட வெளிநாடு போகலாம். ஆனால், வேலை கிடைக்காமல் சொந்தக்காறர் வீட்டுக்கே போகமுடியாது.

## 26 வருடங்களின் பின்னர் மலையாள திரையுலகில் கால் பதிக்கும் கமல்



விஸ்வரூபம், உத்தமவில்லன் மற்றும் தூங்காவனம் படங்களைத் தமிழ், தெலுங்கு என இரு மொழிகளிலும் ஒரே நேரத்தில் எடுத்த கமல்ஹாசன், அடுத்ததாக மலையாளத் திரைலகின் பக்கம் தனது பார்வையைப் பதித்திருக்கிறார். பாபநாசம் படத்தின் வெற்றிக்குப்பின்னர், தற்போது தூங்காவனம் படத்தில் நடித்து வரும் கமல் அடுத்த படத்தை தமிழ், மலையாளம்என இரு மொழிகளிலும் ஒரே நேரத்தில் தயாரிக்கவுள்ளார். மலையாள உலகின் புகழ் பெற்ற இயக்குநர் டி.கே.ராஜீவ்குமார் இந்தப் படத்தை இயக்கவிருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது. 1989ம் ஆண்டும் டி.கே. ராஜீவ் குமார் இயக்கத்தில் கமல், ஊர்மிளா, ஜெயராம் நடித்து வெளியான சாணக்கியன் திரைப்படம் தமிழ், மலையாளம் என இரு மொழிகளிலும் ஒரே நேரத்தில் வெளியாகி வெற்றி அடைந்தது. சாணக்கியன் படத்தின் மாபெரும் வெற்றிக்குப் பின்னர் 26 வருடங்கள் கழித்து இரு வரும் இந்தப் படத்தின் மூலமாக இணைகிறார்கள் என்பது, திரையுலகில் கூடுதல் எதிர் பார்ப்பை உருவாக்கியுள்ளது. இந்தப் படத்தை இயக்குவது தொடர்பான பேச்சு வார்த்தைகள் தற்போது நடந்து வருவதாகவும், விரைவில் படம் தொடர்பான அதிகாரபூர்வமான அறிவிப்புக்கள் வெளியாகலாம் என்றும் கூறுகின்றனர். அநேகமாக இந்த வார இறுதிக்குள் இந்தப் படம் தொடர்பான அறிவிப்புகள் வெளியாக வாய்ப்புக்கள் அதிகம் இருக்கிறது என்று கூறப்படுகின்றது. டி.கே. ராஜீவ் குமார், தான் இயக்கிய ஜலமர்மரம் படத்துக்காக தேசிய விருது பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## திகிலூட்டும் முப்பரிமாண ஓவியங்கள்













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் தினமும் கண்காட்சியும்

யாழ்ப்பாணம், ஒக்.14

வலி. தெற்குப் பிரதேசசபை, பொதுநூலகம் என்பவை இணைந்து ஏற்பாடு செய்துள்ள தேசிய வாசிப்பு மாத, நூல் கண்காட்சியும் உலக சிறுவர் தின நிகழ்வும் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வலி.தெற்கு பிரதேசசபையின் தலைமை அலுவலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

உடுவில் பொது நூலக நூலகர் ம. ஆனந்தராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.தெற்கு கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் விக் னேஸ்வரி கந்தசாமி ஐயரும், சிறப்பு விருந்தினர்களாக வலி.தெற்கு பிரதேசசபைச் செயலாளர் தி.தியாகச் சந்திரனும், வலி.தெற்கு சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.செல்வவிநாயகரும் கலந்து கொள்வர். (ஐ–ரி2)

# விசேட அலகு திறப்பு விழாவும் வருடாந்த பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், ஒக். 14

யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் விசேட கல்வி அலகுத் திறப்பு விழாவும் நாளை வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. பாடசாலையின் அதிபர் தி.ஶ்ரீதரன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கிளிநொச்சி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜாவும், கௌரவ விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராஜாவும் கலந்து கொள்வர். (ஐ–ரி2)

# நவராத்திரி பூசை வழிபாடுகள்

யாழ்ப்பாணம், ஒக். 14

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் நவராத்திரி பூசையை முன்னிட்டு தினமும் மாலையில் விசேட அபிஷேகப் பூசை வழிபாடுகள் இடம்பெற்று நவராத்திரி பாமாலை படிக்கும் நிகழ்வும் இடம்பெற்று வருகின்றது. தொடர்ந்து எதிர்வரும் 22 ஆம் திகதி மானம்பூ உற்சவம் இடம்பெறும்.

***

கொழும்புத்துறை துண்டி ஐயனார் அம்மன் ஆலயத்தின் நவராத்திரி பூசை வழிபாடுகள் மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றன. தினமும் விசேட அபிசேகத்தைத் தொடர்ந்து பூசைகள் மற்றும் வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

***

கொழும்புத்துறை ஆத்திப்புலம் சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தில் நவராத்திரி பூசை வழிபாடுகள் தினமும் மாலை 4 மணிக்கு விசேட அபிசேகத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. அத்துடன் தினமும் நவராத்திரி பாமாலை ஓதுதலும் இடம்பெற்று வருகின்றது. (ஐ–17)

# கூட்டுறவுக் கிளை திறப்பு விழா

யாழ்ப்பாணம்.ஒக்.14

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் கொழும்புத்துறைப் பிரதேசத்தில் கிளை விற்பனை நிலையம் ஒன்று எதிர் வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. சங்கத்தின் தலைவர் மு.ஜெ.சுஜிந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் மேற்படி 21ஆம் இலக்க கிளையின் கிளைக்குழுத் தலைவர் ஆ.சிவலோகநாதன் கிளை விற்பனை நிலையத்தைத் திறந்து வைப்பார்.

இந்தத் திறப்பு விழா நிகழ்வில் சங்க இயக்குனர்கள், பணியாளர்கள் மற்றும் கூட்டுறவாளர்கள் கலந்து கொள்வர்.

இதேவேளை இந்தக் கிளை விற்பனை நிலையத்துடன் சேர்ந்து மொத்தமாக சங்கத்தின் 21 கிளை நிலையங்கள் செயற்பட்டு வருகின்றன. (ஐ–17)

# அலைபேசி திருட்டுச் சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம்,ஒக்.14

பெறுமதி வாய்ந்த அலைபேசி ஒன்றைக் களவாடிய சந்தேகத்தில் தெல்லிப்பழையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கடந்த ஞாயிற்றுக் கிழமை அன்று யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் தனது தந்தையாருடன் உதவிக்கு நின்ற இளவாலையைச் சேர்ந்த இளைஞர் ஒருவரின் அலைபேசி களவாடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் குறித்த சந்தேகநபர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த இளைஞரை பொலிஸார் நேற்று முன்தினம் யாழ்.நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர். அவரை 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள்பிணையில் நீதிமன்றம் விடுவித்துள்ளது. இதேவேளை தான் வைத்திய சாலையில் நோயாளரைப் பராமரிக்கும் பணியில் ஈடுபட்டு வருவதாகவும், சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட தன்னை வைத்தியசாலைப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும், சிவிலுடையில் நின்ற பொலிஸ் உத்தியோகத்தர்களும் வயரினாலும் தலைக்கவசத்தினாலும் கடுமையாகத் தாக்கியதாகவும் சந்தேகநபர் தெரிவித்தார். இந்தச் சம்பவம் தொடர்பாகச் சந்தேகநபரின் சட்டத்தரணியூடாக நீதிமன்றின் கவனத்துக்கும் கொண்டு வரப்பட்டுள்ளது. (ஐ–103)

# நால்வருக்கு விளக்கமறியல்

சாவகச்சேரி,ஒக்.14

கிணற்றின் அருகில் பொருத்தப்பட்டிருந்த நீர் இறைக்கும் இயந்திரத்தைத் திருடிய நாவற்குழியைச் சேர்ந்த இருவரையும், கொடிகாமம் பகுதியில் பொல்லுகள், கற்கள் போன்றவற்றினால் நபரொருவரைத் தாக்கிக் காயம் விளைவித்த இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த 11 ஆம் திகதி உத்தர விடப்பட்டுள்ளது. சாவகச்சேரிப் பொலிஸாரால் நீரிறைக்கும் இயந்திரத்தைத் திருடியதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இருவரையும், கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப் பட்ட இருவரையும் நீதிமன்றில் முற்படுத்திய போது குறித்த நால்வரையும் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ஐ–9)


## வேலையாள் தேவை

வவுனியாவில் புதிதாகத் திறக்கப்பட்ட சிகை அலங்கார நிலையத்திற்கு (சலூான்) நன்கு வேலை தெரிந்த ஒருவர் உடனடியாகத் தேவை.

தொடர்பு: 071 705 8181 ,077 624 5508

## மணமகள் தேவை

பிறந்த திகதி - 01.07.1986 பிறப்பிடம் புலோலி உயர் குடும்பத்தவர், பதவி பொறியலாளர் (சிவில்), கிரக பாவம் -63 இவருக்கு ஏற்ற மணமகள் தேவை. மருத்துவம் பொறியியல் கணினி - பல்கலைக் கழகப் பட்டதாரி விரும்பத்தக்கது புறோக்கர் தொடர்புகள் ஏற்கப்படமாட்டாது.

தொடர்புகளுக்கு :- 077 502 5180

(65465)(12.15.17)

## வீடு வாடகைக்கு

இல.94, நல்லூர் குறுக்கு வீதியில் 2000 சதுர அடி கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் , அரச திணைக்களங்கள் விரும்பத்தக்கது. வாகனத் தரிப்பிட வசதியும் உண்டு

தொடர்பு: 077 668 1547

## WARNING - Lightning Kills

Lightning and Surge Protection Installation

இடி மின்னல் தாக்கத்திலிருந்து உங்கள் கட்டடங்கள், தொழிற்சாலைகள் என்பவற்றைப் பாதுகாப்பதற்கான Lightning & Sure Protection கருவிகள் எம்மால் இணைத்துத் தரப்படும்.

தொடர்புகளுக்கு: Synnex Technology

077 758 8128

021 223 1455

(65466)(14.16.17)

அல்லைப்பிட்டி முதலாம் வட்டாரம் பிரதான வீதிக் கண்மையில் 10 நிமிடத்தில் யாழ் நகரை அடையக்கூடிய தூரத்தில் நன்னீர்க்கிணறு, பயன்தரு மரங்களுடன் கூடிய திருத்தம் செய்யப்பட்டதும் புதிதாக இணைக்கப்பட்டதும் மாபின் பதிக்கப்பட்ட 5பரப்பில் அமைந்துள்ள அழகிய வீடு விற்பனைக்கு உண்டு. விலை 32 இலட்சம் ரூபா.

தொடர்பு: 021 205 4016 (65531)(14.16)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், நல்லூர், பருத்தித்துறை வீதி சயன்ஸ் அக்கடமி ரியூசன் சென்ரருக்கு அருகில் வீடு கிணற்றுடன் சேர்ந்த மூன்று பரப்பு ஆதனம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: சந்திரநாசன் 077 610 6760
சிவா (416) 438 8509, (416)845 8509

(66613) (12.16.17)



## யா/ஸ்கந்தவரோதய கல்லூரி
## கந்தரோடை சுன்னாகம்

முன்னாள் அதிபர்
அமரர் வி.சிவசுப்பிரமணியம் அவர்களின்
10 ஆவது ஆண்டு
நினைவுப்பேருரை வைபவம்
2015



தலைவர்:
மு.செல்வஸ்தான்
(அதிபர்)
காலம்:
15.10.2015
(வியாழக்கிழமை)
பிற்பகல் ஒருமணி
இடம்: கந்தையா உபாத்தியார் மண்டபம்

நினைவுப் பேருரை
சாமுவேல்
இரத்தினஜீவன் H கூல்
(D.Sc (Eng).Phd M.Sc (Dist)-
பேராசிரியர் மிசிகன் மாநில பல்கலைக்கழகம் – அமெரிக்கா
அவர்கள்

விடயம்: "யாழ்ப்பாணத்தின் ஆங்கில தரத்தை மீட்பது எப்படி

நிறைவுரை: வைத்திய கலாநிதி S.சிவானந்தராஜா
(Member, Offical Languge Comision)

கல்லூரிக் கீதம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி.



## இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்.
ஓம் சக்தி அருள் வாக்குப்பெற்ற பரம்பரை ஜோதிடர்

S.N.குமாரசாமி

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித் தடையா, குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழிலில் முன்னேற்றம் இல்லையா? குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.

காலை 9 மணி முதல் மாலை 5.00 மணிவரை.
இல.424/11,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்
(சிவன்கோவிலடி பிரகாஷ் ரான்ஸ்போட் அருகில்)
தொ.பே. 072 681 6681, 072 681 6691

(62359) (45.3.7)



## மேல் நீதிமன்றம் வவுனியா
## கேள்வி அறிவித்தல்

மன்னார் நீதிமன்றங்களின் வளாகத்தில் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்குரிய கேள்விப் பத்திரங்கள் தகுதிவாய்ந்த நிறுவனங்களிடமிருந்து இத்தால் கோரப்படுகின்றன.

எனவே சுத்திகரிப்புப் பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப் படிவங்களையும் மேலதிக விவரங்களையும் வவுனியா மேல்நீதிமன்றக் கணக்காளரிடம் மீளளிக்க முடியாத வைப்பாக ரூபா 100/= ஐயும், மீளளிக்கக்கூடிய வைப்பாக ரூபா 10000/= ஐயும் செலுத்தி 18.11.2015 புதன்கிழமை பி.ப 2.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்ப முடிவு திகதி 18.11.2015 பி.ப 02.30 மணி வரை ஆகும். அன்றைய தினம் பிற்பகல் சுமார் 3.00 மணியளவில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்பட்டு தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

ஒப்பம்: அ .பிரேமசங்கர்,
தவிசாளர்/ மேல் நீதிமன்ற நீதிபதி,
மேல் நீதிமன்ற, கேள்விச்சபை,
மேல்நீதிமன்றம்வவுனியா.

09.10.2015

(C/ 18755) (12.15.17)



## Blossum Beauty Care



3 விதமான
மணப்பெண் அலங்காரத்துக்கான
ஒரு நாள் வகுப்பு
யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக

திருமலையில் புகழ்பெற்ற பிரபல அழகுக்கலை நிபுணர் தொலைக்காட்சி நிகழ்வு அழகுக்கலை நிபுணர் ஆர். மைதிலி அவர்களின் பிரபல சான்றிதழுடனான அழகுக்கலை கற்கை செயன்முறை விளக்கங்களுடனான வகுப்பு நடைபெற உள்ளது.

இவர் பிரபல தொலைக்காட்சி அழகுக்கலை சார் செயன்முறை நிகழ்வுகளோடு திரைப்பட ஒப்பனைகளையும் செய்பவர். இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள். ஆர்வலர்கள் வெளிநாடு செல்பவர்களுக்கு சிறப்பானதாக அமையும்.

வகுப்புகளுக்கான கட்டணம் அறவிடப்படும். நிறைவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இடம்: Green Grass Hotel ஆசீர்வாதம் வீதி, யாழ்ப்பாணம்.
காலம்: 17.10.2015 நேரம்: 9.00 am to 5.00 pm
கட்டணம் 6000/=

Booking for Ticket: 077 397 3164
Face Book : Blossum Beaty Care
மேலதிக விவரங்களுக்கு
077 4351092, 026 2222 368





* பல் முக சீராக்கல்
(Consultant orthodontist) -

* முக சத்திரசிகிச்சை
(Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்.

* மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
* ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
* நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
* வேர்முறை சிகிச்சை (Root canal Filling)
* நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
* பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

சன்றைஸ் மெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8066 (உதா)

றோயல் மெடிக்கல் சென்ரர்
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்ஷினி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை பாராட்டுச் சிறப்பிதழ் - 2015

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் கல்வி பயிலும்
**செல்வன் ஸ்ரீதரன் சோபிதன்**
அவர்கள் 2015 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் தேர்வில் 154 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம். வாழ்வில் மேலும் பல சித்திகளைப் பெற்று வாழ வாழ்த்துவதுடன் இவரின் வெற்றிக்குத் துணை நின்ற ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்தும் வன்னியைச் சேர்ந்த மாமா, மாமி மற்றும் ப.சேதுராகவன் (மச்சான்)

(18772) (14,15)

---

யா/பெரியவிளான் றோ.க.த.க. பாடசாலை இளவாலை
2015 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்


தே.நிலாயன் 176 புள்ளிகள்


வ.ரஸ்மிதா 173 புள்ளிகள்


ஜொ.திபிஷா 171 புள்ளிகள்


செ.சதுமி 164 புள்ளிகள்


மெ.மாதினி 155 புள்ளிகள்


ஆ.அனிதா 153 புள்ளிகள்

100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர்

| | | | |
|---|---|---|---|
| ம.டிலக்ஷா | 152 | க. சன்சிகா | 120 |
| யோ.நிலுக்ஷி | 133 | வ.ஸ்ரான்ஸிலஸ் | 118 |
| யோ.கிருஷாந் | 130 | சி.கலக்ஷனா | 107 |
| கி.மரியாவுரக்ஷின் | 127 | | |

இம் மாணவர்களையும் இவர்களைப் பயிற்றுவித்த பாடசாலை அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/பெரியவிளான் றோ.க.த.க. பாடசாலை இளவாலை.

(65372) (13.15)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியில் கல்வி பயிலும்
**செல்வன் ஆனந்தராசா துசான்**
அவர்கள் 2015 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 183 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முதலாம் இடத்தையும் கோப்பாய் கோட்டத்தில் முதலாம் இடத்தையும் பெற்று சித்தியடைந்தமைக்காக வாழ்த்துவதோடு இவரை வழிப்படுத்திய கல்லூரி அதிபர் மற்றும் கற்பித்த ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துவதோடு இவர் மேலும் பல பெருமைகளைத் தேடி சாதனை படைக்க இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
அம்மா, அப்பா, அண்ணாமார், அக்காமார், பெரியப்பாகுடும்பம், ஆசையப்பா குடும்பம், மாமாமார், கோவித்து மாமாகுடும்பம், அம்மம்மா, அம்மப்பா
நவக்கிரி, புத்தூர்.

(18772) (14,15)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2015 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து எமது பாடசாலைக்குப் பெருமை சேர்த்த மாணவச் செல்வங்களாகிய


**செல்வன் சுதாகரன் சஞ்ஜய்** (புள்ளிகள் - 164)


**செல்வி குலேந்திரராசா தேனுசா** (புள்ளிகள் - 154)

ஆகிய இருவரையும் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களான

| | | | |
|---|---|---|---|
| 1. த. அபிசேஸ் | 143 | 6. ப.தனுசன் | 113 |
| 2. மோ. ஜினித் | 143 | 7. பி.சிறிநந்தன் | 114 |
| 3. பா.மதுசன் | 137 | 8. ர.ரஜினா | 105 |
| 4. பு.அபிராமி | 131 | 9. ந.சிந்துஜன் | 103 |
| 5. இ. தனிகா | 117 | 10. ம.அனுசன் | 102 |

ஆகியோரையும் பாராட்டுவதுடன் இவர்களை நெறிப்படுத்திய அதிபர் திரு.ஜ.தேவேஸ்வரன் அவர்களையும் கற்பித்த ஆசிரியை திருமதி வே.அ.ஜெயந்திரன் மற்றும் இவ் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் அனைவரையும் மனப்பூர்வமாகப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்.
யா/மிருசுவில் அ.த.க பாடசாலை

(60637) (14,15)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மு/அமதிபுரம் தமிழ் வித்தியாலயத்தில் ஐந்தாம் தரம் புலமைப் பரிசில் பரீட்சை 2015 இல் தோற்றி 153 புள்ளிகள் பெற்று பாடசாலை வரலாற்றில் முதல்முறையாக சித்தியடைந்த மாணவன்
**செல்வன் அழகநாதன் கிரிஜன்**
அவர்களையும் பரீட்சையில் 100 இற்கு மேற்பட்ட புள்ளிகள் பெற்ற மாணவர் செல்வங்களான

| | |
|---|---|
| ஜெ. விதுசனா | 119 |
| கு.யதுசா | 105 |
| அ.காயத்திரி | 102 |

ஆகியோரையும் பாராட்டுவதுடன் இவர்களை நெறிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களையும் பாடசாலைச் சமூகம் வாழ்த்தி நிற்கின்றது.

பாடசாலைச் சமூகம்
மு/ அமதிபுரம் தமிழ் வித்தியாலயம்.

(65369) (14.15)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன்
**சுதேஸ்வரன் யதூஸ்**
(புள்ளிகள்- 154) அவர்கள்
2015 தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமைக்கு வாழ்த்துவதோடு யாழ்/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை ஆசிரியர்களுக்கும், சூராவத்தை அறிவாலய கல்வியகத்தின் ஆசிரியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, பெரியம்மா, பெரியப்பா, சித்தி, சித்தப்பா, அப்பம்மா, தாத்தா, அம்மு, அக்காமார், அண்ணா, தம்பிமார்.

(65370) (14,16,17)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்


சந்திரகுமார் அமலினி 169 புள்ளிகள்


நிசான் நிருஷா 161 புள்ளிகள்


டெல்சன் டினேசியஸ் அபிஷா 159 புள்ளிகள்


எட்வேட் லத்திக்கா 158 புள்ளிகள்


அலன் நிக்ஷன் சௌமியா 156 புள்ளிகள்

2015 - தரம் 5 இல் **குருநகர் - பேர்கன் ஒஸ்லோ கல்வி நிலையத்தில்** கல்வி கற்று புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த ஐந்து மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன் உயர் பெறுபேறு பெற உழைத்த ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**பேர்கன் - ஒஸ்லோ (நோர்வே) குருநகர், யாழ்ப்பாணம்.**

(65388) (13.15)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை பாராட்டுச் சிறப்பிதழ் - 2015

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




சென்ஜோன்ஸ் கல்லூரி மாணவன்

*செல்வன் சசிகரன் அபிராம்*

2015 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் **168** புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்காக இவரை வழிப்படுத்திய பாடசாலை அதிபர் மற்றும் கற்பித்த ஆசிரியர்களைப் பாராட்டுவதோடு இவர் மேலும் பல பெருமைகளைத் தேடி சாதனை படைக்க இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

இல. 99 ,பூதவராஜர் வீதி, திருநெல்வேலி.

வாழ்த்துவோர்:
அம்மம்மா, அப்பம்மா, அம்மா, அப்பா, பெரியம்மா, பெரியப்பா.

(65370) (14.16.17)

---

யாழ்/ திருநெல்வேலி றோ.க.த.க பாடசாலை

## பாராட்டி வாழ்த்துகின்றோம்





பி.பிர்த்திகா (புள்ளிகள் - 154)

ஜெ.ஜெயக்குமார் (புள்ளிகள் - 154)

லோ.மிதுலன் - 122
கு.நிசாந் - 110
ஞா.ரஜந்தன் - 101

எமது பாடசாலையில் இந்த வருட (2015) புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் 100 இற்கு மேல் புள்ளிகள் பெற்ற மாணவர்களையும் இவர்களைத் தயார்படுத்திய ஆசிரியை திருமதி அருந்ததி மோகனேஸ்வரன் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்.

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




யாழ்/ ஆனைப்பந்தி மெதடிஸ்த மிசன் பாடசாலை மாணவன்

**செல்வன் குகநாதன் மிதுனன்**

2015 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 173 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். இவரை வழிப்படுத்திய அதிபர் மற்றும் கற்பித்த ஆசிரியர்களுக்கு நன்றி தெரிவிப்பதோடு இவர் மென்மேலும் கல்வியில் சிறந்து விளங்க எல்லாம்வல்ல பாணாவிடை சிவன் அருள்புரிய வேண்டுகின்றோம்.

இவரைப் பாராட்டி வாழ்த்துவோர்
அம்மா, அப்பா, அண்ணாமார், துவாரகன் குடும்பம்(டென்மார்க்), திவாகன்(லண்டன்). (திலக்சன், தர்சன், தம்பி மிது) யாழ்

---

யா/சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை நீர்வேலி

## தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2015



ச.யுவேதா - 169 புள்ளிகள்



பா.பானுஷன் - 160 புள்ளிகள்



யோ.கார்த்திகா - 153 புள்ளிகள்



அ.மதுரா - 151 புள்ளிகள்

சாதனை நிலைநாட்டிய மாணவர்களையும் சித்தியடைந்த மாணவர்களையும் வகுப்பாசிரியர் **திருமதி ச.ஜெயந்தினியையும்** பாராட்டி வாழ்த்துகின்றோம்

**பாடசாலைச் சமூகமும் SDS உம்**

(65373) (13.15)

---

யா/கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை

## அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

2015 தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளுக்குமேல் புள்ளிகளைப் பெற்றுசித்தியடைந்தோர்



சுபாஸ்கரன் தேனுசன் 167



ஜெயக்குமார் லிபிசா 167



கிரிவேல் சாகித்தியன் 165

இவர்களுடன் 100 புள்ளிகளுக்குமேல் பெற்றவர்கள்

(1).துரைசிங்கம் சயிந்தா 143
(2).சிவபாலன் டிலக்சனா 139
(3.)சிறீதரன் சாரங்கன் 135
(4).சோமசுந்தரம் அபர்ணன் 125
(5).நந்தகுமார் ஜெஸ்ரின் 122
(6.)நிருபன் றதீபா 119
(7).ஜீவராசா டல்சிகா 118

இவர்களது உயர்ந்த பெறுபேற்றுக்கு அயராது உழைத்த தரம் 5 இல் புலமைமிக்க ஆசிரியை திருமதி **சியாமளா குகதாஸ்** மற்றும் ஏனைய ஆசிரியர்கள், அதிபர் ஆகியோரையும் மனமுவந்து வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றோம்

**பாடசாலைச் சமூகம்**

(C.18752) (13.15)

---

யா/திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயம், அல்வாய்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2015 இல் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த ஆறு மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்



செந்திநாத் ரோசியா 174 புள்ளிகள்



விக்னராசா றோஜிகா 172 புள்ளிகள்



அன்ரன் யேசுராசா யூட் பிரியதர்சன் 168 புள்ளிகள்



முருகதாஸ் ஆரணி 158 புள்ளிகள்



விமலதாஸ் சுஜாத் 156 புள்ளிகள்



பிரான்சிஸ் கெனடி அஸ்விஜா 153 புள்ளிகள்



வகுப்பாசிரியர் திருமதி யாழினி மதியழகன்

100 புள்ளிகளுக்கு மேலாகப் பெற்ற 18 மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன் இவர்களைக் கற்பித்த வகுப்பாசிரியர் திருமதி யாழினி மதியழகன் அவர்களுக்கும் வழிகாட்டி நெறிப்படுத்திய எமது அதிபர். க.ரவீந்திரன் அவர்களுக்கும் எமது பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.



அதிபர் கந்தசாமி ரவீந்திரன்

**பாடசாலைச் சமூகம்**

(62163) (13.15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழ் மக்களை ஓரம் கட்டிவைக்க புதிய அரசு திட்டமிடுகிறதா....?

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்து ஆறாம் ஆண்டு ஜூலை மாதம் ஐந்தாம் நாள், இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை அப்போதைய எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க அரசு குழிக்குள் போட்டு மூடியது.

அந்தக் காலம் தொடக்கம், தமிழ் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய அரசியல் சம அந்தஸ்தை, சிங்களப் பேரினவாத அரசுகள் தட்டிப்பறித்து, சட்டங்களின் ஊடாக நசுக்கி வைத்திருக்கின்றன.

அதன் பிரதி பயன்களாக, விளைவுகளாக தமிழர்கள் மீதான இனப்படுகொலைகளும், எமது இளைஞர்களின் எழுச்சி மிக்க ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பமும், அரச இராணுவத்தினதும் கடற்படை மற்றும் விமானப் படையினதும் நாட்டின் சொந்த மக்கள் மீதான கொலைகளும், அவர்களின் பிரதேசங்கள் மீதான அழிவுப் படலங்களும் அசுரத்தனத்தோடு ஆற்றி முடிக்கப்பட்டன.

இடைப்பட்ட காலத்தில், நியாயமான தமிழ் மொழி உபயோகம் என்ற 'சூப்பி' இனிப்பைக் காட்டி, அதனை அவர்கள் வாய்களில் போட்டு விட்டு, தமிழ் மக்கள் எமது சகோதரர்களே என்று அனைத்துலக நாடுகளை கொழும்பு அரசுகள் ஏய்க்காட்டி வந்துள்ளன.

இந்த நாட்டில், சிங்கள மக்களும் தமிழ் மக்களும் சம உரிமைகளுடன் வாழவேண்டிய பூர்வீகக் குடிகள் என்பதை மறைத்து, தாம் பெரும்பான்மையினராக இருப்பதால், நாடு சிங்களவருக்கே சொந்தம் என்ற புதிய சித்தாந்தத்தை முன்வைத்து, தமிழ் மக்களுக்குச் சேர வேண்டிய உரிமைகளையும், பல்துறைசார் பங்குகளையும் தட்டிப் பறித்து, அவர்களை கீழே வீழ்த்தி உள்ளன அவை.

பல்லின மக்கள் வாழும் நாடுகளுக்கு சமஷ்டி ஆட்சி முறையே உகந்தது என்பதை ஏற்றுக்கொள்வதற்கு மறுத்து, காலத்துக்குக் காலம் புதிய அரசமைப்புக்களை நிறைவேற்றி தமது இலக்குகளுக்கு உரமூட்டி வருகின்றன தென்னிலங்கை அரசுகள்.

தென்னிலங்கையின் அரசியல் தலைவர்களுக்கு, உலகின் மிகப்பெரும்பாலான நாடுகளில் நடைமுறையில் உள்ள சமஷ்டி ஆட்சி முறை, வேப்பம் காயாகக் கசப்பதாலேயே, இங்கு தமிழ் மக்களை ஓரங்கட்டி வைப்பதற்கு, கட்சி வேறுபாடுகளின்றி அவர்கள் வீச்சடைகிறார்கள். இதுவே, இப்போதைய அரசியல் யதார்த்தம் என்றுமாகி விட்டது.

கடந்த காலத்தை நோக்கின், சிங்களம் மட்டும் சட்டத்தை முன்னிறுத்தி, தென்னிலங்கை மக்களை உசுப்பேற்றியவர், லண்டனில் சோஷலிஸம்(Socialism) பயின்ற எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க என்பது சரித்திரம்.

அதற்குப் பிந்திய காலத்தில், ஜனாதிபதிக் கதிரையைப் பற்றிக்கொண்ட அவரது மகள் சந்திரிகா, (வடக்கில் சந்திரிகா காப்புப் படலம் உயர்ந்து நின்ற போதிலும்) தமது தந்தையின் எடுகோளை வளர்க்க வேகவேகமாகச் செயற்பட்டாரே அன்றி, தமிழ் மக்களுக்கு உரிய அரசியல் உரிமைகளைத் தொட்டுப் பார்க்கவும் இல்லை!

இதன் பின்னராவது, நாட்டின் நலனை முன்னிறுத்தி, சமகால உலக நீதிக்கு அமையச் செயற்படுவதற்கு, சிங்கள மக்களின் அரசியல் தலைவர்கள் (சந்திரிகாவும் சரி, ரணில் விக்கிரமசிங்கவும் சரி) முன்வருவார்கள் என்பதற்கான வெளிச்ச முகில் தோற்றுவிக்கப்படும் என்பதற்கான எந்தவகை ஏதுவும் தென்படவில்லை; வெளிப்படவில்லை!

இந்த நாட்டில், சமஷ்டி முறை ஆட்சி அமைந்தால், சகல இனங்களும் மனமார்ந்து தேசத்தின் வளர்ச்சிக்கு உதவி, அதனைக் கட்டி எழுப்ப இயலும் என்ற உண்மையை, யதார்த்த நிலையை தென்னிலங்கை மக்களுக்கு ஊட்டும் பொறுப்பு நூற்றுக்கு நூறு வீதம் புதிய நாடாளுமன்றத்துக்கு உண்டு.

தென்னிலங்கை மக்களுக்கு, அதனை முழுதார ஊட்டி, அவர்களது ஆதரவை ஈட்டிக்கொள்ள இவர் கள் முன்னிலைப்படுவது இனி எப்போது...?

புதிய வழிகுறித்துச் சிந்தித்துப் பார்க்கவும் நேரகாலம் இல்லை என்று, இன்றைய அரசு மாய்மாலம் காட்ட நினைக்கிறதா, திட்டமிடுகிறதா? இன்னும் சில வாரங்களில் எல்லாமே அம்பலமாகிவிடும்....!



# இளைஞர்களின் எதிர்காலம்?

பேராசிரியர் தயா சோமசுந்தரம்

பொதுவாக நாங்கள் இளைஞர்களைப் பற்றிக் கதைக்கும் போது, அவர்களை விமர்சிப்பதும் அவர்களில் நடத்தையில் பிழை காண்பதும், அவர்களால் ஏற்படும் குழப்பங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று முடிவு எடுப்பதும் வழமையானதே. இதில் சம்பந்தப்படும் இளைஞர்கள் பங்குபற்றுவதில்லை. ஆனாலும், இதற்கு மாறாக, இந்த முறை தற்போதைய சூழ்நிலையை இளைஞர்களின் பார்வையில் அவர்கள் இதை எவ்வாறு நோக்குகிறார்கள், எவ்வாறு அனுபவிக்கிறார்கள் மற்றும் நிலவும் பிரச்சினைகளில் இருந்து விடுபடுவதற்கான சில யுக்திகள், முறைகளைப் பற்றி இங்கு எடுத்துக்கூற முயற்சிக்கிறேன். இளைஞர்களின் நிலைமை யைப் பற்றி இன்று ஆராய்வதன் முக்கியத்துவத்தை, அண்மையில் புங்குடுதீவில் நடந்த சம்பவங்களும், அதைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் எதிரொலியாக நடந்தவையும் கோடிகாட்டி நிற்கின்றன.

இளமைப்பருவம் வாழ்க்கையின் ஒரு முக்கிய கட்டம். குழந்தைகளாக, சிறுவர்களாக, கட்டிளமைப் பருவத்தினராக விருத்தியடைந்து இளைஞர்கள் வயது வந்த பொறுப்பான பிரஜைகளாக, சமூக அங்கத்தவர்களாக குடும்பஸ்தர்களாக உருவாக்கப்படும் காலம் இது. உடைந்து போயிருக்கும் சமூகக் கட்டமைப்பை திரும்பவும் கட்டியெழுப்ப வேண்டிய, போருக்குப் பின்னாரான இந்தத் தருணத்தில், எமது சமூகத்தின் எதிர்காலம் இளைஞர்களின் கையில்தான் தங்கியுள்ளது என்றால் அது மிகையாகாது. இயற்கையும் இந்த மகத்தான இயக்கப்பாட்டுக்கு வளமாக, அதிகரித்த உடல் வளர்ச்சியையும், அகச்சுரப்புக்களையும், பாலியல் விருத்தியையும், அறிவுச் சிந்தனை விரிவாக்கத்தையும் தாராளமாக வழங்குகின்றது. கட்டிளமைப் பருவத்தினரும், இளைஞர்களும் புதுப்புது யோசனைகள், யுக்திகள், தூண்டல்கள் என்பவற்றுடன் திடீரென உணர்ச்சி வசப்பட்டு முடிவுகள் எடுத்தும் முழு மூச்சுடன், பலமாக, சக்தி மிக்கவர்களாக செயற்படுவர், மாறுவார்கள். பிழை விடுவார்கள், முயற்சிப்பார்கள், பரீட்சிப்பார்கள், புது ஆழமான, உயிருக்கு உயிரான சிநேகிதங்கள், கோபதாபங்கள், சண்டைகள், முரண்பாடுகள், காதல்கள், உன்னதமான இலக்குகள், தோல்விகள் என்று மாறி மாறி உலகம் புரளும். பெரியவர்களிலும் பார்க்க சகபாடிகளின் கவனத்துக்கு, கருத்துக்கு மற்றும் செல்வாக்குக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள். இவர்களை விளங்கிக் கொள்வது இயலாத காரியமாக இருக்கும். வேறு வேறு சுய அடையாளங்களைத் தேடுவார்கள். குழப்பமடைவார்கள். கேள்வி கேட்பர். இணங்க, அடங்க மாட்டார்கள். ஆயினும் இதுதான் இயற்கை. தில்லுமுல்லான பாதையினூடாக பாடம் கற்றுக்கொள்வார்கள். அனுபவிப்பார்கள். வளர்ந்து, முதிர்ந்த பெரியவர்களாகுவார்கள். இந்தக் காலத்து இளைஞர்களை விளங்கிக் கொள்ள அவர்கள் வந்த பாதை, வளர்ந்த காலத்தின் வரலாறு, முகம்கொடுத்த சூழல் முதலியவற்றைப் பார்ப்பது பயன்மிக்கது. இங்கே தற்சமயம் வாழும் பெரும்பாலான இளைஞர்கள் மூன்று தசாப்த காலமாக நடந்த போர்க்காலத்தில் பிறந்து, அதன் தாக்கங்களுக்கு முகம் கொடுத்து, நடந்த கோர நிகழ்வுகளின் ஊடாகவே வளர்ந்து வந்திருக்கிறார்கள்.

### தற்கால இளைஞர்களின் பின்னணி

போரின் பின்னரான காலப்பகுதியில் நாம் வாழ்வதனால், போரின் தாக்கத்துக்கு ஏதோ ஒரு வகையில் பெரும்பாலான இளைஞர்களும் யுவதிகளும் உட்பட்டு, போரின் வடுக்களைச் சுமந்தவர்களாகவே வாழ்கின்றனர் என்பதை தரம் வாய்ந்த சர்வதேச மற்றும் உள்நாட்டில் நடத்தப்பட்ட பல ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. உதாரணமாக, 1995ஆம் ஆண்டு யாழ் மண்ணில் நடைபெற்ற இடப்பெயர்வுகளும், 2009 ஆம் ஆண்டில் வன்னி மண்ணில் இடம்பெற்ற இறுதிப் போரும் பெரிய பாதிப்புக்களை ஏற்படுத்தியமை கண்கூடு. எமது உறவுகளின் உயிர்கள் பறிக்கப்பட்டதுடன், எமது வீடுகள் வெறுமனே கட்டடங்களாக மட்டுமல்லாமல் நாம் பரம்பரையாக, குடும்பமாக ஒன்றிந்து அன்னியோன்னியமாக வாழ்ந்த வீடுகளும் ஊர்களும் நிறுவனங்களும் (கோயில்கள், பாடசாலைகள், அரச, சமூகக் காரியாலயங்கள், நீதிமன்றங்கள்) தரைமட்டமாக்கப்பட்டதுடன், எமது அன்றைய சிறார்களது, அதாவது இன்றைய இளைஞர்களது நம்பிக்கையும், பாதுகாப்பு உணர்வும் நிர்மூலமாக்கப்பட்டன. உதாரணமாக: எமது கலை, கலாசாரப் பண்பாட்டுப் பெட்டகமாக திகழ்ந்த யாழ்ப்பாண நூல் நிலையம் எரிக்கப்பட்ட வரலாறும் அவர்களது மனங்களில் ஆழமான வடுக்களை ஏற்படுத்தி இருக்கும். இந்த நிகழ்வு, கலாசார இன ஒழிப்பு (Cultural genocide) அம்சமாக வர்ணிக்கப்பட்டுள்ளது.

போர் பலரது வாழ்வுக்கு அச்சுறுத்தலாக இருந்ததுடன், இடப்பெயர்வுகளும், பொருளாதாரக் கஷ்டங்களும், அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையும் பலர் காயங்களுக்கு உட்பட்டும் உறவுகளை இழந்தும், கொலைகளை கண்களால் கண்டும் உறவுகளைத் தொலைத்து தேடுபவர்களாயும், சிலர் சித்திரவதைக் குட்படுத்தப்பட்டும், வேறுசிலர் தடுப்பு முகாம்களில் மீள அடைக்கப்பட்டும் தொடர்ச்சியான மனஉளைச்சல்களுக்கு ஆளாகினர். அப்பாவிச் சிறுவர்கள் போராளிகளாக ஆயுதம் எந்தச் செய்யப்பட்டமை, போர்க்களத்தில் செயற்படுத்தப்பட்டவை என்பவை, பகைமை மற்றும் வன்மையாக அவர்களது மனதில் சிறுவயதிலேயே பசுமரத்தாணி போல பதியப்பட்டு, போரின் பின்னர் விடுவிக்கப்பட்டு திரும்பவும் குடும்பத்துடனும் சமூகத்துடனும் இணைவது எமது தற்போதைய நெருக்கடியான சமூகப்பிறழ்வுடன் தோற்றம்பெறும் புதிய தமிழ்ச் சமூகத்தில் கருத்தில் கொள்ள வேண்டிய ஓர் அம்சம்.

### தற்சமய உளசமூக சூழல்

தற்சமயம் வடஇலங்கையில் கடமையாற்றும் உளசமூக சேவையாளர்கள் மத்தியில் நடத்தப்பட்ட ஆய்வுகளில் அவர்கள் அன்றாடம் காணும் உளசமூகப் பிரச்சினைகள் பின்வருமாறு.

போரின் விளைவுகளால் வறுமை, போசாக்கின்மை, அங்கவீனர்களாகிய நிலை, மனநிலை பாதிப்படைந்த நிலைமை, சிதைவடைந்த குடும்பக் கட்டமைப்பு, தனிமை, உதவியற்றுக் கைவிடப்பட்ட நிலை, சட்டவிரோத செயல்களில் தனிநபராக மட்டுமன்றி கூட்டாக இணைந்து செயற்படல், சிறுவர் மற்றும் பாலியல் துஷ்பிரயோகங்கள், தற்கொலைகளும் தற்கொலை முயற்சிகளும், கைவிடப்பட்ட அனாதைச் சிறுவர்களும், திருமணத்துக்கு முன்பே கர்ப்பம் தரித்தலும், இளவயதுத் திருமணங்களும், இளவயதுக் கர்ப்பங்களும், சட்டவிரோதமான கருக் கலைப்புக்களும், அதிகரித்த மதுப் பாவனையையும் போன்றவற்றைக் காணக்கூடியதாக உள்ளது. மதுப் பாவனை வருடாவருடம் அதிகரித்து வருவதுடன் போதைப்பொருள்கள் பாடசாலை மாணவரிடையேகூட அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளன. போரானது குடும்பங்களிடையே பிளவுகளைக் கொண்டுவந்தது மட்டு மல்லாது தமிழ் சமூகத்தின் அடையாளத்தை நிலை குலையவும் வைத்துள்ளது. ஆனாலும் போர்க் காலத்திலும் சுனாமியிலும் காயப்பட்டவர்கள், கை, கால்களை இழந்தவர்கள், சிக்கல்களுக்குள் அகப்பட்ட வர்கள், நலிவுற்ற கர்ப்பிணிப் பெண்கள், பிரிந்த சிறுவர்கள், குழந்தைகளைக் காக்க, பராமரிக்க அரும் பாடுபட்டவர்கள் எமது இளைஞர்களே என்பதை நாம் மறக்கக்கூடாது. பற்பல துறைகளிலும் இளைஞர்கள் முன்னின்று உதவினர். வயது வந்தோர் காயப்பட்டும், இறந்தும், இடம்பெயர்ந்தமையாலும் ஏற்பட்ட குடும்ப சமூக வெற்றிடங்களை நிரப்ப காலத்துக்கு முன்னேயே வயது வந்தவர்களின் பொறுப்புக்களையும் தலை மைத்து வத்தையும் தங்கள் கையில் எடுத்துச் சிறந்த முறையில் செயற்பட்ட இளைஞர்களையும் காணக்கூடியதாக இருந்தது. குடும்பத்தினதும் சமூகத் தினதும் தேவைகளைப் பூர்த்தி செய்தமை, பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு போய்ச் சேர்த்தமை, முதலுதவி மூலம் காயங்களைப் பராமரித்தமை, அங்கவீனர்களுக்கு உதவியமை, நோயாளர்களைப் பராமரித்தமை மட்டுமல்லாது போக்குவரத்து போன்ற செயற்பாடுகளில் இளைஞர்கள் முன்னின்று செயற்பட்டனர். எனினும் அவர்கள் தற்காலத்தில் இந்த வகையான காரியங்களில் ஈடுபடுவதற்கு, சந்தர்ப்பங்கள் கொடுக்கப்படுவதில்லை. அவர்கள் வேலைகள் இல்லாமலும், ஆரோக்கியமான பொழுது போக்கு இல்லாமலும், அலைந்து திரிவது மட்டுமல்லாமல், சில வேளைகளில் சமூகவிரோத செயற்பாடுகளில் ஈடுபடவும் தூண்டப்படுகிறார்கள். பொறுப்புக்கள் இளைஞர்களிடம் பிரித்துக் கொடுக்கப்படின், அவர்கள் தமது கடமையில் ஆர்வம் காட்டுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணியளவில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ–10)

## 'இலவச வலை' பட்டியல் இந்த மாத இறுதிக்குள்

யாழ்ப்பாணம்,ஒக்.14

மீனவர்களுக்கான இலவச வலைகளை வழங்குவதற்கான பெயர்ப் பட்டியலை இந்த மாத இறுதிக்குள் வெளியிடுவதற்குரிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாக கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப் பாளர் ஆர்.ரமேஷ்கண்ணா தெரிவித்துள்ளார்.

எனினும் இலவச வலைகள் வழங்குமாறு கோரி கவன வீர்ப்புப் போராட்டம் நடத்தி ஒரு மாத காலம் முடிவடைகின்ற நிலையிலும், தமக்கு வலைகள் இன்னமும் வழங்கப்படவில்லை என நெடுந்தீவு வலம்புரி கடற்றொழில் சங்கத்தின் தலைவர் அருள் தாஸ் குற்றஞ்சாட்டியுள்ளார். மண் ணெண்ணெய் விலை அதிகரிப்பை அடுத்து, மீன்பிடி அமைச்சால் மீனவர்களுக்கு மானிய அடிப்படையில் எரி பொருள் வழங்கப்பட்டது. சில மர்தங்களின் பின்னர் மானிய எரிபொருள் திட்டத்தை நிறுத்திய மகிந்த அரசு, அதற்குப் பதிலாக, மீன்பிடி உப கரணங்களை வழங்கு வதற்கு நடவடிக்கை மேற் கொண்டிருந்தது.

மீன்பிடி வலைகள் வழங்கப்பட்டிருந்தாலும், நெடுந்தீவில் 200 பேர் பதிவுகளை மேற்கொண் டிருந்த நிலையில் 17 பேருக்கு மாத்திரமே மீன்பிடி வலைகள் வழங்கப்பட்டிருந்தன. எஞ்சியோ ருக்கு நீண்ட காலமாக மீன்பிடி வலைகள் வழங்கப் படவில்லை. இதனால், பாதிக்கப்பட்ட நெடுந்தீவு மீனவர்கள், யாழ்.பண்ணைப் பகுதியிலுள்ள கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்துக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடு பட்டிருந்தனர். ஒரு மாத காலத்துக்குள் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படும் என்று உறுதி வழங்கப்பட்டதையடுத்து, மீன வர்கள் தமது போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்திருந் தனர்.

ஆனால் ஒரு மாதம் கடந்துள்ள நிலையிலும், தமக்கான வலைகள் இன்னமும் வழங்கப்பட வில்லை என போராட்டத்தில் ஈடுபட்ட மீனவ சங் கங்களில் ஒன்றான, வலம்புரி மீனவ சங்கத்தின் தலைவர் அருள்தாஸ் தெரிவித்துள்ளார்.

**இந்த விடயம் தொடர்பில் கடற் றொழில் நீரியல் வளத் திணைக்களம் இந்த மாத இறுதிக்குள், கடற் றொழிலுக்கான இலவச வலைகள் வழங்கு வதற்கான பெயர்ப் பட்டி யலை வெளியிடவுள் ளதாகத் தெரி வித்துள்ளது.** (ஐ–5,ரி4)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காபனீரொட்சைட்டைக் குறைக்கும் திட்டத்துக்கு 149 நாடுகள் ஆதரவு

பரிஸ், ஒக்.14

இயற்கைச் சமனிலையைப் பேணும் வகையில் காபனீரொட்சைட் வாயுவைக் கட்டுப்படுத்தும் செயற்றிட்டங்களுக்கு 149 நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. ஐக்கிய நாடுகள் சபைக்கு அவை இது தொடர்பில் ஆலோசனைகளையும் முன்வைத்துள்ளன.

இதுகுறித்து ஐரோப்பிய ஒன்றியத்தின் காலநிலை மாற்றங்களை ஆராயும் குழுவின் பொறுப்பதிகாரியாக மிகுவல் அரிஸ் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

புவி வெப்பமாதலுக்கு எதிராக நடைமுறைப்படுத்தப்பட்ட சர்வதேச ஒப்பந்தமான கியோட்டோ நெறிமுறை உடன்படிக்கையின் போது 35 நாடுகளே ஆதரவு வழங்கியிருந்தன. அதன்மூலம் 14 சதவீதம் காபனீரொட்சைட் வாயு வெளியீட்டைக் கட்டுப்படுத்த முடிந்தது. தற்போது 149 நாடுகளால் வழங்கப்பட்டிருக்கும் ஒத்துழைப்பால் 90 சதவீதம் காபனீரொட்சைட் வாயுவைக் கட்டுப்படுத்தப் படுத்த முடியும் என்று அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து ஐக்கிய நாடுகள் சபையின் சூழல் திட்ட விஞ்ஞானி கருத்துத் தெரிவிக்கையில், பல நாடுகள் அபிவிருத்திப் பாதையில் செல்கின்றன. பொருளாதார ரீதியில் நாட்டை வளப்படுத்தும் முக்கிய நோக்கோடு உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வாறான நாடுகளுக்கு காபனீரொட்சைட் வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்துவது பெரும் சவாலாக அமையும். இது தொடர்பில் வளர்ந்து வரும் நாடுகள் கவனம் செலுத்த வேண்டும். - என்று குறிப்பிட்டார்.

உலகளாவிய ரீதியில், காபனீர் ஒட்சைட் வாயுவின் கட்டுப்படுத்தல் மிக அவசியம். நாடுகள் ஒத்துழைப்புகளும் திட்டங்களும் சாதகமானவை தான். இது ஆரம்பம், முடிவு அல்ல. பரிஸில் நடைபெறவிருக்கும் ஐரோப்பிய ஒன்றிய கூட்டத்தில் இது தொடர்பில் கலந்தாலோசிக்கப்படும். - என்றும் அவர் தெரிவித்தார். (ற)



பாகிஸ்தான், கராச்சி நகரில் நேற்று இடம்பெற்ற நிலச் சரிவில் சிக்கி 7 குழந்தைகள் உட்படப் 13 பேர் ... கள் நிலச் சரிவில் சிக்கிக் கொண்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. ஐந்து மணி நேரப் போராட்ட... டுள்ளன என்று தெரிவித்துள்ள மீட்புக் குழுவினர் மண்ணுக்குள் புதையுண்டவர்களின் எண்ண... யாதுள்ளது என்றும் தெரிவித்துள்ளனர்.



அமெரிக்காவின் மிக்சிகனில் அழிந்த உயிரினமான - யானை இனமான 'மமத்'தின் எலுப்புகள் கண்டெட்டுக்கப்பட்டுள்ளன. தண்ணீர்க் குழாய் அமைப்பதற்கு மண் அகழ்ந்தபோதே இவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கண்டெடுக்கப்பட்ட எலும்பு எச்சங்களில் நடத்திய ஆய்வுகளின்படி வட அமெரிக்காவில் வாழ்ந்த இந்த இனம் 11 ஆயிரத்து 700 முதல் 15 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என அறியப்பட்டுள்ளது. பெரிய பாறைக்கற்கள் அதன் அருகே காணப்பட்டன. அத்துடன் 'மமத்'தின் தந்தங்கள் கற்கால ஆயுதங்களால் வெட்டப்பட்ட தடயங்களும் காணப்பட்டுள்ளன. எனவே ஆதிகால மனிதர்களால் இந்த விலங்கு வேட்டையாடப்பட்டிருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். (ற-ரி4)

## சீன அதிகாரிகள் ஜப்பான் பயணம்

இந்த வாரத்துக்குள் சீனாவின் உயர்மட்ட அதிகாரிகள் சிலர் ஜப்பானுக்கான பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளனர் என்று சீனாவின் வெளிவிவகார அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

குறித்த பயணத்தின்போது இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல் ரீதியிலான உயர்மட்டப் பேச்சு இடம்பெறும் என்று அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதன்போது, இருதரப்பு உறவு, நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்படவுள்ள அதேவேளை, சர்வதேச ரீதியில் இருக்கும் சில பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ற)

# டைஸ் நகரை இலக்... யேமனில் கடும் மே...

டைஸ், ஒக்.14

யேமன் நாட்டின் மூன்றாவது பெரிய நகரமான டைஸ் நகரை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் வகையில் சவூதி ஆதரவுடைய யேமன் படைகளுக்கும், ஈரான் ஆதரவுபெற்ற ஹௌதி போராளிகளுக்கும் இடையே கடும் மோதல் நடைபெற்று வருகின்றது.

சவூதி ஆதரவுடைய யேமன் படையினரிடமிருந்து டைஸ் நகரை கைப்பற்றும் நோக்கில் ஹௌதி போராளிகள் முன்னாள் ஜனாதிபதி அலி அப்துல்லாஹ் சாலேயின் இல்லத்திலிருந்து துப்பாக்கிச் சூடு நடத்தி தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

பஹ்ரேன், கட்டார், எகிப்து மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளை கொண்ட கூட்டணி, ஈரான் ஆதரவுபெற்ற ஹௌதி போராளிகளுக்கு எதிராக கடந்த ஆறு மாத காலத்துக்கு மேலாக மோதலில் ஈடுபட்டு வருகின்றது.

யேமன் மோதலில் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட நகரங்களில் ஒன்றாக டைஸ் விளங்குகின்ற



அதேவேளை பெரும் சேதத்துக்குள்ளான நகரமாகவும், அதிக இறப்பு எண்ணிக்கை பதிவான நகரமாகவும் காணப்படுகின்றது. யேமனில் கடந்த ஆறு மாதங்களாக தொடர்ந்துவரும் உள்ளூர்

# இந்தியா- சீனா நாடுகள் இடையே தீவிரவாதத் தடுப்பு கூட்டுப் பயிற்சி

புதுடில்லி, ஒக்.14

இந்தியா மற்றும் சீனா நாடுகளுக்கு இடையிலான நல்லெண்ண நடவடிக்கையாக இரு நாட்டு ராணுவ வீரர்களும் இணைந்து மேற்கொள்ளும் கூட்டுத் தீவிரவாத தடுப்புப் பயிற்சி சீனாவின் குன்மிங் நகரில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது.

இந்த இரு நாட்டு கூட்டுப் பயிற்சி முகாம் ஐந்தாவது முறையாக இடம்பெறும் பயிற்சி முகாமாகும். இது தொடர்ந்து 10 நாள்களுக்கு இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் இந்தியாவின் நாகா ரெஜிமெண்ட் படைப் பிரிவைச் சேர்ந்த வீரர்கள் பங்கேற்றுள்ளனர். இவர்கள் இந்திய விமானப் படையின் ஐஎல்-76 விமானம் மூலம் கடந்த ஞாயிற்றுக்கிழமை குன்மிங் நகரைச் சென்றடைந்தனர். அதேபோன்று சீனத் தரப்பில்



அந்த நாட்டின் செங்டு படைப் பிரிவைச் சேர்ந்த வீரர்கள் இந்தப் பயிற்சியில் கலந்துகொண்டுள்ளனர்.

2007ஆம் ஆண்டில் இரு நாடுகளின் இராணுவமும் இணைந்து சீனாவின் யுனான் பகுதியில் கூட்டுப் போர் ஒத்திகையில் ஈடுபட்டன. அதைத் தொடர்ந்து 2008ஆம் ஆண்டில் இந்தியாவின் கர்நாடக மாநிலம் பெல்காமில் கூட்டுப் பயிற்சி நடத்தப்பட்டது. பின்னர் 2013ஆம் ஆண்டு சீனாவின் சிஹான் பகுதியிலும் இறுதியாக 2014ஆம் ஆண்டில் இந்தியாவின் புணேவிலும் கூட்டுப் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன. (ற)

## நேபாளத்தின் புதிய பிரதமருக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

காட்மண்டு, ஒக்.14

நேபாளத்தின் மாதேசி சமுதாய மக்கள் புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதமர் ஷர்மா ஒலிக்கு தமது எதிர்ப்பைத் தெரிவித்து நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் பங்கு கொண்டவர்கள் ஷர்மா ஒலியின் உருவபொம்மையை எரித்து தமது எதிர்ப்பை வெளிக்காட்டியதுடன் கோசங்களையும் எழுப்பினர்.

நேபாளத்தில் புதிய அரசியல் சாசனம் உருவாக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு நேபாளம் ஏழு மாகாணங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த அரசியல் சாசனத்துக்கு நேபாளத்தில் வசிக்கும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மாதேசி இனத்தவர்கள் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர்.

இதனால் நாடு முழுவதும் போராட்டங்களும், வன்முறையும் வெடித்து வருகின்றன. கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக நடைபெற்று வரும் இந்த போராட்டங்களில் சுமார் 40 பேர் கொல்லப்பட்டுள்ளனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



...பேர் உயிரிழந்துள்ளனர். மூன்று குடும்பங் ...ாட்டத்தின் பின்னர் 13 உடல்கள் மீட்கப்பட் ...ண்ணிக்கை குறித்துச் சரியாகக் கூறமுடி (ற)

# ...க்குவைத்து ...மாதல்கள்



மோதலையடுத்து இதுவரை முன்னெடுக்கப்பட்ட நூற்றுக்கணக்கான வான்வழித் தாக்குதல்களில் சுமார் 5 ஆயிரத்து 400 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது. (ற)

# ரஷ்யத் தாக்குதல்கள் குறித்து மத்திய கிழக்கு கூடிய கவனம்

## நிலைமையை மேலும் மோசமாக்கும் என்று அந்த நாடுகள் கவலை

இஸ்தான்புல், ஒக்.14

சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாத அமைப்புக்கு எதிராக ரஷ்யா நடத்தி வரும் தாக்குதல்களால் ஏற்படக்கூடிய விளைவுகள் குறித்து மத்திய கிழக்கு நாடுகள் மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

ரஷ்யாவால் நடத்தப்படும் தாக்குதல்கள் தொடர்பில் துருக்கி, சவூதி அரேபியா ஆகிய நாடுகள் கவலை வெளியிட்டுள்ளன.

ரஷ்யாவின் இந்த நடவடிக்கையால் மேலும் ஒரு மில்லியன் அகதிகள் உருவாகக் கூடும் என்று துருக்கி கூறியுள்ளது.

அதேவேளை கடந்த ஞாயிற்றுக் கிழமை மொஸ்கோவில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை சந்தித்த சவூதி பாதுகாப்பு அமைச்சர் மொஹமட் பின் சல்மான் அல் சாட் சிரியப் பிரச்சினைகள் தொடர்பில் அரசியல் தீர்வொன்றை எட்டுவது தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

சிரியாவில் இடம்பெற்றுவரும் மோதலை முடிவுக்கு கொண்டு வரும் நோக்கில் அமெரிக்கா மற்றும் ரஷ்யா என்ற இரு பிரதான நாடுகள் தலையிட்டுள்ள நிலையில், இரு நாடுகளுக்கு இடையேயும் வெவ்வேறு அரசியல் நலன்கள் காணப்படுகின்றன என்றும், அவர்களது நடவடிக்கைகளும் முரண்பட்டு காணப்படுகின்றன என்றும் சவூதி அரேபிய அரசியல் ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை சிரிய இராணுவமானது மீள்கட்டமைக்கப்பட வேண்டியுள்ளது. சிரிய அரசுக்கு ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டைகளுக்கு எதிராக போராட இராணுவம் வலுப்பெற வேண்டும். அதற்காக சிரிய இராணுவத்துக்கு நவீன ஆயுதங்கள் மற்றும் சிறந்த ஆலோசனைகள் என்பன தேவைப்படுகின்றன என இஸ்லாமிய புரட்சிகர பாதுகாப்பு படைப் பிரிவின் முன்னாள் தளபதி தெரிவித்துள்ளார். (ற)







ஹெல்மெட்டெட் ஹோன்பில்ஸ் எனும் பறவை இனத்துக்கு அதன் அலகுகளே எமனாக மாறியுள்ளன. இந்தப் பறவையினம் கிழக்கு ஆசியாவின் மலேசியா, இந்தோனேசியா, சுமாத்திரா ஆகியவற்றின் மலைக்காடுகளில் வாழ்கின்றது. அதன் அழகிய அலகுகளுக்காக அவை வேட்டையாடப்பட்டு வருகின்றன. அவற்றின் நீண்ட அலகுகளில் கடைச்சல் வேலைகள் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. 2011 ஆம் ஆண்டிலிருந்து, 2014 ஆம் ஆண்டு வரை ஆயிரத்து 111 அலகுகள் இந்தோனேசியா நாட்டின் மேற்கு கலிமந்தான் மாகாணத்தில் கடத்தல்காரர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்டன. 6 ஆயிரம் பறவைகள் வேட்டையாடப்பட்டுள்ளன. இந்த அலகின் பெறுமதி 1 கிலோவுக்கு 6 ஆயிரத்து 150 அமெரிக்க டொலராகும். ஹோன்பில்ஸ் பறவையின் அலகு நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு சீன கடைச்சல் சிற்பிகளால் மிக நுட்பமான வேலைப்பாடுகளுடன் செதுக்கப்பட்டு மெருகூட்டப்பட்ட கைவினைப் பொருளாக இருந்தது. 19 ஆம் நூற்றாண்டுகளில் இதனை சேகரிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. இந்த மிக நுட்பமான கடைச்சல் வேலைப்பாட்டுக்காக, சட்ட விரோத கடத்தல்கள் இடம் பெறுகின்றன. யானையின் தந்தத்தின் பெறுமதியுடன் ஒப்பிடுகையில் இதன் அலகின் பெறுமதி மூன்று மடங்கு அதிகமாகும். யானைகள், காண்டாமிருகங்களின் அழிவுடன் ஒப்பிடுகையில் இந்தப் பறவை இனத்தின் அழிவு மிக அதிகம் என சூழல் ஆர்வலர்கள் கவலை தெரிவித்தனர். (ற-ரி4)

# அணுசக்தி ஒப்பந்தத்துக்கு ஈரான் நாடாளுமன்று அனுமதி

கொழும்பு, ஒக்.14

உலகின் சக்திவாய்ந்த ஆறு நாடுகளுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ள அணுசக்தி ஒப்பந்தத்துக்கு ஈரான் நாடாளுமன்றத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக நடந்த வாக்கெடுப்பில் 139 பேர் ஆதரவாகவும் 100 பேர் எதிராகவும் வாக்களித்துள்ளனர்.

நாடாளுமன்ற தேசிய பாதுகாப்பு குழுவால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஒப்பந்தம் தொடர்பான சட்ட மூலம் மீது வரும் செவ்வாய்க்கிழமை நடைபெற உள்ள வாக்கெடுப்புக்குப் பின்னர் மதத் தலைவர்கள் அடங்கிய நாட்டின் உயர்மட்டக் குழுவின் ஒப்புதலுக்காக அனுப்பப்படும்.

இந்த நிலையில், நாட்டின் ராணுவத்தளங்களை சர்வதேச கண்காணிப்புக் குழுவினர் பார்வையிடுவது தொடர்பான விடயத்தில் ஈரான் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடையே கருத்து வேறுபாடு நிலவுகின்றது என்று கூறப்படுகிறது.

இருப்பினும் நாட்டின் மீதான பொருளாதாரத் தடைகளை விலக்கும் பொருட்டு இந்த உடன்பாட்டை நடைமுறைப்படுத்துவதில் ஜனாதிபதி ஹசன் ரௌஹானி முனைப்புடன் உள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# தீவிரவாதிகளின் தாக்குதலில் துனிசிய படையினர் சாவு

சமாமா, ஒக்.14

அல்ஜீரிய நாட்டின் எல்லையிலுள்ள மலைப்பகுதியில் கடத்தப்பட்ட ஒருவரைத் தேடும் பணியில் ஈடுபட்டிருந்த துனிசிய வீரர்கள் இருவர் தீவிரவாதிகளின் தாக்குதலில் உயிரிழந்துள்ளனர் என்று இராணுவ பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவ் வீரர்கள் தேடுதலில் ஈடுபட்டிருந்த வேளையில், சமாமா மலைப்பகுதியில் மறைந்திருந்த தீவிரவாதிகள் எதிர்பாராத விதமாக தாக்குதல்களை முன்னெடுத்துள்ளனர். தாக்குதலில் இரு வீரர்கள் உயிரிழந்தது ... நால்வர் படுகாயமடைந்த... பாதுகாப்பு அமைச்சின் ... ளர் தெரிவித்துள்ளார்.

# சாட் குண்டு வெடிப்பு குறித்து விசாரணை ஆரம்பம்

சாட், ஒக்.14

ஆபிரிக்க நாடான சாட்டில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு அந்த நாட்டு அரசு பாதுகாப்பு அமைச்சுக்கு உத்தரவிட்டுள்ளது.

இந்தக் குண்டு வெடிப்பில் 33 பேர் உயிரிழந்துள்ளதுடன் 51 பேர் காய மடைந்திருந்தனர். குறித்த குண்டுத் தாக்குதலானது பொக்கோஹராம் தீவிரவாதிகளினால் நிகழ்த்தப்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த தாக்குதலைத் தொடர்ந்து பகுதி ஆளுநர் கெடல்லா யொங்னஸ் ஹமிடி குறித்த குண்டுத் தாக்குதலில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவர்களை சென்று பார்வையிட்டதுடன் அவர்களின் நலம் குறித்தும் விசாரித்தார்.

அதனையடுத்து ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த அவர் "மக்களை விழிப்புடன் இருக்குமாறு நான் கேட்டுக் கொள்கின்றேன். இது போன்ற தாக்குதல்கள் இனி இடம்பெறாத வகையில் பாதுகாப்பை பலப்படுத்தவுள்ளோம்" என்று குறிப்பிட்டார்.

இச்சம்பவத்தை நேரில் பார்த்த ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் பாகா சோலாவில் அமைந்துள்ள சந்தைத் தொகுதியை இலக்கு வைத்து அங்கு பல குண்டு



கள் வெடிக்கச் செய்யப்பட்டன என்று குறிப்பிட்டார்.

இந்நிலையில் [illegible] சம்பவம் குறித்த விசாரணைகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு அந்த நாட்டு பாதுகாப்பு அமைச்சுக்கு சாட் அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகேசு குமாரபரன்,
ஆசிரியர்

# சாதிக்கக் காத்திருக்கும் ஜி.சீ.ஈ. சாதாரண தரம் 2015 மாணவர்களே!



காலச்சக்கரம் தன் வழமையான வேகத்தில் ஓடிக் கொண்டிருக்கிறது. வாய்ப்புக்கள், சந்தர்ப்பங்கள், கடமைகள் நிறைவேற்ற வேண்டிய பணிகள், கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் பரீட்சைகள் எல்லாமே அவற்றுக்குரிய காலகட்டங்களில் வந்து செல்கின்றன. இந்த ஆண்டு தனது இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. எல்லா மாணவர்களும் ஆண்டிறுதியில் நடைபெறும் பரீட்சைக்காகக் காத்திருக்கின்றனர்.

இந்த ஆண்டு டிசம்பர் மாதத் தொடக்கத்தில் க.பொ.த(சா/த) மாணவர்கள் 9 பாடங்களில் பரீட்சை எழுதவுள்ளனர். இடைநிலைக் கல்வியின் முக்கிய பரீட்சையாகவும் கூடிய பாடங்களில் நடைபெறும் பொதுப் பரீட்சையாகவும் இது அமைகின்றது. இந்த ஆண்டு பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு ஏனைய ஆண்டுகளை விட சற்று வித்தியாசமான ஒரு சூழ்நிலை. அதாவது 2007ஆம் ஆண்டு மாற்றத்துக்குள்ளான பாடத்திட்டத்துக்கமைவாக இறுதித் தடவை பரீட்சைக்குத் தோற்றும் இறுதி மாணவர் அணி நீங்கள்தான். அடுத்த ஆண்டு நடைபெறும் பரீட்சை 2015இல் தரம் 10இல் மாற்றத்துக்குள்ளான புதிய பாடத்திட்டத்துக்கமைவான நடைபெறப்போகின்றது. எனவே நீங்கள் முதற்தடவையாக சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பரீட்சையில் சித்தி பெற்றுவிட வேண்டும். தவறும் பட்சத்தில் அடுத்த ஆண்டில் இரண்டாவது தடவையாக தோற்றும் உங்களுக்கு தனியான பழைய பாடத்திட்டத்துக்கமைவான பரீட்சையே நடைபெறும். அதற்கு உங்களைத் தயார்படுத்துவது கடினமானதாக இருக்கும். காரணம் கற்றல், கற்பித்தல் சூழல் புதிய பாடத்திட்டத்துக்கு அமைவாக மாற்றமடைந்திருக்கும். எனவே அடுத்த ஆண்டு பழைய பாடத்திட்டத்துக்கான தயார்ப்படுத்தல் வகுப்புக்கள் நடைபெறுவது கடினமாகி விடும். எனவே தளம்பல் நிலையில் இருக்கும் மாணவர்கள் மீதமுள்ள காலங்களில் கற்பதற்கு உங்கள் சக்தி முழுவதையும் செலவு செய்யுங்கள். உங்கள் எதிர்கால நன்மைகருதிப் படியுங்கள். மிகக் கவலையான விடயம் இன்னமும் பல மாணவர்கள் முழுமையான கற்றலில் ஈடுபட வில்லை. இன்றைய காலகட்டத்தில் படித்தவர்கள், படிக்காதவர்கள் என்கின்ற சமூக அந்தஸ்து க.பொ.த(சா/த) பரீட்சையை வைத்தே தீர்மானிக்கப்படுகிறது. அதாவது க.பொ.த(சா/த) சித்தி எய்தி உயர்தரம் படித்தவர்கள், படித்தவர்கள் என்றும் க.பொ.த(சா/த) பரீட்சையில் சித்தி எய்தத் தவறியவர்கள் படிக்காதவர்கள் என்றும் சமூகத்தில் பார்க்கப்படுகின்ற போக்கே காணப்படுகின்றது. எனவே பரீட்சையில் சித்தியடைந்து படித்தவர்களாக வருவதற்கு நீங்கள் முயலவேண்டும்.

வடக்கு மாகாணம் தற்போது கல்வித் தரத்தில் ஒன்பதாவது இடத்தில் உள்ளது. இதற்கு நாம் எல்லோரும் தான் காரணம். ஒப்பீட்டு ரீதியாக கடினமான காலங்களில் கல்வியில் முன்னிலையான இடத்தில் இருந்துள்ளோம். நாம் பெறும் வசதிகளை கல்விக்கு அதிகம் ஒதுக்கவில்லை என்பது கண்கூடு. தற்போது மாகாண ரீதியாக, வலய ரீதியாக பல பாடங்களில் பல்வேறு செயற்றிட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இனிவரும் வாரங்களில் பல கருத்தரங்குகள் நடைபெற உள்ளன. இதனை மாணவர்கள் காலத்தை விரயம் செய்யாது சரியாகப் பயன்படுத்த வேண்டும்.

> எல்லா மாணவர்களுக்கும் இது ஒரு சவாலான பரீட்சையாகவே உள்ளது. நகர்ப்புறப் பாடசாலை மாணவர்கள் உயர்சித்தியடைய வேண்டியது கட்டாயம் என எதிர்பார்க்கப்படுகிறது. மாணவர்கள் எழுத இருக்கும் பரீட்சையில் குறைந்தது 3 பாடங்களில் திறமைச்சித்தியுடன் மொத்தமாக ஆறு பாடங்களில் சித்திபெற வேண்டும்.

எல்லா மாணவர்களுக்கும் இது ஒரு சவாலான பரீட்சையாகவே உள்ளது. நகர்ப்புறப் பாடசாலை மாணவர்கள் உயர்சித்தியடைய வேண்டியது கட்டாயம் என எதிர்பார்க்கப்படுகிறது. மாணவர்கள் எழுத இருக்கும் பரீட்சையில் குறைந்தது 3 பாடங்களில் திறமைச்சித்தியுடன் மொத்தமாக ஆறு பாடங்களில் சித்திபெற வேண்டும். இதில் கணிதம், தமிழ்மொழி ஆகியவற்றில் கட்டாயம் சித்தி பெற வேண்டும். அப்போதுதான் உங் கள் 11 வருடப் பாடசாலை வாழ்க்கையை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து உயர்தரம் கற்க ஆயத்தமாகலாம். சித்தி பெறத்தவறும் பட் சத்தில் நீங்கள் எதிர்கால வாழ்வை வேதனை மிகுந்த சவால்களுடனும் போராட்டத்துடனும் கழிக்க நேர்வதுடன் இனிமேல் உங்கள் வாழ்வின் இளமைக் காலத்தில் வரஇருக்கும் வசந்த காலத்தை இழக்க நேரிடும். உங்களுடன் கல்விகற்று உயர்தரம் படித்து பின் பல்கலைக் கழகம் மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள் சென்று கற்கும் உங்கள் தோழர்கள், தோழிகள் அனுபவிக்கும் மகிழ்ச்சிக்கான தருணங்களையும் அவர்கள் பெறும் கௌரவங்களையும் தொலைவில் நின்று ஏக்கத்துடன் பார்த்துக் கவலையுற நேரும். எனவே உங்கள் வாழ்க்கையை வளப்படுத்துவது உங்கள் பொறுப்பு. உங்களுக்குப் பக்கபலமாக ஆசிரியர்களும், கல்வி அதிகாரிகளும் பெற்றோரும் உள்ளனர். கவலைகள், தீய எண் ணங்கள் எல்லாவற்றையும் விட்டு விட்டு மனதை ஒரு நிலைப்படுத்திப் படியுங்கள்.

மேலும் தமிழ், கணித பாடத்தில் விசேட கவனம் செலுத்த வேண்டும். எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என ஔவையார் குறிப்பிட்டுள்ளார். ஏற்கனவே கற்ற விடயங்களை அல்லது கடந்தகால வினாக்களுக்கு வெற்றுத்தாள்களில் எழுதி விடையளிக்க முயலுங்கள். கடினமானது என நினைத்து சிந்திக்காது இருந்து விடாதீர்கள். உடனடியாகவே ஏற்கனவே உள்ள விடைகளைப் பார்வையிட முயலாதீர்கள். குறித்த நேரம் ஒதுக்கி சிந்தித்த பின் ஒப்பிட்டுப் படியுங்கள். இவ்வாறு பல நுட்பங்களைக் கையாண்டு கற்பீர்களானால் வெற்றி நிச்சயம். உங்களுக்குப் பிடித்தமான பொழுதுபோக்குச் சாதனங்கள், பண்டிகைகள், விழாக்கள் என்பனவற்றை எப்போதும் நீங்கள் சந்திக்கலாம். ஆனால் எதிர்கொள்ள இருக்கும் பரீட்சை வருகின்ற டிசம்பர் மாதத்தின் ஒன்பது நாள்கள் மட்டுமே என்பதை சிந்தித்து வெற்றிகொள்ள தீவிரமாக முயற்சிக்க வேண்டும்.

# பிம்ப் மை ருக் ருக் அணியினருக்கு டேவிட் பீரிஸ் மாபெரும் வரவேற்பு






மேற்கத்திய மற்றும் ஆசியாவைச் சேர்ந்தபல்தேசியக் கம்பெனிகள் மற்றும் நிதிநிறுவனங்களின் சிரேஷ்ட அதிகாரிகள்100,000 அமெரிக்க டொலர் எனும் மாபெரும் பணத் தொகையை தொண்டு நிறுவனமொன்றிற்கு நிதி திரட்டும் நோக்கில் தொடர்ச்சியாக யாழ்ப்பாணம் முதல் மாத்தறை வரையிலான 1000 கிலோமீற்றருக்கு மேற்பட்ட தொலைவை 20 முச்சக்கர வண்டிகளில் 10 நாள்களுக்குள் சென்றடையும் முயற்சியில் தமது பயணத்தை வெற்றிகரமாக ஆரம்பித்திருந்தனர். இதில் திரட்டப்படும் நிதி யாழ்ப்பாணத்தில் உள்ளவாழ்வகம் ஆண்கள் கருணை இல்லத்துக்கும் அனுராதபுரத்தில் நீர் சுத்திகரிப்பு ஆலை ஒன்றைஅமைத்துக் கொடுப்பதற்கும் உதவிடப் பயன்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக் கது.

பிம்ப் மை ருக் ருக் இலங்கை 2015 எனும் பெயரின் கீழ் நடைபெறும் நிதி திரட்டும் இந்த முயற்சிக்கு பிரதான அனுசரணை மற்றும் சேவை பங்குதாரர்களாக டேவிட் பீரிஸ் மோட்டார் நிறுவனம் இணைந்துள்ளமை விசேட அம்சமாகும். அத்துடன் இந்தச் சிறந்த முயற்சிக்கு பஜாஜ் முச்சக்கர வண்டிகள் பயன்படுத்தப்படுவதுடன் கடினமான பயணத்துக்கு தொழில்நுட்ப மற்றும் பராமரிப்பு உதவிகளை வழங்குவதற்கான பஜாஜ் முச்சக்கரவண்டி சேவைக் குழுவினரும் கூடவே பயணிக்கின்றமை அவர்களின் தடையற்ற பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்கின்றது.

கடந்த ஜூலைமாதம் 20ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பயணம் ஏ-9 நெடுஞ்சாலை வழியாக பயணித்துசெப்ரெம்பர் 21ஆம் திகதி காலை 08.50 மணிக்கு திருகோணமலையை வந்தடைந்துள்ளது. திருகோணமலையை வந்தடைந்த இந்தக் குழுவினருக்கு டேவிட் பீரிஸ் மோட்டார் நிறு வனத்தின் திருகோணமலை கிளை ஊழியர்கள் தமிழ் பராம்பரிய முறைப்படி நாதஸ்வர மங்கல வாத்திய இசையுடன் மாபெரும் வரவேற்பளித்தனர். அத்துடன் இந்த அணியினருக்கு இனிப்புப் பலகாரங்கள் மற்றும் சிற்றுண்டிகள் மற்றும் குளிர்பானங்கள் வழங்கப்பட்டன.

பிம்ப் மை ருக் ருக் பயணத்தில் கலந்துகொண்டுள்ளஅனைவரும் தமது சொந்த பஜாஜ் வாகனங்களைப் பாவனையில் ஈடுபடுத்தியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக் கது. அடுத்து இந்த அணியினர் அழகியமலைநாட்டைஊடறுத்துப் பயணித்துகண்டிநகரின் வழியாக மட்டக்களப்பு நோக்கிப் பயணிக்கவுள் ளனர்.

இந்தப்பயணத்தில் முதற்கட்டமாக திருகோணமலையிலே தரித்திருந்ததுடன் பஜாஜ் முச்சக்கர வண்டிகளின் சாரதிகள் மற்றும் அவர்களது குடும்பத்தார்,பஜாஜ் உதிரிப்பாக விநியோகஸ்தர்கள் அனைவரும் ஒன்றுகூடிமகிழ்ந்தனர். அடுத்து இந்தக்குழுவினரை இரத்தினபுரியில் இடை நிறுத்துவதுடன் இறுதியாக இந்த மாபெரும் நிதிதிரட்டும் முயற்சியை நோக்கியபயணம் மாத்தறையைச் சென்றடையவுள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும்

குடாநாட்டின் வர்த்தக நடவடிக்கைகள் என்றுமில்லாத வகையில் மிகவும் நெருக்கடியான ஒரு நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளதுடன், தொடர்ச்சியான பொருளாதார மந்தநிலை மற்றும் சடுதியான அத்தியாவசியப் பொருள்களின் அசுர விலையேற்றமும், மேன்மேலும் பல்வேறு சொல்லொணாத் துயருக்குள் மக்களை வதைக்கின்றமை கண்கூடு. அதிகரித்த கடன்சுமை, திட்டமிட்டவாறு எதிர்பார்த்த வியாபார புரள்வு இல்லாத நிலை மற்றும் நிதி நிறுவனங்களின் கடன் மீளளிப்பு நெருக்குதல்கள் முதலான பல்வேறுபட்ட காரணங்களால் குடாநாட்டு வர்த்தகத் துறை மிகவும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அதிகரித்த கடன்சுமை காரணமாக சில வர்த்தகர்கள் மற்றும் தனிநபர்கள் கூட தற்கொலை செய்யுமளவுக்கு நிலைமை மிகவும் மோசமாகியுள்ளது. அதுமட்டுமன்றி தற்போதுள்ள தொழில் முயற்சிகளை தக்கவைத்துக் கொள்வதற்கு கடும் பிரயத்தனம் மேற்கொள்ள வேண்டியுள்ளதுடன், பணியாளர்களுக்களுக்கான மாதாந்த வேதனங்களை வழங்குவதற்கே பெரும்பாடு படுகின்ற நிலை காணப்படுகின்றது.


தனியார் குத்தகை மற்றும் நிதி நிறுவனங்கள் குடாநாட்டுக்குள் காலடி எடுத்து வைத்ததைத் தொடர்ந்து ஏராளமான வியாபாரத்துறையினர் மற்றும் தொழில் முயற் சியாளர்கள் அந்தக் நிறுவனங்களின் விளம்பர உத்திகளுக்கு இலக்காகி அவற்றின் நம்பகத்தன்மையை ஆராயாமல் பணத்தைச் செலுத்தி இறுதியில் பலர் பணமும் இன்றி குத்தகைக்கு எடுத்த வாகனங்களையும் பறிகொடுத்து நிர்க்கதியான நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். இந்த நிறுவனங்கள் தமது விதிமுறைகளை அவ்வப்போது மாற்றுவதுடன், ஆரம்பத்திலேயே வாடிக்கையாளர்களிடம் பல்வேறு படிவங்களிலும் கையெழுத்துக்களைப் பெற்று தமது பக்கத்தை ஸ்திரப்படுத்திய பின்னரே இவ்வாறு கட்டளை விதி முறைகளை மாற்றியமைத்து தேவையற்ற பெருந்தொகைப் பணத்தை அறவிட்டு ஏப்பம் விடுகின்றன. சரியான தெளிவான விளக்கங்களை இவை மக்களுக்கு வழங்குவதில்லை என்பதுடன், தமது இலாபம் ஒன்றை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டுள்ளன. எமது மக்களும் அவசர தேவை கருதி குறித்த நிறுவனங்கள் கேட்டுக்கொண்டவாறு கையொப்பங்களை வைத்த பின்பே ஆரம்பாகும் சிக்கல்கள். பாவம் அவர்களால் வேறு என்ன செய்ய இயலும்..... உள்ளூர் மீற்றர் வட்டியின் கொடுமை மற்றும் வங்கிக் கடன்களுக்கு விண்ணப்பித்தால் ஏற்படும் காலதாமதம் போன்ற இன்னோரன்ன நிலைமைகளால் விரைவான வழியான மேற்படி தனியார் நிதி மற்றும் குத்தகை நிறுவனங்களை நம்பி தமது சொத்துக்களைக் கூட பலர் இழந்து நிற்கும் துர்ப்பாக்கிய நிலையில் உள்ளனர். இருந்த போதிலும் இன்னமும் பல்வேறு தேவைகளின் நிமித்தம் பலர் மேற்படி நிறுவனங்களை நாடியவண்ணமுள்ளனர். இவை மட்டுமன்றி, தங்கநகை அடகு மற்றும் சில காப்புறுதி நிறுவனங்கள் தமது பொய்யான விளம்பர மற்றும் வார்த்தை ஜாலங்களால் வாடிக்கையாளர்களை இலக்கு வைத்து தமது வலையினுள் வீழ்த்தி அவர்களை ஏமாற்றி வருகின்றமை கண்கூடு.

இவை ஒருபுறமிருக்க, தற்போது கிராமப்புறத்தில் வசிக்கும் அன்றாடங்காய்ச்சிகளையும் இலக்கு வைத்து வேறு ஓர் ஏமாற்றுவித்தை நாடகம் அரங்கேறத் தொடங்கியுள்ளது. "நுண்கடன் திட்டம்" என்ற பெயரில் பல்வேறு தனியார் நிதி நிறுவனங்களும் தமது சேவைகள் மற்றும் கடன்திட்டங்களை கிராமப்புற பாமர மக்களிடம் அறிமுகப்படுத்தி அவர்களையும் நடுத்தெருவுக்கு தள்ளுவதற்கு கங்கணம் கட்டியுள்ளன. ரூபா 15000 தொடக்கம் 25000 ரூபா வரையிலான மிக இலகுவாக பெறக்கூடிய கடன்திட்டங்களாக அறிமுகப்படுத்தப்பட்டு மாதர் சங்கங்கள், மகளிர் அமைப்புக்கள் மற்றும் கிராமப் புறங்களிலுள்ள பல்வேறு சங்கங்கள் மற்றும் சமூக அமைப்புக்களூடாகவும் நேரடியாகவும் வழங்கப்படுகின்றன. மக்களும் இலகுவாக மற்றும் விரைவாகக் கிடைக்கின்றதே என்பதால் அவற்றின் வட்டி வீதத்தைக் கருத்தில் கொள்ளாது முண்டியடித்து பெறுகின்றனர். அத்துடன் கட்டுப்பணமும் குறைவாக இருப்பதால் பெறுபவர்களுக்கு மிக்க மகிழ்ச்சியாகத் தோன்றும். ஆனால் அதன் வட்டி வீதம் 16 முதல் 24 வீதம் வரையாக வடிவமைக்கப்பட்டிருப்பதுடன், இந்த விடயமானது பயனாளிகளுக்கு தெரியப்படுத்தப்படமாட்டாது. இதனை விடவும் குறைவாக ஒரு வீத்மே பயனாளிகளுக்கு கூறப்படும். பல தோட்டப் பயிர்ச் செய்கையாளர்கள்கூட இவ்வாறு கடன்பெற்று அல்லாடும் நிலையில் உள்ளனர்.

எனவே மேற்கூறிய நிதிநிறுவனங்கள் மற்றும் குத்தகை நிறுவனங்கள் தொடர்பில் மக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்படுவதுடன், தம்மிடமுள்ள சிறிதளவு பணத்தையும் பாதுகாத்து சாத்தியமான வழிகளில் அதன் பயனை உறுதிசெய்து தொழில் அல்லது வேறு வியாபார வழிகளில் ஈடுபடுத்தும்போது இவ்வாறான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்காது தப்பிக்கொள்ள முடியும். நாம் வியர்வை சிந்தி சிறுகச் சிறுக சேமித்த பணத்தை மிகவும் விழிப்புடனும் அவதானத்துடனும் கையாளும்போது வளமானதோர் எதிர்காலத்துக்கு சிறந்ததோர் அடித்தளத்தை நிறுவுவதுடன் சுபிட்சமானதோர் வாழ்க்கையையும் உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.

*ஆ. விமல்ராஜ், கொக்குவில் கிழக்கு.*

## வாசகர் திருமுகம்



## கேலிச் சித்திரம்




நன்றி: லங்காதீப

# பழி வாங்கல் வேண்டாம் பொது மன்னிப்பளியுங்கள்

நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் பொதுமன்னிப்பு வழங்கி தம்மை விடுதலை செய்யுமாறு கோரி சாகும்வரையான உண்ணாவிரதத்தை நேற்று முதல் நாடு முழுவதும் உள்ள 14 சிறைச்சாலைகளில் ஆரம்பித்துள்ளனர். கடந்த 30 ஆம் திகதி சர்வதேச சிறுவர் தினத்தன்று தமிழ் அரசியல் கைதிகளின் பிள்ளைகள் தமது தந்தையரின் விடுதலையை வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர். ஜனாதிபதிக்கு அனுப்புவதற்கான மனு ஒன்றையும் ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் வட மாகாண முதலமைச்சரிடம் இவர்கள் வழங்கினர். இதன் தொடர் நடவடிக்கையாகவே பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் அவசர காலச்சட்டம் ஆகியவற்றின் கீழ் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 217 தமிழ் அரசியல் கைதிகள் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்று முன்தினம் ஆரம்பித்துள்ளனர். இவர்களை விடுதலை செய்ய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கடந்த ஆட்சிக் காலத்திலும் தமிழ் அரசியல் கைதிகள் தமது விடுதலைக்காக இதேபோன்ற உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்தினர். ஆனால் போராட்டங்கள் வெற்றியளிக்கவில்லை. தமிழ் அரசியல்வாதிகளின் வாக்குறுதிகளை நம்பி தமது போராட்டங்களைக் கைவிடுவதும் சிறிது காலத்துக்குப் பின்னர் மீண்டும் ஆரம்பிப்பதும் வழமையாக இருந்தது. கடந்த ஆட்சியாளர்கள் இவர்களது விடுதலை குறித்து பரிசீலனை செய்யக்கூடத் தயாராக இருக்கவில்லை.

ஆனால் நேற்று முன் தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ள உண்ணாவிரதப் போராட்டம் ஜனவரி-8 இல் நாட்டில் நல்லாட்சி ஏற்பட்ட பின்னர் நடைபெறும் முதலாவது போராட்டமாகும். ஜனாதிபதி தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி தமக்குப் பொதுமன்னிப்பு வழங்கவேண்டும் என்று கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஜனவரி- 8 இல் நாட்டில் நல்லாட்சி ஏற்பட்டவுடன் ஜனாதிபதி தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் மேற்கொண்ட முதல் நடவடிக்கை படைத்தரப்பைச் சேர்ந்த வடக்கு மாகாண ஆளுநரை இடம் மாற்றியது. அப்பொழுது தமிழ் அரசியல் கைதிகளில் ஒரு தொகையினரையும் முதல்கட்டமாக விடுதலை செய்து தனது நல்லெண்ணத்தை வெளிக்காட்டியிருக்கலாம். அது நடைபெறவில்லை. மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை ஜனாதிபதியைச் சந்தித்து கைதிகளின் விடுதலை குறித்து வலியுறுத்தியபோது, ஆறுமாத காலத்தில் அவர்கள் விடுவிக்கப் படுவார்கள் என்று ஜனாதிபதி உறுதியளித்தார். இதற்குப் புறம்பாகத் தலைவர் இரா. சம்பந்தன் உட்பட்ட கூட்டமைப்பு உறுப்பினர்கள் பல தடவைகள் நாடாளுமன்றத்தில் கைதிகளின் விடுதலைக்குக் குரல் கொடுத்திருந்தனர். எனினும் கைதிகளை விடுதலை செய்வதற்கான சமிக்ஞை இதுவரை புதிய ஆட்சியாளர்களால் வெளிக்காட்டப்படவில்லை. இப்படியான நிலையிலேயே உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பமாகியுள்ளது.

ஆகவே கைதிகள் விடுதலையை கடந்த ஆட்சிக் காலத்தைப் போன்று இனவாத ரீதியாகவும், பழிவாங்கல் நடவடிக்கையாகவும் பாராது இவர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்கி இவர்களை விடுதலை செய்யவேண்டும். கைதிகளின் குடும்பங்கள் பொருளாதாரம் மற்றும் பிள்ளைகளின் கல்வி உள்ளிட்ட சமூகப் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றன. எமது விடுதலைக்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டோம். தற்போதுவரையில் எவையும் கருத்தில் கொள்ளப்படவில்லை. புதிய ஆட்சியாளர்களுக்கு எமது விடுதலை தொடர்பான கோரிக்கைகளை முன்வைத்துள்ள போதிலும் தொடர்ந்து பராமுகமாகவே இருக்கிறார்கள். ஆகவே இறுதி முயற்சியாக இறக்கும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.'' -என்று தமிழ்க் கைதிகள் தெரிவிக்கின்றனர்.

ஆகவே முன்னைய ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டங்கள் போன்று தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள உண்ணாவிரதப் போராட்டம் இருக்கப்போவதில்லை என்பது மட்டும் உறுதி. இந்தப் போராட்டம் தொடரத்தான் போகிறது. அரசியல் கைதிகளின் உறவினர்கள் இன்று கொழும்பிலும், வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்திலும் பெரும் எடுப்பில் கவன ஈர்ப்புப் போராட்டங்களை முன்னெடுக்கத் திட்டமிட்டிருப்பதால் அரசு இனியும் இந்த விடயத்தில் பராமுகமாக இருக்கமுடியாது. தமிழ் அரசியல் கைதிகள் என்று எவருமே இல்லை. குற்றம் செய்தவர்கள்தான் சிறையில் உள்ளனர் என்று விதண்டாவாதம் பேசுவது பிரச்சினையைத் தீர்க்காது. இப்படிப் பேசிக்கொண்டு இனங்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது.

முன்னைய அரசு 14 ஆயிரம் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்குப் புனர்வாழ்வளித்து அவர்களை விடுதலை செய்தது. ஆகவே அரசியல் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கி அவர்களை விடுதலை செய்வது புதிய ஆட்சியாளர்களுக்குப் பெரிய பிரச்சினையாக இருக்கப்போவதில்லை. போர்க் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகும் இராணுவத்தினருக்குப் பொதுமன்னிப்பு வழங்கப்படும் என்கிறார் வெளி விவகார அமைச்சர் மங்கள சமரவீர. போர்க் குற்றமிழைத்தோருக்கே மன்னிப்பு அளிக்கும்போது, தமிழ் அரசியல் கைதிகளைத் தொடர்ந்து தடுத்து வைத்திருப்பது எந்தவிதத்திலும் நியாயமாகாது.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை வலயத்தின் உலக உளவளநாள்



முல்லைத்தீவு,ஒக்.14

முல்லைத்தீவு கல்வி வலயத்தின் உலக உளவள நாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம் முள்ளிவாய்க்கால் மேற்கு கனிஷ்ட உயர்தர வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. முல்லை வலய நிர்வாகப் பிரதிக் கல்விப் பணிப் பாளர் ஜீ.ஆதவன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட வைத்திய சாலையின் உள நலப்பிரிவு மருத்து வர் வைத்திய கலா நிதி எஸ். விதுரன் கலந்து கொண்டார்.(ஐ–433)

# ஒரு மில்லியன் ரூபா செயற்றிட்டம் வலி.வடக்கில் ஆரம்பித்து வைப்பு

## பளை வீமன்காமம், அளவெட்டி வடக்கு பகுதிகளில் பொதுநோக்கு மண்டபங்கள் திறப்பு




வலி வடக்கு,ஒக்.14

ஒரு கிராமம் ஒரு மில்லியன் ரூபா செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட புதிய பொது நோக்கு மண்டபங்கள் பளை வீமன்காமம், அளவெட்டி வடக்கு ஆகிய பிரதேசங்களில் திறந்து வைக்கப்பட்டுள்ளன. வலி வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பளை வீமன் காமம் தெற்கு கிராம அலுவலர் பிரிவில் ஒரு மண்டபம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. வலி வடக்கு பிரதேச செயலாளர் க.ஸ்ரீ மோகன் தலைமையில் நடை பெற்ற இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மண்டபத்தைத் திறந்து வைத்தார். வலி வடக்கு பிரதேச சபை யின் முன்னாள் தலைவர் சோ.சுகிர் தன், ஐக்கிய தேசியக் கட்சியின் காங்கேசன்துறைத்தொகுதிஅமைப் பாளர் ஸ்ரீ தாமோதரராசா உட்பட அரச அதிகாரிகள் பொதுமக்கள் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் கலந்து கொண்ட பொது மக்களினால் குறிப்பிட்ட மண்டபத்தில் கிராம அலுவலர், சமுர்த்தி அலு வலர் மற்றும் வாழ் வெழுச்சி அலுவலர்கள் கடமையாற்ற நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

குறிப்பிட்ட பிரதேசம் மீளக் குடியேற அனுமதிக்கப்பட்ட பிரதேசம் என்ற வகையில் கிராம மட்டத்தில் கடமையாற்றும் அலுவலர்கள் ஒரே அலுவலகத்தில் கடமையாற்றுவதன் மூலம் பொது மக்கள் தமது தேவைகளை சுலபமாக நிறைவேற்ற முடியும் எனவும் இதனை உடனடியாக நடைமுறைப் படுத்துமாறும் யாழ் மாவட்ட் அரச அதிபரிடம் மக்கள் வேண்டுகோள் விடுத்தனர். இதேவேளை அளவெட்டி வடக்கு பொது நோக்கு மண்டபமும் யாழ்.மாவட்ட அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகனினால் திறந்து வைக்கப்பட்டது. இ.சர்வேஸ்வரன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

பொது மக்களின் நன்மை கருதி ஊர்மக்களும் இணைந்து வழங்கிய நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட இந்தப் பொது நோக்கு மண்டபம் கிராம அலுவலர் அலுவலகம், வாழ்வெழுச்சி அலுவலகம் உட்பட கிராம மட்ட அலுவலர்களின் அலுவலகங்களும் இயங்கக் கூடிய வகையில் நன்கு திட்டமிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளது. (ஐ–86)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா அவர்களிடமிருந்து 06.10.2015 அன்று

"குரு பிரதீபா பிரபா"

விருதினைப் பெற்ற வ/தம்பனைச் சோலை கேதீஸ்வரா வித்தியாலய ஆசிரியரான

திருமதி ஞானேஸ்வரி அருள்லிங்கம்

அவர்களை மனமகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இல. 364/1, சாந்த சோலை வீதி, தம்பனைச்சோலை, வவுனியா.

வாழ்த்துவோர் குடும்பத்தினர்.

## யாழ்.பல்கலையில் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஒக்.14

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தால் வாழ்வாதாரத் தேடலுக்கான களம் எனும் தலைப்பில் உற்பத்திப் பொருள்களுக்கான கண்காட்சி நடைபெறவுள்ளது. போரினால் பாதிக்கப்பட்ட மற்றும் பெண் தலைமைத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட பெண் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருள்களுக்கான கண்காட்சி நாளை வியாழக் கிழமையும் நாளை மறுதினமும் முற்பகல் 9 மணி முதல் மாலை 4மணி வரை முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தில் நடைபெறவுள்ளது. (ஐ–ரி5)

சேவைநலன் பாராட்டு வாழ்த்துக்கள்

DEPUTY PRINCIPAL
(Administration)



Mr.N.Balachandran
B.A, P.G.D.E, M.Ed, S.L.T.S - I

நடராசா பாலச்சந்திரன்

பட்டம் : கலைமாணி கொழும்பு பல்கலைக்கழகம் - 1982
முதல் நியமனம் : 05.08.1984
சேவை விபரம்
1. நு/நுவரெலியா இராகலை தமிழ் மகா வித்தியாலயம் - 05.08.1984 – 14.10.1989
2. யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி - 15.10.1989 – 14.10.2015
i. ஆசிரியர் - 15.10.1989 – 14.10.2006
ii. பகுதித்தலைவர் - 18.10.2006 – 01.01.2008
iii. உதவி அதிபர் - 02.01.2008 – 20.10.2008
iv. பிரதி அதிபர் - 21.10.2008 – 14.10.2015
3. பட்டபின் கல்வி டிப்ளோமா - 1994
4. கல்வி முதுமாணி - 2005

Best Wishes

தன்னலங்கருதாத சேவையாளன்

கல்லூரியின் பழைய மாணவன். ஆசிரியர், பகுதித்தலைவர். பிரதிஅதிபர் என்ற வகையில் அரைநூற்றாண்டுகளுக்கு மேல் கல்லூரியுடன் தொடர்பைக் கொண்டிருந்தவர். மரபுகள், பாரம்பரியங்களை இறுக்கமாக பேணுதல். கண்டிப்பு. நேரந்தவறாமை. வெளிப்படைத் தன்மை ஆகிய பண்புகளை முன்னிறுத்தி பாடசாலையை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்ல ஏறத்தாள இரண்டரை தசாப்தங்கள் அயராது உழைத்தவர். இக்கட்டான சூழ்நிலைகளின் போது வேதனைகளையும் சோதனைகளையும் தாங்கி பாடசாலையை பாதுகாக்க அர்ப்பணிப்புடன் தன்னலங்கருதாது சேவையாற்றியவர் எமது பிரதி அதிபர் நடராசா பாலச்சந்திரன் அவரகள். சாவகச்சேரி இந்துவின் வரலாற்றில் இவரின் சேவை என்றும் நினைவுகூறப்படும்.

ந.சர்வேஸ்வரன்
அதிபர்

பிரதிஅதிபரின் உள்ளத்திலிருந்து...

நடராசா பாலச்சந்திரன் அவர்கள் கடந்த கால் நூற்றாண்டு காலமாக இந்துக் கல்லூரியில் ஆசிரியராக, பகுதித்தலைவராக, பிரதிஅதிபராக பல்வேறு படிநிலைகளிலும் பணியாற்றியவர். கல்லூரியின் நிர்வாகச் செயற்பாடுகளிற்கு அசாதாரண சூழல் நிறைந்த கால கட்டங்களில் தனது பங்களிப்பை ஆர்வத்துடன் வழங்கிய அஞ்சா நெஞ்சம் கொண்டவர்.

கல்லூரி அபிவிருத்திச் சங்கத்தில் அங்கத்தவராக, பொருளாளராக நீண்டகாலம் பதவி வகித்து கல்லூரியின் அருகிலுள்ள காணிகளைக் கொள்வனவு செய்வதற்குப் பின்புலமாகத் திகழ்ந்தவர். இந்துக் கல்லூரியில் கல்விகற்று தனது வாழ்நாளில் பெரும்பகுதிக் காலம் இந்து அன்னைக்கே சேவையாற்றி கல்லூரியை வீறுநடைபோட வைத்தவர். அவரின் சேவையைப் பாராட்டுவதுடன் ஓய்வுக்காலம் சிறப்புற வாழ்த்துகின்றேன்.

த.பாலசண்முகநாதன்,
பிரதிஅதிபர்.

கடமையின் சிகரம்

எமது ஆசிரிய சகோதரத்துவத்தில் நீண்ட கால உறுப்பினராக இருந்து பல வகிபாகங்களை வகித்து இன்றுடன் தனது பணியில் இருந்து ஓய்வு பெறுகின்ற எமது கல்லூரியின் பிரதி அதிபர் ந.பாலச்சந்திரன் அவர்கள் எமது பாடசாலையில் கல்வி கற்று உயர் பெறுபேற்றைப் பெற்று பல்கலைக்கழகம் சென்று புவியியல் பட்டதாரியாக வெளியேறி ஆசிரியப் பணியை வெளிமட்டத்தில் சிறப்புடன் ஆற்றி தான் கல்வி பயின்ற பாடசாலையாகிய எமது பாடசாலைக்கு இடமாற்றம் பெற்று வந்து ஆசிரயராகவும் பின் பகுதித்தலைவராகவும் உப அதிபராகவும், இறுதியாக பிரதி அதிபராகவும் (நிர்வாகம்) இருந்து ஓய்வு பெறும் எமது சகோதரத்துவத்தின் சகோதரன் தனது கடமையை தனது உயிராக எண்ணி நேரந்தவறாது உரிய நேரத்திற்கு பாடசாலைக்கு வருவதையும் தனது கடமைகளைச் சரிவரச் செய்வதையும் நான் அறிவேன்.

அதுமட்டுமல்ல நீண்டகாலமாக ஒழுக்காற்றுச்சபைத் தலைவராக இருந்து மாணவ தலைவர்களை கண்டிப்புடனும் கருணையுடனும் நெறிப்படுத்தியுள்ளார். இவர் தனது ஓய்வுக்காலத்தில் சகல சௌபாக்கியங்களையும் பெற்று தனது குடும்பத்துடன் வாழ்வாங்கு வாழ ஆசிரிய சகோதரத்துவத்தின் சார்பில் மனமார வாழ்த்துகின்றேன்.

க.சத்தியானந்தன்,
தலைவர்,
ஆசிரிய சகோதரத்துவம்.

தன்னிகரில்லா சேவையாளன்

நீண்ட காலம் ஆசிரியராகவும் பிரதி அதிபராகவும் மாணவ முதல்வர் சபை பொறுப்பாசிரியராகவும் இருந்தது மட்டுமல்லாமல் முதல்வர் சபையின் வெளியீடு ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று முதன்மை சஞ்சிகையை வருடாந்தம் வெளிவரச் செய்தவருமாகிய எமது ஆசான் இன்றுடன் தமது அரச பணியில் இருந்து ஓய்வுபெற்றாலும் நீண்ட காலம் சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

இ.நித்தியானந்தன்,
பொறுப்பாசிரியர், மாணவ முதல்வர் சபை.

ஆசரியர் சகோதரத்துவம், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

(60628)(10.15.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சண்டே ரைம்ஸ் கட்டுரையில் இருந்து**
**ரெங்கன்**

# இலங்கை இளம் அரசியல்வாதிக்கு மேற்காசிய வங்கியில் இரகசியக் கணக்கு?

## நிறுத்தி வைத்து விசாரணை செய்ய இலங்கை அரசு முயற்சி

மேற்காசிய நாடொன்றின் தலைநகரில் நீதிமன்றம் ஒன்றில் கடந்த ஞாயிறன்று ஆரம்பமாக இருந்த வழக்கொன்று குறித்து சண்டே ரைம்ஸ் தனது ஞாயிறு அரசியல் கட்டுரையில் தகவல் வெளியிட்டிருந்தது. ஒரு வங்கியிலுள்ள அரை பில்லியன் டொலர் கணக்கொன்றைச் செயற்படாமல் நிறுத்தி வைக்கும்படி இலங்கை அரசின் சட்டத்தரணிகள் அந்த நீதிமன்றத்தில் முன்னிலையாகி கோரவிருந்ததாகவும் அது தெரிவித்திருந்தது. அது மேலும் தெரிவித்திருந்த விவரம், இந்த வங்கிக் கணக்கானது மிக மிக முக்கியமான முன்னாள் அரசியல்வாதியின் மகனின் பெயரில் இருப்பது நிரூபணமாகியுள்ளது. இது பற்றிய தகவல் முதன் முதலில் கிடைத்த போது அந்தக் கணக்கில் ஒரு பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமாக இருந்துள்ளமையும், குறித்த அரசியல்வாதி அதில் ஒரு பெரும் பகுதியை கிழக்கு ஐரோப்பிய நாடொன்றின் வங்கி ஒன்றுக்கு மாற்றியுள்ளமையும் உறுதியாகியுள்ளது. அவர்களின் நெருங்கிய உறவினர் ஒருவர் இந்த மாற்றுச் செயற்பாட்டுக்கு உதவி புரிந்துள்ளார் என்றும் தகவல் கிடைத்திருப்பதுடன் இது பற்றியும் இப்போது புலன் ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கடந்த வியாழக்கிழமை இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட பொழுது அந்த நாட்டின் சட்டமா அதிபரின் அபிப்பிராயத்தைக் கோரி நீதிபதியானவர் விசாரணையை ஞாயிற்றுக்கிழமைக்கு ஒத்திவைத்திருந்தார். இஸ்லாமிய நாடு என்பதால் ஞாயிற்றுக்கிழமை நீதிமன்றம் செயற்படுகின்றது.

இலங்கை அரசு தரப்பிலான கோரிக்கையை அந்த நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளுமானால் அரசு தனது ஊழலுக்கு எதிரான செயற்பாட்டில் மாபெரும் வெற்றியை ஈட்டியுள்ளதாக மட்டும் கருதப்படுவதாக இருக்காது. அதைவிட முக்கியமாக ஒரு சில முன்னைய ஆட்சியாளர்களால் நாட்டின் செல்வங்கள் எவ்வளவு தூரம் வெட்கமின்றி கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. பெருந்தொகை நிதி வெளிநாட்டுவங்கிகளில்வைப்பிலிடப்பட்டுள்ளது என்பதற்கு தீர்க்கமான ஆதாரம் கிடைத்ததாகவும் இருக்கும் என்று கருதப்படுகின்றது. இலங் கைத் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆதாரங்கள், அந்தக் கணக்கைவங்கியில்உறைநிலையில் வைப்பதற்குப் போதுமா னவை என்றும் கருதப்படுகின்றது.


### இன்னும் பலர் பின் தொடரப்படுகிறார்கள்

இது பற்றித் தகவல் அறிந்த ஒரு தரப்பினர் தெரிவிக்கையில்;

எமக்கு இப்போது கிடைத்திருப்பது ஒரு பெரும் பனிக்கட்டிமலையின் சிறு துண்டுமட்டும்தான். இவ்வாறு நாட்டின் செல்வத்தைச் சூறையாடி வெளிநாட்டு வங்கிகளில் பணத்தைப் பதுக்கி வைத்திருப்பவர்கள் இன்னும் பலர் இருக்கிறார்கள். அவர்களை நாங்கள் பின்தொடர்கின்றோம். ஆனால் அவைபற்றிய விரிவான செய்திகளை இப்போது வெளியிட முடியாது– என்றார் கள். இப்பொழுது விசாரணைக்குள்ளாகியுள்ள முன்னாள் மிகமிக முக்கிய பிரமுகரின் நெருங்கிய சகாவான ஒருவரே மேற்கண்ட இரகசிய வங்கிக் கணக்குகள் பற்றிய தகவல்களை வழங்கியிருப்பதாக அறிய முடிகின்றது. இவை தொடர்பாக சுயாதீன தகவல்களும் அமெரிக்க அரசு முகவர் அமைப்புகளிடமிருந்தும் கிடைத்திருக்கின்றன. சமஷ்டி புலனாய்வு கழகம் (எப்.பி.ஐ) மற்றும் நீதித்துறைத் திணைக்களம் என்பனவும் இதில் அடங்கும்.

வோஷிங்டனில் வைஓமிங் அவனியுவில் அமைந்துள்ள இலங்கைத் தூதரக கட்டடத்தொகுதி விற்பனை தொடர்பாகவும், புதிய தொகுதியொன்று கொள்முதல் செய்யப்பட்டமை தொடர்பாகவும் அமெரிக்க நீதித்துறைத் திணைக்களம் விரிவான தகவல்களை வழங்கியிருக்கின்றது. அங்கிருந்த இலங்கைத் தூதரக மிக உயர்நிலை அதிகாரி ஒருவர் இதில் பெரும் தொகைப் பணத்தைத் தரகுப் பணமாக பெற்றிருப்பதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. சமீப காலத்தில் இடம்பெற்றுள்ள மிகப்பெரிய ராஜதந்திர ஊழல் இதுவென்று கூறப்படுகின்றது. இது தொடர்பான ஆதார ஆவணங்கள் அரசிடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. குறித்த தூதரக அதிகாரி தூதரகத்தின் கணக்காளர் மீது பாரத்தைப் போட்டுள்ள அதே நேரம், கணக்காளரும் அதே அதிகாரி மீது குற்றச்சாட்டைத் திருப்பி விட்டிருக்கிறார்.

முன்னாள் இலங்கைத்தலைவர்கள் வெளிநாடுகளில் ஒளித்து வைத்துள்ள சொத்துக்களின் விவரங்களைக் கண்டுபிடிப்பதற்கு அமெரிக்க அரசு முழு அளவில் உதவியளிக்கும் என்பதாக இலங்கைக்கு வந்திருந்த அமெரிக்க ராஜாங்க செயலாளர் ஜோன் கெரி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்குறுதியளித்திருந்தமை நினைவு கூரத்தக்கது. அதன் பிறகு அமெரிக்க புலனாய்வு அதிகார அமைப்புக்களின் பிரதிநிதிகள் அடிக்கடி இலங்கைக்கு வந்து இங்குள்ள அதிகாரிகளுடன் தகவல் பரிமாறிக் கொண்டு சென்றிருந்தனர்.



### அமெரிக்கா ஜனாதிபதிக்கு அளிக்கும் முக்கியத்துவம்

அண்மையில் ஐ.நா. 70 ஆவது வருடாந்த மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றிருந்த ஜனாதிபதி சிறிசேன அமெரிக்க அதிகாரிகள் வழங்கியிருந்த உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நன்றி தெரிவித்திருந்தார். அமெரிக்க அரசு இலங்கை ஜனாதிபதிக்கு பக்கபலமாக இருக்கும் என்பதற்கான வேறு சில சமிக்ஞைகளும் சிறிசேன நியூயோர்க் சென்றிருந்தபோதே வெளிப்பட்டிருந்தன. அமெரிக்க அதிபர் ஒபாமா உலகத் தலைவர்களுக்கு அளித்த விருந்தொன்றின்போது ஒபாமாவின் மேசையில் சிறிசேன ஏனைய பல நாடுகளின் அதிபர்கள் மற்றும் தலைவர்களுடன் அமர்வதற்கு இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. ஐ.நா.வில் அமெரிக்க நிரந்தரப் பிரதிநிதியாக இருக்கும் சமந்தாபவர் அம்மையாரே இந்த ஏற்பாட்டுக்குக் காரணம் என்று தெரியவந்தது. ஆரம்பத்தில் ஒபாமாவுக்கு அடுத்த தாகவே இடம் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. பிறகு அது உக்ரேன் அதிபர் பெட்ரோ பொரொசொங்கோவுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதனால் ஒபாமாவுக்கு வலப்புறமாக இரண்டாவது இடத்தில் அமரும் வாய்ப்பு சிறிசேனவுக்குக் கிடைத்தது. ஐ.நா. செயலாளர் நாயகம் பான் – கி மூன், தென்னாபிரிக்கா அதிபர் ஜே கொப் சூமா, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின், தென்கொரிய அதிபர் பார்க் கெவுன் – ஹை, பிரான்ஸ் அதிபர் பிராங்கொயிஸ் யஹாலன்டே மற்றும் சீன அதிபர் ஸி ஜிங்பிங் முதலிய தலைவர்களும் அதே மேசையில் அமர்ந்திருந்தார்கள். அதுமட்டுமல்ல, ஐ.நா. தலைமையகத்தில் இடம்பெற்ற உலக அமைதி செயற்பாட்டு முன் முயற்சி தொடர்பான நிகழ்வுக்குத் தலைமை வகித்த அதிபர் ஒபாமா தமது உரையை வழங்கிய பின்னர் மேடையை விட்டு இறங்கிவந்தபோது, ஏனையவர்கள் பார்த்துக் கொண்டிருக்க குறிப்பாக இலங்கைப் பிரதிநிதிகள் பக்கமாகச் சென்று இலங்கை அதிபர் மைத்திரியுடன் கைகுலுக்கிய பின்னர் புறப்பட்டுச் சென்றார். ராஜதந்திர முறையில் அமெரிக்க அரசின் மிக உயர்நிலை சமிக்ஞையாக இது கருதப்படுகின்றது. அமெரிக்க அரசு, சிறிசேனவுக்குப் பக்க பலமாக இருக்கிறது என்பதற்கான மேலும் ஒரு செய்தியாகும் இது.

அமெரிக்காவுக்குச் செல்வாக் குள்ள வேறு நாடுகளிலும் இலங்கையின் நிதி விசாரணை தொடர்பாக அந்த [illegible] அந்த வகையில் உக்ரேனிலிருந்து மிக.27 ரக விமானங்கள் கொள்முதல் செய்யப்பட்ட விவகாரமும் அடங்கும். இந்தக் கொள்முதலுக்காக கொழும்பு வங்கி



யொன்றிலிருந்து எவ்வாறு பணம் எடுத்துச் செல்லப்பட்டது என்பது குறித்த விவரங்கள் இப்போது அதிகாரிகளுக்குக் கிடைத்திருப்பதாகத் தெரிகின்றது.

பாரதூரமான ஊழல்கள் தொடர்பான அமைப்பு லண்டனில் எவ்வாறு செயற்படுகின்றது என்பதைப் பற்றி அறிந்து கொள்வதற்காக நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவின் தலைவர், சிரேஷ்ட உதவிப்பொலிஸ்மா அதிபர் ரவி வித்தியாலங்கார தலைமையில் குழுவொன்று விரைவில் லண்டன் செல்லவிருக்கின்றது. நிதிக்குற்ற புலனாய்வுப் பிரிவின் இடத்தில் பாரதூரமான ஊழல்கள் தொடர்பான அமைப்பொன்றை இலங்கையில் நிறுவ அரசு விரும்புகின்றது. அனேகமாக இந்த வருட முடிவுக்குள் அது நிறைவேறும். அதற்கான சட்டமூலம் ஒன்று நாடாளுமன்றில் நிறைவேற்றப்படவிருக்கின்றது. இப்போது நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு புதிய விவகாரங்களையும் விசாரணைகளையும் நடத்தத் தொடங்கியிருக்கிறது.

### முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிசும் விசாரிக்கப்படலாம்

வெளிநாடுகளில் ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் பணிபுரிந்தவர்களான தூதுவர்கள் மற்றும் ஸ்தானிகர்களையும் விசாரணை நடத்த அது தீர்மானித்துள்ளது. ஜனவரி 8 ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அவர்கள் இலங்கைக்கு வந்து செல்ல அவர்களின் பிரயாணச் செலவுகளை யார் வழங்கினார்கள் என்பதும் அவர்களிடம் கேட்கப்படவிருக்கும் கேள்விகளில் அடங்கும். இவ்வாறு இலங்கைக்கு அழைக்கப்பட்டிருந்த ராஜதந்திரிகள் ராஜபக்சவுக்கு ஆதரவாகத் தேர்தல் பரப்புரைகளிலும் ஈடுபட்டு இருந்துள்ளனர். இரண்டொருவர் தங்கள் வீடுகளிலேயே தங்கியிருந்துள்ளனர். இவர்களில் சிலர் தனியார் விடுதிகளில் தங்கியிருந்துள்ளனர். வேறுசிலர் வெளியுறவு அமைச்சிடம் விசேட வசதிகள் வேண்டும் எனக்கோரி கொழும்பில் நட்சத்திர ஹோட்டல்களில் தங்கியிருந் துள்ளனர். அத்துடன் அவர்களின் பரப்புரைக்கு வெளியுறவு அமைச்சு, வாகனங்களையும் சாரதிகளையும் கூட வழங்கியிருந்துள்ளது. இதில் ஒருவர் சிறிய ஹோட்டல் வசதி தமக்குப் போதாதென்று அடம்பிடித்து கொழும்பு சுகபோக ஹோட்டல் ஒன்றுக்கு இடம்மாறிக் கொண்டார் என்றும் கூறப்படுகின்றது. இவர்களுக்கான விமான ரிக்கெட்டுக்கள், ஹோட்டல் வசதிகள், சாரதிகளுடன் கூடிய வாகனங்கள் யாவற்றுக்கும் யார் பணம் செலுத்தினார்கள் என்பதைப் புலனாய்வாளர்கள் அறிய விரும்புகிறார்கள். இவ்வாறு எந்த அளவு பொதுப் பணம் செலவிடப்பட்டது என்பதைக் கண்டுபிடிப்பதே இதன் நோக்கம். இப்பொழுது தாய்லாந்தில் தூதுவராகவுள்ள முன்னாள் வெளியுறவுச் செயலாளர் ஷேனுக்க செனவிரட்ணவும் விசாரிக்கப்படவிருக்கிறார். வெளியுறவுச் செயலர் என்ற முறையில் அவரே அமைச்சின் பிரதம கணக்குப் பொறுப்பாளராகவும் இருந்துள்ளார். இவர்களை இலங்கைக்கு வரும்படி அழைக்குமாறு யார் பணிப்புரை வழங்கினார் என்பது இவரிடம் விசாரிக்கப்படவிருக்கின்றது. இந்த வகையில் விசாரிக்கப்படவிருப்பவர்களில் முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிசும் அடங்குவார் என்று தெரிகின்றது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | 4 | | | | 3 | | 9 |
| | | | | | | | 1 | |
| | 3 | | 6 | 8 | | | | |
| | 5 | | | 4 | | | | |
| 2 | | | | | | 7 | | |
| 1 | | 8 | | 9 | | | | |
| | | | 3 | | 7 | | | |
| | 9 | | | | | | | 5 |
| 7 | | | | | | 2 | | 6 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 4 | 6 | 3 | 2 | 1 | 9 | 5 | 8 |
| 5 | 1 | 8 | 6 | 7 | 9 | 4 | 2 | 3 |
| 2 | 9 | 3 | 8 | 5 | 4 | 6 | 1 | 7 |
| 1 | 6 | 2 | 4 | 8 | 5 | 3 | 7 | 9 |
| 4 | 3 | 9 | 1 | 6 | 7 | 2 | 8 | 5 |
| 8 | 7 | 5 | 2 | 9 | 3 | 1 | 4 | 6 |
| 6 | 2 | 7 | 9 | 4 | 8 | 5 | 3 | 1 |
| 9 | 5 | 1 | 7 | 3 | 2 | 8 | 6 | 4 |
| 3 | 8 | 4 | 5 | 1 | 6 | 7 | 9 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரை யான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலினும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறி முகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# செவ்வரத்தையின் மருத்துவப் பயன்கள்



இயற்கையின் கொடையான செவ்வரத்தையின் பூக்கள் மற்றும் இலைகள் என அனைத்துமே மருத்துவ குணம் உடையவை. செவ்வரத்தைப் பூவில் ஏராளமான நிறங்கள், ஒற்றை மற்றும் அடுக்கு செவ்வரத்தை என பல வகைகள் உள்ளன. செவ்வரத்தம் பூக்கள் மற்றும் இலைகள், தலைமுடி வளர்ச்சிக்கும், தலையில் பொடுகு உள்ளிட்ட பிரச்சினைகளுக்கும் தீர்வு தரும். இந்தப் பூவின் காய்ந்த மொட்டுகளை தேங்காய் எண்ணெயில் போட்டு ஊற வைத்து தொடர்ந்து தடவி வந்தால் கூந்தல் என்றென்றும் கருமை யாக இருக்கும். அதுமட்டுமன்றி செவ் வரத்தம் பூவை உணவில் சேர்த்துக் கொள்வதால் சோர்வு நீங்கும்.

மேலும் இதன் இலைகளைக் கொதிக்க வைத்து அருந்தினால் குருதி அழுத்தம் சீராக இருப்பதுடன், உயர் குருதி அழுத்தத்தையும் கட்டுப்படுத்தும். அதனைத் தொடர்ந்து பயன்படுத்தி வரும் பட்சத்தில் குருதியில் உள்ள கொழுப்புகள் கரைந்து விடும்.

செவ்வரத்தம் பூவின் இதழ்களை அரைத்து தலையில் தேய்த்து குளித்து வந்தால் பேன், பொடுகு நீங்கும். செவ்வரத்தம் பூவின் இதழ்களை நிழலில் உலர்த்தி எடுத்து வெந்தயப் பொடி, கறிவேப்பிலை பொடிகலந்து எண்ணெயில் கொதிக்க வைத்து எடுத்து போத்தலில் அடைத்து வைத்து தினமும்தலைக்குத் தேய்த்து குளித்து வந்தால் தலை முடி உதிர்தல் நீங்கி, முடி நன்கு வளரும். செவ்வரத்தம்பூவைகாய வைத்து பொடி செய்து தேநீர் போல காலை மாலை கசாயம் செய்து அருந்தி வந்தால் குருதி தூய்மையடையும், உடல் பள பளப்பாகும்.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### ஞான இன்பமே வாழ்வின் லட்சியம்

உலக மக்கள் இன்று கடவுளைக் கைகழுவி வருகிறார்கள். காரணம் கேட்டால், 'கடவுள் எங்களுக்கு என்ன செய்தார்? அவரால் எங்களுக்கு என்ன பயன்?' என்று கேட்கிறார்கள். நீங்கள் கேட்பதை எல்லாம் செய்வதற்கு கடவுள் ஒன்றும் நகரசபை அதிகாரி அல்ல. மனி தனை உருவாக்குவதில் இன்பமும் துன்பமும் சமபங்கு வகிக் கின்றன. சில நேரங்களில் இன்பத்தை விட துன்பமே மனிதனுக்கு சிறந்த ஆசானாக அமைகிறது. நன்மையைப் போல் தீமையில் இருந்தும் மனிதன் பாடம் கற்றுக்கொள்கிறான். உலக இன்பம் மனித வாழ்வின் லட்சியமாக இருக்கக்கூடாது. ஞான இன்பம் அடைவதையே வாழ் வின் லட்சியமாகக் கொண்டிருக்க வேண்டும்.

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 500 | 700 | 800 | 700 | 700 | 500 |
| நண்டு | 200 | 400 | 400 | 300 | 100 | 400 |
| கணவாய் | 500 | 600 | 600 | 500 | 700 | – |
| பாரை | 350 | 500 | 500 | 350 | 400 | 400 |
| சுறா | 500 | 600 | 600 | 500 | – | – |
| சீலா | 200 | 400 | 400 | 300 | 400 | 200 |
| விளை | 400 | 450 | 400 | 350 | – | 300 |
| முரல் | 200 | 400 | 400 | 200 | 300 | – |
| கும்பிளா | 250 | 400 | 400 | 300 | 250 | – |
| கிழாக்கன் | 550 | 800 | 300 | 400 | – | 500 |
| ஓரா | 250 | 300 | 350 | 350 | – | 300 |
| திரளி | 150 | 250 | 250 | 300 | 100 | 200 |
| நகரை | 250 | 250 | 200 | 200 | 100 | 200 |
| சூடை | 100 | 150 | 100 | 120 | 100 | – |
| ஒட்டி | 200 | 200 | 250 | 300 | – | 200 |
| திருக்கை | 150 | 350 | 250 | 200 | 100 | 120 |
| பாலை | 300 | 250 | – | 350 | – | – |
| வாழை | 100 | 150 | | 250 | 150 | [illegible] |
| கொய் | 100 | 150 | 60 | 100 | 50 | [illegible] |
| மதனம் | 100 | 300 | 200 | 180 | – | 120 |

## நாளை

**புரட்டாதி-28**
**வியாழக்கிழமை**
**15.10.2015**
**திதி: துதியை**
**மு.ப.09.04 வரை**
**நட்சத்திரம்:**
**சுவாதி**
**காலை.7.10**
**சுபநேரம்: 07.32-9.02வரை**
**இராகு காலம்:**
**1.32-3.02 வரை**

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 60 | 40 | 60 | 40 | 60 | 60 | 25 |
| கத்தரி | 80 | 60 | 70 | 80 | 60 | 60 | 80 | 30–40 |
| கரட் | 70 | 120 | 60–140 | 70 | 60–120 | 120 | 100 | 100 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 40 | 40–50 | 60 | 50 | 30 |
| பயிற்றை | 80 | 80 | 100 | 100 | 70–80 | 120 | 100 | 50 |
| பாகல் | 200 | 140 | 200 | 120 | 160–180 | 160 | 110 | 140 |
| கருணைக்கிழங்கு | 70 | 100 | 80 | 40 | 60–70 | 120 | 120 | 70–80 |
| பெ.வெங்காயம் | 120 | 100 | 110 | 120 | 100–120 | 120 | 120 | 90 |
| சி.வெங்காயம் | 90 | 100 | 160 | 100 | 60–70 | 140 | 100 | 90–100 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 | 35–40 | 60 | 50 | 30 |
| தக்காளி | 100 | 100 | 100 | 100 | 80–100 | 120 | 80 | 70 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 50 | 60–70 | 40 | 60 | 35 |
| கீரை | 30 | 40 | 40 | 10 | 40 | 40 | 30 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 20 | 30 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 160 | 160 | 150 | 140 | 160 | 180 | 200 | 150 |
| புடோல் | 50 | 60 | 60 | 50 | 50 | 60 | 60 | 60 |
| கோவா | 80 | 80 | 60 | 70 | 50–60 | 80 | 100 | 45 |
| வெண்டி | 70 | 60 | 80 | 50 | 80 | 80 | 50 | 40 |
| போஞ்சி | 160 | 160 | 160 | 140 | 160 | 200 | 160 | 170 |
| லீக்ஸ் | 80 | 80 | 100 | 80 | 50–60 | 80 | 80 | 60 |
| தேங்காய் | 50 | 50 | 50 | 60 | 50–60 | 50–55 | 35–40 | 35 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 130 | 100 | 120 | 120 | 100 | 100–120 |
| தேசிக்காய் | 180 | 280 | 140 | 240 | 240 | 600 | 160 | 270 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 30 | 20 | 15 | 08–10 |
| குடமிளகாய் | 100 | 120 | 120 | 120 | 160 | 120 | 120 | 80–100 |
| இராசவள்ளி | – | – | – | – | – | – | – | 80–90 |
| முருங்கைக்காய் | 60 | 40 | 60 | 40 | 80–100 | 40 | 120 | 70 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐப்பசி மாத ராசி பலன்கள்

## மேடம்



**18.10.2015 தொடக்கம் 16.11.2015 வரை**


எப்போதும் வாழ்வில் எதிர்நீச்சல் போடும் நீங்கள், வறுமையைக்கண்டு பயப்பட மாட்டீர்கள். எவராக இருந்தாலும் நியாயத்தைப்பேசுவீர்கள். குரு மங்களயோகத்தில் இந்த மாதம் பிறந்திருப்பதனால் இழுபறியாக இருந்து வந்த வேலைகள் எல்லாம் நல்ல விதத்தில் முடியும். சுக்கிரன் 5 ஆம் வீட்டில் நின்று கொண்டிருப்பதால் உயர்ரக ஆடை, ஆபரணங்கள் எல்லாம் வாங்குவீர்கள். உங்களுடைய ராசிநாதனான செவ்வாய் சாதகமான நட்சத்திரங்களிலே இந்த மாதம் முழுவதும் சென்று கொண்டிருப்பதால் சவாலான காரியங்களைக்கூட எளிதாக முடிப்பீர்கள். சூரியன் 7 ஆவது வீட்டிலே நீசமாகி அமர்ந்திருப்பதனால் உத்தியோகத்தின்பொருட்டுபிள்ளைகளைப் பிரிய வேண்டிய சூழ்நிலை உருவாகும். பூர்வீகப் பிரச்சினையைப் பெரிதாக்கிக் கொண்டிருக்க வேண்டாம். அஷ்டமத்துச் சனி நடைபெற்றுக் கொண்டிருப்பதனால் மற்றவர்களுக்காக பிணைக் கையெழுத்தெல்லாம் இட வேண்டாம். மாணவ மாணவிகளே! கணிதம், அறிவியல் பாடத்தில் அதிக கவனம் செலுத்துங்கள். கன்னிப் பெண்களே! உயர்கல்வியிலே உங்களுக்கு நாட்டம் அதிகரிக்கும். ஆனால். மாதத்தின் பிற்பகுதியில் ஒவ்வாமை தொற்று வந்து போகும். அரசியல்வாதிகளே! தலைமைக்கு நெருக்கமாகயிருப்பவர்களின் அறிமுகம் கிடைக்கும். கலைஞர்களே, தள்ளிப்போன வாய்ப்பு இந்த மாதத்தின் மத்திய பகுதியில் உங்களைத் தேடிவரும். பழைய சம்பள மீதிகளும் கைக்கு வரும். விவசாயிகளே பூச்சித் தொல்லை அதிகரிக்க வாய்ப்பிருக்கிறது. விளம்பர யுத்திகளைக் கையாளுவீர்கள்.

தள்ளுபடி விற்பனை மூலமாகவும் பழைய பொருள்களை விற்றுத் தீர்ப்பீர்கள். மருந்து, உணவு வகைவியாபாரம் செய்பவர்களுக்கு இலாபம் அதிகரிக்கும். அஷ்டமத்துச்சனி இருப்பதால் வேலையாள்களால் பிரச்சினை அதிகரிக்கும். வேலையாள்களுக்கு அதிக முற்பணம் வழங்க வேண்டாம். சூரியன்சாதகமாக இல்லாததால் பங்குதாரர்களுடன் சின்னச் சின்ன கருத்து மோதல்களெல்லாம் வந்து நீங்கும். சக ஊழியர்களின் விடுப்பாலும் நீங்கள் அதிகநேரம் ஒதுக்கி வேலைபார்க்கவேண்டிய சூழ்நிலைவரும். எவ்வளவு உழைத்தாலும் பாராட்டுதலோ அல்லது ஒரு நன்றியோ இல்லையேஎன்றெல்லாம்ஆதங்கப்பட்டுக் கொண்டிருப்பீர்கள். அதிகாரிகளைப் பகைத்துக் கொள்ள வேண்டாம். சக ஊழியரிடம் மோதிக் கொண்டிருக்காதீர்கள். அலுவலகத்தில் விட்டுக் கொடுத்துப் போவது மிகவும் நல்லது.

**ராசியான திகதிகள்** ஒக்ரோபர் 21, 22, 23, 24, 30, 31, நவம்பர் 1, 2, 7, 8, 9, 10.

**சந்திராஷ்டமம்:** ஒக்டோபர் 18 மு.ப. 11 மணி வரை மற்றும் நவம்பர் 12 மு.ப. 10 மணி முதல் 13, 14 மாலை 6.45 மணிவரை வீண் அலைச்சல் அதிகரிக்கும்.

**பரிகாரம்:** துர்க்கையைத் தரிசித்து வாருங்கள். ஏழை மாணவனொருவனது கல்விச் செலவை ஏற்றுக் கொள்ளுங்கள்.



## இடபம்

கடல் அலை ஓயாததைப்போல வாழ்க்கை என்றால் பிரச்சினைகளும் இருக்கும் என்பதை உணர்ந்த நீங்கள் எச்சரிக்கை உணர்வுடன் எப்போதும் இருப்பீர்கள். உங்கள் ராசிக்கு இலாப வீட்டிலே கேது தொடர்வதனால் சவால்களைச் சந்திக்கும் சக்தி கிடைக்கும். உங்கள் ராசிநாதனாகிய சுக்கிரன் சாதகமாகச் சென்று கொண்டிருப்பதனால் திட்டமிட்ட காரியங்களை நல்ல விதத்தில் முடித்துக்காட்டுவீர்களானாலும், சுக்கிரன்நீசமாவதனால்முதல்முயற்சியில் பல காரியங்களை முடிக்க முடியாமல் இரண்டாவது, மூன்றாவது முயற்சியில் முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். உங்களின் சுகாதிபதியாகிய சூரியன் ஆறாவது வீட்டிலே நீசம் பெற்று அமர்ந்திருப்பதனால் கண்வலி, முதுகுவலி எல்லாம் வந்து போகும். தாயாரின் உடல் நிலை பாதிக்கும். தாயாருடன் மனத்தாங்கலும் வரும்.

குரு நான்காவது வீட்டிலேயே தொடர்வதால் எதிர்காலம் குறித்த ஒரு பயமும், கவலையும் இருந்து கொண்டேயிருக்கும். எவ்வளவு பணம் வந்தாலும் சேமிக்க முடியாதபடி செலவுகள் தொடர்ந்து கொண்டேயிருக்கும். தீடீர் பயணங்களாலும், செலவுகளாலும் திணறுவீர்கள். மின்சார, மின்னணுச் சாதனங்கள் பழுதாகும். 27 ஆம் திகதி முதல் புதன் ஆறில் சென்று மறைவதால் உறவினர்கள், நண்பர்கள் மத்தியிலே கருத்து மோதல்களெல்லாம் வரும். திடீரென்று அறிமுகமாகுபவர்களை நம்பி பெரிய முதலீடுகளெல்லாம் செய்ய வேண்டாம். கன்னிப் பெண்களே! போட்டிப் பரீட்சைகளில் கலந்துகொண்டு தேர்ச்சி பெறுவீர்கள். அரசியல்வாதிகளே! கோஷ்டிப் பூசல் குறையும். தலைமைக்கு நெருக்கமாவீர்கள். தொகுதி மக்களைக் கவரப் புதிய திட்டம் தீட்டுவீர்கள். அனுபவமுள்ள வேலையாள்களை பணியில் அமர்த்துவீர்கள். உத்தியோகத்திலே மூத்த அதிகாரிகளுடன் சலசலப்பு இருந்து கொண்டேயிருக்கும். மூத்த அதிகாரிகள் ஒருதலைப் பட்சமாக நடந்து கொள்வதாக நீங்கள் உணர்வீர்கள். நேர்மையாக உழைத்து நிறுவனத்தின் முன்னேற்றத்துக்காகக் கடுமையாகப் போராடும் எமக்கு எந்த முக்கியத்துவமும் தராமல் இருக்கிறார்களே என்று ஆதங்கப்பட்டுக்கொண்டிருப்பீர்கள். கலைஞர்களே! வேற்று மொழிக்காரர்களால் புதிய வாய்ப்புகள் வரும். உங்களை விட வயதில் குறைந்த கலைஞர்களாலும் புதிய வாய்ப்புகளைப் பெறுவீர்கள். விவசாயிகளே! தண்ணீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பீர்கள். பக்கத்து நிலத்துக்காரருடன் இருந்து வந்த மோதலும் குறையும். இந்த மாதம் விடாமுயற்சியாலும் கடின உழைப்பாலும், சகிப்புத் தன்மையாலும் முன்னேறுவதாக அமையும்.

**ராசியான திகதிகள்:** ஒக்டோபர் 23, 25, 26, 28, நவம்பர் 1, 2, 3, 4, 6, 11, 13.

**சந்திராஷ்டமம்:** ஒக்டோபர் 18 முற்பகல் 11 மணி முதல் 19, 20 மாலை 5 மணி வரை மற்றும் நவம்பர் 14 மாலை 6:45 மணி முதல் 15, 16 வரை சந்திராஷ்டமம் இருப்பதால் முன்கோபத்தை தவிர்ப்பது நல்லது.



**பரிகாரம்:** வைரவரைத் தரிசித்து வாருங்கள். கோயில் கும்பாபிசேகத்துக்கு உதவுங்கள்.

## பெண் என்பவள்...



பெண் என்பவள் ஆணின் ஆதார சக்தியாக எவ்விதம் இயங்குகிறாள்? இப்படி, ஓர் ஆணிடம் கேட்டால் ஒரு விதமான பதிலையும், ஒரு பெண்ணிடம் கேட்டால் வேறு ஒருவிதமான பதிலையும் பெறமுடியும் என நேற்றைய உதயனில் பார்த்தோம். இன்று பெண் உயிரினங்களை பாதுகாப்பது எவ்வாறு எனப் பார்ப்போம்.

எறும்பு முதலாக பறவைகள், கால்நடைகள், தாவரங்கள் என எந்த சிறிய உயிருக்கும் நீர் தேடி சேகரித்துப் பங்கிடுவது, உணவிடுவது, அவற்றைப் பாதுகாப்பது என்பன பெண்ணின் இயல்பாக இருக்கிறது. ஆண்களின் பொறுப்போ ஒவ்வொரு நிலையிலும் பிறரால் வலியுறுத்தப்படுவதாகவே இருக்கிறது.

சமூகம் என்பது ஆண்மைக் கருத்துரு என்பதைத் தாண்டி, 'பெண்தான் சமுதாயத்தின் வளமாக இருக்கிறாள்' என்பதே உண்மை. ஒரு சமூகத்தின் வளம் என்பதும் அந்தச் சமூகத்தின் வளர்ச்சி என்பதும் அதனுடைய உற்பத்தித்திறனையே அடிநாதமாகக் கொண்டிருக்கிறது. அப்படியான வளம் மிக்க சமூகமே பாதுகாப்பானதாகவும் இருக்கிறது. பெண் என்பவள் உற்பத்தித்திறன் உடையவள் என்பதால்தான், அவளை நதியாகவும், நிலமாகவும், தெய்வமாகவும், போற்றிப் புகழ்ந்து கொண்டே இருக்கிற முதலாளித்துவ சிந்தனை வளர்ந்திருக்கக்கூடும். முதலாளித்துவ மனோபாவத்துக்கு உழைக்கும் மக்கள் தேவை. உழைக்கும் மக்களைப் பெற்று, உருவாக்கித் தருகிற சக்தியாக பெண்ணை மேன் மேலும் பண்படுத்தவே, பெண் ஒருவிதத்தில் போற்றப்படுகிறவளாக இருக்கிறாள். சங்க காலச் சமுதாயத்தில் தம் இனக்குழு வாழ்வின் நிலைப் பேற்றுக்காக வேறு இனக்குழுவுடன் சண்டையிட்டுக் கொள்ளும் நிர்ப்பந்தம் இருந்தது.

ஒரு ஆண் – தந்தையாக இருந்தாலும், மன்னராக இருந்தாலும், இளைஞனாக இருந்தாலும், பெண்ணின் வழி நின்றே அடிப்படையான வாழ்வியல் கல்வியும் பொறுப்புகளும் கையளிக்கப்பட்டு மேன்மைப்படுத்தப்படுகிறான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயற்சி திருவினை ஆக்கும்...

ஒரு கிராமத்தில் ஒரு பாட்டி இருந்தாள். அவளுக்கு ஒரு பேரன் இருந்தான். அவன் பெயர் நம்பி. நம்பிக்குப் பெற்றோர் கிடையாது. அவன் உறவெல்லாம் பாட்டி மட்டுமே. மிகவும் ஏழையான அவர்கள் வயிற்றுப் பிழைப்புக்காகத் தினமும் வயலில் கூலி வேலை செய்து வந்தனர். பாட்டி வயலில் வேலை செய்யும் பொழுது நம்பி மாடுகளை மேய்த்து விட்டு வருவான். சூரியன் மறைந்த பிறகே இருவரும் வீடு திரும்புவார்கள்.

நம்பிக்குப் படிக்கவேண்டும் என்று மிகவும் ஆசை. அவன் மாடு மேய்க்கும் பொழுது தன்னைப் போன்ற சிறுவர்கள் பாடசாலைக்குப் போவதைப் பார்த்துத் தானும் பாடசாலைக்குப் போக விரும்பினான். பாட்டியிடம் ஒருநாள், 'பாட்டி , நானும் படிக்க வேண்டும்' என்றான். பாட்டி பெருமூச்சு விட்டாள். 'நாமெல்லாம் படிக்க முடியாதப்பா. அது பணக்காரங்களுக்குத் தான் முடியும்' என்றாள் அவள். 'ஏன் பாட்டி, நாம் ஏன் படிக்கக்கூடாது?' என்றான் அவன். 'நாம் வேலை செய்தால் தான் சாப்பிட முடியும். படிக்கப் போய் விட்டால் யார் சாப்பாடு தருவார்கள்? அதனால் உழைப்பது தான் நம்மால் முடியும்' என்றாள் பாட்டி. இதை நம்பியின் மனம் ஏற்கவில்லை. எப்படியாவது படித்தே தீருவது என்று முடிவு செய்தான். அந்த ஊரில் இருந்ததே ஒரு பள்ளிக்கூடம்தான். அது வும் ஐந்தாம் வகுப்பு வரை மட்டுமே உள்ளது. ஒரு கூரைக் கட்டடத்தில் பாடசாலை இயங்கி வந்தது. நம்பி மாடுகளை மேய்ச்சலுக்கு ஓட்டிவிட்டு பாடசாலையின் வாசலில் அல்லது ஜன்னலின் ஓரத்தில் வந்து நின்று கொள்வான். அவ்வாறே மூன்று மாதங்கள் வரை முதல் வகுப்பிலும் அதன் பின் இரண்டாம் வகுப்பிலும் என இரண்டு வருடங்களுக்குள் ஐந்து வகுப்பின் பாடங்களையும் கற்றுக்கொண்டான். இப்போது நம்பி எவரது துணையும் இல்லாமல் எல்லாப் புத்தகங்களையும் படிக்கத் தொடங்கினான். கண்ணில் கண்ட தாள்களில் உள்ள செய்திகளையெல்லாம் படித்துத் தெரிந்துகொண்டான். தான் படிப்பதை எவரும் அறியாமல் இரகசியமாகவே வைத்திருந்தான். ஏனெனில் மாடு மேய்க்கும் சிறுவன் படிப்பதைப் பார்த்தால் ஊர்ப் பெரியவர்கள் தவறாக நினைப்பார்கள். அவன் சரியாக மாடுகளை மேய்க்க வில்லை எனக் கூறி கூலி கொடுக்க மாட்டார்கள் எனப் பயந்திருந்தான். அந்தக் கிராமத்தில் வாரம் ஒருமுறை தான் தபால்காரர் வருவார். அவரும் ஊருக்கு வெளியே நம்பியைப் பார்த்தால் அவனிடம் இரண்டு அல்லது மூன்று கடிதங்களைக் கொடுத்துவிட்டு ஊருக்குள் வராமலேயே போய் விடுவார். அந்தக் கடிதங்களை நம்பி மாலையில் மாடுகளைக் கட்ட வரும் போது உரியவர்களிடம் சேர்த்து விடுவான். அன்றும் அதே போன்று தபால்காரர் வந்தார். இரண்டு கடிதம் தான் இருக்கின்றன. இதைத் தருவதற்காக ஊருக்குள் வரவேண்டுமா என எண்ணி அதை வழக்கம் போல நம்பியிடம் கொடுத்து விட்டுச் சென் றார். வெகு நேரம் கழித்து அந்தக் கடிதங்களைப் பார்த்தான் நம்பி. இப்போது நம்பிக்குத் தான் படிக்கத் தெரியுமே. அதனால் ஆர்வம் அவனை அந்தக் கடிதங்களைப் படிக்கத் தூண்டியது. மெது வாகப் படிக்கத் தொடங்கினான். அந்தக் கிராமத்தின் தலைவர் பெரியசாமி. அவரது நண்பர் சுந்தரம் பட்டணத்தில் அரச வேலை பார்ப்பவர். அவர் தான் பெரியசாமிக்குக் கடிதம் எழுதியிருந்தார். வெள்ளிக்கிழமை மாலை ஐந்து மணிக்கு அந்த ஊருக்கு அரச அதிகாரி ஒருவர் வரப் போவதாக அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தார். கடிதம் வந்து சேர்ந்ததும் வெள்ளிக்கிழமை தான். அந்தக் கடிதம் உடனே கிராம அதிகாரியின் கைக்குப் போய்ச் சேரவேண்டுமே என முடிவு செய்தான் நம்பி. உடனே தான் பாட்டி வேலை செய்யும் இடத்துக்குப் போனான்.'பாட்டி, மாடுகளைக் கொஞ்ச நேரம் பார்த்துக்கொள். நான் இந்தக் கடிதத்தை தலைவரிடம் கொடுத்து விட்டு வருகிறேன்' என்றபடியே ஓடினான். கடிதத்தைப் படித்த பெரியசாமி உடனே அதிகாரியை வரவேற்க ஆவன செய்ய உத்தரவு பிறப் பித்தார். அன்று மாலை தலைவரை நல்ல முறையில் வரவேற்று உபசரித்தார். அதிகாரி மிகவும் மகிழ்ந்து அந்த கிராமததுக்கு என்ன வசதிகள் தேவை என்பதைக் கேட்டுத் தெரிந்து கொண்டு அதை நிறைவேற்றக் கட்டளையிட் டார். இரவு நம்பியும் பாட்டியும் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அப்போது வீட்டு வாயிலில் யாரோ அழைக்கும் குரல் கேட்டது. 'யாரது?' எனக்கேட்டவாறே வெளியே வந்தனர் பாட்டியும் பேரனும். அங்கே கிராமத் தலைவர் பெரியசாமியும் சில பெரியவர்களும் நின்றிருந்தனர். ஒரு தட்டில் நல்ல புதிய உடைகளும் இனிப்புகளும் பழங்களு டன் ஐந்நூறு ரூபாய் பணமும் வைத்து பாட்டியிடம் கொடுத்தனர். பாட்டி திகைத்தாள். எனக்கு என்ன மரியாதை? ஏன் இந்த மரியா'தை? அவளது திகைப்பைப் பார்த்து புன்னகை புரிந்த பெரியசாமி 'பாட்டிம்மா! உங்களது பேரன் காலையிலேயே கடிதத்தைக் கொண்டு வந்து கொடுத்ததால் தான் அதிகாரியை நன்கு உபசரிக்க முடிந்தது. நானும் வெளியூருக்குப் போவதைத் தள்ளிப் போட முடிந்தது. நமது ஊருக்கும் நல்லது நடந்திருக்கிறது. இத்தனைக்கும் காரணம் நம்பி கடிதத்தை சரியான நேரத்தில் கொண்டு வந்து கொடுத்ததுதானே? அதனாலே இந்தப் பரிசை நாங்கள் எல்லோரும் சேர்ந்து அவனுக்குக் கொடுக்கிறோம்.' என்றார். 'இது ஒரு பெரிய விடயமா? அவன் எப் போதும் போல் கடிதம் கொடுத்திருக்கி றான். இதற்குப் போய்... என நீட்டினாள் பாட்டி. பெரியசாமி நம்பியைப் பார்த்துக் கேட்டார். 'நம்பி! இந்தக் கடிதம் மிக முக்கியமானது என்று உனக்கு எப் படித் தெரிந்தது?' 'ஐயா! என்னை மன்னித்து விடுங்கள். நான் தான் உங்களுக்கு வந்த அந்தக் கடிதத்தைப் படித்தேன். அதன் அவசரத்தைப் புரிந்து கொண்டு ஓடி வந்து கொடுத்து விட்டு மாடுகளைப் பார்த்துக் கொள்ள மீண்டும் வயலுக்கு வந்து விட்டேன்' என்றான். 'உனக்குத் தான் படிக்கத் தெரியாதே? எப்படிப் படித்தாய்?' என்று கேட்டார் பெரியசாமி. நம்பி கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தான் கல்வி கற்ற முறை யைச் சொன்னபோது பெரியசாமி கண் கலங்கினார். இவ்வளவு ஆர்வமுள்ள சிறுவனை முறையாகப் படிக்கவைக்க முடிவு செய்தார். அதை பாட்டியிடம் சொல்ல அவள் மிகவும் மகிழ்ச்சி அடைந் தாள். அதைவிட நம்பி மிகவும் மகிழ்ந் தான். மறுநாள் முதல் நம்பி மாடு மேய்க்கப் போகவேண்டாம். இனி அவன் பாட சாலைக் குச் செல்லட்டும் என பெரியசாமி கூறிவிட் டுச் சென்றார். பாட்டி தனது பேரனின் ஆசை நிறைவேறிற்று என மகிழ்ந்ததோடு நம்பி யிடம் 'உன் முயற்சி உன்னைஉயர்த்திவிட்டது.' என்றாள்.










**சிறுவர், இளவல்கள் வட்டம் பகுதிகளுக்கான கதை, கவிதை, பல்சுவைத் தகவல்கள் குறித்த உங்களது ஆக்கங் களை இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். சிறப்பான ஆக்கங்களுக்குப் பரிசுகளும் உண்டு.**



# இளைஞர்களின் போக்கும் அவர்களுக்கான வழிகாட்டலும்

எமது சமூகத்தில் இன்றைய இளைஞர்களின் போக்கு மிகவும் கவலையளிப்பதாகவே உள்ளது. இதற்கு முக்கிய காரணம் அவர்களிடையே உண்மையான அறிவும் தேடலும் அற்றுப்போனமையாகும். தமது இளமைப்பருவத்தை வீணான கேளிக்கைகளிலும், அர்த்தமற்ற செயற்பாடுகளிலும் பயனற்ற பொழுது போக்குகளிலும் செல விடுகின்றனர். ஏதோ தமது இளமை நிரந்தரமானது என்ற மாயையில் அவர்கள் வீழ்ந்து கிடக்கின்றனர். இது முழுச் சமூகத்துக்கும் அச்சுறுத்தலாக இருக்கின்ற ஒரு விடயம் என்பதில் ஐயமில்லை.

எவ்வளவுதான் அவர்களது காதுகளில் நல்ல விடயங்களை ஓதினாலும், அவை செவிடன் காதில் ஊதிய சங்காகவே அமைந்து விடுகின்றது. எதையும் ஆரம்பத்தில் கட்டுப்படுத்துவது நல்லது. முளையிலேயே கிள்ளி எறிந்து விட்டால் பிரச்சினைகளின் பெருக்கம் நிச்சயமாக கட்டுப்படுத்தப்பட்டுவிடும். இவை தவிர,நவீன ஊடகங்கள் ஊடாகவும் இன்றைய இளைஞர்கள் மிக மோசமான சீரழிவுகளைச் சந்தித்து வருகின்றனர். குறிப்பாக சினிமாவிலும், சின்னத்திரைகளிலும் மூழ்கித் திளைக்கும் இளைஞர்கள் இசையையும் ஆபாசக் காட்சிகளையும் தமது அன்றாடப் பொழுது போக்காகக் கைக்கொள்கின்றனர்.

இணையத்தின் அறிவு தொடர்பான நல்ல பல பக்கங்கள் மூளைக்கு வேலை கொடுக்கும் படியாக அமைந்திருக்கையில், அநாவசியமான ஆபாசப்பக்கங்களை நமது இளைஞர்கள் தேடிப்பிடித்து அந்த வலைப் பின்னலுக்குள் வசமாக சிக்கிக் கொள்கின்றனர். இதில் கவலைக்குரிய விடயம் என்னவென்றால், படித்த இளைஞர்கள் கூட இந்தப் பண்பாட்டு சீரழிவுக்குள் புதைந்து போனமைதான். நமது இளைஞர்களை இவ்வாறான சீர்கேடுகளில் இருந்து மீட்டெடுக்கவும் வழிகாட்டவும் ஒன்றிணைக்கப்பட்ட ஓர் அமைப்பின் உதயம் அத்தியாவசியமாகும். இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள என்பதற்கொப்ப இந்தச் செயற்பாடானது மிகவும் அவசியமானதும், அவசரமானதுமாகும். இதில் வேறுபட்ட கருத்துக்களுக்கு இடமிருக்க முடியாது. ஆதலால் எமது இளைஞர்களின் எதிர்காலம் குறித்து, அவர்களின் கடமைகள் குறித்து ஆராய வேண்டிய கால கட்டத்தில் நாம் இப்போது இருக்கின்றோம். இளைஞர்களின் [illegible] இன்றைய காலத்தின் தேவையாகும். உலக நாகரிகங்களின் வளர்ச்சிக்கும் மனித குல முன்னேற்றத்துக்கும் இளைமைப் பருவத்திலிருக்கும் மாணவர்களின் அளப்பரிய பங்களிப்பு நிராகரிக்க முடியாதது. அன்புக்குரிய மாணவர் சமுதாயமே! உங்களால் முடியும். இந்தச் சமுதாயத்தில் தலைசிறந்த, அநியாயத்துக்குத் துணை போகாத, சட்ட வரையறைகளையும், மனித உணர்வுகளையும் மதித்து நடக்கும் ஓர் தலைமைத்துவத்தை உருவாக்க உங்களால் முடியும். அறிவுக்குத் தொண்டு செய்து அறிவுப் பாரம்பரியத்தை கட்டி எழுப்பும் ஆளுமையுள்ள அறிஞர் வட்டமாய் உருவெடுக்க நெஞ்சில் உறுதி பூணுவோம். இந்த இளைஞர்களின் விவகாரத்தில் கூடிய கவனத்தைச் செலுத்த வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயமாகி விட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் விழித்துக் கொள்ளா விட்டால் இதைவிட பயங்கரமானதும், படுமோசமானதுமான ஒரு கலாசார சீரழிவுக்கு நாம் முகம் கொடுக்க வேண்டியிருக்கும். ஆகவே, இவ்வாறான சமூகத்தின் முதுகெலும்பான இளைஞர்களுக்கு நல்ல வழிகளைக் காட்டுவதற்கு ஒன்றிணைவோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானசாரர் சரண்

பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர்கலகொடஅத்தே ஞானசார தேரர் நீதிமன்றில் நேற்றுச் சரணடைந்தார்.

புனித குரானுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தியமை மற்றும் ஜாதிக பலசேனா அமைப்பின் ஊடக வியலாளர் சந்திப்பில் அத்துமீறி நுழைந்து குழப்பத்தை ஏற்படுத் தியமை உள்ளிட்ட குற்றச்சாட் டுக்கள் ஞானசார தேரர் உள் ளிட்ட மூன்று தேரர்களுக்கு எதிராகச் சுமத்தப்பட்டிருந்தன. இது குறித்த வழக்கு விசாரணை களுக்காக நேற்றுமுன்தினம் அவர்களைக்கொழும்புகோட்டை நீதிவான்நீதிமன்றில் முற்படுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் அவர்கள் நீதிமன்றத் தில் முற்படாமையால் நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்துக்காக, கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் அவர்களுக்கு எதிராகப்பிடியாணைபிறப்பித்த நிலையில், ஞானசார தேரர் உள் ளிட்ட மூவரும் நேற்று நீதிவான் முன்னிலையில் சரணடைந்தனர். இந்நிலையில் ஞானசார தேரர் உள்ளிட்ட மூவருக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்ட பிடியாணை மீளப் பெறப்பட்டுள்ளது. இந்த வழக்கு எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (த-வ)

## மரண அறிவித்தல்

### திருமதி முத்துப்பிள்ளை (முத்தாச்சி) இலச்சுமணன்

தாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்துப்பிள்ளை இலச்சுமணன் நேற்று (13.10.2015) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இலச்சுமணனின் அன்பு மனைவியும் பூமலர், கனகமணி, இராசரத்தினம்(கட்டட ஒப்பந்தகாரர்), சின்னக்குஞ்சு, மகேந்திரராசா(ராசன் - கட்டட ஒப்பந்தகாரர்) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற வர்களான செல்லத்தம்பி, தம்பரத்தினம், பூலோகம் மற்றும் இராசலட்சுமி, தங்கராணி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.10.2015) புதன்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தாவடி தெற்கு,
பத்திரகாளி கோயிலடி. (65477) (14.16.17)

தகவல்:
குடும்பத்தினர்.


**North Lanka IIT**

வருடந்தோறும்
விஜய தசமியை முன்னிட்டு
சலுகைக்கட்டணம் ரூ.50,000 வரை
வழங்கப்படும்

O/L, A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான உயர்கல்வி பட்டப்படிப்பு கற்கை நெறிகள் ஆரம்பம்.

SRILANKA UGC APPROVED

*B.Sc. in Comp. Sc *PGD in Comp. Sc.
*Top Up in B.Sc. Comp. Sc.
*M.Sc. in Comp. Sc. *MBA *DBA

North Lanka IIT,
Top Floor, People's Bank Building,
Stanley Road, Jaffna.
Telephone : 0777592666,0214927088


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர் செல்லத்துரை செல்வநாதன்



மலர்வு
01.02.1956

உதிர்வு
14.09.2015

எமது அன்புத் தெய்வம் அமரர் செ.செல்வநாதன் அவர்களின் மரணச் செய்தி அறிந்து நேரில் வந்து ஆறுதல் கூறி பலவழிகளில் உதவி புரிந்தோருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (14.10.2015) புதன்கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

நவாலி வடக்கு,
மானிப்பாய். (65470) (14,15,17)

குடும்பத்தினர்.


### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 45 நாள் நிரம்பிய டோமன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

(65479)(10.17) தொடர்பு: 077 50 45 441

### Personal Class

தரம் 03 முதல் A/L மாணவர்களுக்கு, English, சிங்களம், Spoken with Grammar கற்க விரும்புபவர்களுக்கு வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். ஏனைய பாட ஆசிரியர்களும் ஒழுங்கு செய்து தரப்படும்.

தொடர்பு: T.P: 077 8361521
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(65480) (10.17)




### காணி வீடு விற்பனைக்கு

வடமராட்சி, கரவெட்டி, வதிரிச்சந்திக்கு அருகில் நில. பர. 6 ½ விஸ்தீரணம் 06 அறைகள் கொண்ட வீட்டுடன் கிணறும் விற்பனைக்கு உண்டு

தொடர்பு: 021 226 3466
077 722 8527
(65256)(12.15.17)

### பெயர் மாற்றம்

பருத்தித்துறை வீதி, கொடிகாமத்தைச் சேர்ந்த மொகமட் அலீம் மொகமட் பைசர் ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை **அ.றொசான்** என பெயர் மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

(65474) (14.16.17) அ.றொசான்





### துயர் பகிர்கின்றோம்

எமது சங்கத்தின் நீண்ட கால உறுப்பினர்

**திருமதி இலட்சுமி சின்னத்தம்பி**



அவர்களின் மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நீர்வேலி ஸ்ரீ முருகன் சிக்கன கடன் வழங்கு கூ. சங்க அங்கத்தவர்கள்
நீர்வேலி
(65465)(12.15.17)

### பிரிவுத் துயர்பகிர்கின்றோம்

எமது கல்லூரி ஆசிரியை **வாணிமலர் சுதர்சன்** அவர்களின் அன்பு தந்தையார்

**செல்லத்துரை செல்வநாதன்**



14.09.2015 இல் மரணமடைந்தார். அவரின் பிரிவுத் துயரில் நாமும் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

பாடசாலைச் சமூகம்
யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி.
(65461)(12.15.17)

### நடராசா துரையப்பா



தேவாலய வீதி, கூழாவடி ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா துரையப்பா நேற்று (13.10.2015) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா- நாகேஷ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் திருமதி பத்மாவதி தம்பதியரின் அன்பு மருமகனும், சித்தியம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரன், சரஸ்வதி மற்றும் இராசநாயகம், புவனேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரனும், சுரேஸ்குமார் (T.S.K இஞ்சினியரிங் தாண்டிக்குளம்) யோகக்குமார் ரேணுகாதேவி (நெதர்லாந்து) ஸஜீதா, ஸஜீதன் ஆகியோரின் அன்பு தகப்பனும், சு.கலைவாணி, யோ.கலைவாணி, சோதிலிங்கம், ஹேமப்பிரியா ஆகியோரின் அன்பு மாமனும், பிரணவன், வதுர்சன், அபினாஸ், ஆர்த்தி, லதுஸா, கனிஸ்ரா, அஸ்வின், ரெனிஸ்ரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.10.2015) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் கல்லுண்டாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தேவாலயவீதி,
ஆனைக்கோட்டை. (65486) (10.17)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
0773020336

### திருமதி மகேஸ்வரி (செல்லமணி) கதிரேசு



வசந்தபுரம் இளவாலையைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி கதிரேசு நேற்று (13.10.2015) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கதிரவேலு தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற கதிரேசுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், சிவபாக்கியம், குலவீரசிங்கம் மற்றும் செல்வநாயகம், சரோஜாதேவி, செல்வரட்ணம் (ஆசிரியர், யா/புனித ஹென்றியரசர் கல்லூரி-இளவாலை) சிதம்பரநாதன் (சமூக சேவைகள் அலுவலர் பிரதேச செயலகம் - ஊர்காவற்றுறை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ஸ்ரீதரன், ஜெகதீஸ்வரன் (நூலகக் கவனிப்பாளர்-யாழ். பல்கலைக்கழகம்) சிவனேந்திரன் (சாலை பரிசோதகர் இ.போ.ச) சிவகவிதா ஆகியோரின் அன்புத் தாயும், ரதிகலா, சத்தியமாலினி (ஆசிரியர் யாழ்/இந்துக்கல்லூரி), ஆன்சன்றா (அபிவிருத்தி உத்தியோகத்தர் NAITA), சந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமியும், ஜான்சன், வேணுஜன், மேதிகா, ஆர்த்திகன், அஸ்வினி, கஸ்தூரி, ஆரங்கன், பிரவின், சாதனா, கம்சாயினி, டிவைனன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.10.2015) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் உரும்பிராய் இருளன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

கற்பகப் பிள்ளையார் வீதி,
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய். (65482) (10.17)

தகவல்:
குடும்பத்தினர்.

## அருள் ஒளி தர்சன மாலையும் நவராத்திரி விசேட பூஜையும்



இடம் : இளம் கலைஞர் மண்டபம்
சட்டநாதர் வீதி நல்லூர்.
காலம் : 18.10.2015.
ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00 மணி



ஏழைகளைக் காத்தருள மனோன்மணி அம்மானாக அவதாரமெடுத்து டென்மார்க் பிரண்டாபதியில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ அபிராமி அன்னையின் அருள் ஒளி தர்சன மாலையும் நவராத்திரி சிறப்புப் பூஜையும் இடம்பெற ஸ்ரீ அபிராமி அம்பாளின் திருவருளும் ஸ்ரீ அபிராமி உபாசகியின் ஆசிகளும் கைகூடியுள்ளன.

ஏற்கனவே டென்மார்க்கிலிருந்து எடுத்துவரப்பட்ட அம்பாளின் திருவடிக்குப் பால் அபிசேக பூஜை சிறப்பாக இடம்பெறும். பால் அபிசேகம் செய்து தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றிக்கொள்ள விரும்புபவர்கள் மண்டபத்திலே பாலினைப்பெற்று வழங்கி அம்பாளின் திருவருளை பெற்றுய்யவண்ணம் வேண்டுகின்றோம்.

அபிராமி அம்பாள் தொடர்பிலான சிறப்பு நிகழ்ச்சி ஞாயிற்றுக்கிழமைகளில் இரவு 7.15 தொடக்கம் 7.45 வரை யாழ் சேவையில்(90.1 FM) இடம்பெறும்.

யாழ் தொடர்புகளுக்கு 077 9825004
ஆலய தொடர்புகளுக்கு 0045 97180192

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2015ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ்/கண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி

செல்வி

**அட்சயா மதிமோகன்**

180 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

இவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவரை ஊக்குவித்த பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும் தனிப்பட்ட முறையில் அவருக்குக் கற்பித்த சயன்ஸ் அக்கடமி ஆசிரியர் ச. வினோத்குமார் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

Best Wishes

வாழ்த்துவோர்:
**இசைப்பூங்கா கலர் லாப் நிறுவனத்தினர்.**

**வாடகை அடிப்படையில் வான் பெறுவதற்கான கேள்வி விலை கோருதல்**
**மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம் யாழ்ப்பாணம்.**

கட்டடங்கள் திணைக்கள பிராந்திய அலுவலகமான கிளிநொச்சி பிரதம எந்திரி அலுவலக பாவனைக்கு உற்பத்தி ஆண்டு 1998 அல்லது அதற்கு பிற்பட்ட வான் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

இவ்விடயம் தொடர்பில் மேலதிக விவரங்களினை கடற்கரை வீதி,குருநகர் யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள எமது அலுவலக விளம்பரப் பலகையில் பார்வையிட்டு கேள்விப் பத்திரத்தினைப் பெற்று 2015.10. 23 ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு முன்னராக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**எந்திரி செ.மோகனதேவன்**
**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**கட்டடங்கள் திணைக்களம்,வடக்கு மாகாணம்,**
**கடற்கரை வீதி,குருநகர்**
**யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி இலக்கம்: 021 222 8091** (E 18789)(12.15.17)

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை சிவநாதபிள்ளை



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், வேலணை மற்றும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சிவநாதபிள்ளை நேற்று (13.10. 2015) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-உமையாத்தை தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற கலையரசியின் அன்புக் கணவரும், கந்தசாமி காலஞ்சென்ற பாக்கியலட்சுமி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான கணேசபிள்ளை, பூமலர் மற்றும் கமலம்மா, திருஞானசம்பந்தபிள்ளை (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கபிலரூபன், சுபாங்கினி (பிரான்ஸ்), தயாளரூபன் ஜெயரூபன் (ஜெனா அரிசி மில்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுகிர்தன் (பிரான்ஸ்), கவிப்பிரியா ஆகியோரின் அன்பு மாமனும், கலைச்செல்வி, கலைமகள் (பிரான்ஸ்), காலஞ்சென்ற கலாராணி மற்றும் கலைமணி (ஜேர்மன்), கந்தவேள் (பிரான்ஸ்), இந்திராணி (பிரான்ஸ்), துரைசிங்கம், மணி, சர்வேந்திரன், மீனலோஜினி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், கனகரெத்தினம், காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, கணேசன் மற்றும் இந்திரா ஆகியோரின் சம்பந்தியும், யோகலிங்கம், கேதீஸ்வரன் (பிரான்ஸ்), கணநாதன் (ஜேர்மன்), மாசிலாவதனி (பிரான்ஸ்), பிருந்தாபன் (பிரான்ஸ்) ஆகியோரின் சகலனும், சுஜின், சுருதி, திலக், ஜனார்த் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.10.2015) புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு கிரியை ஆரம்பித்து பி.ப 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible]
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
T.P: 077 350 6231
077 350 6031

தகவல்:
**குடும்பத்தினர்.** (65481)(10.17)

## வீடு வாடகைக்கு

ஊரெழு பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக தம்பிதுரை கடைக்கு அருகில் வீடு வாடகைக்கு உண்டு. 8Rooms களுடன் கூடிய வீடு வாடகைக்கு விடப்படும். அரச உத்தியோகத்தர்களுக்கும், கிளினிக் சென்ரர்களுக்கும் உகந்தது. (65428)(14.16.17)

**தொடர்பு: 077 494 6346**

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் எமது Golden Group நிறுவனத்துக்கு சந்தைப்படுத்தல் துறையில் ஆர்வமுள்ள ஆண்/பெண் இருபாலாரும் நேரடியாக தொடர்புகொள்ளவும்.

நான்கு வகையான பதவிகள்
* விநியோகஸ்தர்
* மேற்பார்வையாளர்
* உதவி முகாமையாளர்
* அலுவலக பெண் உதவியாளர்

குறிப்பு: அடிப்படைச் சம்பளம் அத்துடன் (கொமிசன்)
* தங்குமிடம், உணவு, இலவசம்
* அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
* முகவரி: இல.08, 6ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (65217)(10.17)

**தொடர்புக்கு:**
**077 62 19 536, 077 900 9639, 077 909 1067**

## உத்தியோகத்தர்கள் தேவை

வவுனியாவில் உள்ள இலத்திரனியல் நிறுவனம் ஒன்றிற்கு கீழ் காணும் உத்தியோகத்தர்கள் தேவை.

01. முகாமைத்துவ உதவியாளர் (management Assistant)
* ஆங்கிலம் அல்லது சிங்களம் தெரிந்திருத்தல் வேண்டும்
02. தனிப்பட்ட உதவியாளர் (Personal Assistant)
* பெண்கள் மட்டும்

**தொடர்பு: N.N. Jackshan**
**E.mail: jfffsl@jfffsl.com**
**T.P:- 076 7676772, 071 7171810** (65257)(12.15.17)

**SAAMSON** Experts in English Training

## SPOKEN ENGLISH

நெல்லியடி & யாழ்நகர்

இம்முறை A/L எழுதியோர், இளைஞர், யுவதிகள்,பல்கலை புகுமுகமாணவர்கள் தொழில்புரிவோர், ஆசிரியர்கள் வெளிநாடுசெல்வோர் இணையமுடியும்.

பாடப்புத்தகங்கள், சான்றிதழ் மற்றும் VIDEO DVD என்பன முற்றிலும் இலவசம்.

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 17.10.2015 சனிக்கிழமை

| | | | |
|---|---|---|---|
| 1. காலை | 08.00-10.00 | 3. பி.ப | 01.00-03.00 |
| 2. காலை | 10.00-12.00 | 4. மாலை | 03.00-05.00 |

வார நாள் (திங்கள்,புதன்) பிரிவுகள் ஆரம்பம் 19.10.2015
1. காலை 8.00–10.00 2. காலை 10.00–12.00

**SAAMSON** Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 621 4567

## புதிய ஆயரை வாழ்த்துகிறோம்

யாழ். மறைமாவட்டத்தின் பதினொராவது ஆயராக 13 ஒக்ரோபர் 2015 இல் திருத்தந்தையால் நியமனம் பெற்ற யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவரும், முன்னாள் அதிபருமான

**பேரருட்திரு ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை**



கல்லூரி உருவாக்கிய பதினொராவது ஆயராய் திகழ்வதில் கல்லூரி பெருமிதம் கொள்கிறது. புதிய ஆயரின் பணி சிறக்கவும் மறைமாவட்டம் மென்மேலும் வளரவும் இறையாசீர் வேண்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes

**அதிபர், ஆசிரியர்கள்,**
**மாணவர்கள்,**
**பழைய மாணவர்கள்,**
**புனித பத்திரிசியார் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்

### திருமதி மேரிதிரேசா சந்தியாப்பிள்ளை



அன்னைமடியில்: 20.02.1951
ஆண்டவன் அடியில்: 12.10.2015

யாழ் ஏழாலை மத்தியைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது வவுனியா இறம்பைக்குளத்தில் வசித்தவருமான திருமதி மேரிதிரேசா (நாகம்மா) சந்தியாப்பிள்ளை 12.10.2015 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை சந்தியாப் பிள்ளையின் (அதிபர்) அன்பு மனைவியும். கில்டா பத்மாவதி (பத்மா), தேவதாஸ் ரவீந்திரன் பிள்ளை (ரவி),றெஜினோல்ட கிருபை நாயகம்பிள்ளை, யசிந்தா(நயனி), மெற் நில்டா (றெஜி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் லயனல் மரியதாஸ், பரமேஸ்வரி (அம்பி), ஜெனோவா, குயின்ரஸ் தேவராஜா, பற்றிக் இம்மானுவேல் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற பாலசுந்தரம் மற்றும் திருநாவுக்கரசு காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் மனோகரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜஸ்மின், அஸ்வினி, டிவிசன், யூட்சன்,நிராஜ், நீராஜா,நிகிலா,வேர்ஜினியா,தனிஸ்ரஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் தேவி புனிதம்,கருணா காலஞ்சென்ற ஆனந்தராசா ஆகியோரின் மைத்துனியும் மனோ,பொபி,லொஜி,டின் ஆகியோரின் பெரியம்மாவும் கிறேஸ்,திரேஸ்,பெனற், வியூட்டி,எலோ, கின்சா லயனோ,பிரபா,பிரியா, தீபன்,வசி,மனோஜ்,கனோஜா ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (15.10.2015) வியாழக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு ஏழாலை புனித இசிதோர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி [illegible]ப்பட்டு ஏழாலை கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் [illegible] இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை மத்தி, ஏழாலை (65469)(12.15.17)

தகவல்
குடும்பத்தினர்


# மன்னார் கடலில் எண்ணெய் அகழ்வு முயற்சி பயனில்லை

**இந்திய நிறுவனம் பணியிலிருந்து வெளியேறுகிறது**

கொழும்பு, ஒக்.14

மன்னார் கடற்படுகையில், எண்ணெய் அகழ்வு முயற்சியில் எதிர்பார்த்த பயன் கிடைக்கவில்லை. இதனால் அந்தப் பணியில் ஈடுபட்டிருந்த கெய்ன் இந்தியா நிறுவனம், இலங்கையிலிருந்து வெளியேறவுள்ளது.

கெய்ன் இந்தியா நிறுவனம் மன்னார் கடற்படுகையில் நான்கு துளைகளை இட்டு, எண்ணெய் அகழ்வு மேற்கொள்வது குறித்த ஆய்வுகளை மேற்கொண்டு வந்தது. இந்த நான்கு துளைகளில், இரண்டில் மட்டும், எரிவாயு உற்பத்தி செய்வதற்கான சாத்தியங்கள் இருப்பதாககண்டறியப்பட்டது. எனினும், அந்தக் கிணறுகளில், இருந்து எரிவாயுவை உற்பத்தி செய்வது வணிக ரீதியில் இலாபகரமானதாக அமையாது என்று ஆய்வுகளில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து, மன்னார் கடற்படுகையில் தாம் மேற்கொண்டு வந்த எண்ணெய் எரிவாயு அகழ்வுப் பணிகளில் இருந்து விலகிக்கொள்ள கெய்ன் இந்தியா நிறுவனம் முடிவு செய்துள்ளது.

இந்த மாத இறுதியுடன் இலங்கையில் இருந்து இந்த நிறுவனம் வெளியேறவுள்ளதாக அறிவித்துள்ளது. (த–வ)

## அடுத்த தலைமுறையை வளர்ப்பது அதிபர், ஆசிரியர்களின் பொறுப்பு

*வலியுறுத்துகிறார் ஜனாதிபதி*

சிறந்த பண்பாடும் அறிவுமுள்ளதலைமுறையைக் கட்டியெழுப்புவதற்குஅர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியது அதிபர் உட்பட ஆசிரியர்களின் பொறுப்பு. அதிலிருந்து அவர்கள் எப்போதும் பின்வாங்கவோ அந்த விடயத்தில் கவனவீனமாக இருக்கவோ கூடாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தியகமவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்வித் துறையில் ஏற்படுத்தப்படவேண்டிய பல மாற்றங்கள் புதிய அரசினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்காக வரவு–செலவுத் திட்டத்திலும் அதிக நிதி ஒதுக்கப்படவுள்ளது. இந்நிலையில் நாட்டுக்குப் பயனுள்ள சிறந்த பண்பாடும் அறிவும் உள்ள தலைமுறையைக் கட்டியெழுப்புவதற்குஅர்ப்பணிப்புடன் செயற்படுவது அதிபர், ஆசிரியர்களின் பொறுப்பு.


இதுதவிர,தேசியமட்டத்தில் தொழிற்சங்கஆலோசனை சபையை அமைப்பதற்கு ஜனாதிபதி அனுமதியளித்துள்ளார். தொழிற்சங்கப் பிரதிநிதிகள் குழு ஒன்று நேற்றுமுன்தினம் ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளது. அதன் போதேஇந்தஅனுமதிவழங்கப்பட்டுள்ளது. (த–4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2015 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள்



Best Wishes

| | | | |
|---|---|---|---|
| ஜெ. கிஷா | - 173 | மோ. நிந்துஜன் | - 171 |
| யோ. நவஜீவன் | - 170 | பே. தீபிகா | - 167 |
| ஸ்ரீ. அஞ்சனன் | - 167 | வி. மித்ரகாந் | - 166 |
| அ. கவிசன் | - 158 | | |

இப்பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்:

| | | | |
|---|---|---|---|
| சா. கிரிதரன் | வ. சிவகுமரன் | உ. சாருஜன் | வி. விருஜன் |
| ரா. யதுஷாந் | சி. கோபிகா | க. விதுஷா | ச. உஷாந்திகா |
| ப. டோஜினி | ச. பவித்திரா | ச. லாவன்ஜா | சி. கஜானி |
| யோ. தயானி | ஆ. மிதுஷா | அ. சரணிகா | ர. லக்ஷிகா |
| ச. அனுஸ்ரேலா | | | |

Best Wishes

மேற்படி மாணவர்களையும், இம் மாணவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களான திருமதி ம.யோகராசா, திருமதி கோ. செல்வலிங்கம், இ.சசிதரன் ஆகியோரையும், இவர்களுக்கு வழிகாட்டிய பாடசாலை அதிபரையும், பெற்றோரையும் மனதார வாழ்த்துகின்றோம்.

(62165)(10.15.17)

**பாடசாலைச் சமூகம்**
**யா/தொண்டைமானாறு வீ.ம.வி**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



Best Wishes

யா/ புனித பொஸ்கோ வித்தியாலய
மாணவனும் சாவகச்சேரியைச் சேர்ந்த
டாக்டர் திரு. திருமதி
**விஜயகுமார் - ஆனந்தஜோதி**
தம்பதியரின் செல்வப் புதல்வனுமாகிய
செல்வன் **விஜயகுமார் ஆகாஷ்**
2015 இல் நடைபெற்ற தரம் 5
புலமைப்பரிசில் பரீட்சையில் **177 புள்ளிகளைப்**
பெற்று சித்தியடைந்தமையைப் பாராட்டுவதுடன்
மேலும் மேலும் சகல சௌபாக்கியங்களையும்
பெற இறைவனை வேண்டி வாழ்த்துவோர்:

இல.07. ஹென்ஸ்மன் வீதி
சாவகச்சேரி
(C18781)(10.15.17)

திரு. திருமதி சுந்தரலிங்கம் சாரதபவானி
சுமன் அண்ணா தேவிகா அன்ரா,
சுஜீ அக்கா, சுமந்தா அக்கா.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




Congratulations

யா/எழாலை சைவசன்மார்க்க
வித்தியாசாலை - மாணவி
**செல்வி கனேந்திரன் திரன்மிகா**
2015 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5
புலமைப்பரிசில் பரீட்சையில் 162 புள்ளிகளைப்
பெற்று சித்தியடைந்தமைக்காக இவரை
வழிப்படுத்திய பாடசாலை அதிபர் மற்றும்
கற்பித்த ஆசிரியர்களைப் பாராட்டுவதோடு
இவர் மேலும் பல பெருமைகளைத் தேடி
சாதனை படைக்க அளவெட்டி கும்பளாவளைப்
பிள்ளையார் ஆசி வேண்டி
வாழ்த்துகின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்:
பெரியப்பா- ஓய்வுபெற்ற வங்கி
முகாமையாளர் கந்தசாமி, பெரியம்மா,
அப்பம்மா.
சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.

(65377)(14.15.17)



யாழ் கத்தோலிக்க மறைமாவட்டத்தின்
புதிய ஆயராக நியமனம் பெற்றுள்ள

# மேதகு அருட்கலாநிதி
# ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை

அவர்களுக்கு, மனம் நிறைந்த நல் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன், அவரது எதிர்கால ஆயர் பணி சிறக்க இறை அருள் வேண்டி நிற்கிறோம்.



**கனடா திருமறைக் கலாமன்றக் குடும்பம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நா.

லாளர் சந்திப்பில், ஜெனிவா தீர்மானம் தொடர்பில் கருத்துத் தெரிவிக் கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

**பலவீனமும் - பலமும்**

கலப்பு நீதிமன்றம், இராணுவ மயமாக்கல் நீக்கம் என்ற இரண்டு வார்த்தைப் பிரயோகங்களும் ஆரம்பத்தில் ஐ.நா. பிரேரணையில் குறிப்பிடப்பட்டிருந்தாலும் இறுதி வடிவத்தில் அவை நீக்கப்பட்டுள்ளன. ஐ.நா. தீர்மானத்தில் சில விடயங்கள் பலவீனமடைந்துள்ளன. வேறு சில விடயங்கள் பலமாக்கப்பட்டுள்ளன.

பலவீனமாக்கப்பட்டது என்று சொன்னால் இந்த இராணுவ மயமாக்கல் விடயம்தான். ஆனால் அதற்குப் பதிலாகத் தனியார் காணிகள் அத்தனையும் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும் என்றும் மக்களுடைய இயல்பு வாழ்க்கையிலே இராணுவம் தலையிடக் கூடாது என்றும், போர்க் குற்றச் சம்பவங்களிலே தொடர்புடைய இராணுவச் சிப்பாய்களாக இனங் காணப்படுகின்ற இராணுவ அதிகாரிகள் பதவி நீக்கம் செய்யப்படவேண்டும் என்றும் சில சிபார்சுகள் இருக்கின்றன. ஆனால் ஒட்டுமொத்தமாக பார்க்கின்றபோது இராணுவ மயமாக்கல் நீக்கல் என்ற வார்த்தைப் பிரயோகம் பிரேரணையிலிருந்து அகற்றப்பட்டது பிரேரணையை ஒரு படி கீழிறக்கியதாகத் தான் நாங்கள் பார்க்கின்றோம்.

**இறுதி வரைவு மேலானது**

கலப்பு நீதிமன்றத்தைப் பொறுத்த வரையில், முதலாவது செயற்படு பந்தியில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் சிபார்சு நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சொல்லப்படுகின்றது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் சிபார்சு கலப்பு நீதிமன்றத்தைப் பரிந்துரைந்துள்ளது.

நீதிமன்றப் பொறிமுறை எப்படி இருக்க வேண்டும் என்று ஆறாவது பந்தியில் சொல்லப்பட்டிருக்கின்றது. அதிலே தான் ஆரம்பத்தில் சர்வதேச நீதிபதிகள் என்று குறிப்பிட்டிருந்தார்கள். பின்னர் அதனைப் பொதுநலவாய மற்றும் வெளிநாட்டு நீதிபதிகள் என்று மாற்றினார்கள். ஏனெனில் சர்வதேச நீதிபதிகள் என்று சொல்லும்போது இலங்கை நீதிபதிகளும் பங்குபற்றும் வாய்ப்பு ஏற்படும். அதனால்தான் வெளிநாட்டு நீதிபதிகள் என்ற வாசகத்தை உள்ளடக்கினார்கள். அது அழுத்தம் திருத்தமாக இலங்கையர்கள் அல்லாதவர்கள் என்பதைக் குறிப்பிடுகின்றது. இறுதி வரைவு முதல் வரைவை விட மேலானது என்று கருத முடியும்.

**இனப் பிரச்சினை தீர்வு இறுதி வரைவிலேயே வந்தது**

இறுதி வரைவில் பலமாக்கப்பட்ட வேறு விடயங்களும் உண்டு. இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பில், புதிய அரசமைப்பின் மூலமாக ஒரு தீர்வு ஏற்படுத்தப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர வழங்கிய உறுதிமொழி முதலாம் வரைவில் இல்லாமல் இருந்தது, இறுதி வரைவில் காணப்படுகின்றது. சர்வதேச விசாரணை அறிக்கையின் சிபார்சுகளை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சொல்வதும், அதனை இலங்கை அரசே வழிமொழிந்தது என்ற இந்த இரண்டு விடயங்களுக்காகவுமே, நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வெற்றி என்று நாம் கருதுகின்றோம்.

மனித உரிமைகள் சபை நிறைவேற்றும் தீர்மானம் எந்தவொரு நாட்டையும் கட்டுப்படுத்தாது. அந்த நாடு குறித்த தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளாமல் விட்டால், அது நடைமுறைக்கு வராது. ஆனால் இப்பொழுது, நாடு தானாகவே வழிமொழிந்திருக்கின்றது. இப்பொழுது நாடு நடைமுறைப்படுத்தாமல் விடலாம். ஆனால் அது மிகப் பெரிய பின் விளைவுகளை ஏற்படுத்தும்.

**கண்காணிப்போம்**

இலங்கை அரசு தீர்மானத்தை நடைமுறைப்படுத்துகின்றதா என்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவதானித்துக் கொண்டிருக்கும். இலங்கை அரசு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றத்தவறுகின்ற சந்தர்ப்பங்களில் அதனை சர்வதேச சமூகத்திற்கு தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளிப்படுத்தும்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதாக ஐ.நாவுக்கு இலங்கை அரசு வாக்குறுதி கொடுத்திருந்தது. ஆனால், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்தவர்களை இன்னமும் விடுவிக்காமல் வைத்துக் கொண்டு இருக்கின்றது. இதனால் அவர்கள் தற்போது போராட்டம் நடத்துகின்றனர். இதனை நாம் சர்வதேச சமூகத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளோம். எவ்வாறு வாக்குறுதிகளைக் கொடுத்து ஏமாற்றுகின்றார்கள் என்பதை இதனூடாக வெளிப்படுத்துவோம்.

மேலும், ஆட்சிமாற்றம் ஏற்பட்ட பின்னர் ஜனாதிபதியை முதன் முதலாகச் சந்தித்தபோதே, தமிழ் அரசியல் கைதிகளின் விடயங்களை நாம் பேசியிருந்தோம். பொதுமன்னிப்பில் அவர்களை விடுவிக்கவேண்டும் என்று நாம் விடுத்த வேண்டுகோளை இந்த அரசு நிராகரிக்கவில்லை. ஆனால் இன்னமும் செயற்படுத்தவில்லை.

**அரசியல் விருப்பு இருக்கிறது**

இதேவேளை, நியூயோர்க்கில் இருந்து திரும்பிய ஜனாதிபதி மைத்திரிபால, உள்ளக விசாரணை நடைபெறும் என்றும், இலங்கை நீதித்துறையின் ஏற்பாடுகளில் சர்வதேசசட்டவாளர்கள் பங்கெடுக்கும் ஏற்பாடுகள் இல்லை என்றும் தெரிவித்துள்ளாரே என்று எழுப்பிய கேள்விக்கு, ஐ.நா. தீர்மானத்தில் என்ன சொல்லியிருக்கின்றது. அதை மறுத்துச் சொல்லுவது ஜனாதிபதி. இந்த விடயத்தை நீங்கள் அவரிடம் கேளுங்கள்-என்றார்.

அப்படியானால், ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் அரசியல் விருப்பு அவர்களிடம் இல்லை என்பது தானே பொருள் என்று எழுப்பிய கேள்விக்கு, அரசியல் விருப்பு இல்லை என்று சொல்ல முடியாது. ஐ.நா. தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதற்கான சர்வதேச அழுத்தம் இருந்தது. ஆனால் அதனைவழிமொழியவேண்டியதேவை இலங்கை அரசுக்கு இருக்கவில்லை. இலங்கை அரசு வழிமொழிந்ததன் ஊடாக அவர்களுக்கு அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றும் அரசியல் விருப்பு இருக்கின்றது என்பது தென்படுகின்றது என்று குறிப்பிட்டார். (த-5)

## விசாரணைப்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்.நகரில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகத்தினால் அண்மையில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில், ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தினால் வடக்கு மாகாண சபைக்கு நிதி வழங்குவது தொடர்பில் கடந்த ஏப்ரல் மாதம் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. இந்த நிதியைப் பெற்றுக்கொள்வதற்காக ஒரு குறிப்பில் கையெழுத்திடுமாறு தன்னைப் பலவந்தப்படுத்தியதாகவும், அதற்கு தான் இணங்க மறுத்துவிட்டதாகவும் குறிப்பிட்ட முதலமைச்சர், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் விசாரணை அறிக்கை வெளிவர முன்னரே உள்ளகப் பொறிமுறைக்கு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டு அதற்கு வடக்கு மாகாண சபையின் ஒப்புதலைப் பெற்றுக்கொள்வதற்கே குறித்த நிதி வழங்க முற்பட்டிருந்ததாகக் குற்றம் சுமத்தியிருந்தார்.

முதலமைச்சரின் குற்றச்சாட்டு உண்மையானதா என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தினால் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தின் கீழ் வடக்கு மாகாண சபைக்கு நிதி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதில் உள்ளகப் பொறிமுறை என்று எதுவுமே இல்லை. நாட்டில் சமாதானத்தைக் கட்டியெழுப்புவது தொடர்பில் மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்தது. முதலமைச்சர் குறிப்பிட்ட ஆவணத்தில் விசாரணை தொடர்பில் எந்தவொரு விடயமும் இல்லை.

முதலமைச்சர் நியூயோர்க்சென்றிருந்த சமயம் அந்த ஆவணத்தைக் கொடுத்துள்ளனர். அதற்கு முதலில் முதலமைச்சர் சம்மதித்துக் கடிதத்தைக் கொடுத்து விட்டு, அதற்கு இணங்கவில்லை என்று தெரிவித்து நான்கு நாள்களின் பின்னர் கடிதம் அனுப்பியுள்ளார்.

'முதலமைச்சர் அதற்கு இணங்கவேயில்லை என்றுதானே, அவரது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளாரே' என்று ஊடகவியலாளரினால் நாடாளுமன்ற உறுப்பினரிடம் கேட்டதற்கு, இல்லை அவர் முதலில் இணங்கியிருந்தார். நான்கு நாள்களின் பின்னர் மறுத்துக் கடிதம் அனுப்பியிருந்தார். அந்தக் கடிதத்தில், தன்னைத் தனித்து வற்புறுத்திச் சம்மதம் கேட்டதாகவும், தனது அமைச்சரவையுடன் கூடக் கலந்தாலோசிக்க அனுமதிக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த விடயம் தொடர்பில் தமிழரசுக் கட்சியின் மத்தியக் குழுக் கூட்டத்தில் நான் கேள்வி எழுப்பியிருந்தேன். அதில் கலந்து கொண்டிருந்த வடக்கு மாகாண சபையின் இரண்டு அமைச்சர்களிடத்திலும் கேட்டிருந்தேன். அவர்கள் இந்த விடயங்கள் எதுவும் தமக்குத் தெரியாது என்பதை வெளிப்படுத்தினார்கள்.

எனவே முதலமைச்சர் குறிப்பிட்டமை போன்று, ஐ.நா. அபிவிருத்தித் திட்டம் வழங்க முன்வந்த நிதிக்கும், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் விசாரணை அறிக்கைக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்று அறுதியாகத் தெரிவித்தார் சுமந்திரன். (த-5)

## 24 இந்திய

மீனவர்களையும் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 24 மீனவர்கள் 4 இழுவைப்படகுகளில் இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டதாகக் கூறி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட கடற்படையினர் குறித்த மீனவர்களை நேற்றுச் செவ்வாய்க்கிழமை கைது செய்தனர். 4 இழுவைப் படகுகளும் தலைமன்னார் கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

குறித்த இந்திய மீனவர்கள் 24 பேரும் தலைமன்னார் கடற்படையினரினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் நேற்று முற்பகல் 11 மணியளவில் மன்னார் மாவட்டக் கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளின் பின்னர் குறித்த 24 இந்திய மீனவர்களையும் மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர்.

இதன்போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதிவான் 21 மீனவர்களை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும், வயது குறைந்த ஏனைய மூவரையும் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை சிறுவர் இல்லத்தில் அனுமதிக்குமாறும் உத்தரவிட்டார். (த-56)

## வித்தியா

பரிசோதனை அறிக்கையை விரைவில் சமர்ப்பிக்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்று நேற்றும் அறிவுறுத்தியுள்ளது.

குறித்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் செ.லெனின் குமார் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து அரச சட்டவாதி குமார் ரட்ணம் நேற்று முன்னிலையாகியிருந்தார்.

சந்தேக நபர்களில் ஒருவர் தான் குற்றம் புரியவில்லை என்றும் தன்னைப் பிணையில் விடுவிக்க வேண்டும் என்றும் நீதிமன்றிடம் கோரினார். எனினும் வழக்கு விசாரணையில் உள்ளது. பிணை விடுவது மேல்நீதிமன்று. அங்கு பிணை விண்ணப்பங்களைத் தாக்கல் செய்யலாம் என்று மன்று அறிவுறுத்தியது.

தென்பகுதியில் அண்மையில் இடம்பெற்ற சேயா வன்புணர்வுக் கொலை வழக்கில் மரபணுப் பரிசோதனை அறிக்கையை உடனடியாகப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அப்படியிருக்க எமது மரபணுப் பரிசோதனை அறிக்கை மாத்திரம் ஏன் தாமதப்படுத்தப்படுகின்றது? எம்மை விரைவில் விடுவிக்கவேண்டும் என்று மற்றொரு சந்தேக நபர் கூறினார். எனினும், குறித்த வழக்கில் 9 பேர் தொடர்புபட்டுள்ள விடயமாதலால் உடனடியாக அறிக்கையைப் பெறுவதில் தாமதம் நிலவுகின்றது என்று தெரிவித்த நீதிமன்று, அந்த அறிக்கையை விரைவில் மன்றில் சமர்ப்பிக்குமாறும் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டது.

வழக்கில் சந்தேக நபர்களாகக் குறிப்பிடப்படும் 9 பேரில் 4 ஆம், 7 ஆம், 9 ஆம் சந்தேக நபர்கள் சார்பாகச் சட்டத்தரணி சரத் வல்கமவும், கொல்லப்பட்ட மாணவியின் பெற்றோர் சார்பில் சட்டத்தரணிகளான வி.மணிவண்ணன், சிந்தக்க அமரசிங்க ஆகியோரும் முன்னிலையாகியிருந்தனர். சந்தேக நபர்களை எதிர்வரும் 26ஆம்திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

கடந்த மே மாதம் 13 ஆம் திகதி காலை குறித்த மாணவி பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்தபோது காணாமல் போயிருந்தார். காணாமல் போயிருந்த மறுநாள் காலை குறித்த மாணவி வழமையாகச் சென்றுவரும் பாதையின் ஓரமாக இருந்த பாழடைந்த வீட்டின் பற்றைப் பகுதியிலிருந்து ஆடைகளின்றி கோரமான முறையில் சடலமாகக் கிடக்கக் காணப்பட்டு மீட்கப்பட்டார். உடற்கூற்றுப் பரிசோதனையின்போது அவர் கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுக் கொல்லப்பட்டமை தெரியவந்திருந்தது. அதனைத் தொடர்ந்து குறித்த 9 சந்தேக நபர்களும் வெவ்வேறு நாள்களில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-4)

## 14 ஆண்டுகளின்

அவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

வடக்கு - கிழக்கில் போர்க் காலத்தில் இராணுவத்தினருடன் சேர்ந்தியங்கிய முன்னாள் தமிழ் ஆயுதக் குழுக்கள் - துணை இராணுவக் குழுக்கள் - ஒட்டுக் குழுக்கள் - மீதான பிடி இறுகி வரும் நிலையில் மற்றொரு சம்பவமாக இந்த வழக்கிலும் மீண்டும் முழு வீச்சில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**பின்னணி**

2011 நவம்பர் 28ஆம் திகதி - மாவீரர் நாளுக்கு அடுத்த நாள் - தேர்தல் பரப்புரைக்காக கூட்டமைப்பு வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் தீவகத்திற்குச் சென்றனர். யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறைச் சந்தியில் நாரந்தனை வடக்கு தம்பாட்டிச் சந்திக்கு அருகில், குடியிருப்புகள் ஏதுமற்ற பகுதியில் கும்பல் ஒன்றால் அவர்கள் வழிமறிக்கப்பட்டு மிலேச்சத்தனமாகத் தாக்கப்பட்டனர்.

துப்பாக்கியால் சுட்டும், வாள்களால் வெட்டியும், கொட்டன் பொல்லுகள் மற்றும் அலவாங்குகளால் தாக்கியும் காடையர் குழு வெறியாட்டம் போட்டது. கூட்டமைப்பின் வேட்பாளர்களான மாவை சேனாதிராசா, எம்.கே.சிவாஜிலிங்கம், அப்போதைய யாழ். முதல்வர் ரவிராஜ், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் உள்ளடங்கிய கூட்டமைப்புக் குழுவே கடும் தாக்குதலை எதிர்கொண்டது.

கடுமையான தாக்குதலால் கூட்டமைப்பு ஆதரவாளர் ஏரம்பு பேரம்பலம் அங்கேயே உயிரிழந்தார். படுகாயமடைந்த யோகசிங்கம் கமல்ஸ்ரன் பின்னர் வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

மாவை. சேனாதிராசா, எம்.கே.சிவாஜிலிங்கம் உட்பட 18 பேர் மோசமான காயங்களுக்கு உள்ளாகினர். மேலும் பலருக்கும் காயங்கள் ஏற்பட்டன.

**விசாரணை**

அப்போது அரச படைகளோடு சேர்ந்தியங்கிய ஈ.பி.டி.பி.யினரே இந்தத் தாக்குதலை நடத்தியவர்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. சந்தேகத்தின் பேரில் ஈ.பி.டி.பி.யைச் சேர்ந்த, அப்போதைய ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவரும் நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளருமான என்.மதனராஜா, ஈ.பி.டி.பியின் ஊர்காவற்றுறைப் பொறுப்பாளர் நெப்போலியன், மற்றொரு ஈ.பி.டி.பி. உறுப்பினரான ஜீவன் என்பவர் உட்பட நால்வரைப் பொலி ஸார் தேடினர்.

டிசெம்பர் 30ஆம் திகதி ஊர்காவற்றுறைப் பொலிஸார் மூலமாக நீதிமன்றில் சரணடைந்த நெப்போலியன் மற்றும் மதனராஜா ஆகியோருக்கு அப்போது நீதிவானாக இருந்த இ.த. விக்னராஜா சரீரப் பிணை வழங்கியிருந்தார்.

அதன் பின்னர் இருவரும் தலைமறைவாகினர். விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஜீவனும் மற்றைய நபரும் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

**திருமலையில் வழக்கு**

சட்டமா அதிபரின் பரிந்துரைக்கு அமைய இந்த வழக்கு திருகோணமலை மேல் நீதிமன்றத்திடம் விசாரணைக்காகப் பாரப்படுத்தப்பட்டது. யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கொலைகள் என்றபோதும் காரணங்கள் எதுவும் குறிப்பிடப்படாமலேயே வழக்கு திருகோணமலைக்கு மாற்றப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்று இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக முற்படுமாறு வழக்காளிகள் மற்றும் எதிராளிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா உட்படச் சிலர் நீதிமன்றில் முற்பட்டிருந்தனர். பிணையில் விடப்பட்டிருந்த சந்தேகநபர்கள் இருவரும் நீதிமன்றில் முற்பட்டிருந்தனர்.

எனினும், முன்னறிவித்தல் கொடுத்தும் வழக்கு விசாரணையை எதிர்கொள்வதற்கான சட்ட ஏற்பாடுகளுடன் அவர்கள் வருகை தந்திருக்கவில்லை என்பதால் அவர்களின் பிணையை நீக்கி இருவரையும் விளக்கமறியலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

மற்றைய இரு சந்தேகநபர்களான மதனராஜா மற்றும் நெப்போலியன் ஆகியோர் தொடர்ந்தும் தலைமறைவாகவே இருக்கிறார்கள்.

வழக்கில் 41 சாட்சிகள் விசாரிக்கப்பட உள்ளனர். நவம்பர் மாதம் 17, 18ஆம் திகதிகளுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (உ)

## தமிழ்

களை விடுதலை செய்யுமாறு கோரி, தமிழ் அரசியல் கைதிகள் சாகும் வரையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நேற்று முன்தினம் திங்கள் கிழமை ஆரம்பித்திருந்தனர். நாடு முழுவதிலும் உள்ள 14 சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 217 தமிழ் அரசியல் கைதிகள் இந்த உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் பங்கெடுத்திருந்தனர்.

இந்த நிலையில் நேற்றைய தினம் மகசின் சிறைச்சாலைக்குச் சென்ற, சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனிடம் சிறைக் கைதிகள் மனு ஒன்றையும் கையளித்துள்ளனர். அந்த மனுவில், தமது விடுதலையைத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளனர். ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு அந்த மனுவைக் கையளிக்குமாறும் சிறைக் கைதிகள் இராஜாங்க அமைச்சரிடம் தெரிவித்துள்ளனர்.

மேலும், சிறைச்சாலை வைத்தியர்கள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சிறைக் கைதிகளைப் பார்வையிட்டுள்ளனர். அதில் 4 கைதிகளின் உடல் நிலை மோசமாக இருப்பதாகத் தெரிவித்து அவர்களை வெலிக்கடைச் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்குமாறு தெரிவித்துள்ளனர். அதற்கு சிறைக் கைதிகள் மறுப்பு தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றையதினமும் சிறைச்சாலைகள் ஆணையாளர் புஸ்பகுமார சிறைக் கைதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். அவர்களது கோரிக்கைகளை நிச்சயம் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு செல்வதாகவும் அவர் இதன்போது உறுதியளித்துள்ளார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். ஆயராக

ஆண்டு முதல் 2015 வரை 23 ஆண்டுகள் பணியாற்றிய மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை திருச்சபைச் சட்டப்படி தனது 75ஆவது வயதில் 2013ஆம் ஆண்டு தன் பணிஓய்வு விண்ணப்பத்தை உரோமாபுரிக்கு அனுப்பிவைத்தார். மேற்படி விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட பிரான்சிஸ் பாப்பரசர் யாழ்.மறைமாவட்டத்தின் புதிய ஆயராக அருட்கலாநிதி மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் அடிகளாரை நியமித்துள்ளார்.

அருள் கலாநிதி மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் அடிகளார் 2007ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டுயாழ். ஆயர் நியமனத்தைப் பெறும்வரை 8 ஆண்டுகள் யாழ்.மறைமாவட்டத்தின் குரு முதல்வராகப் பணியாற்றியவர். 2008 - 2015 காலப் பகுதியில் குருமுதல்வர் பணியோடு கத்தோலிக்க அச்சக அதிபராகவும் பணியாற்றியுள்ளார்.

குருத்துவப் பணியில் 40 ஆண்டுகளை 2014ஆம் ஆண்டு நிறைவு செய்துள்ள அருட்கலாநிதி மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் அடிகளார் தனது பணிக்காலத்தின் 31ஆண்டுகளை கல்விப்பணியிலே -குறிப்பாக இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியிலும் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் - ஆற்றி 2001ஆம் ஆண்டு கல்விப்பணியில் 25 ஆண்டுகளை நிறைவு செய்தவர்.

1976ஆம் ஆண்டுமுதல் 1989ஆம் ஆண்டுவரை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் உப அதிபராகவும் 1989 முதல் 2002 வரை அதன் அதிபராகவும் பணியாற்றிய இவர் அரச பாடசாலையில் இருந்து தனியார் பாடசாலைக்குப் பணிமாற்றம் பெற்று 2002 முதல் 2007வரை புனித பத்திரிசியார் கல்லூரியில் அதிபராகப் பணியாற்றியவர்.

இங்கிலாந்தில் 1986 ஆண்டுமுதல் 1988 வரை கலாநிதிப் பட்டத்தையும் 1979 ஆண்டு முதல் 1980வரை முதுகலைமாணிப் பட்டத்தையும் இங்கிலாந்திலேயே பெற்ற இவர் 1991ஆம் ஆண்டு இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு I தரத்தைப் பெற்று 1990 - 1994 ஆண்டுகாலப்பகுதியில் இளவாலையில் 12 அரச பாடசாலைகளின் கொத்தணி அதிபராகப் பணியாற்றியவர்.

யாழ். பல்கலைக்கழகத்தின் பேரவை உறுப்பினராக 1998 ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டுவரை பணியாற்றிய இவர், 1982 முதல் 1984 வரை யாழ்.பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத் துறையில் விரிவுரையாளராகவும் பணியாற்றியவர். 2003ஆம் ஆண்டுமுதல் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒழுங் காற்றுச் சபைத் தலைவராகவும் - 2002 ஆம் ஆண்டுமுதல் யாழ். பல்கலைக்கழக கலாநிதி மற்றும் முதுகலைமாணிப் பட்ட மதிப்பீட்டாளராகவும் பரீட்சையாளராகவும் இன்றுவரை பணியாற்றி வருகிறார். கோப்பாய் கல்வியியல் கல்லூரியின் ஆலோசனை சபை உறுப்பினராக 2003ஆம் ஆண்டு முதல் இன்றுவரை பணியாற்றி வருகிறார்.

1994ஆம் ஆண்டுமுதல் 2002ஆம் ஆண்டுவரை இளவாலை மறைக்கோட்டத்தின் 12 பங்குகளின் முதல்வராகப் பணியாற்றிய இவர் அதே காலப் பகுதியில் யாழ். மறைமாவட்ட ஆயரின் பேரவை அங்கத்தவராகப் பணியாற்றிப் பின்னர் அதேபணியை 2007ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டுவரை ஆற்றியவர்.

யாழ். மறைமாவட்ட கல்வி ஆணைக்குழுவின் தலைவராக 1992 - 2002 ஆண்டு காலப்பகுதியில் பணியாற்றிய இவர் 1992 முதல் 2006 வரை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி மெய்யியற்றுறையில் கல்வியியல் விரிவுரையாளராகப் பணியாற்றியவர். யாழ். மறைமாவட்ட கிறிஸ்தவ சமயங்களுக்கிடையிலான ஒன்றிப்பு ஆணைக்குழுவின் தலைவராக 1981 - 1986 ஆண்டு காலப்பகுதியில் பணியாற்றிய இவர் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி இறையியற்றுறையில் 1984 - 1986 ஆண்டு காலப் பகுதியில் கிறிஸ்தவ சமயங்களுக்கிடையிலான ஒன்றிப்பு விரிவுரையாளராகப் பணியாற்றியவர். 1999 ஆம் ஆண்டு குருத்துவ வெள்ளி விழாவைக் கொண்டாடியவர்.

1974ஆம் ஆண்டு யாழ். புனித அடைக்கலஅன்னை (ஓ.எல்.ஆர்) ஆலயத்தில் மறைந்த யாழ். ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகையால் குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்ட இவர் 1980 - 1985 ஆண்டு காலப் பகுதியில் மாரீசன் கூடல் பங்குத் தந்தையாகவும் 1976 - 1979 ஆண்டு காலப் பகுதியில் இளவாலை புனித அன்னாள் ஆலய உதவிப் பங்குத் தந்தையாகவும் பணியாற்றியவர். 1975 - 1976 ஆண்டு காலப் பகுதியில் உருத்திர புரம் பணித்தளத்தில் பணியாற்றிய இவர் அன்று லோங் தொழில்நுட்ப நிறுவனம் என அழைக்கப்பட்ட மாணவர் இல்லத்தில் உதவி இயக்குநராகவும் பணியாற்றியவர். இவரின் முதல் குருத்துவப் பணிநியமனம் 1974 - 1974 ஆண்டு காலப்பகுதியில் கிளிநொச்சி- வலைப்பாடு ஆகியபங்குகளில் அமைந்திருந்தது.

இவர் தனது இறையியல் கல்வியை 1972 - 1974 ஆண்டு காலப்பகுதியில் இந்தியா புனே பாப்பிறை குருத்துவக் கல்லூரியில் கற்று இறையியல் இளம் கலைமாணிப் பட்டத்தைப் பெற்றவர். இவர் தனது மெய்யியல் கல்வியை 1966 1969 ஆண்டு காலப்பகுதியில் கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியிலும் ஆரம்பக் கல்வியை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் மற்றும் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியிலும் பெற்றவர்.

1948ஆம் ஆண்டு ஊர்காவற்றுறை புனித மரியன்னை ஆலயப் பங்கில் பிறந்த அருட்கலாநிதி மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் அடிகளார் 2015ஆம் ஆண்டு 8ஆவது ஆயராக பொறுப்பேற்கிறார்

மேதகுதோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை 1938 ஆம் ஆண்டு ஊர்காவற்றுறையில் பிறந்து 1963 ஆம் ஆண்டு 25 ஆவது வயதில் குருவாக திருநிலைப் படுத்தப்பட்டு - 1981 ஆம் ஆண்டு தமது 43 வயதில் ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டு - மன்னார் மறைமாவட்டத்தின் முதலாவது ஆயராக (1981 - 1992) 11 ஆண்டுகளும் - யாழ். மறைமாவட்டத்தின் 7ஆவது ஆயராக (1992 - 2015) 23 ஆண்டுகளுமாக மொத்தமாக 34 வருடங்கள் ஆயர் பணிபுரிந்து -2015 ஆம் ஆண்டு தமது 77ஆவது பணியில் இருந்து ஓய்வுபெறுகிறார். (த-101)

## நிலத்திலும்

கையர்கள் பாதுகாப்பாக வாழ்வதை உறுதிசெய்வதற்கு அமெரிக்கா உதவுவதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் கூறியுள்ளார்.

இலங்கையின் நீருக்குள்ளே கண்ணி வெடியகற்றும் நடவடிக்கைக்கு உபகரண வசதி மற்றும் ஆதரவு வழங்கும் இரண்டு வாரப் பயிற்சி அமர்வொன்றை அமெரிக்கக் கடற்படைக் குழுவொன்று திருகோணமலையில் நிறைவு செய்துள்ளது.

நீருக்குள் மூழ்கியப் பொருள்களை ஒலி அலைகளைக் கொண்டு கண்டறியும் கருவி மற்றும் ரோபோக்களும் இலங்கைக் கடற்படையினருக்கு இதன் போது நன்கொடையாக அமெரிக்காவால் வழங்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் நீருக்குள் காணப்படும் எந்தவொரு பொருள் தொடர்பிலும் ஆராய்வதற்கும் கண்டறிவதற்கும் ஏற்ற வகையில் இலங்கைக் கடற்படையினரின் ஆற்றல் விரிவாக்கப்பட்டுள்ளதாக அமெரிக்கத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலைக் கடற்பரப்பில் உள்ள கண்ணிவெடிகளை அகற்றுவதன் மூலம் திருகோணமலை துறைமுகத்தின் வர்த்தகச் செயற்பாடுகளையும் விஸ்தரிக்க முடியும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் சுட்டிக்காட்டி யுள்ளது. (த-வ)

## வடக்கில்

பான் அரசு வழங்கவுள்ளது.

இது குறித்த ஒப்பந்தம் நேற்றுக் கொழும்பு ஜப்பான் தூதரகத்தில் கைச்சாத்திடப்பட்டுள்ளது. ஜப்பான் தூதுவர் கெனிச்சி சுகானுமா, ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தின் முகாமையாளர் டேமியன் பிரான்ஸிஸ் ஓ பிரெய்ன் ஆகியோர் இதில் கைச்சாத்திட்டனர்.

இதன்போது கருத்து வெளியிட்ட ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தின் முகாமையாளர்,

வடக்கில் 78.4 சதுர கிலோ மீற்றர் பரப்பில் இன்னமும் நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்படவில்லை. இலங்கையில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவதற்காக ஜப்பான் 108 மில்லியன் ரூபாவை உதவியாக வழங்கியுள்ளது. இந்த உதவியைக் கொண்டு எமது நிறுவனம் வடக்கில் அடுத்த வருட ஆரம்பத்துக்குள் இரண்டு லட்சம் நிலக் கண்ணிவெடிகளை அகற்றும். 2020ஆம் ஆண்டளவில் நிலக் கண்ணிவெடிகள் அற்ற நாடாக இலங்கையை மாற்றுவதற்கு எடுக்கப்பட்டு வரும் முனைப்புக்கள் வெற்றியளிக்கும்-என்றார்.

இதேவேளை- ஜப்பான் அரசின் உதவியினால் 33 ஆயிரம் பேர் நன்மை அடைய உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்காக ஜப்பான் அரசால் 2003ஆம் ஆண்டு முதல் 27.7 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. (த-வ)

## காணிகள்

பகுதியில் உள்ள 16 ஏக்கர் காணிகள் நேற்று மாவட்டக் காணி சுவீகரிப்பு உத்தியோகத்தர்களால் நில அளவைத் திணைக்களத்தினரின் உதவியுடன் அளக்கப்பட இருந்த வேளை, அப்பகுதிப் பொதுமக்கள் காட்டிய எதிர்ப்பினாலேயே நிறுத்தப் பட்டுள்ளது.

பரமன்கிராய் வெட்டுக்காடு பகுதியில் உள்ள குறித்த காணிகள் கடந்த மாதம் 2ஆம் திகதி நில அளவை செய்யப்பட இருந்தன. இதன்போதும் மக்கள் எதிர்ப்புக் காட்டியதால் அந்த முயற்சி முறியடிக்கப்பட்டிருந்தது. அதைத் தொடர்ந்து நேற்று இரண்டாவது முறையாக குறித்த காணிகளை அளவிட முயற்சி மேற்கொள்ளப் பட்டது.

இந்தக் காணி சுவீகரிப்புத் தொடர்பாக பூநகரி பிரதேச செயலாளரைத் தொடர்பு கொண்டு கேட்ட போது,

குறித்த இடத்தில் உள்ள காணிகள் தனியார் உறுதிக் காணிகள் என்பது உண்மையானது. அந்தக் காணிகள் மொத்தம் எத்தனை ஏக்கர் என்பது சரியாகத் தெரியவில்லை.

ஆனால் 16 ஏக்கர் காணிகள் சுவீகரிக்கப்படவுள்ளதாக அறிய முடிகின்றது. எமக்கு அப்பகுதிக் கிராம சேவகரை அனுப்புமாறு கோரப்பட்டது அதனடிப்படையிலேயே கிராம சேவகர் குறித்த பகுதிக்குச் சென்றிருந்தார்.

மேலும்- காணிகள் சுவீகரிப்புக்கு எனக் காணி அமைச்சின் ஊடாக மாவட்டத்துக்கு ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர் கூடாகவே காணி சுவீகரிப்பு இடம் பெறுகின்றது எனத் தெரிவித்தார்.

குறித்த காணிகள் அளக்கும் முயற்சியின்போது, சம்பவ இடத்துக்குப் பொதுமக்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரனும் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-வ-21)

## 5 கைதிகள்

வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலையில் நேற்று மாலை சேர்க்கப்பட்டுள்ளனர்.

மகஸின் சிறையில் உள்ள ரி.பிரபாகரன், ஏ.ஞானசீலன், சாம் ஆகிய சிறைக் கைதிகளே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள தாகச் சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்துடன் அநுராதபுரம் சிறைச்சாலையிலும் ஒரு கைதி மயக்கமடைந்துள்ளார்.

தம்மைப் பொதுமன்னிப்பில் விடுதலை செய்யுமாறு கோரி தமிழ் அரசியல் கைதிகள் நாடு முழுவதிலும் உள்ள சிறைகளில் சாகும் வரையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 4 கைதிகளும், அநுராதபுரம் சிறைச்சாலையில் ஒரு கைதியும் நேற்று மாலை மயக்கமடைந்துள்ளனர். அவர்கள் ஏற்கன்வே உடல் நிலை பாதிக்கப்பட்டிருந்தமையினாலேயே, மயக்கமடைந்ததாகச் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. அத்துடன் மயக்கமடைந்த கைதிகள் உடனடியாகவே வெலிக்கடை சிறைச்சாலையிலுள்ள வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (த-5)

# முச்சக்கர வண்டி தொழில் அபிவிருத்தியைத் தீர்மானிக்கும் விசையாகும்

போக்குவரத்தானது நாட்டின் அபிவிருத்திக்கு மிக முக்கியமானதாகும். இலங்கையைப் போன்று அபிவிருத்தியடைந்து வரும் நாட்டில் உற்பத்தித் திறனை மேம்படுத்த போக்குவரத்து அத்தியவசியமாகும். நாடு அபிவிருத் தியடையும் வேளை உழைப்பை வேலைத்தலத்திற்கு கொண்டு செல்வதும் உற்பத்தி பொருட்களைச் சந்தைக்கு எடுத்துச் செல்வதும் மிக முக்கியமாகும். இது காலத்தை முகாமத்தியப்படுத்தி செய்யவேண்டியதாகும்.

முச்சக்கர வண்டி தொழில் இவ் அவசியத்தை நாட்டிற்காக பூர்த்தி செய்யும் பிரதான போக்குவரத்து சேவையாகும். தற்போது முச்சக்கர வண்டிகள் நாடு பூராகவும் உள்ள வீதிகளில் மக்களையும் பொருட்களையும் ஏற்றிச் சென்று திறமையுடன் செயல்படுகின்றன. மேலும் அவை நாட்டின் சரக்குகள் மற்றும் சேவைகளின் செயல்பாட்டில் பாரிய செல்வாக்கைப் பிரயோகிப்பதோடு முச்சக்கர வண்டி தொழிலினால் வேலை வாய்ப்புகள் அதிகரித்து சரக்குகள் மற்றும் சேவைகளும் மேம்படுத்தப்பட்டு நாட்டின் அபிவிருத்தியும் விரிவாக்கப்படுகின்றது.

இத[illegible] முச்சக்கர வண்டி சாதிகளுக்கு வேலை வாய்ப்புக்களை அதிகரித்து, உள்ளூர் பொறியியலாளரின் அறிவை ஒன்றுகூட்டி பொறியியலாளருக்கு பயிற்சி அளித்து அவர்களுக்கு பாரிய வேலை வாய்ப்புக்களை அதிகரிக்கச் செய்கிறது. மற்றும் முச்சக்கர வண்டிக்குத் தேவையான கூரை, கூரை அமைப்பு, ஆசனம், மட் கவர், டயர் மற்றும் டியூப், பக்கக் கண்ணாடி மற்றும் முச்சக்கர வண்டிக்குத் தேவையான வேறு அங்கங்களையும் உள்ளூரிலே உற்பத்தி செய்வது, புதிய வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்துகின்றது. அதே போன்று முச்சக்கர வண்டிகளைப் பழுதுபார்க்கும் நிலையங்களில் வேலை செய்யும் இளைஞர்கள், அங்கங்கள் உற்பத்தி செய்பவராகவும் மற்றும் உரிய தேர்ச்சி பெற்று திறமையான உதிரிப்பாக விற்பனையாளர்களாகின்றனர்.

இதனால் வருடாந்தம் எமது நாட்டின் அந்நிய செலவாணி சேமிக்கப்படுவதோடு உள்ளூர் உற்பத்திகளை வெளிநாட்டு சந்தைகளுக்கு அனுப்பி அந்நிய செலவாணி பெற்றுக்கொள்வதற்கான பங்களிப்பை மேம்படுத்தலாம்.

இன்று முச்சக்கர வண்டி தொழில் நாட்டில் முச்சக்கர வண்டிக்கான டயர்களை உற்பத்தி செய்வதனால் முச்சக்கர வண்டி சேவை ஸ்தலங்கள் அதிகரித்து பொருளாதார விரிவாக்கத்தைத் தீர்மானிக்கும் விசையாக உள்ளது.

மேலும் முச்சக்கர வண்டி ஒருவரது பிரதான தொழிலை விட மேலதிக வருமானத்திற்காகவும், ஓய்வு பெற்றபின் பிரயோசனமான செயல்பாட்டில் ஈடுபடவும், விவசாயம் செய்பவர்களுக்கு தமது வாழ்வாதாரத்திற்கு உதவவும், [illegible] தொழில் செய்பவர்கள் அவர்க[illegible] தேவைகளைப் பூர்த்தி செய்வதற்[illegible] பாவிக்கின்றனர். வெளி நாட்டில் வே[illegible] பார்ப்பவர்கள் இந் நாட்டிற்கு வந்[illegible] தமக்கு வருமானம் தேடுவ[illegible] பாவிப்பதும் முச்சக்கர வண்டியே. [illegible] பிரிவுகளிலும் ஈடுபடும் முச்சக்கர வ[illegible] இன்று தமது பிரதேசத்தில் [illegible] மக்களுக்கு விசுவாசமான [illegible] விளங்குகின்றது.

முச்சக்கர வண்டி இலங்கையில் [illegible] எல்லா தொழில் துறை[illegible] உள்ளவர்களின் சீவிய[illegible] வெற்றிக்கு பாரிய [illegible] உழைத்துள்ளது. இதன் [illegible] வேலையின்மை [illegible] குறைந்துள்ளது. அபிவிருத்தியடையும் நாட்டில் [illegible] லட்சணமாகும்.

ஆகவே முச்சக்கர [illegible] போக்குவரத்தை மேம்[illegible] தொழில்சார் தரத்திற்கு உயர்த்தி நாட்டின் அபிவிருத்[illegible] தீர்மானிக்கும் விசையாக[illegible] வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியமட்ட தடகளத் தொடரில் வடமாகாணத்துக்குப் பின்னடைவு

மாங்குளம் ஒக். 14
இலங்கைப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற தேசியமட்ட தடகளத்தொடரில் நடப்பு வருடத் தரப்படுத்தலில் வடமாகாணம் 5ஆவது இடத்திலிருந்து 6ஆவது இடத்துக்குப் பின்தள்ளப்பட்டுள்ளது.
தேசியமட்டப் போட்டிகளின் இறுதிக் கட்டமான மெய்வன்மைப் போட்டிகள் கடந்த 8ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை தியகம மகிந்த ராஜபக்ச சர்வதேச மைதானத்தில் நடைபெற்றது. இதில் கடந்த வருடம் 5ஆம் நிலையைப் பெற்ற வடமாகாணம் நடப்பு வருடத்தில் 6ஆம் இடத்துக்குப் பின் தள்ளப் பட்டுள்ளது. வழக்கம்போல் மேல் மாகாணம் முதலிடத்தில் தொடர்கிறது.
இதன்படி 1,226 புள்ளிகளைப் பெற்று மேல் மாகாணம் முதலாம் இடத்திலும், 627 புள்ளிகளைப் பெற்று வடமேல் மாகாணம் இரண்டாம் இடத்திலும், 485 புள்ளிகளைப் பெற்று சப்ரகமுவ மாகாணம் மூன்றாம் இடத்திலும் 461 புள்ளிகளைப் பெற்று மத்திய மாகாணம் நான்காம் இடத்திலும், 245 புள்ளிகளைப் பெற்று தென் மாகாணம் ஐந்தாம் இடத்திலும், 181 புள்ளிகளைப் பெற்று வடமாகாணம் ஆறாம் இடத்திலும், 127 புள்ளிகளைப் பெற்று வடமத்தியமாகாணம் ஏழாம் இடத்திலும் 123 புள்ளிகளைப் பெற்று ஊவாமாகாணம் எட்டாம் இடத்திலும் 71 புள்ளிகளைப் பெற்று கிழக்கு மாகாணம் ஒன்பதாம் இடத்திலும் உள்ளன.
நடப்பு வருடத்தில் வடமாகாணத்துக்கு கணிசமான பிரதிநிதித்துவம் கிடைத்தபோதிலும், அவற்றில் தங்கப்பதக்கங்கள் பெரிதளவில் கிடைக்கப்பெறவில்லை. தங்கப் பதக்கங்களைப் பெறுவதில் இருந்த வீழ்ச்சியே வடமாகாணத்தின் பின்னடைவுக்கு காரணம் என்று சொல்லப்படுகின்றது. (ம-422)

## திருமகளை வீழ்த்தியது லூட்ஸ்

யாழ்ப்பாணம், ஒக். 14
அராலி வானவில் விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் அராலி திருமகள் அணியை எதிர்த்து இளவாலை சென்.லூட்ஸ் அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா இரு கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலைத் தவிர்ப்பு உதைவரை நீடித்தது. சமநிலைத் தவிர்ப்புஉதையில் இளவாலை சென். லூட்ஸ் அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## பாரதி அணியை வீழ்த்தி மோகனதாஸ் இறுதியில்

யாழ்ப்பாணம், ஒக். 14
அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 8ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு குறித்த கழகத்தினால் தமது மைதானத்திலேயே யாழ். மாவட்ட ரீதியாக இரு பிரிவாக நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டத் தொடரில் 'பி' பிரிவில் மோகனதாஸ் அணி இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளது.
ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெற்ற 'பி' பிரிவு அணிகளுக்கு இடையிலான அரையிறுதியாட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் அணியை எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதிஅணிமோதிக்கொண்டது. 5 செற்களைக் கொண்ட இந்த அரையிறுதி ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் அணி 25:21, 25:19, 28:26 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (ம-23)

## இன்றைய மோதல்கள்

***நியூட்டன் வி.க. தொடர்***

கரணவாய், ஒக். 14
வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத் தொடர், குறித்த கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத்தொடரில் இன்று புதன்கிழமை இரவு 7மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் மானிப்பாய் றெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழகமும் இரவு 8மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-108)

***கலைமதி வி.கழகத் தொடர்***

வலிகாம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இந்தத்தொடரில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஞானகலா அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பலாலி விண் மீன் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதவுள்ளது. (ம-23)

## யாழ். மத்திக்கு வெண்கலம்



மாங்குளம், ஒக். 14
நடப்பு வருடத்தின் தேசியமட்ட மெய்வன்மைத் தொடரில் 21வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்காக அஞ்சல் ஓட்டத்தில் யாழ். மத்திய கல்லூரிக்கு வெண்கலப்பதக்கம் கிடைத்துள்ளது.
மத்தியைப் பிரதிநிதித்துவம் செய்த ஜெ.அபிமன், வி.ஜோய்ஆகாஸ், எம்.அழகன், எஸ்.சஜீவன் ஆகிய நான்கு வீரர்களும் தலா 400 மீற்றர் தூரத்தினை 3 நிமிடங்கள் 28 செக்கன்கள் 5 மில்லி செக்கன்களில் ஓடி முடித்து வெண்கலப் பதக்கத்தையும் வர்ணச் சான்றிதழையும் பெற்றுள்ளனர். வட மாகாணத்துக்கு அஞ்சல் ஓட்டத்தில் வர்ணச்சான்றிதழுடன் கிடைக்கும் முதலாவது பதக்கம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (ம-23-422)

## உதைபந்தாட்டத் தொடர்

யாழ்ப்பாணம், ஒக். 14
கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளின் 15 வயதுக்கு உட்பட்ட இரு பாலார் அணிகளுக்கிடையே சமபோஷா கிண்ணத்துக்காக உதைபந்தாட்டத்தொடர் எதிர்வரும் 20ஆம், 21ஆம் திகதிகளில் உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (ம-23)

## வித்தியானந்தாவுக்கு வெள்ளிப் பதக்கம்



மாங்குளம், ஒக். 14
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட மெய்வன்மைப் போட்டிகளில் 15வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான உயரம் பாய்தலில் முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியைச் சேர்ந்த மாணவன் எஸ்.சுஜீவன் 1.72மீற்றர் உயரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.
நடப்பு வருட தேசியமட்ட தடகளத் தொடரில் வித்தியானந்தாக் கல்லூரி பெற்றுக்கொள்ளும் முதல் பதக்கம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (ம-422)

## அரச ஊழியர்களுக்கான வலைப்பந்தாட்டம் சம்பியனாகியது யாழ். மாவட்ட பெண்கள் அணி



வலி வடக்கு, ஒக். 14
இலங்கை அரச ஊழியர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் அரச ஊழியர்களுக்கு இடையே தேசிய ரீதியில் நடைபெற்ற பெண்களுக்கான வலைப்பந்தாட்டத் தொடரில் யாழ். மாவட்ட அரச ஊழியர் அணி சம்பியனாகியுள்ளது.
கொழும்பு றொறிங்டன் விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் யாழ். மாவட்ட அரச ஊழியர் அணி யும் கொழும்பு மாவட்ட வாழ்வெழுச்சி திணைக்கள அணியும் மோதிக் கொண்டன. ஆட்டத்தின் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய யாழ். மாவட்ட அரச ஊழியர் அணி 11:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கொழும்பு மாவட்ட வாழ்வெழுச்சி திணைக்கள அணியை வெற்றி பெற்றுச்சம்பியனாகியது. (ம-86)

## நடுவர்களுக்கான பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக். 14
இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் வலைப்பந்தாட்ட நடுவர்களுக்கான (ஏ,பி,சி ஆகிய மூன்று தரத்துக்குமான) எழுத்துப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
மேற்படி பரீட்சைக்கு தோற்ற விரும்பும் பரீட்சார்த்திகள் அதற்கான விண்ணப்பப்படிவங்களை யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத் தலைவி திருமதி ஏ.எப்.ஜே. றூபசிங்கத்திடம் பெற்று, அதனை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தின் செயலாளர் சுரேந்தினி கேட்டுக் கொண்டுள்ளார். (ம-23)

## முப்பாய்ச்சலில் முன்னேறிப்பாய்ந்தது ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்

மாங்குளம், ஒக். 14
இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான தேசியமட்ட தடகளத் தொடரில் ஒட்டுசுட்டான் மகா[illegible]யத்துக்கு வர்ணச் சான்றி[illegible]துள்ளது.
தியகம ராஜபக்ச மைதானத்தில் நடைபெற்ற 17வயதுக்கு உட்பட்ட முப்பாய்ச்சல் போட்டியில் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தைச் [illegible] வர்ணச் சான்றிதழைப் பெற்றுள்ளார். (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 400 மீற்றர் தடை தாண்டல் மத்திக்கு வர்ணச் சான்றிதழ்


மாங்குளம், ஒக். 14
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட தடகளத் தொடரில் தடைதாண்டலில் யாழ். மத்திய கல்லூரிக்கு வர்ணச் சான்றிதழ் கிடைத்துள்ளது.
19 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவில் 400மீற்றர் தடைதாண்டலில்; யாழ். மத்தியகல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த தே.செந்தூரன் 56.95 செக்கன்களில் தடைகளைத்தாண்டி வர்ணச் சான்றிதழைப் பெற்றார். (ம-422)

# பாகிஸ்தான் பலமான தொடக்கம்

## இங்கிலாந்தின் பந்துவீச்சு எடுபடவில்லை

பாகிஸ்தான் – இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் முதல் டெஸ்ட்டின் முதலாம் நாளானநேற்றைய தினத்தின் நிறைவில் பாகிஸ்தான் 4 இலக்குகள் இழப்புக்கு 286 ஓட்டங்கள் என்ற வலு வான நிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க ஆரம்ப வீரர்களாக களமிறங்கினர் கபீஸ் மற்றும் மக்சூட். அணியின் ஓட்ட எண்ணிக்கை 5ஆக இருந்தபொழுது அன்டர்சனின் பந்தில் போல்ட் முறையில் ஆட்டமிழந்தார் மக்சூட். இந்த இலக்கைச் சாய்த்ததன் மூலம் அதிக இலக்குகளை வீழ்த்தியவர்களின் வரிசையில் அக்ரமின் சாதனையை (414 இலக்குகள்) சமன் செய்தார் அன்டர்சன். கபீசுடன் இணைந்து மலிக் நிதானிக்க பாகிஸ்தான் சரிவில் இருந்து படிப்படியாக மீண்டது. இணைப்பாட்டம் ஐம்பது,



பாகிஸ்தான் – இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதலாம் நாளான நேற்றைய நாளில் இரண்டு இலக்குகளைக் கைப்பற்றியதன் மூலம் டெஸ்ட் ஆட்டங்களில் அதிக இலக்குகளைக் கைப்பற்றியவர்கள் வரிசையில் 10ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார் அன்டர்சன். அன்டர்சன் 10ஆவது இடத்துக்கு முன்னேறியமையால் பாகிஸ்தானின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் அக்ரம் 11ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார்.



நூறு என்று அதிகரித்துச் சென்று கொண்டிருக்கிறது இலக்கு மட்டும் விழுந்தபாடில்லை. கபீஸ், மலிக் இருவரும் ஆளுக்கொரு அரைச் சதமும் கடந்து மிகவும் சிறப்பாக ஆடிக்கொண்டிருந்தனர். இணைப்பாட்டமாக 150 ஓட்டங்களையும் கடந்துவிட்டாயிற்று. சதத்தை மிக அருகில் நெருங்கிய கபீஸ் இரண்டே ஓட்டங்களால் சதத்தைத் தவற விட்டு பவிலியன் திரும்பினார். தற்பொழுது பாகிஸ்தான் 173–3.

மலிக்குடன் இணைந்தார் யுனிஸ் கான். மீண்டும் ஒரு அருமையான இணைப்பாட்டம். கபீஸ் செய்த தவறை தானும் செய்யாமல் நிதானத்தில் தொடர்ந்து சதம் கடந்தார் மலிக். 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் யுனிஸ்கான். பாகிஸ்தானின் தடுப்புச்சுவர் என்று அழைக்கப்படும் மிஸ்பாவால் முடிந்தது வெறும் மூன்று ஓட்டங்கள் மட்டுமே. சபீக் மலிக்குடன் இணைந்து நிதானிக்க முதலாம் நாள் முடிவில் பாகிஸ்தான் 286–4. மலிக் 124 ஓட்டங்களுடனும் சபிக் 11 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர்.

பந்துவீச்சில் அன்டர்சன் 2 இலக்குகளையும் புரோட், ஸ்ரோக்ஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம)

## யங்கென்றிஸ் இலகு வெற்றி

யாழ்ப்பாணம், ஒக். 14

யாழ்ப்பாண மற்றும் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்குகளின் அனுமதியுடன் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் திங்கள்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து இளவாலை யங்கென்றிஸ் அணி மோதிக்கொண்டது.

இதில் இளவாலை யங்கென்றிஸ் அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம–23)

## வவுனியா மாவட்ட உதைபந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக். 14

வவுனியா உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்துள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் சமீப காலமாக உதைபந்தாட்டத் தொடர் ஒன்று நடத்தப்பட்டு வருகின்றது. இதன் ஆட்டங்கள் முஸ்லிம் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெற்ற ஆட்டங்களின் முடிவுகள்.

சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் மருதநிலா அணியை எதிர்த்து ஈகிள்ஸ் அணி மோதிக் கொண்டது.

இதில் ஈகிள்ஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் சக்தி அணியை எதிர்த்து வடதாரகை அணி மோதிக் கொண்டது. இதில் வடதாரகை அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் முதலாவது ஆட்டத்தில் யங்ஸ்ரார் அணியை எதிர்த்து அம்மன் அணி மோதிக் கொண்டது.

இதில் யங்ஸ்ரார் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் யுனிபைட் அணியை எதிர்த்து கோல்டன் பிரதர்ஸ் அணி மோதிக் கொண்டது. இதில் யுனிபைட் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம–23)

## பொம்மர்ஸிடம் வீழ்ந்தது யுத்

கரணவாய், ஒக். 14

வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக்கழகம்யாழ்.மாவட்ட ரீதியாக நடத்திவரும் உதைபந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் அணியிடம் வீழ்ந்தது உடுப்பிட்டி யுத் அணி.

ஆட்டம் ஆரம்பித்து முதல் பத்து நிமிடங்களுக்குள் உடுப்பிட்டி யுத் அணிக்கு அடுத்தடுத்து 3 கோல்கள் போடும் வாய்ப்புக்கள் கிடைத்த போதிலும் எந்தவொரு வாய்ப்பும் கோலாக மாற்றம்பெறவில்லை. இது போதாதென்று ஆட்டத்தின் 14 ஆவது நிமிடத்தில் யுத் அணி முறைதவறிய ஆட்டத்தை வெளிப்படுத்தி பொம்மர்ஸிற்கு தண்டனை உதைக்கான வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்தது. பொம்மர்ஸ் அணி வாய்ப்பைக் கச்சிதமாக பயன்படுத்த முதல் பாதியில் 1:0 என்று முன்னிலை வகித்தது பொம்மர்ஸ்.

இரண்டாம் பாதியில் சரிவில் இருந்து மீண்டது யுத். முதல்பாதியில் அந்த அணியில் இருந்த தடுமாற்றம் இரண்டாம் பாதியில் அறவே இல்லாமல் போயிற்று பொம்மர்ஸ் வீரர்களும் விடுவதாக இல்லை. கிட்டத்தட்ட ஆட்டத்தின் முடிவு நேரம் வரை 1:0 என்ற நிலைப்பாடே பேணப்பட்டிருந்தது. ஆட்டம் நிறைவடைய சில நிமிடங்களே இருக்கும் பொழுது பொம்மர்ஸ் அணி சார்பாக மேலும் ஒரு கோல் பதிவாக முடிவில் அந்த அணி 2:0 என்று வெற்றிபெற்று தமக்கான முதல் வெற்றியைப் பதிவு செய்தது. (ம–108)


## சம்பியனானது சென்.ஆன்ஸ்

யாழ்ப்பாணம், ஒக். 14

கிளிநொச்சி, ஜெயந்திநகர் விளையாட்டுக்கழகம் நடத்திய விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் மன்னார், வலைப்பாடு சென்.ஆன்ஸ் அணி சம்பியன் ஆனது.



கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜெயந்திநகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் வலைப்பாடு சென். ஆன்ஸ் அணியை எதிர்த்து வலைப்பாடு ஜெகமீட்பர் அணி மோதிக் கொண்டது. இரண்டு அணியினரும் ஆட்டநேர முடிவில் தலா 2 கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலை தகர்ப்பு உதைவரை நீடித்தது. இதில் வலைப்பாடு சென். ஆன்ஸ் அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது. (ம–23)



இந்தியா தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று இந்தூரில் பகலிரவு ஆட்டமாக நடை பெறவுள்ளது. (ம)


## மரண அறிவித்தல்

**அன்ரனி குறூஸ்**
**இக்னேசியஸ் இரட்ணராஜா (றவி)**

(முன்னாள் ICRC ஊழியர்)

பிறப்பு : 05.05.1953 இறப்பு : 11.10.2015



யாழ்ப்பாணம் குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அன்ரனி குறூஸ் இக்னேசியஸ் இரட்ணராஜா (றவி) 11.10.2015 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பஸ்ரியாம் பிள்ளை அன்ரனிகுறூஸ் மற்றும் அன்ரனி குறூஸ் கத்தரின் (செல்லம்மா) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான றெமுவால்டர்-ஆரோக்கியம் (அன்னம்மா) தம்பதியரின் அன்பு மருமகனும், மேரி கயசிந்தாவின் (றாணி) அன்புக் கணவரும், பிறாங் ஜொனத்தன் (பிரான்ஸ்) அன்றியா (கனடா) அன்டசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தனேந்திரன் (நிறோசன்-கனடா) ஜெனற் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், அன்ரன் .செல்லக்குமார் மேரி பெனிக்னா (பாறேன்), மேரி அஞ்சலா, ஜோண்சன் பொபி (அமெரிக்கா), பிறீடா பிறின்சி (லண்டன்) றேமன்ட் ஜோசப் (றாஜன்) றெமிஜியஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமலசீலி, பியர் (பாறேன்), அல்போன்சஸ், ஜெயந்தினி (அமெரிக்கா) ரோனிஜொய்ஸ் (லண்டன்) ஜோதினி, காலஞ்சென்ற குமார் மற்றும் அருள்சீலி, புளோறில்டா றாயினி (சுவிஸ்) ஜெறாட் விஜயன், வசந்த றூபி (நோர்வே) வினிபிறட் ஈஸ்வரி (பிரான்ஸ்), வேவி காலஞ்சென்ற செல்வராசா மற்றும் மஞ்சு, ரவி (சுவிஸ்) குயின்ரன் (நோர்வே) பாபு (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (14.10.2015) புதன்கிழமை பி.ப 3.30 மணிக்கு புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மனைவி, பிள்ளைகள்,
தொடர்பு: 021 222 9314

(65483) (10.17)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில் கொழும்பு பிறிண்டேர்ஸ்

அதிரடி விலைச்சலுகை

A4 4Colour Printing 600/=

A3 4Colour Printing 1000/=

A2 4Colour Printing 1200/=

அனைத்து விதமான அச்சுப்பதிப்பு வேலைகளும் ஒரே இடத்தில்

தொ.பே : 0771974875 666 கே.கே.எஸ் வீதி, யாழ்.



## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

வழங்கும்

## After AL What Next?

உங்களின் கனவும் பெற்றோரின் ஆசைகளும் நிறைவேற

பல்கலைக் கழகமா? உயர்கற்கை நெறியா? புதிய தொழில் வாய்ப்பா?

உங்களின் ஆங்கில அறிவை நனவாக்குவதே ஒரே வழி

அதை மேம்படுத்துவதே எமது நோக்கு

### Spoken English with Grammar 1½ Months

100% பயிற்சி — 100% வெற்றி

### Diploma In English 2½ Months

Spoken English course

* Excellent Teachers' Panel & Individual Attention

| Spoken English with Grammar | | Diploma in English | |
|---|---|---|---|
| ~~Rs.10'000~~ | Rs.7'500 | ~~Rs.14'000~~ | Rs.9'500 |

**Batches Start On**

15.10.2015 @ 9.00am
16.10.2015 @ 9.00am
17.10.2015 @ 2.00pm
19.10.2015 @ 9.00am
20.10.2015 @ 9.00am

BCHS

No.15, Chirambiyady Lane (off Stanley Road), Jaffna (Near Ariyakulam & Above Sathosa SM)

Tel : 021-2224550, 0777222422, 0776555677



## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

தனியார் தொலைத் தொடர்புசேவை ஒன்றுக்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை.

மேலதிக தொடர்புகளுக்கு

airtelcbajaffna@gmail.com

217, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(65342) (10.17)



**புதிய பிரிவுகள் ஆரம்பம்** — புலமைப்பரிசில் கற்கும் அனைவருக்கும்

Typing, Ms Office, Web design, DTP, AutoCAD(2D,3D & House Plan)

Diploma In IT / Marketing / Auditing, Internationally recognized Engineering-USA

பதிவுகளுக்கு : கல்வியங்காட்டு சந்தியில் MCAI CAMPUS

SMS Your name & Course to 775520940 & Get Schol.



## SUCCESS
Language Centre

- Basic English
- Spoken English
- Spoken Sinhala
- ஜேர்மன், சுவிஸ் டொச்

ஆகிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சாராங்கா நகைமாடம் எதிரில்)

T.P: 077 640 8622

(65478)(10.17)



## BRITISH TEACHING ENGLISH
(Mr.KEVIN (U.K))

பிரபல ஆசிரியர் யாழ். British College

✔ IELTS
✔ SPOKEN Etc... ஆரம்பம்

மேலதிக விவரங்களுக்கு:-

**SKY**

89, Kandy Road, Jaffna. (Near Kachcheri)

2221417 / 075 0698 608



MEGA SALE

## தீபாவளி தினத்தை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை




இல: 33, அரசடி வீதி, தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம். (தட்டாதெருசந்தியில் இருந்து அரசடி வீதியல் 100m தூரத்தில்)

T.P: 076 821 9413 / 076 821 9415


## அரச ஊழியர்களுக்கான வலைப்பந்தாட்டம்
## சம்பியனாகியது யாழ். மாவட்ட ஆண்கள் அணி



வலி வடக்கு, ஒக். 14

இலங்கை அரச ஊழியர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் அரச ஊழியர்களுக்கு இடையே தேசியரீதியில் நடைபெற்ற ஆண்களுக்கான வலைப்பந்தாட்டத் தொடரில் யாழ். மாவட்ட அரச ஊழியர் அணி சம்பியனாகியுள்ளது.

கொழும்பு ரொறிங்டன் விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் யாழ். மாவட்ட அரச ஊழியர் அணியும் சிறைச்சாலை அரச உத்தியோகத்தர் அணியும் மோதிக் கொண்டன. ஆட்டத்தின் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய யாழ். மாவட்ட அரச ஊழியர் அணி 16:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றுச் சம் பியனாகியது. (ம-23)

## மீண்டும் ஜோகோவிக்

ஜப்பானில் நடைபெற்றுவந்த ரென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடாலை வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளார் ஜோகோவிக்.

சமீபகாலமாகதடுமாறிவரும் நடால் இந்தத் தொடரின் இறுதி ஆட்டத்துக்கு முன்னேறினார். இருந்தாலும், பலம்வாய்ந்த ஜோகோவிக்கை வீழ்த்துவாரா? என்ற எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால், ஜோகோவிச் 6:2, 6:2 என்ற நேர்செற் கணக்கில் எளிதில் வெற்றி பெற்று கிண்ணம் வென்றார். இந்த வெற்றியுடன் தொடர்ச்சியாக 29 வெற்றி களைப் பதிவுசெய்துள்ளார் ஜோகோவிக். (ம)


# வடபகுதியில், யாழில்

hp நிறுவனத்தின் அனுசரணையுடன்,

நளின் நிறுவனம் வழங்கும்

மாபெரும் மலிவு விற்பனையில்

மடிக்கணனிகள், கணனிகள், கணனி பிரதியிடும் இயந்திரங்கள் ஆகக்குறைந்த விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

15 மற்றும் 16.10.2015 (2 நாட்கள்) தினங்களில் வரை மட்டுமே.



**HP 14-R217TU (L0K93PA)**
Intel Pentium N3540 (2.16 Ghz)
Free DOS Operating Software
2GB DDR3, 500GB Hard Drive
14" diagonal HD BrightView LED
රු. 47,900.00
FREE BACK PACK

**HP 15-ac087TU (N4F87PA)**
Intel® Pentium® Processor 3825U (1.9 GHz)
Free DOS Operating Software
2GB DDR3, 500GB Hard Drive
15.6" diagonal HD BrightView LED
රු. 49,750.00
රු. 1,500 SHOPPING VOUCHER

**HP 15-ac083TX (M4Y61PA)**
Intel® CoreTM i5-5200U Processor (2.2 GHz)
Free DOS Operating Software
4GB DDR3, 500GB Hard Drive
15.6" diagonal HD BrightView LED
2GB VGA
රු. 84,750.00
HP DESKJET 1112 PRINTER

**HP ProDesk 280G1 TWR (J7V61AV)**
Intel Pentium G3260 3.3G 3M HD CPU
2GB DDR3, 500GB HD
HP USB Keyboard & Optical Mouse
SuperMulti ODD
HP 18.5" LED LCD Monitor
Intel® H81 Express
රු. 59,500.00
FREE DOS OPERATING SOFTWARE

**HP V193 19" (18.5")**
**LED Backlit Monitor (G9W86AA)**
3 Year Warranty
රු. 12,500.00

**HP 15-af025AU (N4F87PA)**
AMD Processor
Free DOS Operating Software
2GB DDR3, 500GB Hard Drive
15.6" diagonal HD BrightView LED
රු. 44,750.00
රු. 1,000 SHOPPING VOUCHER

**HP Pav 15-ab055TX (M4X75PA)**
Intel® CoreTM i5-5200U Processor (2.2 GHz)
Free DOS Operating Software
4GB DDR3, 1TB Hard Drive
15.6" diagonal HD BrightView LED
2GB VGA NVIDIA 940
රු. 89,750.00
HP DESKJET 1112 PRINTER

**HP Pav 15-ab099TX (N1V60PA)**
Intel® CoreTM i7-5500U Processor (2.4 GHz)
Free DOS Operating Software
8GB DDR3, 1TB Hard Drive
15.6" diagonal HD BrightView LED
2GB NVIDIA 940
රු. 115,750.00
රු. 4,000 SHOPPING VOUCHER

**HP ProDesk 280G1 TWR (J7V61AV)**
Intel Core i3-4170 3.7G 3M HD 4400 CPU
4GB DDR3, 500GB HDD
HP USB Keyboard & Optical Mouse
SuperMulti ODD
HP 18.5" LED LCD Monitor
Intel® H81 Express
රු. 69,500.00
FREE DOS OPERATING SOFTWARE

**HP DeskJet Ink Advantage 2135 All-in-One Printer (F5S29B)**
Print, Copy, Scan
(Black/Color): Up to 20ppm/16ppm
HP Auto-off Technology
HP 678 Black/Tri-Color Ink Cartridge
Compact printer
රු. 9,500.00
FREE PAPER PACK

**HP Deskjet Ink Advantage 2645 All-in-One Printer (D4H22B)**
Print, copy, scan, fax
(Black/Color): Up to 20ppm/16ppm
(monthly, A4) Up to 1000 pages
Color: Up to 4800 x 1200dpi
HP Thermal Inkjet
රු. 13,500.00
FREE PAPER PACK

**HP LaserJet Pro MFP M125a (CZ172A)**
Print, copy, scan
Print/copy up to 20 ppm
128 MB RAM, 600 MHz processor
1 Hi-Speed USB 2.0, Fast Ethernet
Up to 600 x 600 dpi
රු. 18,500.00
BLUETOOTH SPEAKER

**HP DeskJet Ink Advantage 4645 e-All-in-One Printer (B4L10B)**
Print, Copy, Scan, Fax, Photo
(Black/Color): Up to 21ppm/17ppm
HP Auto-off Technology
HP 678 Black/Tri-Color Ink Cartridge
HP ePrint & Apple AirPrintTM
රු. 19,300.00
FREE HOT & COLD MUG

**HP LaserJet Pro P1102 Printer**
Print Speed: Black: Up to 19 ppm
Resolution: Up to 400 x 600 x 2 dpi
HP FastRes 600, HP FastRes 1200
Hi-Speed USB 2.0 port, WiFi
Monthly Page Volume: 250 to 1,500
HP ePrint, Apple AirPrint™
රු. 11,500.00
FREE PAPER PACK

**HP Scanjet 200 Flatbed Photo Scanner (L2734A)**
CIS (Contact Image Sensor)
Flatbed; Colour Scanning: Yes
Hardware: Up to 2400 x 4800 dpi
Duty cycle (daily) 26,000 scan min
LED Light Guide (Three LED Colour)
රු. 7,900.00
FREE PAPER PACK



**Original Toner Cartridge**
රු. 6,000 upwards

**Original Ink Cartridge**
රු. 1,300 upwards

NALIN Information Technologies (Pvt) Ltd

**Nalin Information Technologies (Pvt) Ltd**
195/2 Palaly Road, Parameswara Junction, Thirunelvely, Jaffna
Tel: 021-2221121 | 0773 66 79 75 Email: nalin@nit.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

எல்லா விடயங்களி
லும் நல்ல அம்சத்தைக்
காணவே எப்பொழு
தும் முயல்க.
அநேகமாக ஒவ்வொரு
விடயத்திலும் நல்ல
அம்சம் உண்டு.

— *ஆவ்பரி*


புதன் பொய்கை

உதயன்

14 ஒக்ரோபர் 2015 புதன்கிழமை




# அன்றிருந்தது இன்றில்லை

## மனதைக் கவர்ந்த துரைசாமியின் பிற்கால சுவரோவியங்கள்






**து.துசியந்தன்**
*சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்(சித்திரம்)*


**துரைசாமியின் சிறப்பான ஓவியங்கள் காணப்பட்ட இடங்களில் நல்லூர் சட்டநாதர் கோயிலும் ஒன்றாகும். இங்கு மண்டப வெளித்தூண்கள் ஐந்தில் ஆலயத்துடன் தொடர்புடைய ஐந்து பெரியார்களினது முழுஉருவப் படங்களும் ஆறாவது தூணில் இந்தச் சித்திரங்களை வரைந்த ஓவியர் துரைசாமியின் தன்னுருவ ஓவியமும் காணப்பட்டது.**

எம்முடைய காலப் பொக்கிசங்கள் காலத்துக்கு காலம் அந்நியர்களாலும், எமது கவனவீனத்தாலும் அழிக்கப்பட்டு விட்டன. இவை அழிக்கப்படுவதற்கு முன்னர் சமுதாய நோக்குடைய சிலரால் மேற்கொள்ளப்பட்ட ஆவணப்படுத்தலினால் அவற்றைப் பற்றிச் சிறிதேனும் அறியக்கூடியதாக உள்ளது. இந்த அடிப்படையில் அன்றிருந்து, இன்று அழிந்து போன துரைசாமியின் சுவரோவியப் படைப்புக்கள் குறிப்பிடத்தக்கவையாகும். இவரது சுவரோவியங்கள் நல்லூர் சட்டநாதர் சிவன்கோயில், கீரிமலை சிறாப்பர் மடம், யாழ்ப்பாணத்துக் கிட்டங்கிச் சுவர்கள், வண்ணை வைத்தீஸ்வர ஆலயத்தின் பூங்காவன மண்டபத்தின் தூண்கள் போன்ற பல இடங்களில் காணப்பட்டன. இந்த அழிந்து போன சுவரோவியங்கள் பற்றிய தகவல்களை கலாகேசரி தம்பித்துரையால் எழுதப்பட்ட 'யாழ்ப்பாண பிற்காலச் சுவரோவியங்கள்' என்ற நூலின் வாயிலாகவே அறியக்கூடியதாக உள்ளது.

"அடே! தம்பி, அந்தத் தூணில் சித்திரிக்கப் பெற்றிருக்கின்றாரே அந்த ஓவியர், அவர்தான் தாவடி துரைசாமி. அவரின் ஆற்றல் அபாரம் என நாற்பது வருடங்களுக்கு முன் யாழ்.சட்டநாதர் ஆலய முன் மண்டபத்தில் சிறிதுநேரம் தங்க நேர்ந்தபோது எனது தந்தையாரால் கூறப்பட்டது. அன்றே இவற்றை ஆவணப்படுத்த வேண்டும் என்ற உந்தல் ஏற்பட்டது" என கலாகேசரி தம்பித்துரை குறிப்பிடுகின்றார்.

துரைசாமியின் சிறப்பான ஓவியங்கள் காணப்பட்ட இடங்களில் நல்லூர் சட்டநாதர் கோயிலும் ஒன்றாகும். இங்கு மண்டப வெளித்தூண்கள் ஐந்தில் ஆலயத்துடன் தொடர்புடைய ஐந்து பெரியார்களினது முழுஉருவப் படங்களும் ஆறாவது தூணில் இந்தச் சித்திரங்களை வரைந்த ஓவியர் துரைசாமியின் தன்னுருவ ஓவியமும் காணப்பட்டன.

இங்கு காணப்பட்ட மற்றுமொரு ஓவியமான வெள்ளைக்கை ஐயரும் விநாயகரும் என்ற ஓவியம் சிறப்பு வாய்ந்தது ஆகும். இதில் எலி வாகனத்தில் விநாயகர் அமர்ந்துள்ள விதமும் அந்தக் காலத்தில், ஓவியரின் காலப்பகுதியில் வாழ்ந்த வெள்ளைக்கை ஐயர் பூசை செய்யும் விதமும் சிறப்பாகக் காட்டப்பட்டிருந்தன. இதில் பிள்ளையாரின் உருவம் கரும் சிவப்பு நிறத்தால் காட்டப்பட்டிருந்தது. இந்த ஓவியம் மேலைத்தேய பாணியை வெளிப்படுத்திக் காட்டுகின்றபோதிலும் ஓவியத்தின் பின்னணி, உருவ அமைப்பு போன்றவை இந்திய தஞ்சாவூர் ஓவியப்பாணியை வெளிப்படுத்திக் காட்டின.

இங்கு காணப்பட்ட மற்றுமொரு ஓவியம் சேவலுடனும் மயிலுடனும் காணப்படும் ஆண்டி வேடம் பூண்ட முருகனின் ஓவியமாகும். இதில் காணப்பட்ட கூவும் வெள்ளைச் சேவலின் வடிவம் தனித்துவம் வாய்ந்ததாகும். இந்தச் சேவலில் காணப்படும் கம்பீரத்தன்மை இறகுகளின் மிருதுத்தன்மை என்பன கலைஞரின் இரசனையையும் திறனையும் காட்டுகின்றன. 100 வருடங்களுக்கு முன்னர் வரையப்பட்ட இந்த ஓவியங்கள் எமது அக்கறையீனத்தால் அழிந்து போய்விட்டன. இன்று எமக்கும் பார்க்கக் கிடைப்பதோ கலாகேசரியின் யாழ்ப்பாணத்து பிற்கால சுவரோவியங்கள் என்ற நூலேயாகும். ஆனால் அதில் காணப்படும் ஓவியங்களில் படங்கள் இரு வர்ணத்திலேயே பதிக்கப்பட்டுள்ளன. அந்தக் காலத்தில் பல வர்ண அச்சுமுறை காணப்படாமை இதற்கான காரணமாகக் கருத இடமுண்டு. இதனால் அந்த ஓவியங்களில் உண்மையான வர்ணத் தோற்றத்தை இரசிக்க முடியாது போனமை எமது துரதிஷ்டமாகும்.

துரைசாமியின் ஓவியங்கள் காணப்பட்ட மற்றுமொரு இடமாக அடையாளப்படுத்தப்படுவது முன்னைய யாழ்.மாநகர சபைக்கு அண்மையில் காணப்பட்ட கிட்டங்கிக் கட்டடங்களில் வெளிப்புறச் சுவரில் வரையப்பட்டிருந்த ஓவியங்களாகும். இந்த ஓவியத்தில் அந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்த அரச பதவிகளை வகித்த இரு துரைமார்கள் தங்களது குதிரைகளில் சம்பாசித்துச் செல்வது போன்றும் அவர்களைத் தொடர்ந்து அவர்களது வளர்ப்பு நாய்களும், பணியாளர்களும் ஓடி வருகின்ற விதமும் காட்டப்பட்டுள்ளது? இதில் பணியாள் (சேவகர்) உருவம் யாவரையும் கவரும் விதமாகக் காணப்படுகிறது. இதில் சாரத்துடன் கோட்டு அணிந்து தலையிலே துண்டு கட்டிக் கொண்டு வருகிறார். அவரின் தோளில் காணப்படும் கூடையிலே கொக்கி விளையாட்டுக்குரிய கொக்கிகள் காணப்படுகின்றன. அத்தோடு அவரது ஒரு கையில் இந்தக் கொக்கி காணப்பட மறுகையில் வெள்ளை நிறப்பந்து காணப்படுகிறது.

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் சுவரோவியங்களை வரைந்த துரைசாமி உலர்சுதை மரபில் தூள் வர்ணங்களைப் பயன்படுத்தி இந்தச் சித்திரங்களை வரைந்துள்ளார். இவரிடம் குறுகிய நேரத்தில் பிரதிமைச் சித்திரங்களை வரையும் ஆற்றல் இருந்தமையையும் அறிய முடிகிறது. இருப்பினும் இவரது படைப்புக்களை நேரில் கண்டு இரசிப்பதற்கான பாக்கியத்தை நாம் இழந்துள்ளோம். இருப்பினும் கலாகேசரி தம்பித்துரை போன்றவர்கள் எம்மவர்களின் படைப்புக்களை ஆவணப்படுத்தியதால் அவை இன்றும் அழிந்தும் அழியாதுமுள்ளன!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தான்தோன்றிக்கவிராயர் வழியில் வந்த புலவர் ஆ.தே.செகராசசிங்கம்

ஆ.தே.ஞானசீலன் (மகோன்துறை)

**யாழ்.** பாசெய்யூர் தந்த புலவர் தான்தோன்றிக் கவிராயர் ஆசீர்வாதம் தேவசகாயம்பிள்ளை செகராசசிங்கம் அவர்கள் அவதரித்த நூறாவ தாண்டை முன்னிட்டு அன்னார் பிறந்த இந் நாளில் அவர் வாழ்ந்த காலவரலாற்றைச் சிறு விளக்கவுலாவாகத் தருகின்றேன்.

இந்து சமுத்திரத்தின் முத்தென விளங்கும், முதற் காலங்களில் குபேரனும் ஆண்ட இலங்கைத் தீவின் சிரசான நாவலந்தீ வெனும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் கண்ணெ னத்திகழும் பாசெய்யூர் பதியில் சிறி சின்னத்தம்பி வம்சத்தில் உதித்த வெ.ஆசீர் வாதமெனும் குருகுலத்து இறைமையாளனுக்கும், குருகுலமுதலி வம்சத்தில் வந்த சம்பூரணமுதலியின் சேட்ட புதல்வி இராசாத் திக்கும் மகனாக 1915ம் வருடம் ஐப்பசித்திங்கள் 10ஆம் நாள் புலவர் அவ தரித்தார். அன்னார் நான்கு ஆண் மற்றும் ஒரு பெண் ணென ஐந்து சக உதரங்க ளுடன் பிறந்தவர் ஆவார். புலவ னார் பிறந்து சில வரு டங்களிலேயே பெற்ற தாயாரை இழந்தார். பொதுவில் தாயில் லாப்பிள்ளை அனாதை தானே? பால வயதில் இவ்வுலக சுதந்திரங்கள் பலவற்றை இழந்து தாயைப் பெற்ற பேத்தி மற்றும் சிற்றன்னையரின் அரவணைப்பிலும் அம் மான் சந்திரராசாவின் அன்பிலும் காலத்தை ஓட்டிவந்த வேளையில் ஆறு வயதான போது கொழும் புத்துறை புனித சூசையப் பர் போதனா பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்று, அதுவும் முற்றுப்பெறாத நிலையில் தனது தந்தையாரது தொழி லையே. (கடற்றொழில்) தானும் மேற் கொண்டு வந்தார்.

ஆயினும், தான் ஒரு கல்விமானாக வர வேண்டும் எனும் உந்துதலால் கல்வியோடு பல கலைகளையும் சில மொழிகளையும் (ஆங்கிலம், சிங்களம்) கற்றுத் தேறி வந்த வேளையில், உலக வாழ்க்கைக்குத் தேவை யான பணம், பொருளையும் தீவினை விட்டு ஈட்டி வாழ்ந்த காலையில் விடப்லைப்பருவ மெய்தி ஞானப்பிரபாசம் (சிங்கத்தரை) றேனம் மாள் (துங்கராசம்) தம்ப தியரின் மகளான உரிமைப் பெண் ஞானரத் தினத்தைக் காதலித்துக் கரம்பிடித்தார்.

இதன்பின் பல நாட்டுக்கூத்துகளும், இசை நாட கங்களும், சரித்திர நாடகங்களும் இயற்றித் தயாரித்து, தான்பெற்ற பிள்ளைகளைக் கொண் டும், தன்னூர் சிறந்த நடிகர்களைக் கொண்டும் மேடையேற்றி நடிப்பித்துக் காட்டியதுடன். தன் கைவசதிக் கேற்ப சிலநாடகங்களையும் தமிழ்ப் பனுவல்களையும் அச்சுவாகனமேற்றியுமுள்ளார். அவர் முதன்முதலில் இயற்றி மேடையேற் றியது சூழ்ச்சிக்காரரின் வீழ்ச்சி என்னும் இசை நாடகமாகும். அதனைத் தொடர்ந்து

வெற்றியின் இரகசியம் - இசைநாடகம்,
இதயப்பரிசு- இசைநாடகம்
இம்மனுவல்- நாட்டுக்கூத்து,
மனோகரா - நாட்டுக்கூத்து,
சூர்ப்பனகையின் சூழ்ச்சி- நாட்டுக்கூத்து,
பூதத்தம்பி - இசைநாடகம்,
குருமணி யோசவாஸ்- நாட்டுக்கூத்து,
சம்பூரண அரிச்சந்திரா - நாட்டுக்கூத்து,
தண்டமிழ்த் தண்டலை-பிள்ளைப்பாடற் புத்தகம் ஆகியவைகளை இயற்றி மேடையேற்றி யுள்ளார். ஆயினும் இதில் அச்சேற்றப்பட்டு வெளியிடப்பட்ட நூல்களாவன

01)இம்மனுவல்- நாட்டுக்கூத்து,
02)குருமணி யோசவாஸ்- நாட்டுக்கூத்து, இந்தக் கூத்து நூல் 22.09.2002இல் யாழ். திருமறைக் கலாமன்றத்தின் முத்தமிழ் விழாவில் வெளியி டப்பட்டது
03)சம்பூரண அரிச்சந்திரா- நாட்டுக்கூத்து,
04)தண்டமிழ்த் தண்டலை பிள்ளைப்பாடற் புத்தகம் அத்துடன் தமிழ்த்தாய்வாழ்த்து மற்றும் பாடசாலை நிகழ்வுகள், கும்மிப்பாடல்கள், கோலாட்டப்பாடல்கள், நாட்டார்பாடல்கள், குறுநாடகங்கள், போன்றவற்றையும் பிரியா விடை நிகழ்வுகளுக்கான பாடல்களையும் இயற்றி வழங்கி யுள்ளார். இவைமட்டுமன்றி புலவர்பெருமான் தற்காப்புக்கலை, செகஜால சித்து விளையாட்டுக் கள், கைப்புரட்டுக்கள், கண்கட்டி வித்தைகள் போன்ற சாகசக்கலைகளையும் கிப்னோடிசம், மெஸ்மெரிசம் போன்ற மனோவசியக் கலைகளை யும் கற்றுத்தேர்ந்தவர். மேலும் இவர் தனது பெருந் தேவியார் (தேவசகாயம்பிள்ளை ஞானரத்தினம்) மூலம் ஐந்துக்கு ஐந்து ஆண்பெண்பிள்ளைச் செல்வங் களையும் பெற்றெடுத்து சீரும் சிறப்புமாக வாழ்ந்தார். பூலோக வாழ்வின் பிற்பகுதியில் மிகச்சிறப்பாக வாழ்ந்து பலபேறுகள் பெற்ற தன்மையில் இந்தப் புலவர் பெருமானுக்குப் பல விருதுகளும் பட்டங்களும் கௌரவங்களும் தானாகவே கிடைக்கப்பெற்றன.

அவை

01)கலைஞர்-கௌரவச்சான்றிதழ்- 09.05.1993ல் யாழ். திருமறைக்கலாமன்றத்தினால் வழங்கிக் கௌர விக்கப்பட்டார்.
02)முத்தாரக்கவிஞர் - யாழ். பாசெய்யூர் வளர்பிறை நாடகமன்றத்தினால் 18.08.1984 இல் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.
03)செஞ்சொற் கவிஞர்-யாழ்.பாசெய்யூர் நாட் டுக்கூத்துக் கலை இலக்கியக் கழகத்தால் பொற் கிளியும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.
04) அண்ணாவியார் கணக்கர் ஞாபகார்த்தப் பரிசில் மற்றும் இலங்கை இலக்கியப் பேரவை சான்றிதழ் - 1994ம் ஆண்டு வெளிவந்த ஆக்கவிலக்கியங்களில் புலவர்பெருமானின் இம்மனுவல் நாட்டுக்கூத்துக்காக 1997ம் ஆண்டு இலங்கை இலக்கியப் பேரவையால் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.
05)பாராட்டிதழ்-ஈழத்துப் பூதந்தேவனார் தமிழ்ப்புலவர் கழகத்தால் 11.02.2004 இல் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.
06)கலாபூஷணம்- இலங்கைக் கலைத் துறைக்காற்றிய மேலான சேவைக்காக 04.02.2004 இல் இலங்கைக்கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.



> பூலோக வாழ்வின் பிற்பகுதியில் மிகச்சிறப்பாக வாழ்ந்து பலபேறுகள் பெற்ற தன்மையில் இப் புலவர் பெருமானுக்குப் பல விருதுகளும் பட் டங்க ளும் கௌரவங்களும் தானாகவே கிடைக் கப்பெற்றன.


மேலும் புலவர் பெருமானின் இத்தனை அளப் பெரிய படைப்புக்கள், பட்டங்கள் மற்றும் கௌரவங்கள் அனைத்துக்கும் பக்க பலமாகவும் உறுதுணையாகவும் இருந்து வந்தவர் இவரது பாரியாரான திருமதி தேவசகாயம்பிள்ளை ஞானரத்தி னம் என் பவரே எனக்கூறினால் மிகையாகாது. ஏனெ னில் இதனைப் புலவர் பெருமான் பல இடங் களில், இல்லாள் அகத்தி ருக்க இல்லாதது ஒன்றில்லை எனக்கூறி விளக்கியுமுள்ளார். பின்னர் அவரது தொண்ணூறாவது வயதில் புலன்கள் செயலற்ற தன்மை உண்டாகி சுழுத்திநிலை எய்தி 25.04.2004 அன்று சாயுச்சியமடைந்தார்.

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து வேண்டும் பனுவல் துணிவு என்பது பொய்யா மொழி. அதற்கு இணையாகத் திகழ்ந்தவர் பாசெய் யூர்ப் புலவர் தான் தோன்றிக்கவிராயர் ஆசீர்வாதம் தேவ சகாயம் பிள்ளை செகராசசிங்கம்.

தத்து கடல் தென்கரைபால்
தவழ்பாசெய் யூராம்,
அத்தனையும் நெய்தல்நிலமுதலி கரை
யாளராம், வித்துவழி பா வே ஆசீர்வாதம்
முன்பெயராம், சித்து வித்தகன்
இராசாத்தி மணிவயிறு பேறாம்,
ஆற்றல் தனில் தனக் கிணை
யாருமிலாதவனாய் - அறி
வூற்றமதில் அட்டதிக்கு வியத்தகு கார
ணனாய் ஏற்றமுறு வித்தியாதனத்தில் குரு
குலக்குரிசில் உதயணனாய், வாய்மையில்
வரலாறு மெச்சரிச்சந்திரனாய் - மனத்
தூய்மையில் பார்புகழ் மனிதரில் உத்தமனாய்
மாயாஜால சித்தில் பாரதம்புகழ் பேராசான்
சர்க்காராய், கவித்துவச் சொத்தில்
தாடியுஞ்சடையுமிலாத் தாகூராய்,
குரு ஆசானில்லா முதிர்ச்சியில் ஏகலைவனாய்,
இறவாத தமிழ்வளர அயராது உழைத்து,
மறவாது நிலைக்க தீந்தமிழில் பாக்கள் யாத்து,
வரவாகுந் தலைமுறையை தினம் தினம் ஈர்த்து,
இறவாப்புகழ் பூத்தாய், ஏற்றினோம்
இதயமதனில் சங்கத்தமிழ் தந்த
வார்த்தைகளால், நின்புகழ் பாடி தங்கத்தமிழா
உமைப்போற்றி எமைத் தேற்றுகிறோம்,
தறுகண் வீரத்திலே பயமறியாச் சிங்கமே,
மறவோம் உம்மை இத்தரணியுள மாட்டே,
சிந்தை வைத்துயிர் எனைத்தந்த தந்தையே,
சந்ததமும் எனைப்பயந்த தாயாக, விந்தை பல
கற்றுத்தந்த ஆசானாக, தர்மம் ஞானம்
சொல்லித்தந்த குரவராக, செந்தமிழில் பேச
படித்துத்தந்த எந்தை கோமானுக்கு
வந்தனைகள் அனேகந்
தந்தவர் உச்சித பாதம் மெச்சி
முத்தி இறைஞ்சுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோ.புரட்சியின் "ஆஷா நாயும் அவளும்" (சிறுகதைத் தொகுதி)



■ தேவி பரமலிங்கம்

புனை கதைத்துறை தமிழில் தோன்றி நூற்றூண்டுகளையும் தாண்டிவிட்டது. தமிழ்நாடு, ஈழம், புலம்பெயர் நாடுகள் எல்லாவற்றிலுமாககணிசமான குறிப்பிடத்தக்கவளர்ச்சியை அது அடைந்துள்ளதாகப் பெருமைப்படலாம்.
புதிதாகப் புனைகதைத் துறையுள் நுழைபவர்களின் அநேக கதைகள் ஆரம்பத்தில் தோன்றிய நிலையில் காணப்படுவதையே அவதானிக்கலாம். ஒருசிலர்மட்டும்ஆரம்பத்திலேயே மிகவும் தரம் வாய்ந்த கதைகளைத் தந்து முதன்மை பெறுவதையும் மறுக்க முடியாது. அதற்கவர்கள் மேலான வாசிப்புத்தளத்தை சமகாலத்தும், முன்னதாகவும் பேணி வந்துள்ள அனுபவம் அமைவதே காரணம்.
ஆக்க இலக்கியமும், சிருஷ்டி இலக்கியமும் என்னும் பொருளில் கட்டுரை ஒன்றை எழுதி இருந்தேன். சினிமாவுக்கான வாழ்நாள் சாதனையாளர் ஒரு பத்தியில் இரண்டும் வேறு வேறென்று நான் எழுதியதை காரண காரியங்களை விளக்கிக்கூறாமல் கொச்சைப்படுத்தி இருந்தார்.
அந்த இடத்தில் அவரொரு சினிமா சாதனையாளர் என்பதால் சினிமாவை வைத்தே விளக்கலாம். அப்பவும் அவருக்கு விளங்குதோ என்னவோ பொறுத்துப் பார்ப்போம்.
ஆக்க இலக்கியம் ஒரு சினிமாவைப் போன்றது. சிருஷ்டி இலக்கியம் அந்தச் சினிமாவைத் தயாரிக்க அல்லது உருவாக்கப் பயன்படும் எழுத்துப் பிரதியைப் போன்றது.
இளைஞர் யோ.புரட்சியின் "ஆஷா நாயும் அவளும்" சிறுகதைத்தொகுதியைவாசிக்கையிலும், வாசித்துமுடித்ததும்எனக்குப்பட்டதுஇதுதான். அவரது கதைகள் சிருஷ்டிக் கூறுக்குள் அடங்காமல்ஆக்கஇலக்கியப்பங்கைக்கொண்டவை. ஆக்கம் எனப்படுவது பண்ணப்படுவது அதாவது ஒரு கதையை இயல்பாகச் சிருஷ்டிக்காமல் வெட்டி ஒட்டிப் பண்ணப்படுவதுபோல் எழுதுவது. யோ.புரட்சியின் அத்தனை கதைகளும் அந்தப் பாங்கில் எழுதப்பட்டிருப்பதை வாசகன் பகுப்பாய்ந்து பார்க்கலாம்.
நூலில் அடங்கிய 11 கதைகளும் 60 பக்கங்களில்அடங்கிஉள்ளன. அணிந்துரை முதலாய மரபு முறைகள் எதுவும் பின்பற்றப்படவில்லை. கல்வி ஒளி வழங்கிய 57 ஆசிரியர்களின் விவரங்கள் 2 பக்கங்களில் தரப்பட்டுள்ளன. அம்மாவின் வாழ்த்துச் செய்தி. நாவலாசிரியர் வவுனியூர் இரா.உதயணன் வழங்கியவை, யோ.புரட்சியின் ஆதங்க வரிகள், நூல் பதிப்பு விவரம், பொருளடக்கம், 02 செய்திப் பக்கம், 04 வெற்றுப் பக்கம் முன்பின் அட்டை அடங்கலாக 18 பக்கங்கள். 98 பக்கங்களில் மீதி 20 பக்கங்கள்..... விலை 2.20/=

**இனி அவரது ஆஷா நாயும் அவளும் கதைகளை வாசகர்களோடு நுகரலாம்.**

நதியா, பிரபுவை வெறித்தனமாகக் காதலிக்கிறாள். தாய், தந்தைக்குப் பொய்யுரைத்து அவனுடன் தூர இடமொன்றுக்குச் சென்ற இடத்தில் கர்ப்பமாகி ஏமாறுகிறாள் நதியா. ஏதேச்சையாக பஸ்சில் சந்தித்த காதலரில் பெண்ணை அணுகி புத்திமதி உரைக்கிறாள். இது முதல்கதை; காதல் அவசரம்.
தற்கொலை இரண்டாவது. காதலில் தோல்வியுற்றுத் தற்கொலைக்கு முயலும் மணியைத்தடுத்துக் காக்க நவநீதன் எடுத்த முயற்சி பலிதமாகிறது.
அடுத்து, பார்வைபெறும்விழியாள்கொமினிக்கேசனில்பிரதா, இராகுலன்காதல்முகிழ்க்கிறது. 2009வன்னியில்பிரதாகண்களைஇழந்ததை அறியாத இராகுலனிடம் இருந்து விலகமுனைகிறாள். திடீரென நேரில் வரும் இராகுலன் உண்மையை அறிந்ததும் அவளை ஏற்றுக் கொள்ளும் கதை.
'மாறுகிறாள் மனைவி, 'கோகுலனைத் திருமணம் செய்து கொண்ட தீபா, அதிகமாகவே அவனை அடிமையாக்கிக் கொண்டதை சிநேகிதி சுகன்யா கணவனைஇம்சைசெய்வதைக் கண்டு மாறுவதாகக்கதைகூறிச் சென்றுள்ளது.
இரண்டு மொட்டுக்கள் விரிகின்றன. புரட்சி தன்னால் காதல் கதைகளை மட்டுமல்ல கண்ணீர்க் கதைகளையும் எழுத முடியும் எனக்காட்டும் கதை. 12 வயதான கண்ணாவும் இரண்டரை வயதான தங்கை நிரோசாவும் முள்ளிவாய்க்காலில் தாய், தந்தையை இழந்து சிறிய தாயுடன் படும்பாடுகள் விவரிக்கப்பட்டுள்ளன.
'இதுவும் வேலைதான்', மிதுசன் வேலை கிடைக்காமல் நகுலேசின் கராஜ்சுக்குப் போகிறான். அங்கே இன்டர்வியூ அதிகாரி, டாக்டர், அதிபர் போன்றோர் வாகனங்களைச் சீர் செய்ய நாடுகின்றனர். நகுலேஸ் புத்திமதி கூறி கராஜ்ஜில் வேலை வழங்குகிறான்.
'ஒகஸ்ட்25', 'ஆசையின்வலையில்இணையாத கோடுகள்', 'துரோகி ஆகிடும் மனைவி', ஆஷா நாயும் அவளும் போன்ற மற்றும் ஐந்து கதைகள் இடம்பெற்றுள்ளன. இவ்விதம் படைப்பாற்றல் எகிறிப் போகும் யோ.புரட்சி நல்ல சிறுகதை, நாவல், கவிதை, விமர்சன நூல்களைத் தெரிவு செய்து வளரும் வாய்ப்பு நிறையவே உள்ளது. வெளியீட்டுத் துறையையும் இணைத்துக் கொண்டுள்ள அவருக்கு எதிர் காலம் சிறப்பாக அமைய வாழ்த்துக்கள்.

# திருமுறைத் தேனமுத மழை பொழிந்தது





■ இராசையா ஸ்ரீதரன்

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான சிவ பெருமானுடைய அருட்பெருங்கருணையால் எம்மிடையே வாழ்ந்து மறைந்த சித்தரான கடையிற் சுவாமிகளின் 124 ஆவது குருபூசைத்தினத்தன்று யாழ். குமாரசாமி வீதியிலமைந்துள்ள ஸ்ரீ சிவ குருநாத பீட மகாதேவா சுவாமிகள் ஆச்சிரம வேதாந்த மடத்தில் திருமுறைத் தேனமுத மழை பொழிந்தது. தேவார விரும்பிகள் அதில் நனைந்தனர். எமது ஈழவளநாட்டின்யாழ்ப்பாண மாநகரிலே தேவார இசைமணியாகத் திகழும் தாவடியூர் கே.எஸ்.ஆர். திருஞானசம்பந்தனும், தமிழ்நாடு ஓதுவார் மூர்த்தி, தேவார இசைமணி குமாரசாமி இராமச்சந்திரனும் இணைந்து வழங்கிய இந்தப் பண்ணிசைக் கச்சேரி மிகவும் நன்றாக அமைந்திருந்தது.
இருவரும் சேர்ந்து திருமுறைகளைப் பண்ணோடு பாடி அங்கு வந்திருந்த அனைவரையும் தேவாரத் திருமுறைத் தேனமுத மழையில் நனைய வைத்தனர். நீண்ட நாள்களுக்குப் பிறகு இவ்வாறானதொரு சிறப்பான திருமுறைச் கச்சேரியைக் கேட்பதற்கு ஒரு நல்ல வாய்ப்பையளித்த யாழ்.குமாரசாமி வீதியிலமைந்துள்ள வேதாந்த மடம் குரு முதல்வர் சுவாமிகளுக்கு மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.
தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்துள்ள ஓதுவார் மூர்த்தி, குமாரசாமி இராமச்சந்திரன் தமது இனிய குரலில்தேவாரங்களைப்பாடிஅசத்தியபோது, எமது யாழ்ப்பாண ஓதுவார் கே.எஸ்.ஆர். திருஞானசம்பந்தன் இலங்கையிலும் திறமை வாய்ந்த ஓதுவார்கள்இருக்கிறார்கள்என்பதை மிகத் திறமையாகப்பாடி நிரூபித்து சபையோரின் ஏகோபித்த பாராட்டுக்களைப் பெற்றுக் கொண்டார்.
அதுமாத்திரமன்றி,
தாவடியூர் திருஞானசம்பந்தன் தம்முடன் சேர்ந்து பாடுகின்ற தமிழ் நாடு ஓதுவாருடைய குரலிசைக்கேற்ப சுருதியை அளவாக லயமாகச் சேர்த்துப் பாடிய பண்பு பாராட்டுக்குரியது. இருவருமே ஒருவருக்கொருவர் சளைத்தவரல்லர் என்பதை ஜனரஞ்சகமாகப் பாடி நிரூபித்தமை குறிப்பிடத்தக்கது.
இந்தக் கச்சேரியின் ஆரம்பமே பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர் கோன்கழல் போற்றி என்று நால்வர் வணக்கத்துடனும் சைவத்தின் மேற் சமயமில்லை என்று உண்மை விளக்கத்துடனும் களைகட்டத் தொடங்கி விட்டது. அதற்கடுத்தாற்போல் 'தோடுடைய செவியன்' எனும் ஞானசம்பந்தரின், முதல் தேவாரமும் 'கூற்றாயினவாறு' எனும் அப்பரின் முதல் தேவாரமும், பித்தாபிறைசூடி எனும் சுந்தரரின் தேவாரமும் மிகவும் இனிமையாக அமைந்து எல்லோருடைய உள்ளங்களையும் கொள்ளை கொண்டன எனில் மிகையாகாது.
கச்சேரியில் சிகரம் வைத்தாற்போல் அமைந்தது மாதர் மடப்பிடி என்ற தேவாரமாகும். இது பலவித தாள லயத்துடன் மிக இனிமையாக, இடையிடையே சிறுசிறு சங்கதிகளுடன் ரம்மியமாக அமைந்து ரசிகர்களைத் தலையாட்டி ரசிக்க வைத்ததோடு பலத்த கரகோசத்தையும் பெற்றுக் கொண்டது.
ஈற்றில் பஞ்சபுராணத்துடன் பண்ணிசைக் கச்சேரி நிறைவுக்கு வந்தது. இந்தக் கச்சேரிக்கு அணிசெய் கலைஞர்களாக அ.ஜெயராமன் வயலினையும், எஸ்.துரைராஜா மிருதங்கத்தையும், சதா.வேல்மாறன்தபேலாவையும் இசைத்துச் சுவை சேர்த்தார்கள். இதில் ஒரு முக்கிய விடயம் என்னவென்றால் தேவாரத்துக்கு ஏற்றாற்போல வாத்தியத்தை அடக்கி வாசித்து இவர்கள் நிகழ்ச்சியைச் சோபிக்கச் செய்தமைதான்.
மொத்தத்தில் அனைவருமே தத்தம் பங்குகளைச் சிறப்புறச் செய்து கச்சேரியை சிறப்புற அமைத்தார்கள் என்றால் அது சாலப்பொருந்தும்.
மேலும் திருஞானசம்பந்தன் ஓதுவாரின் மாணவி ஒருவரும் சேர்ந்து பாடி இந்த நிகழ்ச்சியை மெருகூட்டியதும் குறிப்பிடத்தக்கது.
தமிழ்நாடு ஓதுவார் கு.இராமச்சந்திரன், திருமுறைகளும்வாழ்க்கை நெறியும் எனும் பொருளில் சொற்பொழிவாற்றி எமது அன்றாட வாழ்வில் நாம் கைக்கொள்ள வேண்டியவை பற்றியும் விவரித்தமை ஓர் அரிய நிகழ்வாகும்.
நல்லதொரு பண்ணிசைக் கச்சேரியைக் கேட்க முடிந்ததே என்ற திருப்தியுடன் வந்திருந்த அனைவரும் அங்கு நடைபெற்ற மகேஸ்வர பூசையிலும் பங்குபற்றிச் சிறப்பித்தமை பாராட்டுக்குரியதே!

# முல்லைக் கவி தனுஜாவின் (அபிக்குட்டி) 'ஒரு பூவின் மடல்' கவிதை நூல் தொடர்பான நூலாய்வு

(D பக்கத் தொடர்ச்சி)

யதார்த்தமான வரிகள் ஆழமான சிந்தனையே. இவ்வாறாக ஒவ்வொரு கவிதைகளும் புதுமையாகவே உள்ளன.
ஓசை நயம், அணிகள் என்பன மரபுக்கவிதைகளுக்கு மாத்திரமன்றி புதுக்கவிதைகளுக்கும் உண்டு என புதுக்க விதைத்தது"( புதிதாக உரைத்து) புதுக்கவிதை பாடியுள்ள சகோதரி தனுஜாவின் பாடுபொருள்களும், கவிபாடும் விதங்களும் அற்புதமானவை. சொற்கோர்ப்புகளில் இன்னும் சற்றுக் கூடிய கவனம் செலுத்துவதன் மூலம் மேலும் சிறப்பாகக் கவிதைகளை ஆக்கமுடியும். வளரும் கவியாக, கன்னி நூலாக இந்த நூல் வெளிவருவதால் குறைகள் குறைகளாகக் கொள்ள முடியாவிடினும் அவரது அடுத்த வெளியீடுகளின் வெற்றிக்கு அந்தக் குறைகள் நிறைவைத்தரும் என்பதே உண்மை. எளிய, இலகு நடையில் கவிதைகள் எழுதப்பட்டிருக்கின்றன. குறியீடுகள் மற்றும் மொழிநடைகளைப் பொருத்தமாகக் கையாண்டு கவிதைகளை எழுதும் ஆற்றலை வளர்ப்பதன் மூலம் இன்னும் மிகத்தரமான கவிதைகளைப் படைக்க இயலும். தொடர்ந்தும் பல்லாயிரம் கவிதைகளை எழுதிப் புதுப்புது நூல்களைவெளியிட்டும்கல்விப்பயணத்துடன்இணைந்துகவிப்பயணத்தையும் முன்னெடுத்துச் செல்ல சகோதரி தனுஜாவை யாவரும் வாழ்த்துவதோடு இன்னும் இளம் எழுத்தாளர்கள் பிறப்பெடுக்க வேண்டும். அவர்களுக்கு தனுஜா என்றும் முன்னுதாரணம் என்றும் கூறிடமுடியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லாவி கஜன்

# முல்லைக் கவி தனுஜாவின் (அபிக்குட்டி) 'ஒரு பூவின் மடல்' கவிதை நூல் தொடர்பான நூலாய்வு

**எட்டுத் திக்கும் சென்று கலைச்செல்வங்கள்**
**யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"**

என்ற புரட்சிக்கவி பாரதியின் கனவு அந்தக் காலகட்டத்தில் முதன்மை பெறாவிட்டாலும், இன்றைய சூழலில் வலுவடைந்து வருவதைக் காணமுடிகின்றது. கலைகளும், இலக்கியங்களும், வயது, பால், இன, மொழி, சமய வேறுபாடுகள் எதுவுமின்றி பிறப்பெடுத்தபடியிருக்கின்றன. முதுபெரும் கவிஞர்களை விடவும் இளம் கவிஞர்களின் முகிழ்ப்பு தமிழுக்கும் எமக்கும்மகிழ்ச்சியையேதருகிறது.குறிப்பாக வடபுலத்தை எடுத்துக்கொள்ளும்போது ஏராளமான இளம் எழுத்தாளர்கள் தங்கள் எழுத்துக்களைகிடைக்கின்றசந்தர்ப்பங்களை நழுவவிடாமல் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். தங்களின் படைப்புக்களை தாங்கி நூல்களாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த 19ஆம் திகதி சனிக்கிழமை முல்லைக் கவி,தனுஜா எழுதிய ஒருபூவின்மடல்' கவிதை நூல் முல்லைத்தீவு விசுமடு மகா வித்தியாலயத்தின் இன் உள்ளக கலையரங்கில் வெளியிடப்பட்டிருந்தது. உண்மையில் இந்த நூல் தொடர்பான கண்ணோட்டத்தைச் செலுத்த முன்னர் நூலாசிரியர் பற்றித் தெரி விப்பது இன்றிமையாததே. விசுவமடு மகாவித்தியாலயத்தின் பழைய மாணவியும் தற்போது கிளிநொச்சி முருகானந்தா மத்திய கல்லூரியில் க.பொ.த. உயர்தர பிரிவில் புதுமுக மாணவியாகவும் பயின்று வரும் மாணவியே தனுஜா ஆவார். விளையாட்டும் கல்வியும் இரு கண்கள் என்பர். இந்தக் கூற்றை இளவயதிலேயே மெய்ப்பித்துச்சாதனைகளுடன்நடைபோடும் இவரது ஆற்றல்கள் அளவு கடந்தவை. இள வயதிலிருந்தேமைதானத்தில் ஒருஓட்ட வீராங்கனையாகத் தன்னை நிலைப்படுத்தி, செல்லுமிடமெங்கும் சாதனைகளைத் தனதாக்கி நிமிர்ந்தவர். படிப்படியாக எழுத்துத் துறையிலும் தன்னை நிலைநிறுத்தி சாதனைகளைப் பெற்று நிமிர்ந்தார். எந்தவொரு போட்டி நிகழ்வுகளிலும் சளைக்காது பங்காற்றி தன் திறமைகளை அகில இலங்கைரீதிவரைவருடாவருடம் பறைசாற்றிக் கொண்டிருக்கும் இந்த மாணவி இன்று'ஒருபூவின்மடல்' ஊடாக எழுத்துலகில் தன் நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்.

பாடசாலைக் காலத்திலே நூல்களை எழுதுபவர்களுடைய தொகை விரல் விடுத்து எண்ணினும்விடையறிய முடியாதநிலையில்கடந்த மே மாதத்தில் வவுனியா கனகராயன் குளம் ம.வி. மாணவி வேதிகா பிரபாகரன்' கண்ணாடிப் பூக்கள் என்றதொரு கவிதை நூலைதனது பள்ளி நாள்களிலே வெளியீடு செய்திருந்தார். அடுத்து தனுஜாவின் 'ஒரு பூவின் மடல்' நூல் வெளியீடு அமைந்திருக்கின்றது.

எழுத்து, விளையாட்டு என்பன கல்விக்குத் தடைபோடும் என்ற கொள்கையை அடியோடு மாற்றி, அவை யாவும் ஒன்றிலொன்று தங்கி, ஒன்றையொன்று வளர்க்கும் என்ற தார்ப்பரியத்தை நிலைநாட்டியிருக்கிறார் தனுஜா. இதனை அவரது கவிதைகளில் எம்மால் நேரடியாக அவதானிக்க முடிகின்றது. பள்ளிப் பருவமென்பது கிள்ளி, அள்ளி நுகரக்கூடிய அற்புத பருவம். இந்தப் பராயத்திலே தனது எழுதுகோல் சிந்திய கவித்துளிகளை ஒன்றாகக் கோர்த்து இன்று 'ஒரு பூவின் மடல்' ஆக தனது கன்னிப்படைப்பை இலக்கிய உலகில் அடிநகர விட்டுள்ள இந்த மாணவியின் ஆற்றல்,திறமைஎன்பனஏனையமாணவர்களுக்கு முன்னுதாரணமாய் அமையும் என்பதில் ஐயப்பாடில்லை.

அழகியதொருஅட்டைப்படத்துடன்கூடியவகையில்76பக்கங்களில்39கவிதைகளைக்கொண்டதாக இந்த நூல் அமைவு பெற்றுள்ளது. அற்புதமானதொரு அட்டைப்படம் வானையும் பசும் புல்வெளியையும் பின்புலப் படிமமாக்கி 'ஒரு பூவின் மடல்' என்று அழகிய எழுத்துருவில் பொறிக்கப்பட்டிருக்கின்றது. தலைப்பு வானிலிருந்து இரத்த மழை தரைநோக்கிப் பெய்கிறது. பசும்புல் வெளியில் மலர்ந்து நின்ற ஒரு அழகிய ரோஜா மலர், அந்த இரத்த மழையில் தோய்ந்தபடி நிற்க, அதிலிருந்து சிந்தும் குருதி, மலரின் கீழே வைக்கப்பட்ட பாத்திரத்துள் சேர்ந்து தேங்கி பாத்திரத்தை மீறி தரையையும் நனைக்கின்றது. மலரின் தண்டுப்பகுதி அதாவது அடிப்பகுதி வெண்மை நிற ஒரு இறகாகக் காட்டப்பட்டுள்ளது. அதன் கீழே சுவடியில் 'இப்படிக்கு' என்ற வாசகம் பொறிக்கப்பட்டள்ளது. அட்டைப்படத்தில் பிரதானமாக றோஜா மலர், இரத்த மழை, சிறியதொரு பாத்திரம், வெண் ணிறகு என்பவற்றை நாம் காண்கிறோம். வெறுமனே இவை அழகுக்காகச் சேர்க்கப் படவில்லை. நூலின் தலைப்பை உள்ளே 22 ஆவது கவிதை (பக். 45 – 49) அலங்கரிக்கிறது. உண்மையில் இந்த அட்டைப் படத்தை வரைந்த வரும் ஓர் இளம் பூ தான். ஆனால் அந்தப் பூ வரைந்த மடலாகக் கருதி தலைப்பு இடப்பட வில்லை. 'ஒரு பூவின் மடல்' என்ற தலைப்பில் உள்ள பூ வேறுயாருமல்ல. கடந்த மே மாதம் புங்குடுதீவில் பள்ளிச் சீருடையில் வைத்துக் காமுகர்களால் படுபாதகமாகக் கற்பழிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்ட வித்தியா தான். பள்ளி உடையுடன் சென்ற மலர் காமுகர்களின் காமத்துக்கு இரையாகி இரத்தத்தில் உழன்று அடங்கிப் போகின்றது. அந்த வலி, பிரிவு வரையறுக்க முடியாதது. இது ஒருவரை, இருவரை, ஒரு குடும்பத்தை, ஒரு ஊரை மாத்திரம் பாதிக்கவில்லை. உலகையே ஒருதரம் திரும்பிப் பார்க்க வைத்தது. இதனை மையப்படுத்தி அட்டைப்படம் குறியீட்டுப் பொருள்களால் படிமப்படுத்தப் பட்டிருக்கலாம் என கருதத் தோன்றுகின்றது.




பல கவிதைத் தொகுப்பு நூல்கள் தற்கால விடயங்களை முதன்மைப்படுத்திப் படைக்கப்படுகின்றன. அவற்றில் இடையிடையே அனுபவங்களும், ஏக்கங்களும் ஆங்காங்கே இளையோடியிருப்பினும், அவை ஒருவேறுபட்ட கோணத்தில் அணுகப்படும். முன் அட்டையில் இந்தநூல் எத்தகைய ஒரு நூல் என்ற விடயம் குறிப்பிடப்படாதது ஒரு குறையாக இருப்பினும், அதனை நிறைவாக்கியிருக்கின்றன உள்ளே உள்ள தனுஜாவின் கவிதைகள். ஒரு கன்னிப் படைப்பை வெளியிடும் எழுத்தாளர் என்ற அந்தஸ்திலிருந்து ஒரு படி உயர்ந்து பல நூல்களைப் பிரசவித்த தன்மையில் பல்வேறு கருப்பொருள்களைத் தனது கவிதைகளுடே சிதற விட்டுள்ளார். தமிழ் எப்.எம். வானொலியின் பொக்கிசம் என்ற நிகழ்ச்சியினூடாக ஒரு பிள்ளைக் கவியாக வளர்ந்த தனுஜா, பின்னர் உதயன், வலம்புரி நாளேடுகளில் பங்கஜன் தனுஜா, விசுவமடு அபிக்குட்டி ஆகிய பெயர்களில் கவிதை எழுதியும் பிரபலமானவர். தனது 14 வயது முதல் 17 வயது வரையான காலப்பகுதியில் அவரால் அவ்வப்போது எழுதப்பட்ட கவிதைகள் இந்த நூலில் தொகுக்கப்பட்டிருக்கின்றன. தனது சுயவிருப்பு, வெறுப்புகள், அனுபவங்கள், எதிர்ப்பார்ப்புக்கள், பிரிவுகள் முதலானவற்றுடன் இன்னும் பல விடயங்களையும் 'ஒரு பூவின் மடல்' வாயிலாக பொதித்திருக்கிறார் தனுஜா.

இந்த 39 கவிதைகளை ஒருங்கே புரட்டுகையில் போர் தந்த இழப்புக்கள், வலிகள், மண்வாசம், தாய், உறவுப் பிணைப்புக்கள், விளையாட்டு அனுபவங்களும் அதன் வலிகளும், சீதனக் கொடுமை, குருபக்தி, நட்பு, பெண்ணியம் எனப் பல்வேறு கருக்கள் உருவெடுத்திருக்கின்றன. கவிதைகள் எல்லாம் ஒரே கனதிப் புடையனவாக அல்ல. தனது மனவுணர்வு மூன்று வரிக்குள் தீர்ந்தாலென்ன, முந்நூறு வரிகளுக்குள் தீர்ந்தாலென்ன மனவுணர்வு முழுமை பெறும் வரையில் கவிதைகள் அமையும் என்ற கருத்தை ஏலவே என்னுரையில் தெரிவித்த நூலாசிரியரது கருத்தை அவரது கவிதைகளில் காணமுடிகிறது. ஒரு சில கவிதைகள் மாத்திரமே சற்றுப் பெரிய கவிதைகளாக இருக்கின்ற போதும், பெரும்பாலான கவிதைகள் குறிப்பிட்ட வரிகளைக் கொண்டு அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளன. விதிவிலக்காக குறைந்தளவான வரிகளாலான கவிதைகளையும் காணமுடிகிறது. வரிகளின் எண்ணிக்கையை விட அவற்றின் கனதியே பிரதானம். ஒரு வரியிலும் கவிதை வடிக்கலாம். ஓராயிரம் வரிகளிலும் கவிதை வடிக்கலாம். எது எவ்வாறெனினும் அந்த வரிகள் தரும் கரு கவிதையைத் திருவாக்குகிறது.

இந்த நூலில் உள்ள பெரும்பாலான கவிதைகளுக்கு அடிக்குறிப்புக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதாவது குறித்த அந்தக் கவிதை எழுதப்பட்ட காலம், நோக்கம், பிரசுரிப்பு பற்றிய விடயங்கள் வழங்கப்பட்டிருக்கின்றமை தரமானதொரு வெளிப்பாடாகின்றது. போரின் போது அப்பாவி மக்களை அடியோடு ஒழித்த இலங்கை அரசின் மீது வெறுப்புற்று எழுதிய தமிழ் மகளின் வேண்டுகோள் என்ற கவிதை, நூலின் முதற்கவிதையாக நூலை அலங்கரிக்கிறது.

**தெருத் தெருவாய்க் கிடக்கும்**
**எலும்புத்துண்டுகளும்**
**புதைந்து கிடக்கும் உயிருள்ள குண்டுகளும்**
**மனிதனை இன்னும் வதைக்கிறது**
**பார்த்தாயா?"**

என்ற அந்த வரிகள் போரால் தமிழ் மக்கள் அடையும் வலிகள், இழப்புக்கள் இன்னும் முற்றுப்பெறவில்லை, தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன என்ற செய்தியை வெளிப்படுத்தி நிற்கிறது. இவ்வாறாக "நீங்காத நினைவுகள்", "மே 18" முதலான தலைப்புக்களாலான கவிதைகளும் போர் தந்த வலிகளை பசுமரத் தாணியாய்ப் பதித்து விட்டிருக்கின்றன. போரின் வாழ்வில், தான் கண்முன் கண்ட காட்சிகள், அனுபவித்த வலிகள் என்பவற்றை அனுபவப் பார்வையோடு வடித்திருக்கிறார் தனுஜா.

தனது விருப்பத்துக்குரிய உடற்கல்வி ஆசான் இடமாற்றம் பெற்றபோது அதனைத் தாங்காது நொந்து வெந்து நின்று வடித்த "பிரிவின் வலி" என்ற கவிதை, எழுத்தாளரின் தனிப்பட்ட வலியை வாசகன் முன் சித்திரித்து நிற்கிறது.

**"விதி தந்த சாபம்**
**இடமாற்றம் வைத்தது**
**வேறு இடம் சென்றாலும்**
**வெல்லும் வரை விளையாடுவோம்**
**உமக்காக"**

என்ற அந்த இறுதி ஒவ்வொரு வரிகளிலும் பிரிவின் வலிக்கு மேலாக அந்த வலியால் உருவான உறுதிப்பாடு மிளிரக் காண்கிறோம்.

வைரமுத்துவின் வைர வரிகளுக்காய் ஏங்கும் குழந்தை மனதை நயம்பட உரைத்திருக்கிறார். "வைரமுத்துவும் நானும்" என்ற கவிதையூடே. "இதுதான் பெண்ணியம்", "பெரிதாய் பெண்ணியம் பேசாதே", "உருகும் பெண்" முதலான கவிதைகள் பெண்ணியம் சார்ந்த கருத்துக்களை வெளிப்படுத்தும் கவிதைகளாக மலர்ந்துள்ளன. உருகும் பெண் என மகுடமிட்ட கவிதையிலே,

**சூரியனே,**
**உருகும் மெழுகுவர்த்தியை**
**ஏன் உன் உதிக்கும் கரங்களால்**
**உருக்குகிறாய்?**
**இப் பெண்கள் படும்பாடு**
**போதாதென்றோ.......?**

என்ற வரிகளினூடாக சமூகத்தினால் பெண்கள் அடக்கியொடுக்கப்படும் தன்மையை அழகாகச் சித்திரித்துக் காட்டுகிறார்.

தனது வெற்றியை எதிர்பார்த்திருந்த ஆசானுக்குத் தான் தோல்வியை பரிசாக்கிய தருணத்தில் ஏற்பட்ட ஆழ்ந்த கவலையை அழகிய சொற் கோப்புடன் "வலிக்கிறது மனம்" என்ற மகுட மிட்ட 14 ஆவது கவிதையூடாக வரைந்துள்ளார்.

**"நம்பிக்கை என் கையில்**
**வானமும் ஒரு நாள் வசப்படும்**
**வெண்ணிலவும் தலை வணங்கும்**
**என் வெற்றி கண்டு"**

என்ற அந்த வரிகள், தோல்வியைக் கண்டுதுவழாமல் வெற்றிக்காக வீறுநடை போட தன்து மனதுள் தானே இட்டுவைக்கும் நம்பிக்கை எனும் அத்திபார வரிகளாகின்றன. தனுஜாவினது மனோதைரியமும், விடாமுயற்சியும் எதனையும் தாங்கிக்கொள்ளும் மனப்பக்குவமும் பளிச்சிடுகிறது.

20 ஆவது கவிதை வித்தியாவுக்கு சமர்ப்பணமாகிறது. சங்கச் செய்யுள்களிலும் சரி, பிற்காலச் செய்யுள்களிலும் சரி கவிஞர்கள் பெண்களை வர்ணிப்பதில் அலாதிப் பிரியமுடையவர்களாய் இருந்துள்ளனர் என்பது வெளிப்பாடு. பாலியல் பலாத்காரத்தின் பின் படுகொலை செய்யப்பட்ட மாணவி வித்தியாவின் இழப்பு, தனுஜாவையும் பாதிக்கத் தவறவில்லை. பெண்ணைப் புகழ்ந்து புகழ்ந்து பாடித் தம் புகழைச் சேர்த்த கவிஞர்கள், இன்று கதறக் கதறக் காட்டுமிராண்டித்தனமாய் கற்பழித்து கொலை செய்யப்பட்ட பெண்ணின் பரிதாபத்தையோ அல்லது அந்தக் கொடியவனைத் தூற்றியோ பாடாதது ஏன் என்ற கேள்வியை வினவி நிற்கிறது இந்தக் கவிதை. "வித்தியாவுக்காக வீறுகொண்டோம்" என்ற மகுடத்தில் தன் மனவுணர்வை ஆழமாக வேரூன்றியிருக்கிறார் தனுஜா.

**அன்று விபூசிகா**
**இன்று வித்தியா**
**நாளை யாரென்ற**
**ஏக்கத்தில் பதறுகிறது மனம்!"**

மேற்போந்தவரிகள், பெண்களின் இருப்பைக் கேள்விக்குறியாக்கியுள்ள தன்மையைப் புலப்படுத்துவதாய் அமைந்திருக்கின்றன.

நூலின் மகுடமான 'ஒரு பூவின் மடல்' என்ற 22 ஆவது கவிதை ஏனைய கவிதைகளிலிருந்து சற்று வேறுபட்டே அமைகிறது. வித்தியாவுக்காய், வித்தியாவாய் நின்று தனுஜா எழுதிய கவிதை அது. இந்தக் கருத்து அடிக்குறிப்பில்தெரிவிக்கப்பட்டிருப்பதைவிடகவிதையிலும் இளையோடத்தான் செய்கிறது.

இந்தக் கவிதையின் பாடுபொருள், மொழிநடை, சொற்கோர்ப்பு அனைத்தும் மிகவும் தரமானவையாக விளங்குகின்றன. ஒவ்வொரு சொற்களும் அடிகளாக விழுகின்றன. அவ்வளவுக்கு உணர்வு கொப்பளிக்கிறது. கசாப்புக்கடைக்காரன்கூட ஆடு, மாடுகளை அறுக்கும்போது அவை கத்துவதைத் தடுப்பதில்லை. ஆனால் வித்தியாவுக்கு அந்த உரிமையும் மறுக்கப்பட்டது.

**மானிடா!**
**இனியும் உனக்கேன் மறைப்பு?**
**ஆடைகளைக் களைந்து எறி**
**அம்மணமாய் திரி**
**கழிப்பறைக்கு**
**தடுப்புச்சுவர் எதற்கு?"**

என்ற ஒவ்வொரு கேள்விகளும் விடைகாண முடியாமல் கண்ணீரை மட்டும் பரிசாக்கிக் கொள்கின்றன.

**தாயென்றும்**
**தங்கையென்றும்**
**ஏன் பேதம் பார்க்கிறாய்**
**அவர்களும் பெண் தானே.....**
**அவர்களோடும் நீ**
**உன் காமத்தைத்**
**தீர்த்துக்கொள்....."**

என்ற வரிகளில் இன்றைய எமது சமுதாயம் தாங்கி நிற்கும் சமூகச் சீரழிவின் உச்சக்கட்டம் பிரதிபலிக்கப்படுகிறது. "வேலியே பயிரை மேயும்" காலமாகிவிட்டது. பருவமெய்தாப் பாலகி முதல் முதுமை எய்திய ஆச்சி வரை முகம் கொடுக்கும் பாலியல் தொந்தரவுகளையும் கற்பழிப்புக்களையும் பரிசாக்கிவிட்டது இந்த உலகு.

"அண்ணனை உடன்பிறப்பாய்ப் பெற்றிராத வலி, நண்பர்கள் தங்கள் தங்கள் அண்ணன்மாரைப் பற்றிப்பேசும்போது தனுஜாவின் மனம் அடைந்த பாடுகள்," "அண்ணனின் அன்புக்காக" என்ற கவிதையின் ஊடாக மிளிர்கிறது. தான் நேரில் கண்ட காட்சிகள், கற்பனைகள் என்பவற்றையும் உள்ளடக்கிக் கவி பாடிய தனுஜாவின் ஒவ்வொரு கவிதைகளும் வாசகரின் உள்ளக்கிடக்கைகளை ஒருதடவை புடம்போட்டு விடுகிறது.

"கருக்கலைப்பு" என்ற 29 ஆவது கவிதையும் மிகவும் அற்புதமான வரிகளால் சிருஷ்டிக்கப்பட்டுள்ளது. தற்காலத்தில் சமூகப் பிறழ்வுகளினால் பாதிப்படையும் பெண்களின் கௌரவக் காப்பே கருக் கலைப்பு" என முடிவளிக்கிறது இந்தக் கவிதை.

(C பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அழகியலில் ஓவியம்

## மனித இருப்பையும், இயல்பையும் வெளிப்படுத்தும் காத்திரமான கலை வடிவங்கள்

க.ரட்ணேஸ்வரன், விரிவுரையாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

ஓவியம் என்பது உயர்ந்ததோர் ஒப்பற்ற கட்புலக் கலை வடிவமாகும். குகை மனிதர் காலத்திலிருந்து இன்றுவரை இது மிகையாகப் பேசப் படும் ஒன்றாக அமைகின்றது. உலகின் முதன் மொழி, பொதுமொழி என வர்ணிக்கப்படும் இந்தக் கலைவடிவம் இன்றைய நவீன கல்வி யுகத்திலும் கல்வியின் தேர்ச்சிகளிலும் முக்கிய ஒரு கூறாகக் கொள்ளப்படுகின்றது. மாணவர்களின் உள்ளார்ந்த ஆற்றல்கள் வெளிக்கொணரப்படும் இந்தக் கலை மூலம் மனித ஆளுமையும் ஆத்மீக சிந்தனைகளும் பிறக்கின்றன. சுதந்திரமான எண்ணங்களையும், கருத்துக்களையும் வெளிப்படுத்தும் பரப்பாக இது அமைகிறது. ஏனைய துறைகளிலும் விட அறிவுப்புலமும், ஆற்றல் வளமும் உள இயக்கமும் உரிய முறையில் இணைக்கப்படுகின்ற துறையாக அழகியல் காணப்படுகின்றது.

### அழகியல்

நவீன கற்றல் கற்பித்தல் முறைகளில் கலைத்துவப் புகுத்தல்கள் இல்லாத கல்விச் செயற்பாடுகள் வெறும் உப்பில்லாப் பண்டங்களாக உள்ளெடுக்கப்படுவது கண்கூடாகின்றது. கற்றலில் முழுமையடைவதற்குரிய ஆதாரங்கள் கலைக் கல்வியூடாகவே நிரூபணமாகின்றது. பாலியல் மீதான உந்துதல் உள்ளவர்களை சமநிலைப்படுத்தும் ஓர் ஆக்கபூர்வ ஊடகமாகவும் அழகியல் அமைவதாக உளவியலாளர்கள் கூறுகின்றனர். பல்வேறுபட்ட சூழல் காரணிகளால் உள, உடற் குறைபாடுகளால் பின்னடைவு அடைந்த, அடைந்து கொண்டிருக்கின்ற எமது தேசக் குழந்தைகளுக்கு அழகியல் மூலமான அறிவூட்டல்கள் தகுந்த ஆற்றுப்படுத்தல்களாகின்றன.

எமது பாடசாலைகளில் பெரும்பாலானவை கலைக் கல்வியை இரண்டாம் தர நிலையில் வைத்துப்பார்க்கின்ற நிலை கவலைக்குரியது. போட்டிகளில் பங்கேற்பதற்கும் விருந்தினர்களை மகிழ்விப்பதற்குமான ஒரு தளமாகவும் இதனை மட்டுப்படுத்துவது வேதனை தருவதாகும். இந்தக் கலைப் புறக்கணிப்பு களால் வெறும் அறிவை மட்டும் விழுங்கிய திமிங்கிலங்களாக மாணவ சமுதாயம் வெளி வருகிறது. கலைக்கல்வி மூலம் பெறப்படுகின்ற மானிடப் பண்புகளையும், விழுமியங்களையும் இழந்து, ஈற்றில் நெறி பிறழ்ந்தவர்களாக மீதமாவதைக் காண்கிறோம்.

உலக செல்நெறியில் கலைகளின் பார்வையும் பங்கேற்பும் பல்வேறு பரிமாணங்களில் பரவிச் செல்கின்றன. கலைத் தேடல்கள் முளைவிட்டுக் கிளை விடுகின்றன. எமது பண்பியல் சுயங்களையும் தேச அடையாளங்களையும் நிலை நிறுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும் , பேணுவதற்கும் கலைகளே கைகொடுக்கும் காத்திர சாதனமாக அமைகின்றன.

ஓவியம் ஓர் ஒப்பற்ற மொழி, இனம், தேசம் கடந்து மனித வர்க்கத்தின் இயல்பையும் இருப்பையும் நிலை நிறுத்தக்கூடிய உறுதியான ஊடகம்.

வாய்மொழி ஊடாக வெளிப்படுத்த முடியாத மௌனத்தின் ஒப்பற்ற மொழி.

கட்புலமூடாக கவனத்தில் கொள்ளும் காத்திரமான கலைத்தேட்டம்.

சுதந்திரமும் சுயாதீனமும் தடைகளற்று வெளிப்படுத்தப்படும் அற்புதமான அழகியல். விஞ்ஞானி லியானாடோ டாவின்சி முதல் வியத்தகு சாதனையாளர்கள் வரை விந்தைமிகு ஓவியத்தின் மூலம் வியத்தகு சாதனைகள் படைத்தனர்.

பொய்மையும் வெறுமையும் புரையோடிப்போன சமூகவட்டத்தில் மெய்மையின் பிரதிமையாக, எதிர்வுகளின் விம்பமாக வெளிப்படும் உண்மையான ஊடகம்.

வரம்புகள், வரையறைகள், கோட்பாடுகள் தாண்டி எல்லை கடந்த விம்பங்களாய் தனித்துவம் பெறும் கருத்துப்பகிர்வு.

கோட்டுச் சந்தங்களின் கோட்பாட்டுச் சிந்தனைகளும் வர்ணக்கோட்பாட்டு வகைப் பாட்டுத் தகைமைகளும் இதற்கு அவசியமில்லை.

### வரையறையின்றி வரைய விடுங்கள்.....

ஓவிய மொழிக்கு எல்லை கடந்து வரையறுக்க முடியா வயதாகின்றது. சமூக, பொருளாதார, கல்வி மாற்றத்துக்கேற்ப மாறுபாடுகளும், வேறுபாடுகளுக்குமேற்ப நவீன முனைப்புகளுடன் நகர்கின்றது.

ஓர் இசையின் விசை எவ்வாறு பலதரப்பட்ட வரிடமும் பாதிப்பை செலுத்துகின்றதோ, சித்திர மொழியும் கட்டற்ற கவனத்தை ஈர்க்க வேண்டும். இல்லையேல் மனிதரை ஆறறிவிலிருந்து அகற்றித்தான் பார்க்க வேண்டும்.

பகுத்தறிவான பண்புகளுடன் ஓவியத்தின் பொருள் பற்றித் தேடுவோருக்கு அது ஒருவரின் பட்டறிவுத் தேர்ச்சியின் விளைவாகின்றது. வெறும் கட்புலத்தை மட்டும் அது கவனத்தில் கொள்ளாது ஏனைய புலன்களையும் உள்ளீர்த்துக் கொள்ளும் வளமான பலமாக அமைகிறது.

ஒருவரின் படைப்பு எவ்வாறு மற்றவரில் தாக்கம் விளைவிக்கின்றது என்பதைப் பொறுத்தே அதன் பலம் அமைகின்றது.

எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றமளிக்கின்றபோதும் ஓவிய மொழிகளை ஒருவன் தேடலாம். அதில் உருவங்கள் வர்ணங்கள் என்பன சிதைந்து மாறுபட்டு, வேறுபட்டு அரூபமாகித் தோன்றலாம். இதை எந்தளவு வாசகன் நேசிக்கின்றான், யோசிக்கின்றான், யாசிக்கின்றான் என்பதில் விளைவு தங்கியுள்ளது.

பாடசாலைகளில் இன்று திணித்தெடுக்கப்படும் பாடத்திட்டங்களில் இருந்து வெளியேறி ஒரு தனிமனிதனின் இயல்பூக்கங்களை வெளிப்படுத்தும் ஓர் இதமான மொழி ஓவிய மொழியாகும்.

உலக மயமாக்கலின் தேவையென முக்கிய பாடங்கள் எனக்கருதி பிற்போக்கான சிந்தனை(யாளர்)களால் கலைப்பாடங்கள் புறந்தள்ளப்பட்டுப் போவது மிகவும் வருத்தத்துக்குரியது.

மனிதருள் மென்மையும், மேன்மையும் இன்பமயமான இயல்புகளும் மேலெழுவது கலைக்கல்வியினூடாகவே என்பதைச் சகலரும் விளங்கிக் கொள்வதே மனிதம் நீடித்து வாழ வழிவகுக்கும்.

### ஓவியனோடு ஒரு பகிர்வு

உனது படைப்பை முதலில் நீ
உணர்ந்துகொள்
விசாலமான மனப்பாங்கும். எல்
லையற்ற மானிட உறவும்
உன்னுள் விரிந்தெழட்டும்
இயற்கை மட்டுமே உனது இனிய
நண்பன்
நீ நடந்து செல்கையில் உன்னோடு
தொடரும்
நிழலின் அழகை உய்த்துணர்!
ஊன உள்ளங்களையும். உளப்
பிறழ்வுகளையும்
களைத்துப்போன கணங்களையும்,
கவனத்தில் கொள்ளும் கனமான
உறவுகளோடு நேசம் கொள்!
வீரியமாக தூரிகை மொழிக்குள்ளே
கனதியான
காரியங்களை வெளிப்படுத்து!
நியதிகளை உதறு. உனக்குள்
இருப்பதை வெளிப்படுத்து!
கட்டுப்பாடுகளை களைத்தெறி.
எட்டப்படுபவற்றை எடுத்தியம்பு!
உள்ளத்து உணர்வுகளை பகிர்வு செய்!
இன்பத்தின் எழுச்சிகளையும்,
துன்பத்தின் துகள்களையும் பதிவு செய்!
ஓவியம் ஒரு காவியமாகும்.......



### குழந்தை ஓவியங்கள் எப்படி விளங்கிக் கொள்வது?

பாடசாலைகளில் இன்று குழந்தை ஓவியங்களை விளங்கிக் கொள்வதிலும் மதிப்பீடு செய்வதிலும் பல இடர்பாடுகள் எதிர்கொள்ளப்படுகின்றன. இவற்றை குழந்தையின் உள்ளார்ந்த ரீதியிலும் அறிவியல் ரீதியிலும் நோக்க வேண்டும்.

1.பிள்ளையின் உளவயதுக்கு ஏற்றாற்போல் அவற்றை வெளிப்படுத்துவதற்கு சுதந்திரம் அளித்து மதிக்க வேண்டும்.

2. கட்டுப்பாடுகள், கோட்பாடுகள் தாண்டி சுயாதீனமாக, சுதந்திரமாக பிள்ளையின் படைப்பாக்கத்தை வெளிப்படுத்த சந்தர்ப்பமளிக்க வேண்டும்.

3. கோடுகள், உருவங்கள், வர்ணங்கள் போன்றவற்றில் வரையறைகளை விதித்தல் அவர்களின் உள்ளார்ந்தமான வெளிப்பாடுகளில் பாதிப்புக்களை ஏற்படுத்தலாம்.

4. ஏனைய பாடங்களைப்போல் தரவுகளை நிறுவுதலும், நியமங்கள், விதிகளை ஒப்புவிப்பதும் இத்துறைக்குப் பொருத்தமல்ல.

5.குழந்தைஓவியங்கள்உயர்ந்ததேர்ச்சிமிக்க படைப்பாகவும் அமையும். அவை குழந்தைகளின் அனுபவம், முன்னறிவு, குடும்பம், சூழல் மற்றும் புறக்காரணிகளின் செல்வாக்கால் அமையலாம்.

6. குழந்தைகள் நெருக்கடியான பின்புலங்களில் இருப்பவர்களாயின், அவர்களது ஓவிய வெளிப்பாடுகளில் அது புலப்படும். அவர்கள் வரையும் உருவங்கள், வர்ணப் பிரயோகங்கள் என்பவற்றில் ஒழுங்கீனங்கள் காணப்படலாம். ஒழுங்கற்ற ரேகையோட்டங்கள் இருண்மையான வர்ணப் பிரயோகங்களை மேற்கொள்ளலாம். இது அவர்களது உள ஆற்றுப்படுத்தலுக்கான ஓர் உந்துதலாக அமையலாம்.

7.குழந்தைகளின் ஓவியப் படைப்பை இது சரி, அது பிழையென ஒருபோதும் மதிப்பிடக் கூடாது. சரியானவற்றை மேலும் உயர்த்துவதும், தவறானவற்றை தட்டிக்கொடுத்து ஊக்குவித்தலும் ஆசிரியரின் பொறுப்பாகும்.

8. குழந்தைகளின் ஓவியங்கள் பிள்ளையின் உள்ளார்ந்த உந்துதலின் ஒரு விசையாகும்.

9. இதை மட்டுப்படுத்துவதும் கட்டுப்படுத்துவதும் பொருத்தப்பாடல்ல.

பல நகர்ப்புறப் பாடசாலைகளில் இவ்வாறான அழகியல் பாடங்களின் மதிப்பீடுகளை வைத்தே பிள்ளையின் நிலையை / அடைவை மொத்தத்தில் தீர்மானித்துக்கொள்ளும் நிலை காணப்படுகின்றது. இதனால் விசேட திறமையுள்ள பிள்ளைகள் கலைத்துறைப் பாடங்களில் வேண்டுமென்றே பின்னகர்த்தப்படுவதாக பெற்றோர் குறைபட்டுக் கொள்கின்றனர்.


இது விடயங்களில் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் வழிப்படுத்தல்களும், மதிப்பீட்டு நிலைமைகளும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

சில பாடசாலைகளில் இந்தத் துறைசார் வழிப்படுத்தல்கள், ஏதுமின்றி மனம்போன போக்கில் குழந்தைகளின் வெளிப்பாடுகளை மதிப்பிட்டுக் கொள்வது பிள்ளைகளிடத்தும் பெற்றோரிடத்தும் விரக்தியை ஏற்படுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச.லலீசன், பிரதி அதிபர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை,
(பேராசிரியரின் மாணவன்)



# பவளவிழாக் காணும் வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தகைசார் வாழ்நாள் பேராசிரியரும் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் பெருந்தலைவருமாகிய பேராசிரியர் அ.சண்முகதாஸ் இன்று 14.10.2015 புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் தனது பவளவிழாவையும் இல்லற இணையின் பொன்விழாவையும் காண்கின்றார். அதனையொட்டி அவரது தமிழியற் பணிகளை நயந்து இவ்வாக்கம் பிரசுரமாகின்றது.

**முன்னுரை**

இன்று எம்மண்ணில் வாழும் தமிழ் விருட்சமாகப் பேராசிரியர் அ.சண்முகதாஸ் நோக்கப்படுகின்றார். ஆங்கிலத்தையும் தமிழையும் துறைபோகக் கற்று, இருமரபும் துய்ய அறிவாற்றல் கொண்டுள்ளவராகப் பேராசிரியர் விளங்குகின்றார். பேராசிரியர் அருணாசலம் சண்முகதாஸின் பிறப்பிடம் திருகோணமலை. மிகவும் எளிமையான குடும்பத்தில் 02.01.1940 இல் பிறந்த அவர், தனது பாடசாலைக் கல்வியை திருகோணமலை புனித பிரான்சிஸ் சேவியர் றோ.க.த.க. பாடசாலையிலும், மட்டக்களப்பு செங்கலடி வந்தாறுமூலை அரசினர் மத்திய கல்லூரியிலும், மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்திலும் கற்றார்.

1959 ஆம் ஆண்டில் பேராதனைப் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகி முதற் பிரிவில் தமிழ்ச்சிறப்புக்கலைப் பட்டத்தைநிறைவுசெய்தார். 1969 ஆம் ஆண்டில் ஸ்கொட்லாந்தின் எடின்பேர்க் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகி மொழியியல்துறையில் ஆய்வை மேற்கொண்டு கலாநிதி றொன். ஈ. ஆரின் வழிகாட்டலில் "Phonology of the Verbal Forms in Colloquial Ceylon Tamil" என்ற ஆய்வேட்டைச் சமர்ப்பித்து கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார்.

**திருமணம்**

காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே இன்பம் என்ற ஔவையின் கூற்றுக்கு அமைவாகத் தன்னுடன் பேராதனையில் இளையவராகக் கல்வி பயின்ற யாழ். தும்பளையைச் சேர்ந்த மனோன்மணி என்ற தமிழ் நங்கையை 1965 இல் கரம் பற்றினார். இவர்களது இல்லற வாழ்வின் நன்கலங்களாக கலைச்செல்வி குகஸ்ரீ, திருநங்கை ஞானசபேசன், செந்தூரன் ஆகியோர் பிள்ளைகளாக வாய்த்தனர். கனடா, ஆஸ்திரேலியா, லண்டன் ஆகிய இடங்களில் இவர்கள் வாழ்கின்றனர். சேந்தினி, இளநிலா, அபிதேவ், தியானா, றிக்கோ, அபிநயனி எனப் பேரப்பிள்ளைகளையும் கண்டுள்ளனர். புலம்பெயர் தேசத்தில் வாழும் தகைமையும் வசதியும் இருந்தும் யாழ். மண்ணில் தமது வாழ்நாளைக் கழிக்கும் ஆர்வத்தினால் இன்றும் யாழ்ப்பாணத்தில் வாழ்வதைப் பெருமையாகக் கருதி இந்தத் தமிழ் இணையர் வாழ்கின்றனர்.

**ஆசிரியப்பணி**

1963 ஜூலையில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தற்காலிக விரிவுரையாளராக நியமனம் பெற்ற அ.சண்முகதாஸ், தொடர்ந்து அதேயாண்டில் செப்ரெம்பர் முதல் உதவி விரிவுரையாளராக நியமனம் பெற்றார். 1965 தொடக்கம் 1968 வரை யாழ்ப்பாணக் கல்லூரிப் பட்டதாரிகள் பிரிவின் தமிழ்த்துறை விரிவுரையாளராகக் கடமையாற்றினார். 1968 முதல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் துணை விரிவுரையாளராகச் சேர்ந்து, 1972 ஆம் ஆண்டு விரிவுரையாளராகத் தகைமை பெற்றார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகம் 1974 இல் திருநெல்வேலியில் இயங்கத் தொடங்கிய நிலையில் பேராசிரியர் க. கைலாசபதியின் அழைப்பை ஏற்று 1975 ஓகஸ்ட் தொடக்கம் தன்னை யாழ். வளாகத்துடன் இணைத்துக் கொண்டார். 1982 ஆம் ஆண்டில் அன்று யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்த மொழிகள் மற்றும் கலாசாரக் கற்கைகள் துறையின் தலைவராகப் பதவியேற்றார். 1982 இல் நைஜீரியாவின் இபாடன் பல்கலைக்கழகத்து மொழியியல் நைஜீரிய மொழித் துறையின் வருகை விரிவுரையாளராக ஓராண்டு பணியாற்றினார். 1983 இல் யப்பான் நிறுவன முதுநிலை ஆய்வாளராகக் கக்சுயின் பல்கலைக்கழகப் பேராசிரியர் சுசுமு ஓனோவுடன் இணைந்து தமிழ் – யப்பானிய ஆய்வை மேற்கொண்டார். பேராசிரியர் அன்று தொடக்கி வைத்த ஆய்வு இன்று தமிழ் யப்பானிய உறவு ஆய்வாகப் பரிணமித்துள்ளது. பல ஆய்வாளர்கள் தமிழகத்தில் இவ்வாய்வைத் தொடர்ந்த வண்ணம் உள்ளனர். பேராசிரியரின் துணைவியார் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் நீண்ட காலமாக இந்த ஆய்வை மேற்கொண்டு வருகிறார்.

1984 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இணைப் பேராசிரியராகத் தரமுயர்ந்து 1990 ஆம் ஆண்டு தொடக்கம் முழுமைபெற்ற பேராசிரியராக நியமனம் பெற்றார். 1992 ஆம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையின் தலைவராக நியமனம் பெற்றார். 1996 இல் இசைத்துறைத் தலைவராகவும் பணி யாற்றினார். 1997 தொடக்கம் 1999 ஆண்டுகள் காலப் பகுதியில் கலைப் பீடாதிபதியாக தேர்ந்தெடுக்கப் பெற்றார். 1999 ஜூனில் உயர் பட்டப் படிப்புகள் பீடம் நிறுவப்பட்டபோது அதன் முதற் பீடாதிபதியாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டார்.

2010 ஆம் ஆண்டில் யாழ். பல்கலைக்கழகத்தின் இலக்கிய கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டதோடு 2011 தொடக்கம் ஈராண்டுகள் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பேரவை உறுப்பினராகப் பணிபுரிந்தார். தமது தமிழ் மற்றும் மொழியியல் சார்ந்த புலமைகளால் இந்திய மற்றும் மலாயப் பல்கலைக்கழகங்களின் ஆய்வு மதிப்பீட்டாளராகவும் பணியாற்றினார்.

உயர்தந்தக் கோபுரமாக நோக்கப்படும் பல்கலைக்கழகத்தின் கல்வித்துறையை சாதாரண மக்கள் மத்தியில் கொண்டு சேர்ப்பதில் பேராசிரியரின் பங்கு அளப்பரியதாகும். சமூக எளிமைமிக்க மனிதராகப் போற்றப்படக்கூடிய அளவுக்கு அவரது கல்விப் பணியில் எளிமை இருக்கின்றது. மற்றவர்களுக்கு வழிகாட்டும் பண்பு இருக்கின்றது. இதனால் சமூகத்தின் அடிநிலையில் இருந்த பலர் பேராசிரியரின் வழிகாட்டலில் கலாநிதிகளாகத் தங்களை உயர்த்தி உயர் வாண்மையாளர்களாகப் பிரகாசிக்கும் அளவுக்கு வளர்ச்சி கண்டனர்.

**கல்விசார் இணைப்பணிகள்**

பல்கலைக்கழகத்துக்கு வெளியே பேராசிரியர் ஆற்றிய சமூகப் பணிகள் கற்றுணர்ந்த வாண்மையாளர்களுக்கு முன்மாதிரியாகக் கொள்ளத்தக்கவையாகும். 1993 ஆம் ஆண்டு தொடக்கம் 2004 ஆம் ஆண்டு வரை திருநெல்வேலி சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் தலைவராகச் செயற்பட்டார். சங்கப்பிள்ளைகள் பேராசிரியத் தம்பதியரை அப்பா என்றும் அம்மா என்றும் விதந்துரைக்கும் அளவுக்கு பாசப்பிணைப்பில் அவர்கள் திளைத்தனர். முத்தமிழ் வெளியீட்டுக் கழகம் என்ற அமைப்பை நிறுவி பல நூல்களை வெளிக்கொணர்ந்தார். 2002 ஆம் ஆண்டு தொடக்கம் க.பொ.த. உயர்தரத் தமிழ்ப் பாடத்துறைக்கான ஆலோசகராக செயற்படுகின்றார். 2005 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் தலைவராகச் செயற்பட்டார்.

**யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்துக்கு மீளுயிர்ப்பு**

யாழ்ப்பாண அரசர் காலத்தில் நல்லூரில் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் ஒன்று செயற்பட்டதாக வரலாறு உண்டு. 1900 ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் இதற்குப் புத்துயிர் அளிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டதாயினும் சில ஆண்டுகளில் இதன் பணிகள் கைவிடப்பட்டுவிட்டன. உலகிலேயே தமிழ்ச்சங்கம் கால்கோளிடப்பட்ட யாழ்ப்பாணத்துக்கெனத் தமிழ்ச் சங்கம் ஒன்று இல்லையே என்ற பெருங்குறையைக்களையும் வகையில் 2012 ஆம் ஆண்டில் துறைசார்ந்தோரை இணைத்து யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தை மீள உருவாக்கினார். அதன் முதலாவது தலைவராகவும் செயற்பட்டார்.

**நூலாக்கப்பணிகள்**

பேராசிரியரின் நூலாக்கப்பணிகள் விதந்து குறிப்பிடப்படவேண்டியவையாகும். ஆங்கில மற்றும் தமிழ் மொழிகளில் இந்த நூல்கள் அமைந்துள்ளன. தமிழ் மொழி இலக்கண இயல்புகள், துணைவேந்தர் வித்தி, கிறிஸ்தவத் தமிழ் இலக்கிய வளர்ச்சி, ஈழகேசரித் தமிழ், இலங்கைத் தமிழ்ப் பேராசிரியர்களின் தமிழியற் பணிகள், தமிழின் பாவடிவங்கள், தனிநாயகம் அடிகளார், செவ்வியல் தமிழ் மொழி: வரலாறும் பண்பும், மொழியியலும் பிற துறைகளும், தமிழியல் ஆய்வுக்கட்டுரைகள் முதலிய தமிழ் நூல்களையும் Culture of the People of the Northern Province "என்ற ஆங்கில நூலையும், பேராசிரியர் கா.கைலாசபதியுடன் இணைந்து Tamil என்ற ஆங்கில நூலையும் எழுதினார். துணைவியாருடன் இணைந்து இத்திமரத்தாள், தமிழ்த்தோணி, ஆற்றங்கரையான், Worldview and Rituals among the Japanese and Tamils, Papers in Tamil Linguistics, Tamil – Japanese Relation shipvd;Dk; என்னும் நூல்களையும் வெளியிட்டுள்ளார். பேராசிரியர் எழுதிய நூற்றுக்கணக்கான கட்டுரைகள் நூலுருப்பெறவேண்டிய நிலையில் உள்ளன.

**பேராசிரியரின் மாணவர் பரம்பரை**

பேராசிரியரின் மாணவர் பரம்பரை நெடியது. இன்று தமிழ்த்துறையில் பிரகாசிக்கும் பேராசிரியர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா, பேராசிரியர் கலாநிதி துரை. மனோகரன், பண்டிதர் கலாநிதி செ.திருநாவுக்கரசு, பேராசிரியர் கலாநிதி கி.விசாகரூபன், கலாநிதி செ.சிவசுப்பிரமணியம், கலாநிதி சிவநிருத்தானந்தா, கலாநிதி சி.வி.செல்லையா, சி.வன்னியகுலம், பொ.செங்கதிர்ச்செல்வன், என். செல்வஅம்பிகை, எஸ்.குணேஸ்வரன், முதலியோர் பேராசிரியரின் வழிகாட்டலில் முதுமாணி மற்றும் கலாநிதிப் பட்டங்களைப் பெற்றவர்களாவர். இந்தப் பட்டியல் இன்னும் நீண்டது. இடவிரிவஞ்சிச் சில பெயர்களுடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இன்று பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் கலாசாலைகளில் தமிழ் போதிக்கும் பயிற்றுநர்கள் யாவரும் பேராசிரியரின் செல்வாக்குக்கு உட்பட்டவர்கள் என்பதை எவரும் மறுக்கார். அவர்கள் ஏதோ ஒரு நிலையில் பேராசிரியரிடம் கல்வி கற்ற மாணவர்களாக இருக்கின்றனர்.

**உலக நிலையில் பவளவிழா**

பேராசிரியரின் மாணவர்கள் உலகம் முழுவதும் பரந்து வாழும் நிலையில் இவ்வாண்டு அவரது பவளவிழா பல நாடுகளிலும் அவர்தம் ஆர்வலர்களால் நடத்தப்பட்டுள்ளது. கனடா, ஜேர்மனி, சுவிற்ஸர்லாந்து ஆகிய நாடுகளில் சிறப்பாக இவ்விழாக்கள் இடம்பெற்றன. யாழ்ப்பாணத்தில் நல்லூரில் இன்று விழா நடைபெறுகிறது. எதிர்வரும் 27.10.2015 நெல்லியடி தடங்கன் புளியடி முருகன் ஆலயத் திருமண மண்டபத்தில் வடமராட்சி மக்களால் பவளவிழா நடத்தப்படவிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அகவை எழுபத்தைந்து கண்டு விழாக்காணும் பேராசிரியர், உடல் உள நலத்துடன் தொடர்ந்தும் யாழ். மண்ணில் வாழ்ந்து தமிழ்ப் பணியாற்ற வேண்டுமெனப் பிரார்த்திப்போம்.



1984 இல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் இணைப் பேராசிரியராகத் தரமுயர்ந்து 1990 தொடக்கம் முழுமைபெற்ற பேராசிரியராக நியமனம் பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே.எஸ்.சிவஞானராஜா
கொக்குவில்

# "மனமே உனக்கென்ன வாய்?"

பேரானந்தப் பெருவாழ்வில் நூறாண்டு நிறைந்த, சிவத்தமிழ் வித்தகர், கலாநிதி சிவஸ்ரீ.க.வைத்தீஸ்வரக் குருக்களின் நூறாண்டுபிறந்ததினம், ஆன்மிக மணம்கமழ, தீவுகளின் சாம்ராச்சியம் எனப் போற்றப்படும் காரைநகர் வியாவில் தேவஸ்தான பீடத்தில் அமைந்த, கணபதீஸ்வரக் குருக்களின் நூல் நிலையக்கூடத்தில், 22.9.2015 செவ்வாயன்று வெகு சிறப்பாக நடைபெற்றது.

**தலச்சிறப்பு**

வியாவில் ஐயனார் தேவஸ்தானம், ஓர் ஆலயத்துக்கு வேண்டிய அத்தனை பொருள்களையும் தன்னகத்தே கொண்ட சிறப்புக்களையுடையது. தூய்மையான பதப்படுத்திய திருநீற்றை, யாழ் மாவட்டத்திலே வியாவில் ஐயனார் தேவஸ்தானத்தில் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும். விற்பனைக்காக இது செய்யப்படுவதில்லை. இறைவனின் அபிசேகத்துக்காகப் பால்தரும் பசுக்கள் வளர்க்கப்பட்டு, நல்ல முறையில் பராமரிக்கப்படுகின்றன. வான்மேவும் பெருந்தருக்கள் விருட்சங்களாகப்போற்றப்படுகின்றன. குளக்கோட்ட மன்னன் காலப்பேறையும், பெருமையையும், அற்புதங்களையும் கொண்ட இந்த ஆலயத்தின் திருவருள் கடாட்சமானது, வைத்தீஸ்வரக் குருக்களைக் கௌவிக் கொண்டமை, சிவாம்சம் பொருந்திய ஐயனாரின் திருவிளையாடலே. மகாராணி சோமசேகரம் ஐயாவின் விடாமுயற்சியால் இந்த ஆலயம் பெரு வளர்ச்சி கண்டு வருகிறது.

**சிவசிவ**

குருக்கள் ஐயாவின் செயற்பாடுகள் அனைத்திலும் சிவம் கலந்து பிரகாசிக்கும்.
நாவினுக்கருங்கலம் நமச்சிவாயவே என்பதற்கமைய, இறுதி மூச்சிலும் சிவசிவ நாமத்துடன், யோகர் சுவாமிகளின் அழைப்பின் பிரகாரம், சீவனே சிவனாகும் தார்ப்பரியம் ததும்ப, பேரின்பப்பேறு பெற்றவர்தான் குருக்கள் ஐயா.
காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகம் 1987 இல் வழங்கிய செய்தியில் குருக்கள் ஐயாவின் குரல் ஓங்கியே ஒலித்தது.

**"ஆசையறாய் பாசம் விடாய்
ஆனசிவ பூசை பண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீ நினையாய் சீசீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய்!"**

ஆசையை அறுக்க உன்னால் முடியவில்லை. பாசங்களை விடவும் உன்னால் முடியவில்லை. நிலையான சிவப்பேறு தரும் சிவ பூசையையும் உன்னால் ஆற்ற முடியவில்லை. நம்பிக்கையுடனும், பக்தியுடனும் ஐந்தெழுத்தையும் உன்னால் உச்சரிக்க முடியவில்லை. சீசீ, கோபத்தை உன்னால் அடக்க முடியவில்லை. தேனாமிருதமான திருமுறைகளை ஓதவும் உன்னால் முடியவில்லை. மனமே உனக்கென்ன வாய்! என்று உரத்துச் சொன்ன இந்தப் பாடல் யாழ்ப்பாணத்தில் அடிக்கடி ஒலிக்க வேண்டும். இது ஒரு மந்திரம் அல்லவா!

**ஆசையை விட்டோமா? இல்லை
பாசத்தை விட்டோமா? இல்லை
சிவபூசை செய்கிறோமா? இல்லை
ஐந்தெழுத்தை நினைக்கிறோமா? இல்லை
சினத்தைத் தவிர்த்திருக்கிறோமா? இல்லை
திருமுறைகளை ஓதுகிறோமா? இல்லை
மனமே! உனக்கெதற்கு வாய்?**

**வழிபாடு**

ஐயனார் மனங்குளிரும் வண்ணம் வியாவில் என்ற புனித நாமம், வைத்தீஸ்வரக் குருக்களுக்கு நாமார்சனையாக தூப, தீப, மந்திர வாலாய மகிமையால் வரமாக்கப்பட்டது. 22.9.1916 – 22.9.2015 நூற்றாண்டு விழா சேமமுறவும், திருமுறைப்பெருமை நூல் வெளியீடு பயன்பெறவும், காரைநகர் மண் ஆன்மிகத்தால் ஊற்றெடுக்கவும், திண்ணபுரத்தீசன் அற்புதங்கள் தென்னாடு வரை பிரகாசிக்கவும் சைவசமய அன்பர்கள் யாவரும் நூல்நிலைய



மண்டபத்தில் வழிபாடாற்றினர்.
அந்தணச் சிவாச்சாரியார்கள், ஆதீன முதல்வர், சின்மயானந்த சுவாமிகள், காருண்ய சீலர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், சைவசமய ஆர்வலர்கள், காரைநகர் மணிவாசகர் சபை உறுப்பினர்கள் எனப் பலரும் வழிபாட்டின் மூலமாகவும் உரைகள் மூலமாகவும், பிரார்த்தனைகள் மூலமாகவும் குருக்களின் சிவப்பணிகளைப் போற்றி வரலாற்றைப் பதிவு செய்தனர்.

**பணிகள்**

தேடற்கரிய நூல்களை யாவரும் கற்கும் வண்ணம் மீளவும்அச்சேற்றி சைவ உலகுக்கு பரோபகாரம்செய்தார். இதன்மூலம் வேதாந்த சித்தாந்தத் திருமுறை ஆகம நூல்கள் பல்கலைக்கழகம் வரை சைவசமயம் பரவி வியாபிப்பதற்கு வழிசமைத்தார். செந்தமிழ் மாமலை சி.வை.தாமோதரம்பிள்ளையின் தமிழ்ப்பணிக்குச் சமாந்தரமாக குருக்களின் சிவத்தமிழ்ப்பணி பிரவாகித்தது.
ஈழத்துச் சிதம்பரம் என்ற சிவத்தலம் உலகத்தவர்களால் என்றும் போற்றி வணங்கப்படுவதற்கு அது பற்றிய சரித்திர ஆவணங்களைத்திரட்டியும், தொகுத்தும், வரைந்தும் அருளியவர் குருக்கள் ஐயா.
1940 ஆம் ஆண்டு காரைநகர் மணிவாசகர் சபையை யோகர் சுவாமிகளின் ஆசீர்வாதத்தோடு ஆரம்பித்து, இன்றுவரை மணிவாசகர் விழா கொண்டாடப்படுவதற்குக் காரணகர்த்தாவாக இருந்துள்ளார். காலத்துக்குக் காலம் இந்தியாவிலிருந்து பேச்சாளர்கள் வரவழைக்கப்பட்டு திருவாசகத் தேனை யாவரும் அறியும் வண்ணம் பருக வைத்தார்.
25.12.2014 இல் வெளியிடப்பட்ட பவளவிழா மலரில், திருவாசகம் எனும் தேன் எனும் பெறுமதியான அவரது கட்டுரை பேறாக அமைந்ததெனலாம்.
திருவாசகம் என்றால் காரைநகரை ஞாபகப்படுத்தும் குருக்களின் உருவ சம்பிரதாயங்களைப் பார்த்தாலே, சைவசமயம் தானாக வளரும். வேண்டும் பரிசு ஒன்று இருக்குமாக இருந்தால், அதுவும் உனது விருப்பமாக இருக்கட்டும். யானே பொய், என் நெஞ்சும் பொய், என் அன்பும் பொய், ஆனால் வினையேன் அழுதால் இறைவா உன்னை இலகுவாகப் பெறலாம். வைத்தீஸ்வரக் குருக்கள் திருவாசகத்தை உருகிப் பாடிச் சிவபதமடைந்தார். அவரது வரலாறு பல்கலைக் கழகம் வரை கொண்டு செல்லப்படுதல் வேண்டும். கல்விப் புலமையாளர்களால், இவர் **பேறாக்கப் படாவிடின், மனமே உனக்கென்ன வாய்?**



## இரு நூல்களின் வெளியீட்டு விழா

தொடர்ந்து வரவேற்புரையை தம்பலகாமம் பிரதேச செயலர் திருமதி ஜெயகௌரி ஸ்ரீபதி நிகழ்த்த, நூல் அறிமுக உரையை கேணிப்பித்தன் கலாபூசணம் ச.அருளானந்தம், கவிமணி அ.கௌரிதாசன் ஆகியோர் நிகழ்த்தினர்.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண கல்வி, தகவல் தொழில் நுட்பக்கல்வி, விளையாட்டு, பண்பாட்டலுவல்கள், இளைஞர் விவகாரம் மற்றும் மீள் குடியேற்ற அமைச்சர் சி.தண்டாயுதபாணியும், கௌரவ விருந்தினர்களாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெ ஜெனார்த்தனன், வரலாற்று ஆய்வாளர் கலாநிதி கனகசபாபதி சரவணபவன், திருகோணமலை மாவட்ட செயலக உதவி அரச அதிபர் நடராசா பிரதீபன் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். தம்பலகாமத்தின் கலை இலக்கியப் பாரம்பரியத்தைச் சேர்ந்த பலர் கௌரவிக்கப்பட்டமை இந்த நிகழ்வின் சிறப்பம்சமாகும். (40)



திருகோணமலையின் மூத்த எழுத்தாளர் அமரர் தம்பலகாமம் க.வேலாயுதம் அவர்களின் 22 கவிதைகள் அடங்கிய 'வையமெல்லாம் தமிழோசை வளர்ந் தோங்கும்' என்ற தலைப்பில் அமைந்த கவிதைத் தொகுப்பும், அவரது மகன் ஓய்வுபெற்ற அதிபர் கலாபூசணம் .வே. தங்கராசா எழுதிய தம்பலகாமத்தின் கலைப்பாரம்பரியத்தை ஆவணப்படுத்தும் 'போற்றுதற்குரிய ஆற்றலாளர்கள் இவர்கள்' என்ற நூலும், 11.10.2015 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு தம்பலகாமம் குளக்கோட்டன் வித்தியாலய மண்டபத்தில் வெளியிடப்பட்டன.
கலாசார உத்தியோகத்தர் குணபாலா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வைத்தியர் பிரசாந்தி ஜெயகாந்தினால் தமிழ்மொழி வாழ்த்து இசைக்கப்பட்டதைத்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




லக்ஸ்மன்

# நெஞ்சை மகிழ்வித்த புரட்சிக்கவி பாரதி விழா

நல்ல மானிடத்துக்கு ஆன்மிக நாட்டம் நல்ல இன்பத்தைத் தரும். துன்பம், இன்பம், வெறுமை மூன்றும் வந்தாலும்கூட, பிரச்சி னைகளைத் தீர்க்கும் இயல்பு உயர் மானிடத்திடம் காணப்படும். பாரதி உயர் மானிடம் என்று கருதுவது அன்புள்ளத் தையே. பொதுவாக உயர் மானிடன் என்றால் நிறைந்த செல்வம் உடையவன் மற்றும் அரசியல் அதிகார பலம் கொண்ட வன் என்றே கருதுகிறோம். உண்மையில் அன்பு நிறைந்தவனே உயர் மானிடன் என்ப தைத் தனது கவிதைகளூடாகப் புலப்படுத்தி யுள்ளார் பாரதி. அவரைப் பற்றி நிறையவே கூறமுடியும் என தமிழ்ச் சங்கத்தின் பாரதி விழாவில் 'பாரதி கண்ட அதிஉயர் மானிடம்' என்ற விடயம் குறித்து தெளிவாக எடுத்துக் கூறினார் எழுத்தாளர் திருமதி கோகிலா மகேந்திரன்.

யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கத்தின் பாரதி விழா நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. பேரா சிரியர் ஆ.சண்முகதாஸ் தலைமையில் சிறந்த முறையில் இடம்பெற்ற இதில் குற் றங்கள் எடுத்துச் சொல்லப்பட வேண்டும். பிழையெனக்காணில் கோபப்படுதலும் வேண்டும். உயர் மானிடன் என்பவன் அன் புள்ளம் கொண்டவன். எனினும், தவறு களைச் சுட்டிக்காட்டவும் துணிவான். உயர் மானி டன் எப்படி இருப்பான் என்பதைப் பாரதி எவ்வா றெல்லாம் வெளிப்படுத்தி யுள்ளார் என்பதை அவரது கவிதைகளூடாகவும் உளவியல் ரீதியாகவும் சிறப்பாக விவரித்து உரையாற் றினார் திருமதி கோகிலா மகேந்திரன்.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் லலீசன், பாரதியை தமிழ் உலகுக்குத் தூக்கிச் செல்ல வேண்டியது தமிழர்களின் கடமை, தமிழால் வாழ்வதற் காக நாம் விழா எடுக்கிறோம், பலதரப்பட்ட நிகழ்வுகள் நடந்தாலும் இலக்கியம், தமிழ் சார்ந்த நிகழ்வுகளை இங்கே காண்பது அரி தாகவே உள்ளது, பாரதியின் பாடல்கள் சமூ கத்தின் பல்வேறு நிலைகளை எடுத்துக் காட்டி, மக்களைச் சிறந்த மானிடத்துக்கு அழைத் துச் செல்கின்றது. தமிழ் எழுச்சியை ஏற் படுத்தக்கூடியதாக இந்தவிழா அமைகிறது என்று இயம்பி வரவேற்புரையை நிகழ்த்தினார்.

பேராசிரியர் அ.சண்முகதாஸ், தமிழ்ச் சங்கம் யாழ்ப்பாணத்தில் இன்று நேற்று ஆரம்பிக்கப்பட்டதல்ல. மன்னன் செகராச சேகரன் காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டுச் சிறப்பான பணிகளை முன்னெடுத்தது. நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்ட யாழ்.தமிழ்ச்சங்கம் இடைக்காலத் தில் செயலிழந்த போதிலும், இப்போது அது மீண் டும் செயற்பட ஆரம்பித்து, தமிழ்ப் பணி யாற்றி வருவதாகவும் குறிப்பிட்டு, இந்தியா வில் இருந்து வந்த அறிஞர்களால் பல நூல்கள் வெளியிடப்பட்டதையும், பாரதியை இலங் கைக்கு அறிமுகப்படுத்திய விபுலானந்தர் அவர்மீது கொண்டிருந்த பற்றுதலையும் எடுத்தியம்பினார். மேலும் தமது உரையில், உலகில் உள்ள ஆறாயிரம் மொழிகளில் செம்மொழி அந்தஸ்துக் கொண்ட பதினேழு மொழிகளில் தமிழும் ஒன்றாக உயர்ந்து காணப்படுவதையும், 15ஆம் 16ஆம் நூற்றாண்டுகளில் தோன்றிய இலக்கியங் களில் இடம்பெற்ற சிந்து கவிதைகள் குறித் தும் சிந்துப் பாடல் வடிவங்கள் முன்னரே இருந்தபோதும், தமது கவிதைகளில் பாரதி அதனைக் கையாளும்போது அவற்றின் தனித்து வமும் புனிதமும் விளங்குகிறது. பிள்ளைகள் பெற்றது ஒரு பூனை என்ற பாடல், சமூகத்தில் பல்வேறு இனங்கள் காணப்ப டினும் எல்லோ ரும் ஒரே மக்களே என்பதைத் தெளிவுபடுத்துவ தாகவே அமைந்தது. இதனை விளங்கிக் கொள்ளாதவர்கள் பாரதியை பித்துக்கவி ஞன், கஞ்சாக் கவிஞன் என்று தூற்றியதும் உண்டு என்று கூறி பாரதி எமது இனத்தின் பெறு மதிமிக்க ஒருவர் எனத் தெளிவுபடுத்தினார்.

யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் ஆ.நடரா ஜன் தமது உரையின்போது, நீங்கள் எவ்விடம் என்று என்னிடம் ஒருவர் கேட்டதற்கு நான் திருநெல்வேலி (தமிழ்நாடு) என்று குறிப்பிட் டேன். கேட்டவர் ஓ...நீங்கள் அல்வாவா என்றார். கப்பலோட்டிய தமிழன் சிதம்பரனார், வீரபாண்டிய கட்டப்பொம்மன், மகாகவி பாரதியார் பிறந்த இடமல்லவா என்று சொல்ல அவருக்குத் தோன்றவில்லை. அந்த அளவுக்கு மக்கள் இவர்களை மறந்து விட்டபோதும், இங்கே தமிழ் மன்றம் ஒரு நல்ல விழாவை எடுத்துள்ளமை பெருமைக்குரியது. பாரதியின் பாடல்கள் அழகானவை. அச்சமில்லை அச்சமில்லை என்றுகூட மிகவும் அருமை யாகப் பாடியுள்ளார். அவரது பாடல்கள் சில இங்கே பாடப்பட்டன. மிகவும் அருமையாக இருந்தன. திரைப்படப் பாடல்களில்கூட பார தியாரின் சில பாடல்கள் இடம்பெற்றதுண்டு. வீரம், பரிவு, பெண்விடுதலை, நாட்டுப்பற்று, விடுதலை என அவர் பாடாத விடயங்களே இல்லை. ஆயுதம் செய்வோம். கல்விச்சாலை கள் செய்வோம் என எல்லாமுமே சிந்தை யைத் தூண்டுவனவாக அமைகின்றன என்றார்.



எட்டயபுரத்து ஏழிசை எல்லோரையுமே வெகுவாக ஈர்த்துள்ளது. எண்ணிய எண்ணம் வேண்டும், ஒளி படைத்த கண்ணினாய் வா வா வா, சக்தி சக்தி பராசக்தி, மோகத்தைக் கொன்றுவிடு, சின்னஞ்சிறு கிளியே போன்ற பல பாடல்களை இளங் கலைஞர்கள், பாடகர் கள் அற்புதமாகவும் திறமையாகவும் பாட, சிந்து நதியின் மிசை நிலவினிலே என்ற பாடலுடன் மேலும் சில பாடல்களை புல்லாங் குழல் இசையினூடாக ரசிகர்களுக்கு வழங்கி எட்டயபுரத்து ஏழிசையை யாழ்ப்பாணத்துத் தென்றலுடன் தவழவிட்டு சுற்றாடலையே பரவசத்துக்குள்ளாக்கியது தமிழ்ச் சங்கம். இசைஞர்களும் பக்கவாத்தியக் கலைஞர்க ளும் தாளம் லயம் தப்பாது சிறப்பாக இணைந்து இசைமழையைப் பொழிந்தனர். ரசிகர்களின் பலத்த வரவேற்புக் காணப்பட் டது. அதேபோன்று நீர்வேலி பொன்சக்தி கலாகேந்திராவின் உதயகன்னி நாட்டிய நாடகமும் ரசிகர்களின் பாராட்டைப் பெற்றது. அது பெண்களை மையமாகக் கொண்டதாக விளங்கியது.

தமிழ்ச் சங்கத்தின் இது போன்ற விழாக்கள் இலங்கைத் தமிழினத்தின் எழுச்சிக்கு வழிகாட்டும் என்பது பார்வையாளர்களின் அபிப்பிராயமாகும்.

விழாவுக்கு அனுரசணை வழங்கிய கிரு பாகரன் தம்பதியினர் மற்றும் இந்திய துணைத்தூதுவர் ஆ.நடராஜன், திருமதி கோகிலா மகேந்திரன் ஆகியோர் தமிழ்ச் சங்கத்தினரால் கௌரவிக் கப்பட்டனர்.

**பொதுவாக உயர் மானிடன் என்றால் நிறைந்த செல்வம் உடையவன் மற்றும் அரசியல் அதிகார பலம் கொண்டவன் என்றே கருது கிறோம். உண்மை யில் அன்பு நிறைந் தவனே உயர் மானிடன் என்பதைத் தனது கவிதைகளூ டாகப் புலப்படுத்தி யுள்ளார் பாரதி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org